தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989 மே 12, வெள்ளிக்கிழமை.

சித்திரை 29, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் என்கிற சாத்தையா அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்."

இறையாக வந்து சேரும் பொருளும் சுங்கத் தீர்வையாகக் கொள்ளும் பொருளும் தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்.

1. பெரிய கிளாம்பாடி இஸா பெரிய ஏரியில் மணல் திட்டை ஆழப்படுத்துதல்.

வினா 31—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், பெரிய கிளாம்பாடி இஸா பெரிய ஏரியில் மணல் திட்டை ஆழப்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்டம்; பெரிய கிளாம்பாடி இஸா பெரிய ஏரியில் மணல் திட்டை ஆழப்படுத்துவதற்கான செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

2. பாலையூர் காவல் நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா 46—திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழத்தஞ்சை மாவட்டம், பாலையூர் காவல் நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை

3. ஆதி திராவிட நலப்பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா 67:— திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை-அண்ணா மாவட்டம் மதுராந்தகம் வட்டம், பாத்தூர் கிராமத்தில் ஆதி திராவிட நலப் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதனைக் கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ). இக்கட்டிட வேலையை நடப்பு நிதி யாண்டில் முடிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள பட்டுள்ளது.

4. அரசு விளம்பரத்திற்காக செலவு.

வினா 91— திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1987 ஆம் ஆண்டில் அரசு விளம்பத்திற்காக செலவு செய்த தொகை எவ்வளவு ?

விடை—

1987 ஆம் ஆண்டில் அரசு அனைத்துத் துறை விளம்பரத்திற்காக செலவு செய்த தொகை ரூ. 5,38,97,436 (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து நானூற்று முப்பத்தாறு மட்டும்.)

1989 மே 12]

5. திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

வினா 94—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் காவல் நிலையத்திற்குச் சொந்தமான கட்டிடம் பழுதடைந்து உள்ளதால் காவல் நிலையம் தற்போது வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறதா ?

(ஆ) காவல் நிலையத்திற்குச் சொந்தமான கட்டிடத்தைப் பழுது பார்த்து பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) ஆம்

(ஆ) இல்லை

6. வட ஆற்காடு மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை.

வினா 141—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை எத்தனை இடங்களில் உள்ளது ?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் சிப்காட் தொழிற்பேட்டை இராணிப்பேட்டையில் மட்டும் உள்ளது.

7. பொன்னேரி அருகே சிப்காட் தொழிற்பேட்டை.

வினா 145—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்கா, பொன்னேரி அருகே சிப்காட் தொழிற்பேட்டை துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

8. கலப்படச் சட்டத்தின்கீழ் வழக்குகள்.

வினா 279—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1988-89 ஆம் ஆண்டில் கலப்படச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை?

(ஆ) அவைகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளவை எத்தனை?

விடை—

(அ) 562 (பிப்ரவரி 1989 வரையில் தற்காலிகமாக)

(ஆ) 168 (மொத்தத்தில் பிப்ரவரி 1989 வரையில் தற்காலிகமாக).

9. இரணியல் முட்டம் சாலையை விரிவுபடுத்தி செப்பனிடுதல்.

வினா 297—திரு. ஆ. பாலையா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரணியல் முட்டம் சாலையை விரிவுபடுத்தி செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

தற்சமயம் இல்லை.

10. குழித்துறையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

வினா 343—திரு. பொன் விஜயராகவன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுக்காவில் 'சணபதியான் கடவு' என்னுமிடத்தில் குழித்துறை யாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை

11. பாலாற்றின் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா 357—திரு. கே. சுந்தர்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1989 மே 12]

(அ) உத்திரமேரூர் ஒன்றியம், ஒரக்காட்டுப்பேட்டை அருகில் பாலாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும்?

விடை—

(அ) ஆம்

(ஆ) இவ்விடத்தில் ரூ. 70·00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தாம்போகி (Causeway) அமைப்பதற்காக மத்திய சாலை நிதி (CRF) திட்டத்தில் மேற்கொள்வதற்காக மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் மேற்கொள்ளப்படும்.

12. மகளிர் கல்லூரி

வினா 367—திரு. ஆச்சியூர் எம். மணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாங்குநேரித் தொகுதியில் மகளிர் கல்லூரி நிறுவப்படுமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை.

13. அரசு கலைக்கல்லூரி

வினா 511—திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் ஒரு அரசு கலைக்கல்லூரி ஏற்படுத்தப்படுமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் பெறப்படவில்லை

14. பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

வினா 516—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவிக்கப்படுமா?

விடை—

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தை 'பசும்பொன்-தேவர் திருமகன் மாவட்டம்' என அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 12

15. உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

வினா 527—திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னூர் ஊராட்சி ஒன்றியம், சாட்டம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்க கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கோரிக்கை நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

16. காவல் துறையினருக்கு வீடுகள்.

வினா 567—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புளியங்குடி, சிவகிரி, வாசுதேவநல்லூர் ஆகிய இடங்களில் காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசின் நிதி நிலைமைக்கேற்ப ஆரம்பிக்கப்படும்.

17. முட்டை உற்பத்தி.

வினா 714—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1987–88 ஆம் ஆண்டில் உற்பத்தி யான முட்டைகளின் அளவு என்ன?

(ஆ) அவைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறதா?

விடை—

(அ) தமிழகத்தில் 1987–88 ஆம் ஆண்டில் 189 கோடி முட்டைகள் உற்பத்தி ஆனது.

(ஆ) அவைகள் குளிர்சாலத்தில் வட இந்தியாவிற்கும்; தொடர்ச்சியாக எல்லாக் காலங்களிலும் கேரளாவிற்கும் அனுப்பப்பட்டன.

18. கல்லூரிகளின் கட்டிட வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு.

வினா 725—திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பெயரில் இயங்கிவரும் கமுதி கல்லூரி, நீலிதநல்லூர் கல்லூரி ஆகியவற்றின் கட்டிட வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயற் படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

19. பிச்சனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

வினா 900—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதியில் உள்ள பிச்சனூர் அரசு உயர் நிலைப்பள்ளிக்குக் கட்டிடம் கட்ட அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

இப்பள்ளிக்கு 2 வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டும் பணி 1·75 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப் பட்டு பொதுப்பணித்துறையினரால் செய்யப்பட்டு வருகிறது.

20. உறைவிடப் பள்ளி.

வினா 944—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பர்கூர் மலைப்பகுதி தாமரைக்கரையிலுள்ள பள்ளியினை உறைவிடப் பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.

விடை—

(அ) அந்தியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பர்கூர் மலைப்பகுதி தாமரைக்கரையிலுள்ள பள்ளியினை அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியாக மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகள் எதுவும் தற்சமயம் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

21. சத்தியமங்கலம் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

வினா 953—திரு. வெ. இராசு: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், சத்தியமங்கலம் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கவும், குடியிருப்பும் கட்டிக் கொடுக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): அரசிடம் தற்போது அத்தகைய திட்டம் ஏதும் இல்லை.

22. திருக்கோவிலூரில் அரசு கலைக் கல்லூரி.

வினா 975—திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூரில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

அவ்வாறான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

23. அரூர் வட்டத்தில் அரசினர் கலைக் கல்லூரி.

வினா 1065—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் அரசினர் கலைக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1989 மே 12]

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வி ஆண்டு துவங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

24. ஓடையின் குறுக்கே சிறு நீர்த்தேக்கம் கட்டுதல்.

வினா 1168—திரு. ப. முத்துசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, ஆர். கோம்பைக்கு அருகில் உள்ள ஓடையின் குறுக்கே சிறு நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை

25. நாகை நகரில் நகர கூட்டுறவு வங்கி.

வினா 1331—திரு. கோ. வீரையன்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகை நகரில் நகர கூட்டுறவு வங்கி அமைப்பது எந்த நிலையில் உள்ளது?

விடை—

நாகை நகரில் இந்திய ரிசர்வ் வங்கியின் நடைமுறையிலுள்ள வரன்முறைகளின்படி புதியதாக ஒரு கூட்டுறவு நகர வங்கி அமைக்க தற்பொழுது வாய்ப்பில்லை.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2. உரிமை மீறல் பிரச்சினைகள்.

(அ) ''தினமணி'' நாளிதழ் மீது—பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் '' தினமணி '' நாளிதழின்மீது ஓர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மாதம் 21 ஆம் தேதியன்று சமூக நலத் துறை மானியத்தில் நான் அவையில் பேசிய அந்தப் பேச்சு சம்பந்தமாக என்னுடைய அவை நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றபொழுது நியாயமாகவும், உண்மையாகவும் முடிந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்பது அவசியம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். சபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டவர்களது பேச்சுக்களை அவ்வளவும் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே பிரசுரிக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. அதே போன்று ஒருவர் பேச்சை அதிகமாகவும், இன்னொருவர் பேச்சைக் குறைவாகவும் பிரசுரிப்பது அவையை அவமதித்தது ஆகும் என்று கூட நான் கூறவில்லை.

ஆனால் விவாதத்தைப் பிரசுரிக்கின்றபொழுது ஒரு சிலர் பேசுவதை மட்டும் பிரசுரித்து, சிலர் பேசுவதை முற்றிலும் இருட்டடிப்பு செய்வது, அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார்கள் என்பதைக்கூடக் குறிப்பிடாமல் இருப்பது அவை நடவடிக்கையைத் திரித்துக் கூறுவதாகும்; உண்மையாகப் பிரசுரித்தது ஆகாது என்பது மட்டுமல்ல; விவாதத்தைப்பற்றி ஒரு தவறான தோற்றத்தை உருவாக்கும். இது அவையை அவமதித்தது ஆகும் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, நான் ஒரு மாதர் இயக்கத்தில் பங்கு கொண்டவள் என்ற முறையில் சமூக நலத் துறையில் பெண்களைப் பற்றி, குழந்தைகளைப் பற்றி நடந்திருக்கக்கூடிய விவாதத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்ற ஒரு சித்திரத்தையும் ஏற்படுத்தும்.

பொதுவாக, பத்திரிகைமீது இப்படிப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வருவதில் எனக்கு வருத்தம்தான். ஆனால், பத்திரிகைகள் முறையாக ஓரளவுக்கு நடக்க வேண்டும் என்று வலியுறுத்தவே இதை நான் கொண்டு வருகிறேன்.

அதுமட்டுமல்ல, பத்திரிகை மீது தடுப்புச் சட்டங்கள் எல்லாம் வந்தபோது அதை எதிர்த்து முறியடிக்கக்கூடிய கட்சியைச் சார்ந்தவள் நான் என்ற முறையிலும், நான் இந்த நேரத்திலே இப்படிப்பட்ட முறையில் அவையில் இனிமேல் நடக்கக்கூடாது என்ற கருத்தோடும் இந்த உரிமை மீறல் பிரச்சினையை உங்கள் முன்னால் கொண்டு வந்து, இதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உரிமை மீறல் பிரச்சினை மீது ''தினமணி'' நாளிதழ் ஆசிரியரின் விளக்கத்தைக் கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

''...21—4—89 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சமூக நலம், ஊரகத் தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்தில் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பேசிய கருத்துக்கள் தினமணியைத் தவிர முரசொலி, தினகரன் ஆகிய தமிழ் நாளேடுகளிலும், ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய ஆங்கில நாளேடுகளிலும் பிரசுரிக்கப்படவில்லை. மேலும் பல நாளேடுகளில் இச்செய்தி முற்றிலும் விடுபட்டோ அல்லது அரைகுறையாக பிரசுரிக்கப்பட்டோ உள்ளது என்றும் தெரிய வருகிறது. இந்த நாளேடுகள் மீதும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் உரிமை மீறல் அறிவிப்பைக் கொடுத்துள்ளாரா என்றும், கொடுக்கவில்லையெனில் இவ்வாறு தினமணி மீது மட்டும் ஒருதலைப்பட்சமான உரிமை மீறல் அறிவிப்பு ஏன் கொடுக்கப்பட்டது என்றும் அதையேற்று எங்களிடம் மட்டும் விளக்கம் ஏன் கோரப்பட்டுள்ளது என்றும் நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

சட்டமன்றப் பேரவையில் அன்றாடம் நிகழும் விவாதங்கள் அனைத்தையும் பத்திரிகைகள் பிரசுரித்துத்தான் ஆக வேண்டும் என்ற சட்டமோ, மரபோ, வழக்கமோ இல்லாத நிலையில் இந்த விஷயத்தில் உரிமை மீறல் என்ற பிரச்சினைக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'அவை உரிமை மீறல்' என்ற பிரச்சினையே எழாத நிலையில் தினமணி இந்த விஷயத்தில் சட்டப்படி விளக்கம் எதுவும் அளிக்கத்தேவையில்லை என்றாலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீதும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மீதும் நாங்கள் கொண்டுள்ள மதிப்பையும், மரியாதையையும் முன்னிட்டு எங்கள் நிலையை விளக்கித் தங்கள் கடிதத்திற்குப் பதில் அளித்திருக்கிறோம்.''

1977 ஆம் ஆண்டு மாலை முரசு நாளிதழ் மீது இம் மாதிரியான பிரச்சினை எழுப்பப்பட்டபோது பேரவைத் தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பினை அளித்துள்ளார்கள்:

''உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதுபோல் சில உறுப்பினர்களது சொற்பொழிவுகளைப் பற்றி எந்தவிதத்தில் சுருக்கியோ அல்லது பங்குகொண்டார்கள் என்ற குறிப்போ இல்லையென்றும், இது போல் வேண்டுமென்றே வெளியிட்டுவிட்டு உரிமைப் பிரச்சினை வருகிறபோது தங்களுக்கு அதுபோன்ற எண்ணம் இல்லையென விளக்கம் அளிப்பது பத்திரிகை சுதந்திரத்திற்கே முரணானது என்றும், இப்பிரச்சினையில் மாலை முரசு நாளேடு அவையின் உரிமையை மீறி உள்ளது என்றும், பேரவை தனது கண்ணி யத்தைக் கருதியும், பரந்த நோக்கத்தினாலும் இதுபோன்ற உரிமை மீறல்களைப் பொருட்படுத்துவதில்லை என்பதனால் இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமையை மீறுவது முறையாகாது என்றும், அவை நடவடிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடும்போது எழுத்துக்கு எழுத்து வெளி யிட முடியாது என்றாலும் வெளியிடப் பெறுவது, அவையினது நடவடிக்கைகளைக் குறைத்துக் கூறாமல் முழுமையாக அதனது கருத்தை அல்லது சுருக்கத்தை வெளியிட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பெற்ற ஒரு மரபாகும்.'' இந்தப் பழைய தீர்ப்பை இப்பொழுது நான் மேற்கோள் காட்டவிரும்புகிறேன்.

இந்தத் தீர்ப்பு தற்போதும் பொருந்தும் என்பதால் அதை நினைவு கூர்ந்து, நாளிதழ்கள் இதைக் கடைப்பிடிக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கிறேன்.

(ஆ) ''மேனேஜ்மென்ட் புரபஷனல்ஸ் அசோசியேஷன்'' என்ற நிறுவனத்தைச் சேர்ந்த சுதர்சன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் திரு. ஜே. சுதர்சன் என்ற ஒரு நபர் மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிவிப்பைக் கொடுத்துள்ளார்.

இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்று மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1977 ஆம் ஆண்டு மாலை முரசு நாளிதழ் மீது இம் மாதிரியான பிரச்சினை எழுப்பப்பட்டபோது பேரவைத் தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பினை அளித்துள்ளார்கள்:

''உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதுபோல் சில உறுப்பினர்களது சொற்பொழிவுகளைப் பற்றி எந்தவிதத்தில் சுருக்கியோ அல்லது பங்குகொண்டார்கள் என்ற குறிப்போ இல்லையென்றும், இது போல் வேண்டுமென்றே வெளியிட்டுவிட்டு உரிமைப் பிரச்சினை வருகிறபோது தங்களுக்கு அதுபோன்ற எண்ணம் இல்லையென விளக்கம் அளிப்பது பத்திரிகை சுதந்திரத்திற்கே முரணானது என்றும், இப்பிரச்சினையில் மாலை முரசு நாளேடு அவையின் உரிமையை மீறி உள்ளது என்றும், பேரவை தனது கண்ணியத்தைக் கருதியும், பரந்த நோக்கத்தினாலும் இதுபோன்ற உரிமை மீறல்களைப் பொருட்படுத்துவதில்லை என்பதனால் இதையே ஒரு வாய்ப்பாகக் கொண்டு அவையினது உரிமையை மீறுவது முறையாகாது என்றும், அவை நடவடிக்கைகளை பத்திரிகைகள் வெளியிடும்போது எழுத்துக்கு எழுத்து வெளியிட முடியாது என்றாலும் வெளியிடப் பெறுவது, அவையினது நடவடிக்கைகளைக் குறைத்துக் கூறாமல் முழுமையாக அதனது கருத்தை அல்லது சுருக்கத்தை வெளியிட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பெற்ற ஒரு மரபாகும்.'' இந்தப் பழைய தீர்ப்பை இப்பொழுது நான் மேற்கோள் காட்டவிரும்புகிறேன்.

இந்தத் தீர்ப்பு தற்போதும் பொருந்தும் என்பதால் அதை நினைவு கூர்ந்து, நாளிதழ்கள் இதைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கிறேன்.

(ஆ) ''மேனேஜ்மென்ட் புரபஷனல்ஸ் அசோசியேஷன்'' என்ற நிறுவனத்தைச் சேர்ந்த சுதர்சன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோர் மீது—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் திரு. ஜே. சுதர்சன் என்ற ஒரு நபர் மீது உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிவிப்பைக் கொடுத்துள்ளார்.

இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்று மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Management Professionals Association என்ற பெயரில் ஜே. சுதர்சன் என்பவரும் அவருடைய சகாக்களும் பொதுமக்களை பலவழிகளிலும் ஏமாற்றி பணம் பறித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல பெரிய மனிதர்களுடைய பெயர்களை, ஆட்சிப்பொறுப்பிலே இருப்பவர்களுடைய பெயர்களை, அரசிலே இருப்பவர்களுடைய பெயர்களை, பல கட்டங்களில் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அதைப்போல அவர்களுடைய கடிதம் 'லெட்டர் ஹெட்டை' எடுத்துப் பார்த்தால் ஒரு ஓய்வு பெற்ற Assistant Commissioner of Police; அதைப்போல ஒரு ஓய்வுபெற்ற District Veterinary Officer; ஒரு ஓய்வுபெற்ற Air Commodore பெயர்கள் எல்லாம் அங்கே பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. இவர்களைப் பற்றி ஏராளமான புகார்கள் வந்த வண்ணம் இருந்த காரணத்தால் நான் இந்த மன்றத்திலே அந்தப் புகார்களைப் பற்றி பல கட்டங்களில் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். அதைப்போல ஒரு ஆங்கில நாளேடு நிறைய கட்டுரைகளை அவரைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரைகள் வந்த நேரத்தில் 'பிரஸ் கவுன்சிலில்' அவர் புகார் கொடுத்திருக்கிறார். 'பிரஸ் கவுன்சில்' அதை விசாரிக்க முற்பட்டபோது அந்த விசாரணைக்கு இவர் செல்லவில்லை. அதைப்போல 'Aside' என்கிற பத்திரிகை அவரைப் பற்றி Cover Story எழுதியது. அதற்கு எதிராக புகார் ஒன்றை உயர்நீதிமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார். பிறகு அந்தப் புகாரை அவர் வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார். அதைப்போல யார் அவர் மீது புகார் சொன்னாலும், அவருடைய பிரச்சினைகளைப் பற்றி எடுத்துப் பேசினாலும் அவர்களை மிரட்டுவது, அவர்கள் மீது பொய்ப் புகார் தாக்கல் செய்வது என்பது அவருடைய வழிமுறையாக இதுவரையில் இருந்துவந்திருக்கின்றது.

ஒருமுறை Commissioner of Police ஆணையின்பேரில் அங்கேயிருக்கிற Inspector of Police அவரிடத்திலே விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்ட ஒரு புகாரின்மீது விசாரணைக்குச் சென்றபோது அவர்மீது ஒரு பயங்கரமான பொய்ப் புகாரைத் தாக்கல் செய்திருக்கிறார். இதெல்லாம் எதற்கு செய்கிறார் என்று சொன்னால், யார் சட்டத்தின் சக்கரங்களைச் சுழற்ற முயற்சிக்கிறார்களோ அவர்களையெல்லாம் மிரட்டிப் பணிய வைக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, இந்தக் காரியங்களை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்தில் அவர்களைப் பற்றி இரண்டுமுறைகள் பேசியிருக்கிறேன். கல்வி இலாக்கா மானியத்திலே ஒருமுறை பேசினேன். பிறகு உள்துறை இலாக்கா, போலீஸ் இலாக்கா

மானியத்தின் மீது நான் பேசியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று இந்த சட்டமன்றத்திலே உறுதிமொழி அளித்திருக்கிறார். இந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் பார்த்ததற்குப் பின்னால் எனக்கு ஊர் விலாசத்திற்கு, கிராம விலாசத்திற்கு ஒரு கடிதம்—கிட்டத்தட்ட மொட்டைக் கடிதம் போல இருக்கிறது—அவர்களுடைய லெட்டர் ஹெட்டில் அது வந்திருக்கிறது.

Management Professionals Association என்று போட்டிருக்கிறார்கள்.

In telegram, I have not received any telegram—எனக்கு எந்தவிதமான தந்தியும் வரவில்லை. அதில் போட்டிருப்பது Case against you—O. S. No. 4403/89 before the Hon'ble Second Asistant City Civil Judge, Madras, posted for your appearance on 19—6—89. I have not received any Court notice. I have not received any telegram. ஆனால் இதுபோன்ற ஒரு கடிதம் வந்திருக்கிறது. இந்தக் கடிதத்தை நான் அச்சமின்றி, சுதந்திரமாக இந்த சபையில் செயல்படுவதைத் தடுக்கிற நோக்கத்தோடு, மிரட்டுகிற நோக்கத்தோடு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இது நிச்சயமாக இந்த சபையை அவமதிப்பதாகும், சபை உரிமைகளை மீறிய செயலாகும் என்ற காரணத்தால் அவர்கள் மீது, நான் குறிப்பிட்டிருக்கிற அந்த இரண்டு நபர்கள் மீது, ஜே. சுதர்சன், பி. பாலசுப்பிரமணியம் என்ற அந்த இருவர் மீது உரிமைமீறல் குற்றம் இழைத்ததற்காக தாங்கள் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : Under Article 194(2) of the Constitution of India, no Member of the Legislature shall be liable to any proceedings in any court in respect of anything said or any vote given by him in the Legislature or any Committee thereof. "This Article confers immunity inter alia in respect of 'anything' said....in Parliament, the word 'anything' is of the widest import and is equivalent to 'everything'. The only limitation arises from the words 'in Parliament' which means 'during the sitting of Parliament and in the course of business of Parliament'. The Courts have no say in the matter and should really have none...." (A.I.R. 1970 S.C.1573)

1989 மே 12] [Mr. Speaker]

For his speech and action in Parliament a Member is subject only to the discipline of the House itself and no proceedings civil or criminal, can be instituted against him in any court in respect of the same.

(A.I.R. 1959 S C. 395)

Similarly leave of the House is necessary for giving evidence in a court of law in respect of the proceedings in that House or Committee thereof or for production of any document connected with the proceedings of that House or Committee thereof. If a member gives evidence in a court of law in respect of the proceedings of the House without the permission of the House, that will also amount to breach of privilege. Threatening to inflict pecuniary loss upon a member on account of his conduct in Parliament/Legislature is a breach of privilege.

தற்போது உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையில் உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்காகத்தான் வழக்கு தொடரப்பட்டு உள்ளதா என்று தெளிவாக இல்லை. உறுப்பினர் அதற்கு ஆதாரமாக இணைத்துள்ள ஆவணத்தில் இந்த வழக்கு அவையில் உறுப்பினரால் பேசப்பட்டதற்காகத் தான் போடப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பும் அதில் தெளிவாக எதுவும் இல்லை. மேற்கண்ட நீதிமன்றத் தீர்ப்புகளின்படி யும், அரசியல் சட்ட விதிகளின்படியும் இவ்வவையில் உறுப்பினர் ஆற்றிய உரைக்காக எவரும் வழக்குத்தொடர முடியாது என்று தெரிவித்து இந்தப் பிரச்சினைக்கு நான் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

(முற்பகல் 9-10)

3. தகவல் கோரல்.

(அ) ஊதியக் குழு அறிக்கையை அரசுக்கு அளிப்பது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள், ஆகவே ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசு ஊழியர்களுக்காக போடப்பட்டுள்ள ஊதியக் குழு அதனுடைய அறிக்கையை சமர்ப்

1989 மே 12] [Mr. Speaker]

For his speech and action in Parliament a Member is subject only to the discipline of the House itself and no proceedings civil or criminal, can be instituted against him in any court in respect of the same.

(A.I.R. 1959 S.C. 395)

Similarly leave of the House is necessary for giving evidence in a court of law in respect of the proceedings in that House or Committee thereof or for production of any document connected with the proceedings of that House or Committee thereof. If a member gives evidence in a court of law in respect of the proceedings of the House without the permission of the House, that will also amount to breach of privilege. Threatening to inflict pecuniary loss upon a member on account of his conduct in Parliament/Legislature is a breach of privilege.

தற்போது உறுப்பினர் எழுப்பியுள்ள பிரச்சினையில் உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைக்காகத்தான் வழக்கு தொடரப்பட்டு உள்ளதா என்று தெளிவாக இல்லை. உறுப்பினர் அதற்கு ஆதாரமாக இணைத்துள்ள ஆவணத்தில் இந்த வழக்கு அவையில் உறுப்பினரால் பேசப்பட்டதற்காகத் தான் போடப்பட்டுள்ளது என்பதற்கான குறிப்பும் அதில் தெளிவாக எதுவும் இல்லை. மேற்கண்ட நீதிமன்றத் தீர்ப்புகளின்படியும், அரசியல் சட்ட விதிகளின்படியும் இவ்வவையில் உறுப்பினர் ஆற்றிய உரைக்காக எவரும் வழக்குத்தொடர முடியாது என்று தெரிவித்து இந்தப் பிரச்சினைக்கு நான் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

(முற்பகல் 9–10)

3. தகவல் கோரல்.

(அ) ஊதியக் குழு அறிக்கையை அரசுக்கு அளிப்பது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள், ஆகவே ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக நான் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசு ஊழியர்களுக்காக போடப்பட்டுள்ள ஊதியக் குழு அதனுடைய அறிக்கையை சமர்ப்

பித்துள்ளதா? இல்லை என்றால், அதற்குக்காலம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறதா? ஏற்கெனவே இந்த அறிக்கை பெறப்பட்டு, அதன் மீது முடிவு எடுக்கப்பட்டு ஜூன் மாதத்திலிருந்து அவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கின்ற காரணத்தால், இதைத் துரிதப்படுத்த அரசும், முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை 15 ஆம் தேதி வாக்கில் அரசிடம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ''ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்'' தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முதலாவதாகத் தொடங்கும்போதே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் 7, 8 மாதங்களாக இன்னும் ஒரு மாத ஊதியமும் பெற முடியாமல், தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆரம்பத்திலே இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும், தொடர்ந்து இங்கேயுள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சொல்லி வந்தார்கள். ஒரு மாத ஊதியத்தைக் கொடுத்துவிட்டு, தொழிற்சாலையைத் திறந்தால், வேலைக்கு வருவதாகவும், மேற்கொண்டு விஷயங்களைப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தொழிற் சங்கங்களும் ஏனைய சங்கங்களும் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகின்றன. ஒரு மாத ஊதியத்தைக் கூட அவர்களுக்குத் தராமல் 8, 9 மாத ஊதியங்கள் பாக்கியாக இருக்கிற நிலையில், ஒரு மாத ஊதியத்தைக்கூட தராமல் அந்த முதலாளி மறுத்துக்கொண்டு வருகிறார். அதனால் அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிய இருக்கிற காரணத்தால், இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுடைய கஷ்டத்தைப் போக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும், அந்த ஆலையைத் திறப்பதற்கும்,

பித்துள்ளதா? இல்லை என்றால், அதற்குக்காலம் நீட்டிக்கப்பட்டு இருக்கிறதா? ஏற்கெனவே இந்த அறிக்கை பெறப்பட்டு, அதன் மீது முடிவு எடுக்கப்பட்டு ஜூன் மாதத்திலிருந்து அவர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊதியங்கள் வழங்கப்படும் என்று சொல்லப் பட்டிருக்கின்ற காரணத்தால், இதைத் துரிதப்படுத்த அரசும், முதலமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கை 15 ஆம் தேதி வாக்கில் அரசிடம் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) ''ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ்'' தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முதலாவதாகத் தொடங்கும்போதே, நான் முதலமைச்சருடைய கவனத்திற்கு ஒரு விஷயத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைச் சேர்ந்த 3 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் 7, 8 மாதங்களாக இன்னும் ஒரு மாத ஊதியமும் பெற முடியாமல், தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆரம்பத்திலே இது சம்பந்தமாக வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும், தொடர்ந்து இங்கேயுள்ள தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சொல்லி வந்தார்கள். ஒரு மாத ஊதியத்தைக் கொடுத்துவிட்டு, தொழிற்சாலையைத் திறந்தால், வேலைக்கு வருவதாகவும், மேற்கொண்டு விஷயங்களைப் பேச்சு வார்த்தைகளின் மூலமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் தொழிற் சங்கங்களும் ஏனைய சங்கங்களும் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகின்றன. ஒரு மாத ஊதியத்தைக் கூட அவர்களுக்குத் தராமல் 8, 9 மாத ஊதியங்கள் பாக்கியாக இருக்கிற நிலையில், ஒரு மாத ஊதியத்தைக்கூட தராமல் அந்த முதலாளி மறுத்துக்கொண்டு வருகிறார். அதனால் அந்தத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிய இருக்கிற காரணத்தால், இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுடைய கஷ்டத்தைப் போக்கக்கூடிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்கவும், அந்த ஆலையைத் திறப்பதற்கும்,

1989 மே 12] [திரு. சோ. அழகர்சாமி]

அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாவதாக சொன்னபடி, ஒரு மாத ஊதியத்தை முன்கூட்டியே கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கு குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை குறித்து. ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பிரச்சினை குறித்து, நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் பலமுறை நிர்வாகத்தின் உறுப்பினர்களோடும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடும் பேசி இருக்கிறார்கள். ஒரு மாதச் சம்பளத்தைத் தருவது என்று உடன்பாடு ஏற்பட்ட போது, நிர்வாகத்தினர் அந்தச் சம்பளத்தைத் தருவதற்காக சென்றபோது, தாக்கப்பட்டதாக ஒரு காரணத்தைக் கூறி, அதனால் மீண்டும் உடன்பாட்டுக்கு வர இயலாது என்று ஒரு சமாதானம் சொன்னதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இருந்தாலும்கூட, யாரோ ஒரு சிலர் செய்த காரியத்திற்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற நிலைமையை நாம் ஏற்றுக் கொள்வதற்கு இயலாது. எனவே இந்தப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான தீர்வுகாண தொடர்ந்து நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஈடுபட்டு வருகின்றார். சட்டமன்றக் கூட்டத் தொடரும், பல்வேறு அலுவல்களும் இருந்த காரணத்தால் நான் நேரிடையாக அதிலே ஈடுபட இயலவில்லை. நான் தொழிலாளர் அமைச்சரிடத்திலே இது பற்றிய விவரங்களைக் கேட்டு கூட்டத் தொடர் முடிந்தவுடன் இந்தப் பிரச்சினையிலே தீவிர கவனம் செலுத்தி, தொழிலாளர் நலனுக்காக நிச்சயமாக ஒரு நல்ல முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை மூடும் செயற்குறிப்பு குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் சாத்தூர் நகரத்தில் 1986ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இந்தக் கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு இடங்களை வாங்கச் சொல்லி 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ஒரு கோடி ரூபாயிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பள்ளிக் கட்டிடங்களும் உணவு விடுதியும் அங்கே தயாராக இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தப் பயிற்சிப் பள்ளியை மூட வேண்டுமென்று உத்திரவு பதிவாளரிடமிருந்து சாத்தூர் துணைப் பதிவாளருக்கு சென்று இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது போன்ற துவக்க நிலையில்

அந்தத் தொழிலாளர்களுக்கு முதலாவதாக சொன்னபடி, ஒரு மாத ஊதியத்தை முன்கூட்டியே கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு, இப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள் இங்கு குறிப்பிட்ட இந்தப் பிரச்சினை குறித்து, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் பிரச்சினை குறித்து, நம்முடைய தொழிலாளர் அமைச்சர் அவர்கள் பலமுறை நிர்வாகத்தின் உறுப்பினர்களோடும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடும் பேசி இருக்கிறார்கள். ஒரு மாதச் சம்பளத்தைத் தருவது என்று உடன்பாடு ஏற்பட்ட போது, நிர்வாகத்தினர் அந்தச் சம்பளத்தைத் தருவதற்காக சென்றபோது, தாக்கப்பட்டதாக ஒரு காரணத்தைக் கூறி, அதனால் மீண்டும் உடன்பாட்டுக்கு வர இயலாது என்று ஒரு சமாதானம் சொன்னதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இருந்தாலும்கூட, யாரோ ஒரு சிலர் செய்த காரியத்திற்கு ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற நிலைமையை நாம் ஏற்றுக் கொள்வதற்கு இயலாது. எனவே இந்தப் பிரச்சினையிலே ஒரு சுமூகமான தீர்வுகாண தொடர்ந்து நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஈடுபட்டு வருகின்றார். சட்டமன்றக் கூட்டத் தொடரும், பல்வேறு அலுவல்களும் இருந்த காரணத்தால் நான் நேரிடையாக அதிலே ஈடுபட இயலவில்லை. நான் தொழிலாளர் அமைச்சரிடத்திலே இது பற்றிய விவரங்களைக் கேட்டு, கூட்டத் தொடர் முடிந்தவுடன் இந்தப் பிரச்சினையிலே தீவிர கவனம் செலுத்தி, தொழிலாளர் நலனுக்காக நிச்சயமாக ஒரு நல்ல முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) சாத்தூர் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை மூடும் செயற்குறிப்பு குறித்து.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் சாத்தூர் நகரத்தில் 1986ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசாங்கம் இந்தக் கூட்டுறவு பயிற்சிப் பள்ளிக்கு இடங்களை வாங்கச் சொல்லி 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ஒரு கோடி ரூபாயிலே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பள்ளிக் கட்டிடங்களும் உணவு விடுதியும் அங்கே தயாராக இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசின் சார்பாக ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தப் பயிற்சிப் பள்ளியை மூட வேண்டுமென்று உத்திரவு பதிவாளரிடமிருந்து சாத்தூர் துணைப் பதிவாளருக்கு சென்று இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. இது போன்ற துவக்க நிலையில்

சிறப்பாகப் பணியாற்றுகின்ற அந்தப் பயிற்சிப் பள்ளியை—தென் மாவட்டங்களில் மிக முக்கியமாக இருக்கிற காரணத்தால், அந்தப் பயிற்சிப் பள்ளியைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு உத்திரவிட வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பதிவாளரின் கடிதத்தில் சாத்தூர் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு அரசு அனுமதித்துள்ள இலவசப் பள்ளி இடங்களை 15-5-1989 வரை பயன்படுத்தலாம் என்றும், 16-5-1989 வரை இப்பயிற்சி நிலையத்திற்கு பணி இடங்கள் மற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் பணி இடங்களையும் கலைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்போது கூட்டுறவு பயிற்சி நிலையத்தை தொடர்ந்து நடத்த பதிவாளரின் அனுமதி வேண்டி தனியாக ஒரு கோரிக்கையை கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளர் (காமராசர் மண்டலம்) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இடையில் நிர்வாகக் காரணங்களுக்காக இப்பயிற்சி நிலையத்தை 30-6-1989 வரை தொடர கால அவகாசம் அளிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும் எழுதியிருக்கிறார். எனவே கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளருடைய பரிந்துரையை—30-6-1989 வரை கேட்டிருக்கக்கூடியதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து இந்தப் பயிற்சி நிலையம் அங்கே இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

(ஈ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் எழுப்ப விரும்புகிற பிரச்சினை நேற்றையதினம் கூட இந்த அவையிலே ஓரளவுக்கு விரிவாக விவாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன, அணுகுமுறை என்ன, முடிவு என்ன என்பதை இதுவரையில் எங்களால் தீர்க்கமாக, தீர்மானமாக அறிந்து கொள்ள முடியவில்லை என்ற காரணத்தால் நான் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பஞ்சாயத்து ராஜ் என்ற அந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் இன்றைக்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சிறப்பாகப் பணியாற்றுகின்ற அந்தப் பயிற்சிப் பள்ளியை—தென் மாவட்டங்களில் மிக முக்கியமாக இருக்கிற காரணத்தால், அந்தப் பயிற்சிப் பள்ளியைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு உத்திரவிட வேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பதிவாளரின் கடிதத்தில் சாத்தூர் கூட்டுறவு பயிற்சி நிலையத்திற்கு அரசு அனுமதித்துள்ள இலவசப் பள்ளி இடங்களை 15-5-1989 வரை பயன்படுத்தலாம் என்றும், 16-5-1989 வரை இப்பயிற்சி நிலையத்திற்கு பணி இடங்கள் மற்றும் நிறுவனத்தில் பணிபுரியும் பணி இடங்களையும் கலைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்போது கூட்டுறவு பயிற்சி நிலையத்தை தொடர்ந்து நடத்த பதிவாளரின் அனுமதி வேண்டி தனியாக ஒரு கோரிக்கையை கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளர் (காமராசர் மண்டலம்) அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இடையில் நிர்வாகக் காரணங்களுக்காக இப்பயிற்சி நிலையத்தை 30-6-1989 வரை தொடர கால அவகாசம் அளிக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றும் எழுதியிருக்கிறார். எனவே கூட்டுறவுச் சங்கங்களுடைய இணைப் பதிவாளருடைய பரிந்துரையை—30-6-1989 வரை கேட்டிருக்கக்கூடியதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து இந்தம் பயிற்சி நிலையப் அங்கே இருக்க வேண்டும் என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

(ஈ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் எழுப்ப விரும்புகிற பிரச்சினை நேற்றையதினம் கூட இந்த அவையிலே ஓரளவுக்கு விரிவாக விவாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன, அணுகுமுறை என்ன, முடிவு என்ன என்பதை இதுவரையில் எங்களால் தீர்க்கமாக, தீர்மானமாக அறிந்து கொள்ள முடியவில்லை என்ற காரணத்தால் நான் இந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பஞ்சாயத்து ராஜ் என்ற அந்தப் புதிய திட்டத்தின் அடிப்படையில் நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில் இன்றைக்கு

அடிப்படையான மாறுதல்களைக் கொண்டு வரவேண்டுமென்று மத்திய அரசு முடிவு செய்திருப்பதும், அது குறித்து அண்மையிலே மாநில முதலமைச்சர்களுடைய ஒரு மாநாடும் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களால் கூட்டப்பட்டு அதிலே மாற்றுக்கருத்துடைய முதலமைச்சர்களும் கலந்து கொண்டு தங்களுடைய எண்ணங்களை மிக அழுத்தமாக எடுத்துச் சொல்லியும் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் இந்தப் பிரச்சினையில் எந்தவிதமான மறு சிந்தனையும் இல்லை என்றும் மத்தியிலே ஆளுகிற கட்சியில் கூட அவர்களுடைய அந்தத் திட்டத்தை ஆதரித்து அதை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்றையதினம் நிரம்ப இதுபற்றி இந்த மாமன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. நானும் என்னுடைய கருத்தை ஏற்கெனவே வெளியிட்டு இருக்கிறேன். எனவே அது குறித்து மேலும் விவாதம் தேவையில்லை என்று கருதுகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாகத்தான் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது. நேற்றே அவற்றையெல்லாம் பேசியாகிவிட்டது.

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டிலே கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில் அரசு சார்பாக என்ன கருத்துக்கள் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது? அந்த மாநாட்டில் என்ன முடிவு செய்யப்பட்டிருக்கிறது? குறிப்பாக நம்முடைய மாநிலத்தில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரிடையாகவே அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே மத்திய அரசாங்கத்தினுடைய பணம் வந்திருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே கூறியிருக்கிறார்களே, அவர்கள் நேரிடையாக அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டது பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது? அவர்கள் பெற்றுக் கொண்டதை வைத்துக் கொண்டிருக்கிறார்களா? திருப்பி அனுப்புவதற்கான அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி அவர்கள் வாங்கிக் கொண்டிருந்தால் அந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

(முற்பகல் 9–20)

அதை நேரிடையாக வாங்கிக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஏதாவது உத்தரவிட்டிருக்கிறதா? மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1989 மே 12

அந்த மாநாட்டிலே கலந்து கொண்ட பிறகு அவர்கள் அரசுக்கு சமர்ப்பித்த அறிக்கை என்ன? அதை அவை தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையை எழுப்புகின்றேன், இந்தப் பிரச்சினைகள் இந்த மன்றத்திலே விவாதிக்கப்படவில்லை என்ற காரணத்தினால். இது முக்கியமான பிரச்சினை. இதைப்பற்றி அரசு ஒரு எண்ணத்தை வெளியிட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாக பணத்தை .. (குறுக்கீடு) இந்த அவை அறிந்துகொள்ள விரும்புகிறது. அதைத்தான் நான் எழுப்புகிறேன். அதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. வீரையன் அவரும் நேற்று இதையே கேட்டார்.

திரு. கோ. வீரையன்: தலைவர் அவர்களே, நான் நேற்றிலிருந்து கேட்டுக்கொண்டு இருப்பது நேற்று விவாதிக்கப் பட்ட ஒரு பிரச்சினை அல்ல. நம்முடைய அவை என்பது கடந்த $1\frac{1}{2}$ மாத காலமாக வரவு செலவுத் திட்டத்தையெல்லாம் விவாதித்து நிறைவேற்றியிருக்கிறது. ஏறத்தாழ உள்ளாட்சித் துறைக்கு 220 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விவாதத்தை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். ஆனால் ஆர். எல. ஈ. ஜி. பி., என். ஆர். ஈ. பி. போன்ற திட்டங்களுக்கு வரக்கூடிய நிதி ஒதுக்கீட்டையும் சேர்த்துத்தான் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தை இங்கே விவாதித்து நிறைவேற்றியிருக் கிறோம். அப்படி இருக்கும்போது அதையெல்லாம் நொறுக்கி தவிடு பொடியாக்கக்கூடிய முறையிலே நேரு வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயராலே அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டத்தினுடைய பணங்கள் முழுவதும் நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ஒன்றியங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டு ஒன்றியங் களும் அதைப்பற்றி விவாதித்து அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கும்போது நாம் $1\frac{1}{2}$ மாத காலமாக விவாதித்து முடிவு எடுத்திருக்கக்கூடிய இந்த வரவு செலவுத் திட்டம் முழுவதும் பாதிக்கக்கூடிய அளவுக்கு இந்த அரசுக்கு மாறாக வேறு ஒரு போட்டி அரசு தமிழகத்திலே செயல்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறதே, இதைப்பற்றி நம்முடைய அரசு என்ன நிலையை எடுக்கிறது என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையிலே இது குறித்து குறிப்பிட்ட நேரத்தில் மிக விளக்கமாகவே சொல்லியிருக் கிறேன். ஜவஹர் திட்டம் என்ற பெயரால் அமைகின்ற

1989 மே 12] [டாக்டர் மு. கருணாநிதி]

அந்தத் திட்டத்தினால் நாம் கடந்த ஆண்டு பெற்ற தொகையை விட இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலே நம்முடைய மாநிலத்திலே உள்ள உள்ளாட்சிகளுக்குக் கிடைக்கின்ற தொகை ஜவஹர் திட்டத்தின் மூலம் 27 கோடி ரூபாய் அளவிற்குக் குறைகிறது என்ற புள்ளிவிவரங்களோடு இங்கே எடுத்துக் காட்டி இருக்கிறேன். அதுமாத்திரமல்ல. வரவேண்டிய தொகை குறைகிறது என்பது மாத்திரம் அல்ல. மாநிலங்களுடைய அதிகாரங்களும் பறிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறேன். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே கேட்டதைப் போல நம்முடைய வருவாய்துறை அமைச்சர் அவர்கள் தமிழக அரசின் சார்பாக டெல்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் கூட்டிய அந்த முதலமைச்சர்களுடைய கூட்டத்திலே கலந்து கொண்டு நம்முடைய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக அங்கே எடுத்து வைத்திருக்கின்றார். மாநில உரிமைகளுக்காக வாதாடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாநில உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலே செயல்படக்கூடாது என்று எடுத்துக் கூறியிருக்கிறார். அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக உள்ளாட்சி மன்றங்களுக்கு திட்டங்களுக்கான பணத்தை அனுப்புவது என்பது மாநிலத்திலே ஒரு அரசு இருக்கிறது என்பதை நிராகரித்துவிட்ட செயலாகும். பத்திரிகைகளிலே பார்க்கும் போதும் இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களுடைய கருத்துக்கள் ஏடுகளிலே வருவதைக் காணும் போதும் அவர்களுடைய உரைகளிலேயும் நாம் இன்ன திட்டம் தான் வரப்போகிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. கவர்னர் நினைத்தால் உள்ளாட்சி மன்றங்களை எல்லாம் கலைத்துவிடலாம், காரணம் காட்டி என்று ஒரு நாள் செய்தி வருகிறது. மறுநாள் பத்திரிகையிலே செய்தி வரும்போது மாநில அதிகாரங்கள் எதையும் நான் பறிக்க மாட்டேன் என்றும் மாநிலங்கள் வாயிலாகத்தான் உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடுகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்றும் செய்தி வருகின்றது. ஆனால் எதுவும் திட்டவட்டமாக இல்லாத சூழ்நிலை. நம்முடைய முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்ட மாநாட்டில் வருவாய்த்துறை அமைச்சரும் கலந்து கொண்ட அந்த மாநாட்டிலே கூட அரசியல் சட்டத்திலே இன்னின்ன பகுதிகளைத்தான் திருத்தப் போகிறோம் அல்லது இணைக்கப் போகிறோம் என்றும் திட்டவட்டமாக எதுவும் அன்றைக்கும் குறிப்பிடப்படவில்லை. அந்தக் காரணத்தினாலே தான் நாம் கோருவது அரசியல் சட்டத்திலே என்ன மாற்றம் செய்யப்போகிறோம், பஞ்சாயத்துக்களுடைய முன்னேற்றத்திற்காக என்பதை முன்கூட்டியே அறிவித்து அதை ஒரு டிஸ்கஷனுக்கு, தேசிய அளவிலான ஒரு விவாதத்திற்கு வைத்து அதன் பிறகு எல்லா மாநில முதலமைச்சர்களுடைய கருத்தையும்

கட்சி சார்பற்ற முறையிலே அறிந்து அதன் பிறகு அந்த அரசியல் சட்டத் திருத்தத்தை கொண்டுவருவதுதான் சாலச் சிறப்பு உடையதாக இருக்க முடியும் என்ற கருத்தும் தெரிவிக்கப் பட்டு இருக்கிறது.

கடந்த காலத்திலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று வாதாடுகிற அதே சமயத்தில், பஞ்சாயத்துக் களுக்கும் அதிக அதிகாரம் வேண்டும் என்று யாரும் வாதாடத் தவறவில்லை. அதைப்போல, பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்ட நேரத்தில் அந்த அதிகாரங் களை எல்லாம் வழங்கி விட்டு, நேரடியான அதிகாரத்தை மத்தியிலே உள்ளவர்கள் தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் எந்தக் குழுவினரும் பரிந்துரை செய்யவும் இல்லை. இன்றைக்கு திடீரென்று டெல்லிக்கும் நம்முடைய மாநிலத் திலே இருக்கின்ற ஏதோ ஒரு சிற்றூருக்கும் தொடர்பு, ஆனால் மாநில அரசிற்குத் தொடர்பு இல்லை என்ற ஒரு நிலை ஏற்படுமேயானால், அதை விட மாநில அரசுகளுக்குக் கேவல மும் வேறு ஒன்றுமில்லை. உரிமை பறிக்கப்படுகின்ற காரிய மும் வேறு ஒன்றும் இல்லை, இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் இன்றைக்கு பஞ்சாயத்துராஜ் என்கின்ற பெய ரால் செய்யப்படுகின்ற திருத்தங்கள் மாநில அரசைப் பாதிக் கும் என்பது எல்லா மாநில அரசுகளின் சார்பிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை காங்கிரஸ் அரசுகள் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் கூட எதிர்காலத்திலே அவர்களும் இத்தகைய சங்கடங்களை அனுபவிக்க நேரிடும் என்பதை எதிர்க்கட்சி ஆட்சி நடக்கின்ற மாநிலங்களிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இப்போதுகூட, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மைய அரசிடமிருந்து தகவல்கள் வந்துள்ள தாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாவட் டங்களின் துணையோடு உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவிகளை அளிப்பதும், திட்டங்களை நிறைவேற்றுவதும் என்பது மாநில அரசை, ஏன் இந்த மாமன்றத்தையே அலட்சியப்படுத்துகின்ற காரியம் என்று தான் நான் கருதுகின்றேன்.

அந்தவகையிலே நம்முடைய நாகை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன அந்தக் கருத்தும் கூடப் பொருந்தும். ஒரு மாத காலத்திற்கும் மேலாக நாம் விவாதித்து கிராமப்புறத் திட்டங்களுக்காக என்னென்ன செய்யப் போகி றோம் என்பதையெல்லாம், நல்லவைகள், கெட்டவைகள், அல்லாவைகள், இவைகளைப் பற்றியெல்லாம் நாம் இங்கே விவாதித்து, திடீரென்று இப்படிப்பட்ட ஒரு திட்டத்தின் மூலம்

உள்ளாட்சி மன்றங்களுடைய உரிமைகள் அதிகமாக ஆக்கப் படுகின்றன என்ற பெயரால், மாநில உரிமைகளைப் பறிப்பது சிறப்புடையது அல்ல, ஏற்புடையது அல்ல என்பதை நான் மீண்டும் ஒரு முறை தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசிற்கு எதிராக இந்தக் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கும் போது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்து, நேற்று

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து மன்னிக்க வேண்டும். மத்திய அரசிற்கு எதிராக எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. மாநில அரசிற்குச் சார்பாக சொல்லப்பட்ட கருத்துக்கள்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கருத்துக் கூறுகிற நேரம் அல்ல. (குறுக்கீடு) திரு. சொக்கர் உட்கார வேண்டும். இது எல்லாம் தேவைப்படும்போது, நேற்று ஊராட்சி மன்றம் பற்றி வந்தது. நீங்கள் வெளியூர் போய்விட்டீர்கள். பேசுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. (குறுக்கீடு) நேற்றெல்லாம் நிறையப் பேசி கருத்து எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திரு. சொக்கர் உட்காரலாம். அடுத்து, திருமதி பாப்பா உமாநாத். (குறுக்கீடு) திரு. சொக்கர் பேசுகிற பேச்சு எதுவும் பதிவாகாது.

(உ) சென்னை நகரில் தர்ணா, உண்ணாவிரதம் நடத்துவதற்கு இருக்கும் தடை குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தில் இங்கு பதில் சொல்லக்கூடிய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய நகரத்தில், குறிப்பாக, சென்னை நகரத்தில் தங்களுடைய கருத்துக்களை, ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தக்கூடிய முறையில் தர்ணாவோ, உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ

உள்ளாட்சி மன்றங்களுடைய உரிமைகள் அதிகமாக ஆக்கப்படுகின்றன என்ற பெயரால், மாநில உரிமைகளைப் பறிப்பது சிறப்புடையது அல்ல, ஏற்புடையது அல்ல என்பதை நான் மீண்டும் ஒரு முறை தமிழக அரசின் சார்பாக எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of Order என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நினைக்கிறேன். மத்திய அரசிற்கு எதிராக இந்தக் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கும் போது. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்து, நேற்று

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயவுசெய்து மன்னிக்க வேண்டும். மத்திய அரசிற்கு எதிராக எந்தக் கருத்தும் சொல்லப்படவில்லை. மாநில அரசிற்குச் சார்பாக சொல்லப்பட்ட கருத்துக்கள்தான். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கருத்துக் கூறுகிற நேரம் அல்ல. (குறுக்கீடு) திரு. சொக்கர் உட்கார வேண்டும். இது எல்லாம் தேவைப்படும்போது, நேற்று ஊராட்சி மன்றம் பற்றி வந்தது. நீங்கள் வெளியூர் போய்விட்டீர்கள். பேசுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது. (குறுக்கீடு) நேற்றெல்லாம் நிறையப் பேசி கருத்து எல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. திரு. சொக்கர் உட்காரலாம். அடுத்து, திருமதி பாப்பா உமாநாத். (குறுக்கீடு) திரு. சொக்கர் பேசுகிற பேச்சு எதுவும் பதிவாகாது.

(உ) சென்னை நகரில் தர்ணா, உண்ணாவிரதம் நடத்துவதற்கு இருக்கும் தடை குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியத்தில் இங்கு பதில் சொல்லக்கூடிய நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டது. நம்முடைய நகரத்தில், குறிப்பாக, சென்னை நகரத்தில் தங்களுடைய கருத்துக்களை, ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தக்கூடிய முறையில் தர்ணாவோ, உண்ணாவிரதமோ, ஆர்ப்பாட்டமோ

செய்வதற்கு தற்போது அனுமதி வழங்கப்படுவது இல்லை. பாரதி சிலையை நோக்கி ஊர்வலங்கள் ஏராளமாக நடக்கின்றன. தடைக்கிணங்க அனுப்பப்படுகிறார்கள். ஆகவே, அந்தந்த நிறுவனங்களின் வாயில்களில் மற்றும் குறிப்பாக சில இடங்களில் பழைய முறையில் அந்த உரிமைகளை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று அவருடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்பிய அந்தக் கோரிக்கை என் கவனத்திலே இருக்கிறது. நிச்சயமாக சென்னை மாநகரப் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்ய முன்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அவையில் நம்முடைய மத்திய பாராளுமன்றத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் சபாநாயகர் என்ற முறையில் அல்லாமல் ஒரு நிறுவனத்தின் கௌரவத் தலைவர் என்ற முறையில் தமிழக அரசோடு தொடர்பு கொண்ட ஒரு விஷயம் குறித்து பல செய்திகள் விவாதிக்கப்பட்டன. அது தொடர்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் கோப்புகளைப் பார்த்து விடை சொல்வதாகச் சொல்லியிருந்தார். தற்போது முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறியவாறு நேற்று அப்துல் லத்தீப் அவர்களும், பூவராகன் அவர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை குறித்து நான் விளக்கம் அளித்தபோது, இன்னும் நான் அந்தக் கோப்புகளைப் பார்க்கவில்லை, பார்த்துவிட்டு இன்று அது குறித்து அறிக்கை வைப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அறிக்கையினை இப்போது இந்த அவையின் முன்னால் வைக்கிறேன்.

அறிக்கை.

திரு. பல்ராம் ஜாக்கர் அவர்களிடமிருந்து அவரது லெட்டர் பேடில் எழுதப்பட்ட கடிதம் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 23-3-1987 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதனையொட்டி ஃபோமிடா பசும்புல்

செய்வதற்கு தற்போது அனுமதி வழங்கப்படுவது இல்லை. பாரதி சிலையை நோக்கி ஊர்வலத்துக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆகவே, அந்தந்த நிறுவனங்களின் வாயில்களில் மற்றும் குறிப்பாக சில இடங்களில் பழைய முறையில் அந்த உரிமைகளை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் என்று அவருடைய கவனத்தை ஈர்ப்பதற்காகவே இந்தப் பிரச்சினையை எழுப்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்பிய அந்தக் கோரிக்கை என் கவனத்திலே இருக்கிறது. நிச்சயமாக சென்னை மாநகரப் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

தீவன இயந்திரங்கள் இறக்குமதி செய்ய முன்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அவையில் நம்முடைய மத்திய பாராளுமன்றத் தலைவர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள் சபாநாயகர் என்ற முறையில் அல்லாமல் ஒரு நிறுவனத்தின் கௌரவத் தலைவர் என்ற முறையில் தமிழக அரசோடு தொடர்பு கொண்ட ஒரு விஷயம் குறித்து பல செய்திகள் விவாதிக்கப்பட்டன. அது தொடர்பாக நம்முடைய முதல்வர் அவர்கள் கோப்புகளைப் பார்த்து விடை சொல்வதாகச் சொல்லியிருந்தார். தற்போது முதலமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் அளிப்பார்கள்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறியவாறு நேற்று அப்துல் லத்தீப் அவர்களும், பூவராகன் அவர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை குறித்து நான் விளக்கம் அளித்தபோது, இன்னும் நான் அந்தக் கோப்புகளைப் பார்க்கவில்லை, பார்த்துவிட்டு இன்று அது குறித்து அறிக்கை வைப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அறிக்கையினை இப்போது இந்த அவையின் முன்னால் வைக்கிறேன்.

அறிக்கை.

திரு. பல்ராம் ஜாக்கர் அவர்களிடமிருந்து அவரது லெட்டர் பேடில் எழுதப்பட்ட கடிதம் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு 23-3-1987 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதனையொட்டி ஃபோமிடா பசும்புல்

இயந்திரங்களை அமைப்பதன் மூலம் நாட்டின் வெண்மைப் புரட்சிக்கு உறுதுணை புரிய முடியும் என்ற கருத்தில் அத்தகைய இயந்திரங்களை ஊட்டி ஜெர்சி பொலிகாளை நிலையத்திலும், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளான இராமநாதபுரம், தர்மபுரி ஆகிய இடங்களிலும் அமைக்கலாம் என்ற கருத்துரு 3-4-1987 அன்று தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் (பெடரேஷனின்) மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டது. ஆயினும் அந்த இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பசும் புல்லின் விலை சாதாரணமாக பயிரிடப்படும் புல்லின் விலையை விட இரண்டு மடங்குக்கு மேல் இருந்ததால் அந்த இயந்திரங்களை வாங்க வேண்டாம் என அரசு அதிகாரிகள் மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு இணையத்திற்கு (பெடரேஷனுக்கு) அரசு தனது 20-11-87 ஆம் நாளைய கடிதத்தில் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் ஃபோமிடா இந்தியா நிறுவனத்தின் தலைவர் திரு. ஜான்பிராடி 18-7-88 ஆம் தேதி தமிழக ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் 1987 ஆம் ஆண்டு அந்நாளைய மாண்புமிகு அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள் வாயிலாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் போமிடா பசும் புல் உற்பத்தி இயந்திரங்களை நிறுவ கருத்துரு அனுப்பப்பட்டதாகவும், அக்கருத்துருவின் மீது முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்களது இறுதி ஏற்பு ஆணை பெறப்பட்டதாகவும், அவ்வாணைகளைச் செயல்படுத்தும் முன் அவர் இயற்கை எய்தி விட்டதால் ஆணைகளைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டன என்றும் திரு. பிராடி தெரிவித்துள்ளார். ஆனால் அத்தகைய ஆணைகள் எதுவும் முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களால் பிறப்பிக்கப்படவில்லை. மற்றும் திரு. பிராடி தனது கடிதத்தில் ஃபோமிடா பசும் புல் உற்பத்தி இயந்திரங்களை வாங்க வேண்டும் என்ற கருத்துருவைப் புதுப்பித்துள்ளார். 'அதனை ஆய்ந்து வைக்கவும்' என ஆளுநர் பிறப்பித்த ஆணைகளை ஒட்டியும் ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டில் இந்த இயந்திரங்கள் மூலம் புல் உற்பத்தி செய்வதில் உற்பத்திச் செலவு அதிகம் என்று எடுக்கப்பட்ட முடிவைக் கருத்தில் கொண்டும் அத்தகைய பசும் புல் உற்பத்தி இயந்திரங்களை வாங்குவது பற்றி அரசு கருதும் முன் நிறுவனத்தின் சொந்தச் செலவிலேயே தமிழ்நாட்டிலுள்ள ஏதாவது ஒரு மாவட்ட அரசு கால்நடைப் பண்ணையிலோ அல்லது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலோ ஒரு இயந்திரத்தை சோதனைத் திட்டமாக அமைத்து நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும் என நிறுவனத்தைக் கேட்கலாம் என்ற ஒரு ருத்துரு இருந்தது. அதைச் செயல்படுத்தும் முன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தையும், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தையும் (பெடரேஷனையும்) கலந்து ஆலோசிக்கலாம் என முடிவு செய்யப்பட்டு அவர்களது கருத்து

கோரப்பட்டது. இதற்கிடையே தமிழக ஆளுநர் அவர்களுக்கு திரு. பிராடி 20–11–88-ல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட இயந்திரத் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் கட்டி முடிக்கப் பட்டதாகக் கருதி அதற்குரிய மானியமாக 15 லட்சம் ரூபாய் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நிலையில் ஹைதராபாத்துக்கு நமது வல்லுநர்களை அனுப்பி அவை அங்கே செயல்பட்டு வரும் முறைகளைக் கண்டறிந்து அந்த இயந்திரங்கள் உண்மையிலேயே அவற்றின் உற்பத்தியாளர் கூறுவது போல் சிறப்பாக செய பட்டு வருகிறதா என்பதைத் தொிந்து கொள்ளப் பணிக்கலாம் என ஆளுநர் ஆணை பிறப் பித்தார். அதோடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ராம கிருஷ்ணா அவர்கள் சம்பந்தப்பட்ட துறையின் செயலாளரோடு தொடர்புகொண்டு ஆளுநர், ஆலோசகர் திரு. ராமகிருஷ்ணா ஆகிய இருவரின் விருப்பப்படி துறைச் செயலாளர், திரு. பிராடியைச் சந்திக்கலாம் என்று கூறியபடி கால்நடை பராமரிப்புச் செயலாளரை 21–11–88 அன்று திரு. பிராடி சந்தித்தார். அப்போது, ஹைதராபாத்தில் அவர்களது இயந்தி ரங்கள் செயல்பட்டுவரும் விவரத்தை அறிந்துவர நமது துறை வல்லுநர்களை அனுப்பலாமா என செயலாளர் கேட்டதற்கு அனுப்பலாம் என்று திரு. பிராடி கூறினார்.

அதையடுத்து தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் தலைமையில் கூடுதல் கால்நடை பராமரிப்பு இயக்குநர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் (கால்நடைத் தீவனம்), தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரிப் பேராசிரியர் (தீவனங்கள்), முதுநிலை மேலாளர் (பால் வளம்), துணை மேலாளர் (கணக்கு), முதுநிலை மேலாளர் (பொறியியல்), ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர் ஹைதராபாத் மற்றும் ஜான்சி ஆகிய இடங்களில் ஃபோடா பசும்புல் உற்பத்தி இயந்தி ரங்கள் செயல்படும் முறைகளை 30–11–88 முதல் 3–12–88 வரை பார்வையிட்டு பின்னர் அரசுக்குக் கொடுத்த பரிந் துரையில் மேற்படி இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் புல்லின் விலை கிலோ 1-க்கு ரூ. 1.53 காசாகிறது என்றும், அது சாதாரணப் பசும்புல் உற்பத்திச் செலவை விட மூன்று மடங்குக்கு மேல் உள்ளது என்றும், இதைப் பால் உற்பத்தி யாளர்கள் எந்த அளவிற்கு வரவேற்பார்கள் என்று சொல் வதற்கு இல்லையென்றும் தெரிவித்துள்ளார்கள். அத்தோடு இப்புல்லை தீவனமாகப் போடுவதன்மூலம் பால் உற்பத்தி 30 சதவீதம் அதிகமாகிறது என்ற இயந்திர உற்பத்தி யாளரின் கூற்றை உடனடியாக அறுதியிட்டுக்கூற இயல வில்லை என்றும் அக்குழுவினர் தெரிவித்துள்ளார்கள். இருப்பினும் நாள்தோறும் தட்பவெப்ப நிலைகளால் துவளாது புல் தரும் நிலையையும், அதிக பால் உற்பத்தி தருகிறது என்னும் அவர்களது கூற்றையும் கருத்தில் கொண்டு சோதனைத் திட்டமாக இயந்திர உற்பத்தியாளர் முதலில்

கோரியபடி ரூ. 14.4 கோடிக்கு இயந்திரங்கள் வாங்குவதற்குப் பதிலாக—அவர்கள் கோரியது ரூ. 14 கோடிக்கு வாங்கச் சொல்லி—அதற்கு பதிலாக ரூபாய் 7 லட்சம் செலவில் ஒரே ஒரு இயந்திரத்தை வாங்கி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து சோதனை செய்யுமாறு கோரலாம் எனக் குழுவினர் தெரிவித்தனர். இதன் அடிப் படையில் ஒரு இயந்திரத்தை வாங்கலாம் என இத்துறை பரிந்துரைத்த போது. நிதித்துறை அவ்வாறு வாங்குவது தேவையற்றது எனக் கருத்து தெரிவித்தது. அதன் பின்னர் கால்நடை பராமரிப்புத் துறைச் செயலரும், நிதித் துறைச் செயலரும். தலைமைச் செயலாளரோடு கலந்துரையாடி இந்த இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் புல்லின் உற்பத்திச் செலவு மிகவும் அதிகம் என்பதையும் இதற்கான மின்சாரம் விவசாயத்திற்கான குறைந்த கட்டண வீதத்தில் கொடுக்க முடியாது என்பதையும் கருத்திற்கொண்டு ஒரு இயந்திரங் கூட வாங்க வேண்டியதில்லை எனப் பரிந்துரைத்தனர். அது சுற்றுக்கு அனுப்பப்பட்டபோது ஆலோசகர் திரு. இராமகிருஷ்ணா அவர்கள் சோதனைத் திட்டமாக ஒரு இயந்திரம் வாங்கலாம் எனத் தெரிவித்த கருத்திற்கு, ஆளுநர் ஏற்பளித்தார். இந்த நிலையில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு பொறுப்பேற்றுக்கொண்டபின், கோப்பு று படியும் அரசின் கவனத்திற்கு வந்தபோது, ஒரு இயந்திரம் கூட வாங்க வேண்டாமென்று இந்த அரசு முடிவெடுத்தது. அரசின் முடிவும் கடந்த 4-5-89 அன்று திரு. பிராடி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) 29-4-1989 ஆம் நாளன்று சென்னையில் பல பல்லவன் பேருந்துகள் முழுமையான அளவுக்கு இயக்கப்பெறாதது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 29—4—1989 அன்று காலைப் பணிமாற்றத்தின் போது 46 பேருந்துகளும், மாலைப் பணிமாற்றத்தின்போது 327 பேருந்துகளும்—ஏப்ரல் 29 ஆம் தேதி சென்னை பேருந்து டெப்போக்களில் இருந்து பரவலாக பேருந்துகள் பயணிக்க வில்லை. உதாரணத்திற்கு, தி. நகர் டெப்போவில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் மரபு அறிந்த வர்கள். அறிவிக்கையில் குறித்துள்ள பொருள் குறித்து அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்த பின்னர் துணை வினா கேட்கலாம்.

கோரியபடி ரூ. 14.4 கோடிக்கு இயந்திரங்கள் வாங்குவதற்குப் பதிலாக—அவர்கள் கோரியது ரூ. 14 கோடிக்கு வாங்கச் சொல்லி—அதற்கு பதிலாக ரூபாய் 7 லட்சம் செலவில் ஒரே ஒரு இயந்திரத்தை வாங்கி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்து சோதனை செய்யுமாறு கோரலாம் எனக் குழுவினர் தெரிவித்தனர். இதன் அடிப் படையில் ஒரு இயந்திரத்தை வாங்கலாம் என இத்துறை பரிந்துரைத்த போது. நிதித்துறை அவ்வாறு வாங்குவது தேவையற்றது எனக் கருத்து தெரிவித்தது. அதன் பின்னர் கால்நடை பராமரிப்புத் துறைச் செயலரும், நிதித் துறைச் செயலரும். தலைமைச் செயலாளரோடு கலந்துரையாடி இந்த இயந்திரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் புல்லின் உற்பத்திச் செலவு மிகவும் அதிகம் என்பதையும் இதற்கான மின்சாரம் விவசாயத்திற்கான குறைந்த கட்டண விதத்தில் கொடுக்க முடியாது என்பதையும் கருத்திற்கொண்டு ஒரு இயந்திரம் கூட வாங்க வேண்டியதில்லை எனப் பரிந்துரைத்தனர். அது சுற்றுக்கு அனுப்பப்பட்டபோது ஆலோசகர் திரு. இராமகிருஷ்ணா அவர்கள் சோதனைத் திட்டமாக ஒரு இயந்திரம் வாங்கலாம் எனத் தெரிவித்த கருத்திற்கு, ஆளுநர் ஏற்பளித்தார். இந்த நிலையில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு பொறுப்பேற்றுக்கொண்டபின், கோப்பு று பழையும் அரசின் கவனத்திற்கு வந்தபோது, ஒரு இயந்திரம் கூட வாங்க வேண்டாமென்று இந்த அரசு முடிவெடுத்தது. அரசின் முடிவும் கடந்த 2-5-89 அன்று திரு. பிராடி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு.

(அ) 29-4-1989 ஆம் நாளன்று சென்னையில் பல பல்லவன் பேருந்துகள் முழுமையான அளவுக்கு இயக்கப்பெறாதது குறித்து.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 29—4—1989 அன்று காலைப் பணிமாற்றத்தின் போது 46 பேருந்துகளும், மாலைப் பணிமாற்றத்தின்போது 327 பேருந்துகளும்—ஏப்ரல் 29 ஆம் தேதி சென்னை பேருந்து டெப்போக்களில் இருந்து பரவலாக பேருந்துகள் பயணிக்க வில்லை. உதாரணத்திற்கு, தி. நகர் டெப்போவில்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் மரபு அறிந்த வர்கள். அறிவிக்கையில் குறித்துள்ள பொருள் குறித்து அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்த பின்னர் துணை வினா கேட்கலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''29—4—1989 ஆம் நாளன்று சென்னையில் பல பணிமனைகளிலுள்ள பல்லவன் பேருந்துகள் முழுமையாக இயக்கப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

29—4—89 அன்று காலைப் பணிமாற்றத்தின்போது 46 பேருந்துகளும், மாலைப் பணி மாற்றத்தின்போது 327 பேருந்துகளும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படவில்லை. தியாகராயநகர் பணிமனையில் உள்ள 73 பேருந்துகளில் 19 பேருந்துகள் மட்டும் இயக்கவில்லை. இவற்றின் விவரம் கீழ்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

தடம் எண்.	இயங்காத பேருந்து எண்ணிக்கை.
49வி	ஒன்று
9	இரண்டு
12	மூன்று
11	ஐந்து
11ஏ	ஏழு
10	ஒன்று

29—4—89 அன்று மாலை 2 மணிக்கு மேல் கழக ஊழியருக்கு ஊதியம் பட்டுவாடா செய்யப்பட்டது. எனவே மாலை நேரம் பணி மாற்றத்தின்போது பல்லவன் பேருந்துகள் அதிக எண்ணிக்கையில் இயங்கவில்லை. பணம் பட்டுவாடா செய்யப்படும் நாளில் அதாவது சம்பளம், போனஸ், ஊக்கத் தொகைகள் ஆகியவை கொடுக்கப்படும் நாளில் பணிக்குத் திரும்பும் பணியாளர்கள் எண்ணிக்கை சாதாரணமாகவே சொற்பமாகவே இருக்கும்.

ஏப்ரல் மாதம் கோடைகால விடுமுறையாக இருப்பதாலும், திடீரென்று பணியாளர் வேலைக்கு வராமை அதிகமாக இருந்ததாலும், காலைப் பணி மாற்றத்தின்போது 31 முதல் 122 பேருந்துகளும், மாலைப் பணி மாற்றத்தின்போது 89 முதல் 327 பேருந்துகளும் இயக்கப்படவில்லை.

1989 மே 12] [திரு. மு. கண்ணப்பன்]

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் 5,640 ஓட்டுநர்களும், 5.565 நடத்துனர்களும் பணி புரிகின்றனர். இவர்களில் 70 முதல் 100 ஓட்டுநர்களும், 50 முதல் 60 நடத்துனர்களும் சாதாரண மாக நீண்டகாலமாக வேலைக்கு வராமல் உள்ளனர். இத்தகைய பணி முடக்கத்தைத் தவிர்த்திட ஊழியர்கள் அதிகமான அளவில் பணிக்கு வராத நாட்களில், புதிய பணி யாளர்களை நியமனம் செய்தும், வார ஓய்வில் உள்ள ஊழியர் களைப் பணிக்கு வரச் செய்தும், பேருந்துகளைத் தேவையான அளவில் இயக்க நடவடிக்கை பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக மாதத்தின் முதல் இரண்டு வாரங்கள் அதிக அளவில் பேருந்துகள் இயக்க இயலாமல் உள்ளது. மாதத்தின் மூன்றாவது, நான்காவது வாரங்களில் இது குறைந்து விடுகிறது. தினக்கூலி அடிப்படையில் ஓட்டுநர்கள் நடத்துனர்களைத் தேர்வு செய்து, குறிப்பாக மாலை நேரப் பணி மாற்றத்தின்போது பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திடீரென வேலைக்கு வராதவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

(முற்பகல் 9–40)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமகனார் வைத்திருக்கிற விளக்க உரையில் 29—4—89 அன்று 46 பேருந்துகளும், மாலைப் பணி மாற்றத்தின்போது 327 பேருந்துகளும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்படவில்லை என்றும், தி. நகர் பணிமனையில் உள்ள 73 பேருந்துகளில் 19 பேருந்துகள் இயங்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொரு பக்கத்திலே காலையிலே 127 பேருந்துகளும் மாலையிலே 327 பேருந்துகளும் இயங்கவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். காலையிலே 127 பேருந்துகளும், மாலையிலே 327 பேருந்துகளும் இயங்கவில்லையென்று சொன்னால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதை இங்கு இருக்கிற அனைவரும் அறிந்திருக்கிற ஒன்றாகும்.

இது இப்படி மாதக் கடைசியிலே மட்டும் நடைபெறுகிற ஒன்றா அல்லது அடிக்கடி இப்படி நடைபெறுகிறதா?

இப்படி நடப்பதாக இருந்தால் பெருமளவு பணத்தைச் செலவிட்டு பேருந்துகளை வாங்கிப் பொதுமக்களுக்கு என்று கொடுத்து என்ன பயன்? அவைகள் இயங்காமல் இருக்கக்

காரணம் என்ன? இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால் அதைச் சரி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற் கொள்ள விரும்புகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—4—89 ஆம் தேதியன்று சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிற நாளாகும். ஆகவேதான் மாலை நேரத்தில் அதிகப்படியான ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப வில்லை என்று ஒரு காரணம் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் பொதுவாகவே இந்தத் தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதற்குப் பிறகு இந்த ஒரு நாள் மட்டுமா, மற்ற நாட்களிலும் ஊழியர்கள் எப்படி வேலைக்கு வருகிறார்கள் என்பது பற்றிய தகவலைக் கேட்டபோது சென்ற ஆண்டு அதாவது 1988 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் கணக்கெடுத்தால் ஒட்டுமொத்தமாக அக்டோபர் மாதத்தில் காலை ஷிப்ட்டில் 1,409 ட்ரிப்புகளும், மாலை ஷிப்ட்டில் 2,740 ட்ரிப்புகளும் இயக்கப்படவில்லை; நவம்பர் மாதத்தில் காலை ஷிப்ட்டில் 1,375 ட்ரிப்புகளும், மாலை ஷிப்ட்டில் 3,060 ட்ரிப்புகளும் இயக்கப்படவில்லை; டிசம்பர் மாதத்தில் காலை ஷிப்ட்டில் 1,079 ட்ரிப்புகளும், பிற்பகல் ஷிப்ட்டில் 2,062 ட்ரிப்புகளும் இயக்கப்படவில்லை.

அதேபோல் 1989-ல் ஜனவரி மாதத்தில் காலையில் 1,375 ட்ரிப்புகளும், பிற்பகலில் 3,801 ட்ரிப்புகளும்: பிப்ரவரி மாதத்தில் காலையில் 2,044 ட்ரிப்புகளும், பிற்பகலில் 4,416 ட்ரிப்புகளும்; மார்ச் மாதத்தில் காலையில் 2,208 ட்ரிப்புகளும், பிற்பகலில் 5,510 ட்ரிப்புகளும்; கடந்த ஏப்ரல் மாதத்தில் காலையில் 2,255 ட்ரிப்புகளும், பிற்பகலில் 6,693 ட்ரிப்புகளும் இயக்கப்படவில்லை. ஆனால் வேலைக்கு வருகிற தொழிலாளர் களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைவதற்குப் பதிலாக பல மடங்கு அதிகமாகிக் கொண்டு வந்திருக்கிறது. இதை நேரடியாகக் காணவேண்டும் என்று சொல்லித்தான் திடீரென்று கடந்த வாரம் தண்டையார்பேட்டை பிரிவு பணிமனைக்குச் சென்று பார்த்தபோது அங்கே பொறுப்பான அதிகாரிகள் கூட பொறுப்பற்ற முறையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, உடனடியாக உயர் அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. உயர் அதிகாரி களை அழைத்து வைத்துப் பேசி யார், யார் முன்னறிவிப்புக் கொடுக்காமல் வேலைக்கு வராமல் இருக்கிறார்களோ அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

1989 மே 12] [திரு. மு. கண்ணப்பன்]

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை ரயில் பேருந்துப் பயணிகளுக்கு 'பீக் ஹவர்ஸ்'-இல் எவ்வளவு நெருக்கடி இருக்கும் என்பது நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றாகும். எனவே இனிமேல் இவ்வாறு வராமல் இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அறிவுரை சொல்லப்பட்டிருக்கிறது. தொடர்ந்து திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கு எல்லா வகையிலும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வியைக் கேட்டபோது இருந்த அதிர்ச்சியை விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்குப் பிறகு பேரதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான ட்ரிப்புகள் காலையிலும் மாலையிலும் பல்லவன் பேருந்துகள் செல்லவில்லை என்று சொல்லும்போது எத்தனை இலட்சம் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பணிமனைக்குச் செல்பவர்கள், மருத்துவமனைக்குச் செல்பவர்கள், அவசர வேலை நிமித்தம் செல்பவர்கள் இப்படி எத்தனை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். எந்தச் சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதுபோன்றே தோன்ற வில்லையே! இவைகளுக்கென்று 'நார்ம்ஸ்' இருக்கத்தானே செய்யும்! இவ்வளவு தூரம் அங்கே இத்தனை பேர் வராமல் இருந்து அதிகாரிகள் எப்படித்தான் பார்த்துக் கொண்டிருந் தார்களோ? எனவே இனிமேலாவது—இந்த எண்ணிக்கை குறையும் என்று சொல்வதற்குப் பதிலாக—இப்படிப்பட்ட தவறுகளே வராத அளவுக்கு இதனை 'ஸ்ட்ரீம்லைன்' பண்ணுகிற முயற்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் இரவு நேரங்களில் ஓடும் ஆம்னி பஸ்களை எல்லாம் தடுத்து நிறுத்தி யவர்கள் அவர்கள். அந்த அளவுக்கு சுறுசுறுப்பாக அவர்கள் இயங்குகின்ற காரணத்தால் பொதுமக்களின் கஷ்டத்தை உணர்ந்து உடனடியாக இதனைச் செம்மைப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையில் இப்படிப்பட்ட நிர்வாகச் சீர் கேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை எல்லா உறுப்பினர்களும் பகிரங்கமாகவே தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் முழு விவரங்களையும் தகவலுக்காக சபையில் அளித்திருக்கிறேன். எனவே இத்தகைய

[திரு. மு. கண்ணப்பன்] [1989 மே 12

முறைகேடுகளைத் தீர்ப்பதற்கு நிச்சயமாக இன்றைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசு அதை சவாலாகவே ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இத்தகைய முறைகேடுகளைக் களைய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடைய ஊதியம் சரிவர நிர்ணயிக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விஞ்ஞானிகள் மற்றும் சார்பு அலுவலர்களுடைய அடிப்படைச் சம்பளம், நான்காவது ஒரு நபர் சப்பளக் குழு பரிந்துரையின் படி சரிவர நிர்ணயிக்கப்படாததால் அவ்வாரிய அலுவலர்கள் கடந்த 4 வருடங்களாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாடு அரசு நான்காவது ஊதியக்குழுவின் பரிந் துரையின்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரி கின்ற அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களான தலைமை அறிவியல் அலுவலர், துணைத் தலைமை அறிவியல் அலுவலர், இளநிலை அறிவியல் அலுவலர், மின்மேற்பார்வை யாளர், களப்பணியாளர் மற்றும் ஆய்வக உதவியாளர் ஆகியோருக்கு 1-10-1984 முதல் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப் பட்டது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்கள் தங்களுடைய ஊதிய விகிதத்தை கிண்டி 'கிங்' இன்ஸ்ட்டிடியூட்டில் பணிபுரியும் அறிவியல் அலுவலர் கள் மற்றும் சார்பு அலுவலர்களின் ஊதிய விகிதத்திற்கு இணை யாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1-10-86 அன்று வாரியத்தின் முன் வைத்தார்கள். வாரியமும் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளித்தது. இதற்கிடையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஆய்வக அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதம் ஏற்கெனவே நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படிதான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அரசு வாரியத்திற்கு அறிவுரை

முறைகேடுகளைத் தீர்ப்பதற்கு நிச்சயமாக இன்றைக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசு அதை சவாலாகவே ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இத்தகைய முறைகேடுகளைக் களைய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுடைய ஊதியம் சரிவர நிர்ணயிக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய விஞ்ஞானிகள் மற்றும் சார்பு அலுவலர்களுடைய அடிப்படைச் சம்பளம், நான்காவது ஒரு நபர் சம்பளக் குழு பரிந்துரையின் படி சரிவர நிர்ணயிக்கப்படாததால் அவ்வாரிய அலுவலர்கள் கடந்த 4 வருடங்களாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தமிழ்நாடு அரசு நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிகின்ற அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களான தலைமை அறிவியல் அலுவலர், துணைத் தலைமை அறிவியல் அலுவலர், இளநிலை அறிவியல் அலுவலர், மின்மேற்பார்வையாளர், களப்பணியாளர் மற்றும் ஆய்வக உதவியாளர் ஆகியோருக்கு 1–10–1984 முதல் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப் பட்டது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்கள் தங்களுடைய ஊதிய விகிதத்தை கிண்டி 'கிங்' இன்ஸ்டிடியூட்டில் பணிபுரியும் அறிவியல் அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களின் ஊதிய விகிதத்திற்கு இணையாக மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை 1–10–86 அன்று வாரியத்தின் முன் வைத்தார்கள். வாரியமும் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒப்புதல் அளித்தது. இதற்கிடையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஆய்வக அலுவலர்கள் மற்றும் சார்பு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதம் ஏற்கெனவே நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படிதான் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அரசு வாரியத்திற்கு அறிவுரை

1989 மே 12]

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

வழங்கியது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் அரசின் அறிவுரையை ஏற்று மேற்படி அலுவலர்களின் ஊதிய விகிதங்களை நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து வழங்க உத்திரவு பிறப்பித்து விட்டது.

1. தலைமை அறிவியல் அலுவலர் : ரூ 1,340–75–1,715–90–2,435.
2. துணைத் தலைமை அறிவியல் அலுவலர். : ரூ 1,160–50–1,460–70–1,950.
3. இளநிலை அறிவியல் அலுவலர் : ரூ 905–45–1,445–50–1,545.
4. மின் மேற்பார்வையாளர் : ரூ 6:0–20–730–25–955–30–1,075.
5. களப்பணியாளர் : ரூ 505–10–555–15–615–20–795–25–845
6. ஆய்வக உதவியாளர் ; ரூ 450–10–570–15–720.

திரு. பெ. சு. திருவேங்கடம் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை, வாரியம் கிங் இன்ஸ்ட்டிடியூட்–உடன் சரிவர தகுதி அடிப்படையின் கீழ் ஒப்புதல் செய்யாமல், ஆய்வக விஞ்ஞானிகள் தகுதி, பி.எஸ்.ஸி., நேர்முகத் தேர்வு, சம்பள விகிதம் ரூ. 95-ஐ வாரிய இளம் விஞ்ஞானி தகுதி, எம். எஸ்சி. நேர்முகத் தேர்வுடன் ஒப்பிட்டு அதே சம்பள விகிதமான ரூ. 95-ஐ வாரிய ஆணை எண் 134, தேதி 10–9–86 மற்றும் எண் 143, தேதி 1'–10–86-ன் கீழ் நிர்ணயித்துள்ளனர். அவ்வாறே சார்பு அலுவலர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தவறை வாரியம் சரிசெய்ய அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி கீழ்க்கண்டவாறு இந்த ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. தலைமை அறிவியல் அலுவலர், ரூ. 1,340 அடிப்படை ஊதியம், துணைத் தலைமை அறிவியல் அலுவலர், ரூ. 1,160 அடிப்படை ஊதியம், இளநிலை அறிவியல் அலுவலர், ரூ. 905 அடிப்படை ஊதியம், மின் மேற்பார்வையாளர், ரூ. 610 அடிப்படை ஊதியம், களப்பணியாளர் ரூ. 505 அடிப்படை ஊதியம், ஆய்வக உதவியாளர், ரூ. 450 அடிப்படை ஊதியம் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் இவைகள் வழங்கப்படுகின்றன.

[1989 மே 12

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள் என்று சொன்னால், அது குறித்து முறையான விண்ணப்பம் கொடுத்தால், அதைப்பற்றிப் பேசி அவைகளை முடிவு செய்து கொள்ளலாம் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்டிடியூட் ஆய்வக அலுவலர்களின் தகுதிப்படி மறுபடியும் நான்காவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படை சம்பளம், வாரியத்தின் ஆய்வக மற்றும் சார்பு அலுவலர்களுக்கு 10–6–85 முதல் சரியாக வழங்க அரசுக்கு வாரியம் பரிந்துரைக்குமா? அவ்வாறு சரிசெய்த ஒப்புதல் 5 ஆவது சம்பளக் குழு முடிவுடன் இணைக்கப்படுமா என்பதோடு இந்தத் தவறு செய்த உயர் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தவறு என்று குறிப்பிடமுடியாது. 1–10–86-ல் அவர்களுடைய கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரச்சினை வரும் என்று சொன்னால், அதுகுறித்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை மட்டும் அறிவித்துக் கொள்கிறேன்,

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 7-ஆவது அறிக்கை முதல் 14-ஆவது அறிக்கை வரை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்:

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்:

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள் என்று சொன்னால், அது குறித்து முறையான விண்ணப்பம் கொடுத்தால், அதைப்பற்றிப் பேசி அவைகளை முடிவு செய்து கொள்ளலாம் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்டிடியூட் ஆய்வக அலுவலர்களின் தகுதிப்படி மறுபடியும் நான்காவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படை சம்பளம், வாரியத்தின் ஆய்வக மற்றும் சார்பு அலுவலர்களுக்கு 10–6–85 முதல் சரியாக வழங்க அரசுக்கு வாரியம் பரிந்துரைக்குமா? அவ்வாறு சரி செய்த ஒப்புதல் 5 ஆவது சம்பளக் குழு முடிவுடன் இணைக்கப்படுமா என்பதோடு இந்தத் தவறு செய்த உயர் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தவறு என்று குறிப்பிடமுடியாது. 1–10–86-ல் அவர்களுடைய கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரச்சினை வரும் என்று சொன்னால், அதுகுறித்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை மட்டும் அறிவித்துக் கொள்கிறேன்,

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 7-ஆவது அறிக்கை முதல் 14-ஆவது அறிக்கை வரை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்:

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்:

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இதில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள் என்று சொன்னால், அது குறித்து முறையான விண்ணப்பம் கொடுத்தால், அதைப்பற்றிப் பேசி அவைகளை முடிவு செய்து கொள்ளலாம் என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்ட்டிடியூட் ஆய்வக அலுவலர்களின் தகுதிப்படி மறுபடியும் நான்காவது சம்பளக் குழு பரிந்துரைத்த அடிப்படை சம்பளம், வாரியத்தின் ஆய்வக மற்றும் சார்பு அலுவலர்களுக்கு 10-6-85 முதல் சரியாக வழங்க அரசுக்கு வாரியம் பரிந்துரைக்குமா? அவ்வாறு சரி செய்த ஒப்புதல் 5 ஆவது சம்பளக் குழு முடிவுடன் இணைக்கப்படுமா என்பதோடு இந்தத் தவறு செய்த உயர் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தவறு என்று குறிப்பிடமுடியாது. 1-10-86-ல் அவர்களுடைய கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில முடிவுகள் எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் பிரச்சினை வரும் என்று சொன்னால், அதுகுறித்து பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்த்துக்கொள்ள முடியும் என்பதை மட்டும் அறிவித்துக் கொள்கிறேன்,

6. அறிக்கை அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 7-ஆவது அறிக்கை முதல் 14-ஆவது அறிக்கை வரை பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) மண்டல் குழு அறிக்கையின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்:

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நான் மொழிகிறேன்:

[1989 மே 12 [டாக்டர் மு. கருணாநிதி]

''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 ஆம் விதியில் கூறப்பட்டுள்ளவாறு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4), 16 (4) பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினையும், சிறப்பு விதிகளையும் சமூக நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியுள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பெரும் பங்கு வகிக்க வேண்டுமெனவும், காலஞ்சென்ற திரு. B. P. மண்டல் அவர்களைத் தலைவராகக் கொண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து சமூக நீதியை ஏற்படுத்த மத்திய அரசு ஆக்கப்பூர்வமாக விரைந்து செயல்படவேண்டுமெனவும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இந்தத் தீர்மானத்தை அவையின் முன்பு வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களை வழங்கிய பிறகு தீர்மானம் நிறைவேறவேண்டும் என்கின்ற கோரிக்கையை விளக்கமாக வைக்க இருக்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்மானம்தான். மத்திய அரசு, மண்டல் குழுவின் முடிவு வந்ததற்குப் பிறகு, அதை அமல் படுத்துவதற்கான ஆலோசனைகளையும், பரிசீலனைகளையும் நடத்தி, சரியான முடிவெடுத்து, காரியங்களைச் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காத குறைபாடுகள் உள்ளதென்பது தெளிவு. இன்று பிற்பட்ட மக்கள், தங்களுடைய உரிமைகளுக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும், தங்களுடைய வாழ்க்கையிலே மறுமலர்ச்சி ஏற்பட வேண்டி தீவிரமான பொருளாதார மாற்றம் கோரியும் அந்த மக்கள் நாடு முழுவதிலும் போராடும் நிலைமைகளை நாம் பார்க்கிறோம், நாம் சொல்லக்கூடிய இந்த ஒதுக்கீடுகள், இன்று அவர்கள் எந்த அடிமட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களோ அதிலிருந்து அவர்களைக் கை தூக்கி விடுவதற்கும், அவர்களை மேல் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கும் எடுக்கும்படியான சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆய்வை, உண்மையாகவே எங்கள் கட்சியின் சார்பில் நாங்களும் நடத்தி, அதைப் பற்றி தீவிரமாகப் பரிசீலனை, ஆலோசனை நடத்தி, பல நடவடிக்கைகளை அந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்காக எடுத்து வரக்கூடியவர்கள் நாங்கள், எங்களுடைய கருத்து, நம்முடைய நாட்டில் ஒரு அடிப்படையான நிலச் சீர்திருத்தம் ஏற்படாத காலம் வரையில் இந்த அடிமட்டத்தில் கிடக்கின்ற பிற்பட்ட

மக்களும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களும் சரி பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையாமல், அவர்களுடைய சமூக அந்தஸ்து மற்றும் வேறு விதமான குறைகளை முற்றாகத் துடைப்பதென்பது சாத்தியமல்ல, அதற்கான போராட்டத்தின் முக்கியமான அம்சமாக இதைக் கொள்ள வேண்டும், அந்த முறையில் இன்றைக்கு அந்த மக்களுடைய முன்னேற்றத்திற்காக என்னென்ன வழிமுறைகள் அரசியல் சட்டத்தின் சார்பில் செய்யப்பட்டிருக்கிறதோ, அதைப் பயன்படுத்தியாக வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் சட்டத்தில் 10 வருடங்களுக்கு ஒரு தரம் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டிற்கான தீர்மானத்தை புதுப்பித்துக் கொண்டே வந்திருக்கிறோம். சுதந்திரம் கிடைத்து 41 வருடங்களுக்குப் பிறகும் இன்றைக்கு நாம் எடுத்துக் கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த அளவுக்கு கீழ் மட்டத்தில் இருக்கிறார்கள், அவர்களுடைய சமூக அந்தஸ்து எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது. மற்ற பகுதியினருக்குச் சமமாக பொருளாதாரத்துறையிலும், கல்வித் துறையிலும், மற்றத் துறைகளிலும் அவர்களுடைய முன்னேற்றம் எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது என்று முழு ஆய்வு இன்றைக்கு நடத்திப் பார்த்தால், உண்மை தெரியும். இன்றைக்கு ஆதிக்கம் படைத்தவர்கள், செல்வம், சக்தி படைத்த வர்க்கத்தினரின் சுரண்டலுக்குக் கீழ் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள், ஆகவே அவர்களைத் தூக்கிவிட வேண்டுமென்று பலவிதமான முயற்சிகளைச் செய்கிறோம். தமிழ்நாட்டில் விசேஷமாக பிற்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட ஒதுக்கீடு செய்து, அவர்களுடைய பிரச்சினைகளுக்கும் ஒரு சமாதானம் ஏற்பட வேண்டும், அது இல்லாவிட்டால் பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய போராட்டங்கள் கிளம்பி விடும் போக்குகள் வளரும், அது அந்தச் சமுதாயத்திற்கு எந்த விதத்திலும் நல்லதல்ல, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு அது வழி வகுக்காது. இந்த ஒதுக்கீட்டைச் செய்து அவர்களைத் தூக்கிவிட்டு மற்ற சமூக வளர்ச்சிப் போக்கிலே அவர்கள் பூரணமாகப் பங்கெடுத்து முன்னேறிட ஒரு நடவடிக்கையாக இதை எடுத்து, தகராறான மோசமான நிலைமைகள் கிளம்பாமல் இருக்க என்னென்ன முன்னெச்சரிக்கையோடு செய்யப்பட்டிருக்கிறதோ அவை எல்லாம் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படாமல், இன்றைக்கும் போராட்டங்கள் நடத்துவதற்கு—அதுவும் வேதனையோடு சொல்ல வேண்டிய விஷயம்—வன்னியர் சமுதாயம் போன்ற சமுதாயத்தினர், அவர்களுக்கு 20 சதவீதட ஒதுக்கீடு செய்யப்பட்டும்கூட, அதை நமது முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற காலத்திலே, ஒரு கோடி பேருள்ள அவர்களுக்கு என்ன ஒதுக்கப்பட்டது, அதற்கு மேல் உள்ளவர்களுக்கு என்ன ஒதுக்கப்பட்டது என்பதைக்கூட பகிரங்கமாக இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள்,

இவ்வளவு சொன்னதற்குப் பிறகும்கூட, பலாத்கார முறைகளைக் கைவிடாமல், திரும்பவும் பலாத்காரப் போராட்டங்களை நடத்துவோம் என்று அச்சுறுத்திக் சொண்டிருக்கிறார்கள். மற்ற சமுதாய மக்களுடைய ஆதரவைப் பெற்று, பிற்பட்ட சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக சமாதானமான சூழ்நிலையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் பதிலாக, அதற்கு ஆதரவான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக இதற்கெல்லாம் மாறுபட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்கொண்டு வருவதை நாம் இன்று பார்க்கிறோம். இப்படிப்பட்ட பலாத்காரமான சூழ்நிலை இல்லாமல் சமாதானமான முறையில் பிற்படுத்தப் பட்ட மக்கள் முன்னேற வேண்டும் வாழ வேண்டும், சமுதாய அந்தஸ்தில் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த நிலையிலிருந்து முன்னேற வேண்டும்—எல்லாவற்றிற்கும் மேலாக எல்லா மக்கள் மத்தியிலும் ஒரு நல்ல இணக்கமான ஒத்துழைப்பும், ஒருமைப்பாடும் எரிச்சல் இல்லாத வாழ்க்கையும் உருவாக வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம்.

இப்படி ஒரு மன எரிச்சலில்லாத வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான எண்ணங்கள் உருவானால்தா நாம் விரும்புகிற அடிப்படையான மாற்றங்கள் ஏற்பட முடியும். அதாவது விவசாயத் துறையில் ஏற்பட வேண்டிய— நிலச்சீர்திருத்தத் துறையில் ஏற்பட வேண்டிய—மிக முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டு வரும்படி கிராமத்தில் உள்ள மக்களை ஏழை எளிய மக்களைத் திரட்ட முடியும். அப்படிப்பட்ட மக்களின் கையிலே ஒரு துண்டு நிலம் கிடைத்தால் இந்த வேலைப் பிரச்சினையோ மற்ற பிரச்சினைகளோ அவர்களுக்கு பெரிய பிரச்சினையாக முன்னே நிற்பதற்கு பதிலாக அவர்களும் மற்றவர்களோடு சேர்ந்து ஒட்டு மொத்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஒரு சக்தியாகச் செயல்படுவார்கள்.

எங்களுக்குக் கிடைத்த அனுபவம் இங்கே அரசாங்கத்தை நடத்துகிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். மேற்கு வங்கத்தில் 12 லட்சம் ஏக்கர் நிலத்தை நாங்கள் நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்திருக்கிறோம். புதிய சட்டங்களை உருவாக்கியல்ல. ஏற்கெனவே காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் என்ன நில உச்ச வரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தார்களோ அந்த சட்டத்தின் எல்லைக்குள் நின்று, அந்தச் சட்டத்தின் பேரால் நிலச் சுவான்தாரர்களும், மிட்டா மிராசுகளும், பாளையக் காரர்களும், பட்டயக்காரர்களும் நிலவுடைமையாளர்களும் பதுக்கி வைத்திருந்த நிலங்களை—பினாமியாக வைத்துக் கொண்டிருந்த நிலங்களை எல்லாம்—முழுவதுமாகக் கைப்பற்றுவதற்கு மிகவும் பின் தங்கிக் கிடக்கிற மற்றும் தாழ்த்தப்

பட்ட மக்களுக்கு தைரியம் கொடுத்து அவர்களுடைய சொந்த இயக்கங்களை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு ஆதரவு கொடுத்து பிரம்மாண்டமான சக்தியை வளர்த்து அதன் மூலமாக அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக—பினாமியாக இருக்கிற நிலங்களில் அவர்களே இறங்கி விவசாயம் செய்யத் தொடங்கியபோது—அவர்களுக்கு அந்த நிலத்தின் உரிமையை மாற்றிக் கொடுக்கக்கூடாது என்று அந்த நிலச்சுவான்தாரர்கள் எதிர்த்தபோது—அவர்களுக்கு அந்த நிலத்தில் என்ன பாத்தியதை இருக்கிறது என்பதை நிரூபிக்கும் பொறுப்பை நிலச்சுவான்தாரர்களே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்ட காலத்தில் அவர்களாலே செய்ய முடியவில்லை. இப்படி அவர்கள் பினாமியாக வைத்திருந்ததையெல்லாம் வெளியே கொண்டு வந்து ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிற பஞ்சாயத்துக்கள் அந்த நில உடமையாளர்களின் கணக்கைத் தயார் செய்து நிலம் உள்ளவர்கள் எத்தனை பேர் நிலம் இல்லாதவர்கள் எவ்வளவுபேர் அங்கே உள்ள விவசாயக் கூலிகள் எவ்வளவு பேர், நில உடமையில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் என்ன என்பது போன்ற கணக்கு வழக்குகளையெல்லாம் பஞ்சாயத்துக்களே தயார் செய்வதற்கான திட்டத்தை அரசு செய்தது. கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிலச்சுவான்தார்கள் அடியாட்களைத் திரட்டி, பலாத்காரமாக துப்பாக்கிப் பிரயோகம் முதற்கொண்டு தாழ்த்தப்பட்ட மக்கள்மீது நடத்தியபோது, அதை எதிர்த்து அனைத்து தரப்பு மக்களின் ஒத்துழைப்பையும் திரட்டி அந்த நிலத்தைக் கொடுத்தோம். அப்படிக் கொடுத்ததன் மூலமாக பல லட்சக் கணக்கான மக்களுக்கு அந்த நிலம் கிடைத்தது. ஒதுக்கீடு என்று இத்தகைய முறைகளை அங்கே நாங்கள் கையாளவில்லை. அதற்குப் பதிலாக பொருளாதார அடிப்படையில் அங்கே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் காரணமாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்குமேலேகூட அவர்களுக்கு நிலம் கிடைக்கும் நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட அடிப்படையான மாற்றத்தை நோக்கி முன்னேற வேண்டும். அதற்கு மக்கள்அத்தனை பேரையும் ஒன்று திரட்டி அவர்கள் ஒத்துழைப்போடு செயல்பட வேண்டும். இன்றைக்கு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மன எரிச்சலை மாற்றி சமுதாயத்தில் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பின்தங்கிய நிலையை மாற்றி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மன எரிச்சலை மாற்றி, சமுதாயத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலையை உண்டாக்கிட ஒருமைப்பாட்டை உண்டாக்கிட நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கை வெற்றிபெற வேண்டுமானால் மத்திய அரசும் அதற்கு தகுந்த ஒத்துழைப்பும் ஆதரவும் தர வேண்டும்.

மத்திய அரசு 18 சதவீதம் ஒதுக்கீடு செய்வதைப் பற்றித்தான் கவலைப்படுகிறது. மற்றவற்றைப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை.

(முற்பகல் 10-00)

நமது முதலமைச்சர் அவர்கள் இதற்கு மறு மொழி சொல்கின்ற காலத்தில் அந்த விஷயத்தைக்கூட விளக்கினால் நல்லது. ஏனென்றால் மத்திய சர்க்கார் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்து இருக்கிறார்கள். ஒதுக்கீட்டை அவர்கள் தாங்களாகவே செய்வதற்கு முயற்சி எடுத்தார்களா, மாநிலங்கள் செய்வதை ஆதரவு அளித்து முன்னேற்றுவதற்கு மத்திய அரசாங்கம் என்ன உதவி செய்து இருக்கிறது? அப்படிப்பட்ட எந்த உதவியும் இல்லாவிட்டால் பஞ்சாயத்து ராஜ்யம் என்ற பெயர் மட்டும் சொல்லுவதனால் பிரயோஜனப்படாது. அதனுடைய நோக்கமே வேறான இடத்திற்குப் போய்ச் சேரும். உண்மையான நோக்கம் மாநிலங்களில் இருக்கும்படியான அரசாங்கங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மக்களை ஒன்று திரட்டி—(மணி அடிக்கப்பெற்றது.) முடித்துவிடுகிறேன்—முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மோதல் இல்லாமல், பலாத்காரம் இல்லாமல் சில சமரசமான முறைகளில் அதற்கு வேண்டிய ஒதுக்கீடுகளையும், காரியங்களையும் செய்யும் காலத்தில் அதற்கு உறுதுணையாக நின்று அவர்கள் செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட செயல்பாட்டை மத்திய சர்க்கார் இது வரைக்கும் செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து. இன்றைக்கு நாம் இந்த அவையின் மூலமாக இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டு இருக்கின்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி, அனுப்பி, இதன் பேரிலாவது மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் அடிமட்ட மக்களுடைய ஒற்றுமை, முரண்பாடற்ற முறையில் சமூக முன்னேற்றத்திற்காக அவர்கள் பாடுபடுவதுமான இந்தய நிலைமைகள் வளர்க்கப்பட்டால் தான் இதற்கு இறுதி முடிவு நாம் காண முடியும் என்பதையும் நான் கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்டு இருக்கின்ற இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மண்டல் கமிஷன் ரிப்போர்ட் பற்றி அவர்கள் இன்றையதினம் ஒரு குறிப்பை இங்கே சொல்லி இருக்கின்றார்கள். மத்திய அரசாங்கத்திலே நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு தடவையும் ஒரு கமிஷன் என்று போட்டு, அறிக்கைகள் தயாரித்து, அந்த அறிக்கைகளை அவையில் வைத்து முறைப்படி அந்தந்த மாநிலத்திற்கோ அல்லது பாராளுமன்றத்திலே இருக்கின்ற அலுவலகங்

களுக்கு அனுப்பி அதை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை இல்லாத ஒரு நிலை இருக்கின்றதை நாம் பார்க்கின்றோம். மண்டல் கமிஷனுக்கு முன்னாலே கூட கே.கே. படால்கர் கமிஷனின் ரிப்போர்ட் வந்தது. அதையும் கிடப்பில் போட்டு விட்டார்கள். இந்த மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டும் கடந்த 9 ஆண்டுகளாக அப்படியே கிடக்கின்றது. அதை இன்றைய தினம் நாம் உணர்ந்து அதை விரைவாக அமுல்படுத்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசாங்கத்திலே அதற்கு ஒரு உருவம் கொடுக்க வேண்டும்; ஆங்காங்கே அலுவலகங்களுக்கு தாக்கீது அனுப்பி அதை முறைப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று நான் கருதுகின்றேன். குறிப்பாக சுதந்திரத்திற்குப் பிறகு பல வளர்ச்சிகள் நாட்டிலே ஏற்பட்டு இருந்தும் கூட குறிப்பாக அடிமட்டத்தில் இருக்கின்ற மிகவும் பின்தங்கிய மக்கள், பின் தங்கிய மக்கள் ஆகியோருக்கு வளர்ச்சியின் பயன் போய்ச் சேரவில்லை என்று பார்க்கின்ற போது அதற்காகத்தான் இந்தக் கமிட்டிகளை எல்லாம் நியமித்தார்கள். ஒவ்வொரு மாநிலத் திலும் மத்திய அரசாங்கத்தாலே உருவாக்கப்பட்டு இருக்கின்ற பொதுத்துறை நிறுவனங்களிலே இன்றையதினம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கின்ற அளவுக்கு பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கின்றார்களா? அதிகார அளவிலே, அலுவல் அளவிலே எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்று பார்க்கும்போது மிகவும் குறைவான அளவில்—ஒன்றும் இல்லை—என்று இருக்கும்போது, அப்படிச் செய்யாது இருக்கின்ற காரணத்தினாலே அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வில்லை. பொதுத் துறையில் அவர்களுக்கு உரிய பங்கு கிடைக்க வில்லை. போதுமான அளவு பொருளாதாரத் துறையிலே அவர்களை முன்னேற்றுவதற்கான வழிவகை காண முடியவில்லை என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்தக் கமிட்டி அமைக்கப் பட்டது. கமிட்டி அமைக்கப்பட்டபோது அதற்கு உரிய அளவிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் என்று வைத்து ஆரம்பத்திலே அது சரியான முறையில் நடைபெறவில்லை என்று கூறி அதை ஷெட்டியூல் கேஸ்ட், ஷெட்டியூல் டிரைப் என்ற அளவிலே பிரித்து இருக் கிறார்கள். ஆரம்பத்திலே 18 சதவீதம் என்று இருந்ததை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 15 சதவீதம் என்றும், மீதம் உள்ளவர்களுக்கு ஷெட்டியூல் டிரைப் ஆகியவர்களுக்கு 3 சதவீதம் என்றும் பிரித்து இருப்பது போல இன்றையதினம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்கக்கூடிய அந்தச் சந்தர்ப்பங்கள் வாய்ப்புக்கள் எல்லாத் துறைகளிலும் போதுமான அளவுக்கு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. யாரோ ஒரு தனிப்பட்ட ஒருவருக்குப் போய்க் கொண்டிருக்கிறது, ஒரு சிலருக்கே அது போய்க் கொண்டு இருப்பதனாலே அதை உணர்ந்துதான் இன்றையதினம் மண்டல் கமிஷன் அமைத்து அந்த ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டு இருக்கின்றது.

எந்தக் காரணத்தினாலோ அது இன்றையதினம் நடைமுறைப் படுத்தப்படவில்லை. ஏதோ தேர்தல் வருகின்றபொழுது ஒரு சமுதாயத்தில் இருக்கின்றவர்களை அல்லது அந்தப் பகுதியில் இருக்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை, பின் தங்கிய மக்களை, உயர்த்துவதாக இருக்கின்றோம்; ஏதோ கமிட்டி அமைத்திருக்கின்றோம் என்று சொல்லுகின்ற அளவிலே கமிட்டியை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு வருகின்ற அரசாங்கம் என்ன செய்கிறது? ஒரு அரசாங்கம் உற்சாகத்தோடு—அதாவது ஜனதா அரசாங்கம் இருந்தபொழுது —இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டது. ஜனதா அரசாங்கம் போய் விட்ட பிறகு அடுத்து புதிய அரசாங்கம் வந்தது. அந்தப் புதிய அரசாங்கம் இதில் அக்கறை காட்டாத காரணத்தினாலே இன்றையதினம் அதை அப்படியே கிடப்பிலே போட்டு விட்டார்கள். இந்த அரசாங்கம் வெளித் தோற்றத் திற்கு, விளம்பரத்திற்காகப் பல காரியங்களைச் சொல்லி வருகிறது. சொன்னாலும், நடைமுறைப்படுத்துவதற்கு, இது போன்ற அவர்களுடைய சிபாரிசுகளை நடைமுறைப்படுத்து வதற்கு முன்னுக்கு வரவில்லை. அப்படி முன்னுக்கு வராத காரணத்தால்தான், பின் தங்கிய மக்கள் ஒருவிதமான பலனும் இல்லாமல், நன்மையும் அடையாமல் இன்றையதினம் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையிலே இருப்பதை நாம் உணர் கிறோம்.

ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவிலே நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள், தான் பொறுப் பேற்றுக் கொண்ட பிறகு, இந்த பின்தங்கிய மக்கள். மிகவும் பின்தங்கிய மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண் மென்ற கருத்திலேதான் இன்றைய தினம் 20 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று, அந்த 50 சதவீதத்திலிருந்து 30-ஐ ஒரு பக்கமாகவும், 20-ஐ ஒரு பக்கம ாகவும் பிரித்திருக்கிறார்கள்.

இதிலே இன்னும்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதுபோல, போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இது போதவில்லை, பிரித்தது சரியாக இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள். இந்த ஆண்டு ஜூலை வரையில் பொறுத்திருங்கள்; அதிலே கஷ்டம் இருக்கு மென்று சொன்னால், அதிலே சிரமம் இருக்குமென்று சொன்னால், அதை மாற்றியமைப்பதற்குத் தயாராக இருக் கின்றேன்'' என்று இந்த மன்றத்திலே உறுதியளித்திருக்கின் றார்கள்.

[திரு. கோ. பூவராகன்] [1989 மே 12

என்னைப் பொறுத்த அளவிலே, இன்றையதினம் அவர்களைக் கேட்டுக் கொள்வது, குறிப்பாக இந்தவொரு பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சியெடுக்கவேண்டும். தொடர்ந்து இந்தப் பிரச்சினை வளர்வதற்கு அவர்கள் இடமளிக்கக்கூடாது என்று நான் இந்தச் சமயத்திலே அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால். அவர்கள் எங்களுக்குத் தனியாக ஒரு ஒதுக்கீடு தர வேண்டும், மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலே இருக்கின்றவர்களைத் தனியாகச் சேர்த்து அவர்களுக்கு என்று ஒரு ஒதுக்கீடு கொடுத்தால் நலமாக இருக்குமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் ஏதோவொரு கணக்கை வைத்து. அந்தக் கணக்கின் பிரகாரம், நீங்கள் கேட்டதோடு சேர்த்து இவ்வாறு அளித்திருக்கின்றேன் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

நான் சொல்வதெல்லாம் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவிலே முக்கியமாக இந்த 50 சதவிகிதத்திலிருந்து பிரித்தபோது 30 சதவிகிதம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அது போய்ச்சேராமல் 20 சதவிகிதம் போகவேண்டியவர்களுக்கு 30 சதவிகிதமும். 30 சதவிகிதம் போக வேண்டியவர்களுக்கு 20 சதவிகிதமும் ஆக மாறியிருக்கின்ற நிலையிருக்கின்றதை கொஞ்சம் தயவு செய்து மாற்றி மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலுக்கு 30 சதவிகிதம் அளிக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மண்டல் கமிஷனிலே இருக்கின்ற சிபாரிசுகளை நாம் எந்த அளவிற்கு நம்முடைய தமிழகத்திலே, நம்முடைய மாநிலத்திலே பின்பற்றி நிறைவேற்ற முடியும் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

அதோடு, பாராளுமன்றத்திலும், மத்திய அரசாங்கத்திலும் அதனுடைய சிபாரிசுகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இந்தத் தீர்மானத்தின் மூலம் நாம் வற்புறுத்த வேண்டும். அப்படி வற்புறுத்துகின்றபொழுது இன்றைய தினம் பொதுத் துறையிலே பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவிடும் பல பொதுத் துறை நிறுனங்கள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில்கூட இருக்கின்றன, எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய அந்தப்பொதுத்துறைநிறுவனங்களிலே மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டைச் சிபாரிசு செய்கின்றபொழுது பல பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இருக்கும். அந்த அளவிற்கு காத்திராமல்

நம்முடைய மாநிலத்திலே மத்திய அரசாங்கம் நடத்துகின்ற தொழிலானாலும் சரி நம்முடைய மாநிலம் நடத்துகின்ற ஜாயின்ட் செக்டார் அதாவது பொது நிறுவனமும் தனியார் துறையும் நாமும் இணைந்து நடத்துகின்ற அந்த ஜாயின்ட் செக்டாரில்கூட இந்த ஒதுக்கீடு முறை சரியாக அனுசரிக்கப்படுகிறதா என்று பார்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்வேன்.

பொதுவாக இந்த ஜாயின்ட் செக்டாரிலே வேலையிலே சேர்க்கின்றபொழுது நாம் முழுக்க முழுக்க நம்முடைய அரசாங்கத்தினுடைய பணத்தை, பொதுமக்களுடைய பணத்தை நாட்டினுடைய பணத்தை, அதற்கு எடுத்துச் சொல்கின்றபொழுது எத்தனைபேர் இந்த சதவிகிதக் கணக்கிலே பார்த்து, தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பின் தங்கிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்று நீங்கள் கணக்கிலே சொல்ல வேண்டும். அப்படி ஒவ்வொரு ஜாயின்ட் செக்டாரிலேயும்பார்க்கின்ற பொழுது, அரசாங்கத்திற்குக் குறித்த அளவிலே, அரசாங்கத்தின் சார்பாக நியமிக்கின்ற டைரக்டர்களைப் பொறுத்த அளவிலே இது போன்ற மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களை நியமிக்க முடியுமா, பிற்படுத்தப்பட்டவர்களை நியமிக்க முடியுமா என்றும் பார்க்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க முழு மனதோடு ஆதரித்து, இதை விரைவிலே மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி, அவர்கள்இதைநிறைவேற்றுவதற்கு ஒருநிர்ப்பந்தத்தைஉருவாக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-10)

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்திலே இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானம் நம்முடைய சட்டமன்ற வரலாற்றிலே ஒரு பொன்னேடு என்பதை முதலில் மகிழ்ச்சியோடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். காரணம் ஆட்சியினை மேற்கொண்ட இந்த குறுகிய மூன்று மாத காலத்திற்குள்ளாக புயல் வேகத்தில் என்று சொன்னால்கூட அதன் வேகம் குறைவாக இருக்குமென்று கருதுகிறேன். மின்னல் வேகத்தில் இன்றைக்கு பல்வேறு சாதனைகளை, திட்டங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக ஆற்றிக்கொண்டிருப்பதை இந்த நாடு பார்த்துக் கொண்டிருக்

கிறது. சட்டமன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்றைக்கு மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை மத்திய அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இங்கே முன் மொழிந்து, இந்த அவை ஒட்டு மொத்தமாக அதை ஆதரிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே முழு மனதோடு ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

மண்டல் குழுவின் தலைவராக திரு. B. P. மண்டல் அவர்களையும், குழுவின் உறுப்பினர்களாக திருவாளர்கள் ஆர். ஆர், போலே, திவான் மோகன்லால். எஸ். ஆர். நாயக், கே. சுப்பிரமணியம், எஸ். எஸ். சிங், ஆகிய ஐவரையும் கொண்டு ஜனதா ஆட்சிக் காலத்தில் 20–12–1978ஆம் தேதியன்று குழு அமைக்கப்பட்டு 21–3–1979ஆம் தேதியன்று அந்த மண்டல் குழு தன்னுடைய பணியைத் துவங்கியது, 12–12–1980ஆம் தேதியன்று தன்னுடைய பணியை குழு முடித்தது. ஏறக்குறைய 1 3/4 வருடம் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து ஏராளமான அறிஞர்களை எல்லாம் பேட்டி கண்டு, பாராளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, சமுதாய சீர்திருத்தவாதிகளை நேரிலே கண்டு மண்டல் குழு இறுதியாக தன்னுடைய அறிக்கையை 1980ஆம் ஆண்டின் இறுதியிலே சமர்ப்பித்தது. 1980ஆம் ஆண்டிலேயிருந்து 1985ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்றத்திலே கழக உறுப்பினராக பணியாற்றுகிற வாய்ப்பைப் பெற்ற காரணத்தால் நான் ஒரு கருத்தை இங்கே வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். 1980ஆம் ஆண்டு மத்திய அரசிற்கு மண்டல் குழு அறிக்கையை அளித்தாலும் கூட அந்த அறிக்கையை வெளியிடுவதற்கு இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி வேண்டுமென்றே காலதாமதம் செய்து மண்டல் குழு அறிக்கையை வெளியிடாமலே இருந்தது. அந்த அறிக்கையை வெளியிட வேண்டும் என்பதற்காக பாராளுமன்றத்திலே ஏராளமான முறை கோரிக்கைகள் எதிர்க்கட்சிகளால் விடப்பட்டன. நாடு முழுவதும் பல்வேறு அமைப்புகளால், கட்சிகளால் பல முறை போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதற்குப் பின்னாலேதான் அந்த மண்டல் குழுவினுடைய அறிக்கையை பாராளுமன்றத்திலே வெளியிட்டு அன்றைக்கு அமைச்சராக இருந்த பி. சி. சேத்தி அவர்கள் அன்றைக்கு பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எல்லாம் பாராளுமன்றத்திலே அளித்த உறுதிமொழி என்னவென்றால் இந்த அறிக்கையை இந்த அரசாங்கம் விரைவிலே அமல்படுத்தும், அதை நிறைவேற்றும், அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளும், பரிசீலிக்கும் என்பதாகும்.

இன்றைக்கு வருடம் என்ன? 1989ஆம் ஆண்டிலே நாம் நடை போட்டுக் கொண்டிருக்கிறோம். பாராளுமன்றத்திலே தந்த உறுதிமொழியின்படி, மக்களுக்குத் தந்த வாக்குறுதியின்படி மத்திய அரசு மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கு முன்வந்ததா என்றால் இதுவரையில் முன் வரவில்லை. இந்த மண்டல் கமிஷன் ஏதோ பிற்படுத்தப் பட்டவர்களை மட்டும்தான் கவனித்தது என்று யாரும் கருதக் கூடாது. இந்த மண்டல் குழு மிகத் தெளிவாக மற்றொன் றையும் தன்னுடைய பரிந்துரைகளில் குறிப்பிட்டது. தாழ்த் தப்பட்ட மக்களுக்கு என்று இருக்கிற 18 சதவீத இட ஒதுக் கீட்டிலே நிரம்ப ஆராய்ச்சிக்குப் பின்னாலே மண்டல் அவர் கள் சொன்ன கருத்து என்னவென்றால் அதை முழுவதுமாக மத்திய அரசு அமல் படுத்தவில்லை. சாதாரணமாக இருக்கிற பணிகளில், வேலைகளில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீத வேலை வாய்ப்பைத் தருகிற அந்த அரசு நிறுவ னங்கள் உயர் பதவிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சத வீத வேலை வாய்ப்பைத் தருகிறதா என்று பார்த்தால் அந்த 18 சதவீத பணியிடங்கள் முழுவதுமாக நிரப்பப்படுவதில்லை. ஆகவே, இத்தனையையும் ஆராய்ந்ததற்குப் பின்னால் பிற் படுத்தப்பட்ட மக்களைப் பற்றிய மிகப் பெரிய ஆராய்ச்சியை நாட்டிலே இருக்கிற 407 மாவட்டங்களில் 405 மாவட்டங் களுக்கு மண்டல் கமிஷன், மண்டல் அவர்கள் நேரிடையாகச் சென்று ஆராய்ச்சி செய்து, அவர்களையெல்லாம் விசாரித்து, அதற்குப் பின்னால் அவர் தந்த பரிந்துரைகளில் குறிப்பிடுகி றார். 52 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தியாவிலே பிற்படுத்தப்பட்ட மக்கள், அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், ஆகவே, 52 சதவீத வேலை வாய்ப்புகள் மத்திய அரசாங்கத் திலே, கல்வி நிறுவனங்களிலே அவர்களுக்கு 52 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று இருந்தாலும்கூட, மண்டல் கமிஷன், மண் டல் அவர்கள் பரிந்துரை செய்தது, பிற்படுத்தப்பட்ட வகுப் பினருக்கு என்று 27 சதவீதமாவது ஒதுக்கப்படவேண்டும். ஆனால் நியாயமாக, ஆராய்ச்சியிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள் இறுதியிலே, 52 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும். ஆனாலும் 18 சதவீதத்தை எப்போதும்போல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்குங்கள். 27 சதவீதத்தையாவது பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு ஒதுக்க வேண்டும். மத்திய அரசாங்கத்தி னுடைய கல்வி நிறுவனங்களிலே, மத்திய அரசாங்கத்தி னுடைய வேலை வாய்ப்புகளில், அது போன்று மத்திய அரசி னுடைய மானிய உதவிகளைப் பெறுகிற பொது நிறுவனங் களிலே, இவைகளிலே எல்லாம் அந்த வேலை வாய்ப்பு 27 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டும். இது மண்டல் அவர்கள் மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிற

அந்தப் பரிந்துரைகளாகும். ஆனால் இந்தப் பரிந்துரைகள் இதுவரை மத்திய அரசாங்கத்தாலே செயல்படுத்தப்பட்டதா என்று பார்த்தால், வீணாக காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்களே தவிர இன்னும் இது செயல்படுத்தப்படவில்லை.

அது மட்டுமல்ல. கல்வியிலேயும், சமுதாயத் துறையிலேயும் பிற்படுத்தப்பட்டவர்களை வரையறுக்கும் அடிப்படையை நிர்ணயிப்பது இந்த மண்டல் குழுவினுடைய நோக்கமாகக் கொடுத்தது. 'not scientifically, but educationally and socially backward' அதிலே இருக்கக் கூடிய பிற்படுத்தப்பட்டவர்களை வரையறுத்து நிர்ணயிப்பது, அதற்கு அடுத்து மேற்சொன்ன வகையிலே அடையாளம் கண்டு கொள்ளப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களின் மேம்பாட்டிற்கான வழி முறைகளை பரிந்துரை செய்வது; பொதுத் துறைகளிலேயும்; மத்திய, மாநில அரசுகளின் பதவிகளிலேயும், போதுமான பங்கீடு பெறாத பிற்படுத்தப்பட்ட மக்களின் வேலை வாய்ப்புகளை, இட ஒதுக்கீட்டின் சாத்தியக் கூறுகளை ஆராய்தல்; இவைகளை எல்லாம் ஆராய்ந்ததற்குப் பின்னாலேதான் மண்டல் குழு, தன்னுடைய பரிந்துரைகளாக 52 சதவீத இட ஒதுக்கீட்டை முறையாக செயல்படுத்த சட்டச் சிக்கல் இருக்கிற காரணத்தால், 52 சதவீதம் தரவேண்டி இருந்தாலும் 27 சதவீதத்தை மட்டும் 'பிற்படுத்தப்பட்டோருக்கு பரிந்துரைக்கப்படுகிறது' என்று சொன்னது. விதிமுறைகளைத் திருத்தி மத்திய மாநில அரசுப் பதவிகள், பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள பதவிகள், அரசு உதவி பெறும் தனியார் துறைப் பதவிகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்திலும் இட ஒதுக்கீட்டினை அமுல்படுத்த வேண்டும். ஓப்பன் காம்படிசன், திறந்த போட்டியில் தகுதி அடிப்படையில் தேர்வு பெறும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கையை இட ஒதுக்கீட்டில் சரி செய்யாது இருத்தல்; ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதத்திற்கு மேல் மாநிலங்களில், இட ஒதுக்கீடு அமுலில் இருப்பதை இப்பரிந்துரை பாதிக்காது இருத்தல்; ஆக மிகப் பெரிய ஆராய்ச்சிக்குப் பின்னால், மிகத் தெளிவான வரையறையினைத் தந்திருக்கிற இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை இன்னும் மத்திய அரசு செயல் படுத்தாது இருப்பது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது.

அதிலும் மிக முக்கியமாக மண்டல் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது, தற்போது உபரி நிலங்களை தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கு வழங்குவதைப்போல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இந்த உபரி நிலங்களை எல்லாம் வழங்கி, அந்த பிற்படுத்தப்பட்ட மக்களைக் கை தூக்கிவிட வேண்டும், நிலச் சீர்திருத்தத்தை மிகத் தீவிரமாக அமுல் படுத்தி இந்த நிலச் சீர்திருத்தத்தின் மூலமாகத்தான்

பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும், அதற்கு மாநில அரசுகள், நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், இப்படிப்பட்ட நல்ல பல பரிந்துரைகளை, மாநிலங்களுக்கு மட்டும் அல்லாமல், நாடு முழுவதற்கும் தேவையான பரிந்துரைகளை மண்டல் அவர்கள், தன்னுடைய பரிந்துரைகளிலே மிகத் தெளிவாகத் தெரிவித்து இருக்கிறார்கள், அதை அமல்படுத்தாமல் கால தாமதம் செய்து கொண்டிருக்கிற மத்திய அரசை வலியுறுத்துவதற்காக இந்தத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது, இந்தத் தீர்மானத்திற்குப் பின்னாலேயாவது, மத்திய அரசு விரைந்து செயல்பட்டு, மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை எல்லாம் உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன், நன்றி.

(முற்பகல் 10-20)

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மண்டல் அவர்களுடைய அறிக்கையினை மத்திய அரசு ஏற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று முன்மொழிந்திருப்பதை நானும் வழி மொழிந்து அதை முழு மனதோடு இந்த அவை மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு உண்டான காரியங்களில் ஈடுபட வேண்டுமென்று இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தப் பிரச்சினையை தொடர்ந்து ஆண்டாண்டுக் காலமாக பேசி எல்லா மாமன்றங்களிலேயும் பேசி இன்றைக்கு முடிவே இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன எடுக்க இருக்கிறீர்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல மாநிலத்தைப் பொறுத்த வரையில் தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, இங்கே மிக மிக பின் தங்கிய சமுதாயத்தைச் சார்ந்த பிரச்சினையைப் பற்றி பேசுகிறபோது இதில் ஈடுபடுகிற தன்மையைப் பற்றி பேசுகிறார்களே ஒழிய அதில் உள்ள உள்ளார்ந்த அர்த்தங்களைப் பற்றி விரிவாகப் பேசுவதற்கு யாரும் முன் வருவதில்லை. ஆனால் வன்னியர் சமுதாயத்தை ஏதோ போராடுபவர்களாகவும், வன்முறையாளர்கள் போலவும் மக்கள் மனதிலே ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிற வகையில் பேசப்படுகிறதே ஒழிய அவர்களுடைய நியாயமான கோரிக்கை என்ன என்பதை யாரும் விரிவாகப் பேசுவதற்கு முன் வருவதில்லை.

இதிலே வன்னியர் சங்கத்தைப் பொறுத்த வரையில் கர்நாடக பேட்டர்னில் தங்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டும் என்பதை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு போராட்டங்கள் நடத்தி பல உயிர்களையெல்லாம் தியாகம் செய்த பிறகு, கவர்னர் ஆட்சிக் காலத்திலே ஜாதி வாரியாக கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்பதற்காகப் போட்ட கமிஷனை இந்த அரசு பொறுப்பேற்றவுடன் கலைத்து விட்டது. அதிலே ஜாதி வாரியாக ஒவ்வொரு ஜாதியினரும் சொல்கிற கணக்கைப் பார்க்கும்போது 10 கோடியிலிருந்து 15 கோடி வரை தமிழக மக்கள் எண்ணிக்கையில் வருகிறார்கள். அந்த கணக்கு எடுப்பு எடுத்துப் பார்த்தால்தானே எந்த ஜாதிக்கு எத்தனை ஜனத்தொகை என்பது தெரியும். அதைக் கலைத்து விட்டு, திரு. ராமதாஸ் அவர்களையும்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கு கணக்கு எடுக்கிற ஒரு கமிஷனே கூடாது என்பது வன்னியர் சங்கத் தலைவருடைய கோரிக்கை என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியுமோ தெரியாதோ என்று புரியவில்லை.

திரு. கே. அர்ஜுனன் : ஆனால் இப்போது 10 கோடியி லிருந்து 15 கோடி ஜனத்தொகையை ஒவ்வொரு ஜாதியும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதிலே எனக்குத் தெரிந்து என் அறிவுக்கு எட்டுகிற வகையில் அதிலே கணக்கு எடுப்பு எடுத்தால்தானே தெரியும். வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் அவர்களுக்காக வாதிடுவதாக தயவு செய்து மற்ற உறுப்பினர்கள் கருதிக் கொள்ளக்கூடாது. நியாயத்தின் அடிப்படையில் நான் அதைக் கூறுகிறேன். கணக்கு எடுப்பு எடுக்கிறபோதுதானே பிரச்சினை தீரும். எந்தெந்த சமுதாயத்திற்கு எத்தனை . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அ. தி. மு. க. ஆட்சியிலே அமைக்கப் பட்ட அம்பாசங்கர் கமிஷன் அறிக்கை, கணக்கு எடுத்த அறிக்கைதான். அந்த அறிக்கை மேசையின் மேலே இருப்பதைப் பார்த்துவிட்டுப் பேசுவது நல்லது.

திரு. கே. அர்ஜுனன் : அம்பாசங்கர் அவர்களுடைய கணக்கு எடுப்பு தோராயமானதுதான். அவர்கள் வீடு வீடாகச் சென்று எடுத்த கணக்கெடுப்பு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதனை அடுத்து கர்நாடக பேட்டர்னில் அந்த அரசு மேற்கொள்ளும் அந்த பேட்டர்னைக் கையாளுவதிலே என்ன தவறு இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் மத்திய அரசைப் பொறுத்த வரையில் எஸ். சி., எஸ். டி. களுக்கு என்று தனித்

தனியாக இடஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆனால் மாநிலத்திலே அப்படி இட ஒதுக்கீடு இல்லை. அப்படிப் பட்ட இட ஒதுக்கீடு இல்லாத காரணத்தால்தான் ஷெட்யூல்டு டிரைப்ஸ் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்த இட ஒதுக் கீட்டில் பங்கு பெற முடியவில்லை. அந்த அடிப்படையில்தான் நீங்கள் மிக மிக பின் தங்கிய சமுதாயத்தினருக்கு குறிப்பிட் டிருக்கிறீர்களே அதை அவர்கள்—வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த ராமதாஸ் அவர்கள் 39 இனத்தவர்களை மட்டும் அதிலே சேர்த்துக் கொள்ளுங்கள், எங்களுக்கு 20 சதவீதம் வேண்டாம் குறைவாகக் கொடுங்கள் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் 20 சதவீதத்தையும் கொடுத்து, 150 சமுதாயத்தினரை அதிலே சேர்த்து, அதிலே எந்த சமுதாயத்தினர் உள்ளபடியே பலன் பெறுகிறார்கள் எந்த சமுதாயத்தினர் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கணக்கெடுப்பை, அந்தச் சூழ்நிலையை நீங்கள் ஒரு ஆண்டுக் காலம் சோதித்துப் பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலே சோதித்துப் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? கர்நாடக பேட்டர்னிலே நீங்கள் அமல்படுத்த வேண்டும் என்பதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மண்டலுக்கு வருவதற்கு முன்னால் உங்கள் நேரம் முடிந்து போய் விடும்.

திரு. கே. அர்ஜுனன்: சீக்கிரம் முடித்துக் கொள்கிறேன். எனவே நீங்கள் இந்தப் பிரச்சினையில் இன்னும் தொடர்ந்து போராடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி கொண்டிருக்கிறீர்கள். இன்னும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. அதற்கு யாரோ தூண்டி விடுகிறார்கள் என்பது வேறு ஒரு சங்கம், அதில் யாரும் தூண்டிவிடவில்லை. தூண்டி விடுவதே நீங்கள் தான். இந்தப் போராட்டத்திற்கு காரணமே நீங்கள்தான். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்டான வழி வகைகள் என்ன வைத்திருக்கிறீர்கள் என்பதையும் இந்த அவையின் மூலமாக, உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலனில் அக்கறை உள்ள அரசு இந்த அரசு என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டுதான் இன்றைக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை மைய அரசு முறையாக நடைமுறைப்படுத்த முனைப்பான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தும் வகையில் இந்த அவையில் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். மண்டல் கமிஷன் பரிந்துரைகளை மைய அரசு 9 ஆண்டுகளாகக் கிடப்பில் போட்டிருப்பதற்கு நாம் நம்முடைய

அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் இந்தத் தீர்மானத்தின் வாயிலாக நமது அரசை வேண்டிக்கொள்கின்ற ஒரு தீர்மானம் என்ற நிலையில் இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக கமிஷன்கள் நியமிக்கப்படுவது இரண்டு விதங்களில் என்பதை நாம் அறிவோம். ஒரு நாட்டில் நடைபெறுகின்ற சில நிகழ்ச்சிகள். அந்த நிகழ்ச்சிகளைக் குறித்த உண்மைகளை அறிய வேண்டும் என்பதற்காக அமைக்கப்படுகின்ற கமிஷன்கள். இரண்டாவது அரசமைப்பு சட்டத்திலே குறிப்பிட்டு இருக்கின்ற சில அடிப்படையான உரிமைகளை வரையறை செய்து அரசுக்கு அளவுகோல்களை ஏற்படுத்தித்தர வேண்டும், பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்பதற்காக நியமிக்கப்படுகின்ற கமிஷன்கள். இந்த மண்டல் கமிஷனைப் பொறுத்தவரை இரண்டாவது வகையைச் சார்ந்தது. நாட்டிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் சமூக நீதியைப் பெறமுடியாமல் ஆண்டாண்டுக் காலமாக அடக்கப்பட்ட மக்களைத் தூக்கி விடவேண்டும் என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கொள்கை. எனவே அவர்களுக்கு உதவிடும் வகையில் அரசு எப்படி எப்படியெல்லாம் செயல்பட வேண்டும் என்பதற்காக முறையான ஆய்வு செய்யப்பட்ட அடிப்படையில் பரிந்துரைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக நியமிக்கப்பட்ட கமிஷன்களில் ஒன்றுதான் மண்டல் கமிஷன் ஆகும். உதாரணமாக இந்தக் கமிஷன் இந்த தீர்மானத்திலே குறிப்பிட்டு இருப்பதைப் போல நம்முடைய அரசமைப்புச் சட்டம் விதி 340-இன் அடிப்படையில் குடியரசுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு குழு ஆகும். குடியரசுத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு ஒரு விசேஷ நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டது. சமுதாயத்தில் சமுதாய அடிப்படையிலேயும் அதே நேரத்தில் பொருளாதார அடிப்படையிலேயும் பின் தங்கிய மக்கள் எப்படியெல்லாம் அவர்கள் அரசாங்கத்தால் அல்லது நாட்டு மக்களால் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளை வழங்க வேண்டும் என்ற இந்த விதியின் அடிப்படையில் நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு குழுவை நியமித்தார்கள். அந்தக்குழுதான் மண்டல் கமிஷன் என்கின்ற குழுவாகும். அதனுடைய பரிந்துரைகள் அரசுக்கு வழங்கப்படும்போது அது ஒரு ஜீவாதார உரிமையின்பாற்பட்டது என்ற அடிப்படையிலேயும் நம்முடைய அரசமைப்புச் சட்டம் நமக்கு விதித்திருக்கின்ற ஆணைகள் அடிப்படையிலேயும் குடியரசுத் தலைவர் அவர்களே நியமிக்கின்ற ஒரு குழுவாக இருக்கின்ற காரணத்தால் அதனுடைய பரிந்துரைகள் அரசாங்கத்தால் வெறும் ஆய்வு செய்யப்படுவதற்கு மட்டும் அல்லாமல் அவைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைக்கப்படுகின்ற குழு என்ற அடிப்படையிலேதான் 340 ஆவது விதியின் கீழ் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக்

கடமைப்பட்டவனாக இருக்கிறேன். எனவே இந்தக் கமிஷன் எப்படியெல்லாம் அரசு இந்தப் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைகளை முறையாக அளித்திருப்பதோடு அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற ஒரு சட்டப்பூர்வமான கட்டாயம் அரசுக்கு இருக்கிறது என்பதைத் தான் இந்த 340 ஆவது விதி அடிப்படையிலே குடியரசுத் தலைவர் அவர்களே நியமித்த இந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை அரசு இதுவரையிலே நடைமுறைப்படுத்தாமல் இருப்பதே வேதனைக்குரியது. கண்டனத்திற்குரியது. அதுமட்டுமல்லாமல் தண்டனைக்கும் உரியது என்று சொன்னால் அது மிகையாகாது. பல ஆண்டுகளாக இந்தக் குழு நாடு முழுவதும் சுற்றி நாட்டு மக்களுடைய வரிப்பணத்தை அவர்கள் செலவழித்து மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று செய்த இந்தப் பரிந்துரைகளை கடந்த 9 ஆண்டுகள் மத்திய அரசு கிடப்பில் போட்டிருப்பது உண்மையிலே நாட்டு மக்களுடைய கவனத்தைக் கவரக்கூடிய ஒன்று மட்டும் அல்ல.

(முற்பகல் 10.30)

பாராளுமன்றத்திலேயும், மற்ற சட்டமன்றங்களிலேயும் இன்றைக்கு அதைப்பற்றிய முறையான விவாதங்களும் அல்லது கேள்விகளும் எழுப்பப்படாமல் இருப்பது கூட வேதனைக்குரியது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, மண்டல் கமிஷனுடைய அந்தப் பரிந்துரைகளைப் பார்க்கும்போது, 'ஓ.பி.சி.'—அதர் பேக்வேர்ட் கம்யூனிட்டீஸ்' என்று குறிப்பிடும்போது, அந்த 'அதர் பேக்வேர்ட் கம்யூனிட்டீஸ்' என்று சொல்லக்கூடிய அந்த சாராருக்கு, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, முறையாக 52 சதவிகிதம் வழங்கவேண்டும் என்று மண்டல் கமிஷன் கூறுகிறது. ஆனால் அரசமைப்புச் சட்டத்தில் நம்முடைய நடைமுறையில் 50 சதவிகிதத்திற்கு மேலாக நாம் ஒதுக்கீடு செய்யக்கூடாது என்று நாமாகவே ஏற்றுக் கொண்டிருக்கிற ஒரு மரபின் அடிப்படையில் இது சாத்தியம் இல்லை என்ற காரணத்தினாலே 27 சதவிகிதத்தை நான் பரிந்துரை செய்கிறேன் என்று மண்டல் அவர்கள் கூறுகிறார்கள். அதைக்கூட ஒன்பது ஆண்டுகளாக மைய அரசு கிடப்பில் போட்டிருப்பது வேதனைக்குரிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, மண்டல் கமிஷன் ஏதோ கல்வித் துறையில், சமுதாயத் துறையில் மற்றும் பொருளாதாரத் துறையில் இந்த மற்ற ஜாதிகள் என்று சொல்லக்கூடிய சாரார்கள், அவர்கள் ஏற்றம் பெறவேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு வழங்கப்படுகிற கல்விச் சலுகை, சமுதாய

அடிப்படையிலே அவர்கள் மேம்பட வேண்டும் என்பதற்காக அளிக்கப்படுகிற நிதிச் சலுகைகள், 'உழுபவனுக்கே நிலம்' போன்ற மற்ற முன்னேற்றமான திட்டங்கள் இருந்தால் மட்டும் போதாது; சமுதாயத்தில் அவர்கள் சம உரிமை பெற்றவர்கள் என்ற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் நிலை பெறவேண்டும். கைக்கலாஜிக்கலாக, அவர்களுக் குள்ளே ஒரு நம்பிக்கை இருக்கவேண்டும். அந்த நம்பிக்கையை ஏற்படுத்துவது மட்டுமல்ல; அவர்களுக்கும் அந்த சம உரிமை உண்டு என்று, சமுதாயத்தில் ஏற்றம் பெற்றவர்கள் ஏற்றுக் கொள்வதோடு நாமும் சம உரிமை படைத்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுடைய உள்ளத்தில் திடமான ஒரு இடத் தைப் பெறவேண்டும். அதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்து வதுதான் இந்தப் பரிந்துரைகளுடைய முக்கியமான நோக்கம் என்பதை மண்டல் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே, ஒரு ஆத்மீக, உயர்வான எண்ணம் அந்த மக்களிடத்தில் ஏற்படவேண்டுமென்று சொன்னால், ஏனைய சமுதாயங்களும் அவர்களுக்கு வழங்கப்படுகிற அந்தச் சலுகைகள் சரியானது தான் என்பதை ஒப்புக்கொள்வதோடு, அரசு அதிலே நியாயங்கள் இருக்கின்றன என்று வற்புறுத்திச் சொல்வதோடு மட்டும் அல்லாமல் அவைகளை நடைமுறைப்படுத்துவதில் மிகப் பத்திர மாக இருக்கவேண்டும், மிகத் தீவிரமாக இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லாததுதான் இதிலே தேக்கம் ஏற்பட்டதற்கே காரணம் என்பதை மண்டல் அவர்கள் மிக அழகாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது).

இந்தச் சலுகைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதை நடைமுறைப்படுத்துவதற்காக இந்த தமிழ்நாட்டு அளவிலே மாநில அரசு இரண்டு பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான குழுக்களை, 'சட்டநாதன் குழு', அதற்கடுத்து 'அம்பாசங்கர் குழு' இவைகளையெல்லாம் நியமித்திருக்கிறது இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முனைப்பான திட்டங்களையும் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இதிலே இருக்கிற சிக்கல் என்னவென்றால் பல்வேறு அமைப்புக்களாக நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற ஜாதிஅடிப்படையிலே—மறைத்துப் பேசுவதில் பிரயோசனம் இல்லை—ஜாதிகள் அடிப்படையிலே இயங்குகிற சாரார்கள் இன்றைக்கு, எல்லாம் தமக்குத்தான் வேண்டும் என்று வற்புறுத்துவது, அது அவர்களுடைய நன்மைக்குக் கூட உகந்தது அல்ல என்று நான் கருதுகின்றேன்.

உதாரணமாக, தமிழ்நாட்டிலே ஒரு சாரார் இன்றைக்கு இருபது சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், சீர் மரபினருக்கும் ஒதுக்கப்பட்ட அந்த நிலையில், மண்டல் கமிஷனுடைய அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினுடைய

உத்யோகங்களில் எங்களுக்கு ஒட்டுமொத்தமாக இரண்டு
சதவிகிதம் வேண்டும் என்று அவர்கள் எப்பொழுதோ ஒரு
கோரிக்கை கூட வைத்திருந்தார்கள். ஆனால் அந்தக்
கோரிக்கையை வற்புறுத்துவதற்காக இதுவரையிலே அவர்
களுடைய மாநாடுகளிலோ, அவர்களுடைய பேச்சுக்களிலோ
எந்தவிதமான ஒரு தெளிவான அறிவிப்பும் இல்லாது இருப்பது
ஏதோ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, ஒரு குறிப்பிட்ட
வரை, அல்லது குறிப்பிட்ட அரசாங்கத்தை மட்டும் கருத்தில்
வைத்து செயல்படுவதாகத்தான் இது அமையும் என்பதை
அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே, இன்றைக்கு
சமுதாயத்தில் நாம் செய்கின்ற நம்முடைய அந்தப் போராட்
டங்களின் வாயிலாக நம்முடைய வற்புறுத்தலுக்கே ஒரு
சக்தி இல்லாமல் போய் விடக்கூடும் என்பதைக் கருத்திற்
கொண்டு, ஏனைய ஜாதிகளிலே அது எத்தகைய பின்
விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் சிந்தித்துப்
பார்த்துச் செயல்பட வேண்டும் என்பதை நான் எல்லா
சாரார்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக
இருக்கிறேன். குறிப்பாக, என்னுடைய வேண்டுகோள் என்ன
வென்றால், தயவுசெய்து இத்தகைய வற்புறுத்தலின் அடிப்
படையிலேயும், போராட்டத்தின் அடிப்படையிலேயும் செய்
கின்ற காரியங்கள் அவர்கள் எந்தச் சமூகத்தைச் சார்ந்தவர்
களாக இருக்கிறார்களோ, யாருக்காக வாதாடுகிறார்களோ,
அவர்களுக்கே கூட ஒரு பலவீனத்தை சமுதாயத்திலே
ஏற்படுத்திவிடும் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க
வேண்டும். குறிப்பாக வன்னியர்களைப் பற்றி சொல்லும்
போது நான் தெளிவாகச் சொல்ல விரும்புவது, அவர்களுடைய
கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. அவர்களுக்கு அதிகமான
வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்று சொல்லுவதிலே
நியாயம் இருக்கிறது. அத்தகைய ஒரு சூழ்நிலை இருந்தால்
வழங்குவதற்கு இன்றைய அரசு தயாராக இருக்கிறது
என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி
சொல்லுகிற கருத்துக்களிலிருந்து நாம் சில உண்மைகளைப்
புரிந்துகொள்கிறோம். அவர்கள் ஆண்டு ஆண்டு காலமாக
களப்பிரர்களுடைய காலத்திலிருந்து அவர்கள் பிற்படுத்தப்
பட்டவர்களாக இருக்கிறார்கள், அடக்கு முறைக்கு ஆளாக்கப்
பட்டிருக்கிறார்கள் என்பது எல்லாம் வரலாறு. எனவே அதை
எல்லாம் நாம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும்
தயவுசெய்து அந்த சமுதாயத்தின் சார்பாக நான் பேசா
விட்டாலும் அந்த சமுதாயத்தின்மீது அக்கறை உள்ளவன்
என்ற காரணத்தால் பேச்சு வார்த்தையின் மூலமாக பக்குவ
மாக எடுத்துச் சொல்லுவதன் வாயிலாக தொடர்ந்து
வற்புறுத்தி எடுத்துச் சொல்வதன் வாயிலாக அந்த சமுதாயத்
தினுடைய நன்மைகள் பாதுகாக்கப்படும் என்பதை அவர்களே
உணர்ந்து போராட்டத்தை எல்லாம் கைவிட்டு நிதர்சனமான,
யதார்த்த நிலைகளை எல்லாம் கருத்தில் கொண்டு அவர்கள்

செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) முடித்துக்கொள்கிறேன். மண்டல் கமிஷனுடைய பரிந்துரையை அரசு கிடப்பில் போடுவதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை, 340—வது விதியின்கீழ் அமைக்கப் பட்ட ஒரு குழுவினுடைய பரிந்துரைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது அதனுடைய பின் தொடர் நடவடிக்கைகள் என்ன ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதையும் தெரிவிக்கவேண்டும் என்று அந்தச் சட்டம் கூறுகிறது. என்ன தொடர் நடவடிக்கை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதையும், பரிந்துரைகள் பற்றி அரசு தெரிவிக்கவேண்டும் என்பது நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் எடுத்துச் சொல்லுகிற ஒரு கட்டளை ஆகும். எனவே அந்தக் கட்டளை நிறைவேறும் வகையில் நம்முடைய மத்திய அரசு உடனடியாக இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை அறிவித்து அதனை முறையாக நடைமுறைப்படுத்த இந்த அரசைத் தூண்டுவதற்கு இந்தத் தீர்மானம் வழி வகுக்கிறது என்ற அளவுக்கு இந்தத் தீர்மானம் பயனுடையது, எனவே அதற்காக நான் அரசைப் பாராட்டி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்களுடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆதரித்து சுருக்கமாக ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்ல முன்வருகின்றேன். மண்டல் கமிஷன் இந்தப் பரிந்துரையைச் செய்து 9 ஆண்டுகள் நிறைவேறுகிறது. 9 ஆண்டுகள் ஆகியும் கூட மத்திய அரசு அதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யாமல் இருப்பது மிக வேதனை அளிக்கக் கூடிய ஒன்று ஆகும். அது கண்டனத்திற்குரிய விஷயம் என்று கூட நான் கருதுகிறேன். ஆகவே, இன்றைக்கு சமுதாயத்திலே இருக்கிற அத்தனை மக்களும் சமூக கல்வி கற்று பொருளாதார ஏற்றத் தாழ்வு அற்ற ஒரு சோஷலிச மாக அமைகிறவரை பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறிய மக்களோடு வர முடியாத ஒரு நிலையில் இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னுக்கு வரும்வரையில் இந்த ஒதுக்கீடுகள் மிக மிக அவசியம் என்பதை இன்றைக்கு சகல வித மக்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆகவே அந்த முறையில் மத்திய அரசினுடைய கல்வி நிலையங்கள் ஆனாலும் சரி அல்லது மத்திய அரசினுடைய பணிகள் ஆனாலும் சரி இந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை என்று சொன்னால் அவர்கள் தங்களுக்கு உரிய இடத்தைப் பெற முடியாது என்பது நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உண்மை ஆகும். ஆகவே, அந்த

முறையில் பார்க்கும்போது இன்றைக்கு இந்த மண்டல் கமிஷனுடைய பரிந்துரையில் இருக்கின்ற முக்கியமான விஷயங்களைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியது போல் இன்றைக்கு சமுதாயத்திலே அவர்களுக்கு சலுகைகள், உதவிகள் செய்த பின்னாலும் கூட இன்னும் கூட அவர்கள் முன்னேறாத நிலையில் இருப்பதற்கு உண்டான பிரதான காரணங்கள் பல்வேறு வகையில் ஆராயப்பட வேண்டிய விஷயம் ஆகும். ஆகவே, இன்றைக்கு இதற்குக் கடுமையான முயற்சி எடுத்து இந்த மண்டல் கமிஷன் ஒரு பரிந்துரையைச் செய்து இருக்கிறது. அந்தப் பரிந்துரையில் இருக்கின்ற மிக முக்கியமான பல விஷயங்களில் ஒன்று. இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டும் அந்த உரிமைகள் கூட அவர்கள் காலா காலத்தில் பெற முடியாத நிலையில் நாடு முழுவதும் இருந்து வருகிறார்கள். அதையும் சீக்கிரமாக, சீராக அமல்படுத்த வேண்டும்.

இன்றைக்கு மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவீதம் ஒதுக்கீட்டை சட்டாயமாக நாடு முழுவதும் அமல்படுத்த ஏற்பாடு செய்து மண்டல் கமிஷனுடைய பரிந்துரைகளை கூடிய சீக்கிரம் உரிய முறையில் அமல்படுத்த, நடைமுறைப்படுத்த வேண்டிய ஏற்பாடுகளை மத்திய அரசு செய்யவேண்டும் என்ற முறையில் இந்த தீர்மானத்தின் மூலம் வற்புறுத்துகின்ற முறையில் நானும் ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-40)

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் தேதி மொரார்ஜி தேசாய் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டு இந்த மண்டல் கமிஷனுடைய செயல் திட்டம் அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் முன்னால் சொன்னதைப்போல 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி மாண்புமிகு இந்திரா காந்தி அவர்கள் நிறைவு செய்து வைத்த அந்த வேலைத் திட்டம், அதனுடைய அடிப்படையிலே 1980 ஆம் ஆண்டு மண்டல் அவர்கள் தம்முடைய அறிக்கையினைக் கொடுத்திருக்கிறார்கள். இங்கே சொல்லுகிறபோது மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சில செய்திகளைச் சொன்னார்கள். சொல்கிற நேரத்தில் இந்திரா காந்தி அவர்கள் ஏதிலே அக்கறை காட்டவில்லை என்று நினைக்கின்ற ஒரு எண்ணம் உருவாகின்ற வகையில் சில வார்த்தைகள் சொல்லப்பட்டன. இங்கே நான் பணிவாகத் தெரிவித்துக் கொள்வது, இந்த மண்டல் கமிஷன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இரண்டு தடவை எக்ஸ்டென்ஷன்

கொடுக்கப்பட்டது. அறிக்கை தயாரிப்பதற்கு எங்களுக்கு அவகாசம் வேண்டுமென்று அவர்கள் கேட்டபோது இரண்டு முறை அன்றைக்கு கால நீட்டிப்புக்கு கொடுத்தது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் என்பதை நினைவூட்டு கிறேன்.

மண்டல் கமிஷன் தன்னுடைய ரிப்போர்ட்டில் சொல்கிற போதுகூட மொரார்ஜி தேசாயால் இது தொடங்கப்பட்டபோதும் கூட இந்திரா காந்தி அவர்கள் மிகுந்த அக்கறையோடு இதில் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள் என்று சொல்கிற போது அவர்கள் மூன்று சொற்களைச் சொல்லி Oppressed, suppressed and depressed classes of people மீது அவருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை இது காட்டுகிறது என்று மண்டல் அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாவது, டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்—ஐப் பற்றிச் சொல்லுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பொருளாதார அடிப்படையும் அந்த 'டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸில்' இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், 'டெர்ம்ஸ் ஆப் ரெபரென்ஸில்' "to determine the criteria for defining the socially and educationally backward classes" என்பதுதான். எந்த அளவுகோலின் அடிப்படையிலே 'சோஷியலி' சமுதாய நிலையிலே, கல்வி நிலையிலே பின் தங்கிய மக்களை அடையாளம் காட்டுவதுதான் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த பணி, என்று தெளிவாக 'டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'—ல் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டைப் பற்றிச் சொல்கிறபோது தன்னுடைய தீர்மானத்தைப் படிக்கிற நேரத்திலே சொன்னார்கள், அதனை ஆதரிக்க வேண்டும், உடனடியாக செயல்படுத்த வேண்டும், என்று, இந்திய தேசிய காங்கிரசுக்கும் பின் தங்கிய வகுப்பினருக்கு நன்மைகள் செய்ய வேண்டும் மண்டல் கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற நல்லவைகளைச் செயல் படுத்த வேண்டும் என்பதிலே கொஞ்சம்கூட கருத்துவேறுபாடு கிடையாது. பின் தங்கியவர்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும். அதை விரைந்து செய்ய வேண்டும் என்பதிலே எங்களுக்கு உடன்பாடு இருக்கிறது, ஆனால் அந்த அறிக்கை வந்த பிறகு அதை வாங்கி அப்படியே கிடப்பிலே போட்டு விட்டார்கள் மத்தியிலே இருக்கிற அரசாங்கம், எந்த செயல்

பாட்டையுமே அவர்கள் செய்யவில்லை என்பதுபோன்று சொல்லப்பட்ட கருத்துக்கு நான் உடன்படாமல் இருக்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். நான் அதை வன்மையாக மறுக்கிறேன். ஏனென்று சொன்னால் அந்த அறிக்கை வைக்கப்பட்டதற்குப் பிறகு, உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு துணைக் குழு 'சப் கமிட்டி' அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட்டுக்கு மேலே கூட செம்மைப் படுத்தப்பட்ட அறிக்கை தேவைப்படுகிறது என்கின்ற காரணத் திற்காக a Ministerial sub-committee was constituted. மந்திரிகள் அடங்கிய ஒரு துணைக் குழு அங்கே போடப்பட்டது. அதிலே மாண்புமிகு நம்முடைய ஆர். வி. அவர்கள், இன்றைய குடியரசுத் தலைவர் அவர்கள், அன்றைக்கு மத்திய அமைச்சராக இருந்த காரணத்தாலே அவர்கள் கூட அதிலே இடம் பெற்றார்கள். இத்தனை வந்ததற்குப் பிறகு அவர்கள் என்ன சொன்னார்கள் என்று சொன்னால் to elicit public opinion, மக்களுடைய கருத்தை அறிவதற்கு மாநிலங்களுக்கு அனுப்பப் பட்டது. மக்களிடம் இருந்து வந்த கருத்துக்களும் அதிலே ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆக மக்களுடைய கருத்தை ஏற்று, அதற்கு ஒரு இறுதி வடிவம் கொடுக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசாங்கத்தின் நோக்கமே தவிர மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை திருப்பிப் பார்க்கக்கூடாது, அதனை செயல் முறைக்குக் கொண்டு வரக்கூடாது என்பதல்ல. அதிலே ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான கருத்துக்கள் கூட இருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என் கையிலே இருக்கிற பத்திரிக்கை செய்தியை வைத்துப் பார்க்கிற போது பாராளுமன்றத்திலே இதை எழுப்பினார்கள். எழுப்பப் பட்டபோது மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் பதில் சொன்னார்கள். என்ன சொன்னார் என்றால், "Mr. Rao said that there were discrepancies in the recommendations of the Mandal Commission and it was felt that it would be desirable to look for a set of criteria which would be objective and uniformly applicable and derivable from various Court judgments on the question as to what constitutes backwardness"

எதுதான் பின் தங்கிய தன்மை என்பதைப் பொறுத்த வரையில் அறிய பல்வேறு நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பி லிருந்து, பல்வேறு கருத்துக்களிலிருந்து எடுத்துக்கொண்டு ஒரு

ஒருங்கிணைந்த திட்டத்தை, ஒரு 'யூனிஃபார்ம் நார்ம்ஸ்' கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் இங்கே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதிலே இன்னொன்றும் சொல்ல வேண்டும். மண்டல் கமிஷனிலே உறுப்பினராக உள்ளவர்கள் பற்றி மாண்புமிகு திரு. மோகன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். மண்டல் கமிஷனிலே பல உறுப்பினர்கள் இருந்தார்கள். பி. பி. மண்டல், தேவன் மோகன்லால், கோலே. கே. சுப்பிரமணியன் போன்றவர்களோடு ஜினாப் பிந்து சாகுல் என்ற ஒரு பெருமகனாரும் இருந்தார், அவர் உடல் நோய் காரணத்தால் பதவியை ராஜினாமா செய்துவிட்டு பிறகு கொஞ்ச நாளிலே மறைந்து போனார்கள். அதற்குப் பிறகு எஸ். ஆர். நாயக் என்பவர் அந்த இடத்திற்கு உறுப்பினராக வருகிறார்.

ஒவ்வொரு மாநிலத்திலும் சுற்றுப்பயணம் சென்ற பிறகு அந்த மாநிலத்திலிருந்து நிலைமைகளை அறிந்து அறிக்கைகளை ஒட்டுமொத்தமாகத் தயாரித்து பிறகு கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் பக்கம், க்கமாக. அப்படிப்பட்ட ஒட்டுமொத்தமான ஃபைனல் ரிப்போர்ட்டை மண்டல் அவர்கள் கொடுக்க முனைந்தபோது அந்த ரிப்போர்ட்டில் கையெழுத்துப் போட அவர் மறுத்தார். காரணம் நான்கு பேர் சொல்கிற கருத்துக்கு இவர் மாறுபட்டார். அவ்வாறு மாறுபட்டு என்ன சொன்னார் என்று சொன்னால் பிற்தங்கிய வகுப்பார் என்று ஒரு பிரிவு இருப்பதற்குப் பதிலாக அதை இரண்டாக்கி அதாவது "It must be split into two-intermediate BC and depressed BC." என்ற வகையில் அதாவது இடைத்தரமான பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள், மிகவும் தாழ்ந்த நிலையில் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள் என்ற வகையில் இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று அவர் வாதிட்டார். அவ்வாறு அவர் வாதிடுகிறபோது மற்ற நான்கு உறுப்பினர்களும் அதை 'டிஸ்ஸண்ட் நோட்'—ஆகத்தான் எடுத்துக்கொள்ள முடிந்ததே தவிர மொத்தத்திலே அதை இன்கார்ப்பரேட் பண்ண முடியவில்லை. ஆகவே 'டிஸ்ஸண்ட் நோட்' என்ற வகையில் தனியாக அது ஒரு வால்யூமாக, அதாவது வால்யூம் 7 என்பதாக அந்த மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1989 மே 12] [திரு. குமரி அனந்தன்]

ஆக பொதுமக்கள் மத்தியிலே ஒருமித்த கருத்து இல்லை என்பது ஒன்று; அவர்களுக்குள்ளேயே ஒருமித்த கருத்து இல்லை என்பது மற்றொன்று. அதற்காக மண்டல் கமிஷன் ரிப்போர்ட்டை நாம் செயல்படுத்த வேண்டாமா என்று கேட்டால் செயல்படுத்த வேண்டும். அனைவருக்கும் ஒவ்வுகின்ற, அனைவரும் ஏற்றுக்கொள்கிற, அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொள்கிற வகையில் இருக்க வேண்டும். உதாரணமாக ஒவ்வொரு மாநிலமும் பின்தங்கிய வகுப்பார் என்று குறிப்பிட்டுச் சொல்கிறபோது ஆந்திரா 292 ஜாதிகளைச் சொல்கிறது—எல்லாவற்றையும் படிக்க நேரம் இல்லை என்பது எனக்குத் தெரியும்—ஒரிஸ்ஸா 224 ஜாதிகளைச் சொல்கிறது; உத்தரபிரதேசம் 114-ஐச் சொல்கிறது; இப்படி தமிழ்நாடு ஒன்றைச் சொல்கிறது; கர்நாடகா 333 ஜாதிகளைச் சொல்கிறது: ஆனால் நாகாலாந்து யாருமே பின்தங்கியவர்கள் என்று இல்லை என்று குறிப்பிடுகிறது. அதாவது 'நில்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக ஒரு மாநிலம் பேக்வர்ட் கிளாஸ் இல்லை என்று சொல்கிறது; கர்நாடக மாநிலமோ 333 ஜாதிகள் இருக்கின்றன என்று சொல்கிறது. எனவே மத்திய அரசு கொண்டுவருகிற ஒரு சட்டம், மத்திய அரசு கொண்டுவருகிற ஒரு திட்டம் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசின் கருத்துக்களைக் கூட கேட்டிருக்கிறது. நமது மாநில அரசு அதன்மீது கருத்துக்களை அனுப்பிவிட்டதா என்பது எனக்குத் தெரியாது அல்லது இந்தத் தீர்மானத்தின் மூலமாகத்தான் நாம் அந்தக் கருத்தைச் சொல்கிறோமா என்பதையும் நான் அறியவில்லை. எப்படி இருந்தாலும் எல்லா வகையிலும் பார்க்கிறபோது இன்ன வழியிலே இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம் என்று ஒரு ஆலோசனையை மத்திய அரசுக்குச் சொல்வது தவறில்லையே! பாராளுமன்றம் என்பது நமது பிரதிநிதிகள் இருப்பதுதானே! அதுவும் நமது பாராளுமன்றம்தானே! எனவே அந்த வகையில் இந்தச் சிக்கலைத் தீர்க்கவேண்டும்.

ஏனென்றால் ஒரு மாநிலத்திலே ராஜபுத்திரர்களைக்கூட பின்தங்கிய வகுப்பிலே சேர்க்கவேண்டும் என்று ஒருவர் சொல்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதை நாம் ஏற்றுக்கொள்வதா? பாராளுமன்றம் அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? இப்படி ஒவ்வொரு மாநிலமும் ஒன்றைச் சொல்கிற போது ஒட்டுமொத்தமான கருத்து எப்படி வரப்போகிறது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதனாலேதான் காலதாமதம் ஆகிவிட்டது. நாம் ஆலோசனைகள் சொல்லலாம். 27 சதவீதம் என்று சொல்கிற போது ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். 50 சதவீதம்

கொடுத்துக்கொண்டிருக்கிறோம் நாம். மத்திய அரசிலே 27 சதவீதம் என்ற வகையிலே இந்த வேறுபாட்டை நான் புரிந்து கொண்டிருந்தாலும்கூட யாராவது இதிலே விடுபட்டுப்போய் விடுவார்களோ என்ற கவலை நமக்கு வருகிறது.

அதைப்போல மத்திய அரசுக்கும் வரும் அல்லவா? அதனாலே தான் காலதாமதம். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அம்பாசங்கர் கமிஷன் ரிப்போர்ட் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அம்பாசங்கர் கமிஷனிலே நானும் உறுப்பினராக இருந்தேன். அந்த நேரத்திலே பல்வேறு கருத்துக்களிலே முரண்பட வேண்டி வந்தது. அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பார் என்பதிலே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் பெரும்பான்மையான உறுப்பினர்களாகிய நாங்கள் அந்தக் கமிஷன் சொல்கிற கருத்து ஏற்புடையதல்ல என்று சொல்லி நோட்டே தயாரித்தோம். அவ்வாறு அந்த நோட்டைத் தயாரித்ததுமட்டுமல்ல; டிஸ்ஸன்ட் நோட் தயாரித்தோம் என்பது மட்டுமல்ல; அதை டிஸ்ஸன்ட் நோட் என்று சொல்வதா அல்லது அதைத்தான் ரிப்போர்ட் என்று சொல்வதா என்று கூட நாங்கள் வாதிட்டோம். ஏனென்றால் பெரும்பான்மையாக இருக்கின்ற நாங்கள் கருத்துச் சொல்கிறபோது கமிஷனிலே சேர்மனாக இருப்பவர் சொல்வது ஃபைனல் ரிப்போர்ட்டா? அல்லது நாங்கள் சொல்வது ஃபைனல் ரிப்போர்ட்டா என்று கூட நாங்கள் வாதிட்டோம். அதனாலேதான் மீண்டும் ஒருமுறை இந்த ஜாதிக் கணக்கு எடுப்பது பற்றி பேச வருகிறபோது, ஆளுநரிடம் கருத்துச் சொல்கிறபோது இந்தக் கருத்துக்கள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டன.

(முற்பகல் 10-50)

ஆதலாலே, இங்கே நான் பணிவோடு தெரிவித்துக்கொள் கிறேன். நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது இந்தத் தீர் மானம், அந்தத் தீர்மானம் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகளோடு சொல்லப்பட்டு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியோடு, ஏழை எளிய மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு நன்மை செய்வதிலே, இந்திய தேசிய காங்கிரஸும் துணை நிற்கும் என்பதனை சொல்லி அமைகிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் சட்ட பிரிவு 340 கிளாஸ் 3-இன்கீழ்

1989 மே 12] [திரு. பி. எச். பாண்டியன்]

"The President shall cause a copy of the report so presented with the Memorandum explaining the action taken thereon to be laid before each Housing of the Parliament".
இதிலே "action taken" அதுதான் முக்கியம். இந்த அறிக்கை தயார் செய்யப்பட்டு, பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டு, இத்தனை ஆண்டுக்காலம் ஆகியும் "action taken report"-ஐ சேர்த்துவைக்காத காரணத்தினால் மத்திய அரசாங்கம் அரசியல் சட்ட பிரிவு Clause 3-ஐ மீறி விட்டது என்பதை நான் இங்கே முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய ஜனாதிபதி அவர்கள் அரசியல் சட்ட பிரிவு 60-ன்கீழ் "I will to the best of my ability, preserve, protect and defend the Constitution" என்கிற காரணத்தினால், நாம் இந்த தீர்மானத்தை நாம் நிறைவேற்றும்போது, இது அவருக்குத் தெரியாமல் போய்விடக்கூடாது, மத்திய அரசாங்கத்திற்கே நேரடியாக இந்த தீர்மானம் போசாமல், இன்னொரு copy நம்முடைய ஜனாதிபதிக்கும் "You have to preserve, protect and defend Article 340 clause 3" என்ற நினைவோடு நாம் எடுத்துச் சொல்வோமானால், இந்தப் பரிந்துரைகள் இனிமேலாவது அமல்படுத்தப்படும் என்பதை நான் இங்கே ஆலோசனையாகத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதே கருத்தோடு ஒத்த கருத்து என்னுடையதும் என்ற காரணத்தினால் அதையே நான் மீண்டும் பேச விரும்பாத காரணத்தினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோருக்கு அனைத்து இந்திய அளவில் மண்டல் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில், இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும்என்று மத்திய அரசை வலியுறுத்திக்கேட்டுக்கொள்கின்ற இந்தத் தீர்மானம் இங்கே நிறைவேறும்போது பிற்படுத்தப் பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் எல்லாம் இங்கே இருக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். இந்த தீர்மானத்தை அவையிலே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியி னுடைய துணைத் தலைவர் அவர்கள், சில மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்த நேரத்திலேகூட, இந்தத் தீர்மானத்தை வரவேற்று, அதே நேரத்திலே இருக்கின்ற சிக்கலைத் தீர்ப்பது எப்படி என்ற யோசனையையும் மத்திய அரசுக்கு வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இது நாடு தழுவிய அளவிலே விவாதிக்கப்படவேண்டிய ஒன்று என்றும் அவர் கூறினார். இந்த கூற்று பஞ்சாயத்து ராஜ்யத் திற்கும் பொருந்தும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடு தழுவிய பிரச்சினைகளை நாடு தழுவிய அளவிலே விவாதிப்பது நிச்சயமாக நன்மை பயக்கும். எந்தத் தவறுகளுக்கும் இடம் தராது. ஆனால் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புவ தெல்லாம், ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, ஒரு திங்கள் அல்ல, இரண்டு திங்கள் அல்ல, ஓராண்டல்ல, ஈராண்டல்ல, ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகள் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. அதனை ஏற்றுச் செயல்படவேண்டும். சிக்கல்கள் எந்தப் பிரச்சினை யிலேயும் இருக்கத்தான் செய்யும், அவற்றைக் காரணங்களாகக் காட்டி, பிரச்சினைகளைத் தட்டிக் கழித்துக்கொண்டேயிருந்தால் எந்த ஒரு நல்ல முடிவினையும் ஒரு அரசு மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுவிடும். கடந்த மார்ச் திங்கள் 13 ஆம் தேதியன்று இந்த அரசு வெளியிட்ட, தமிழகத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகித ஒதுக்கீடு என்று அறிவித்த அந்த செய்தி வெளியீட்டில் 5—வது பகுதியிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். அரசியல் சட்டத்தின் 16 (4) விதிப்படியும், 15 (4) விதிப்படியும் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கிக் கிடக்கும் வகுப்பினருக்கு தனி ஒதுக்கீடுகளையும், சிறப்பு திட்டங்களையும் செய்து, அவர்களைக் கைதூக்கி விடுவதில் மத்திய அரசுக்கும் பெரும் பங்குண்டு; அரசியல் சட்டம் 340 பிரிவின்படி அமைக்கப்பட்ட மண்டல் கமிஷன் பரிந்துரைகளைக் கருத்திலேகொண்டு, சமூக நீதி குறித்த இந்த முக்கியமான துறையில், மத்திய அரசு ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமென்று மார்ச் திங்கள் 28 ஆம் தேதி தமிழகத்திலே 20 சதவிகிதம் ஒதுக்கீடு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக அறிவித்த அந்தக் காலக்கட்டத்திலேயே, அந்த அறிக்கையிலேயே இது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப இந்தத் தீர்மானம் இந்த மாமன்றத்திலே இன்றைக்குக் கொண்டுவரப்பட்டு, ஏறத்தாழ அவை உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. சிலர் மண்டல் கமிஷன் அறிக்கை மீதான தீர்மானத்தை அடிப்படையாக வைத்து, இன்று தமிழகத்திலே உருவாகியுள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்தார்கள். அதிலே அரசைப் பாராட்டவும் செய்தார்கள், அரசின் போக்கினைத் தாக்கவும் செய்தார்கள். அதற்கு இந்தத் தீர்மானம் பயன்பட்டது என்பதில் எனக்கு மகிழ்ச்சி. இதைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய கருத்துக்களை இங்கே அறிவித்திருக்கிறார்கள் என்பதிலே அவர்களுக்கு ஒரு மன ஆறுதல் இருக்கிறதோ, இல்லையோ, எனக்கு நிச்சயமாக மன ஆறுதல் உண்டு. இங்கே பேசிய அ. தி. மு. க. உறுப்பினர்

திரு அர்ச்சுனன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 107 சாதிகளுக்கு 20 சதவிகிதம். என்பது நியாயம்தானா என்று கேட்டார். இதைத்தான் இன்றைக்குக் கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் நாட்டு மக்களிடத்திலே பரப்புகிறார்கள். 107 சாதிகள் என்று சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. மக்கள் தொகை எவ்வளவு? 30 சதவிகிதம் எத்தனை லட்சம் மக்களுக்குப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 20 சதவிகிதம் எத்தனை லட்சம் மக்களுக்குப் பிரிக்கப்பட்டிருக்கிறது, அதாவது தரப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாங்கள் மார்ச் திங்களில் வெளியிட்ட அந்த ஆணையை உள்ளடக்கிய அந்த நீண்ட அறிக்கையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். வன்னிய வகுப்பினர் 65 லட்சத்து 5 ஆயிரம் என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 39 லட்சத்து 95 ஆயிரம் என்றும், சீர் மரபினர் 17 லட்சத்து 19 ஆயிரம் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த 3 பிரிவினரும் சேர்ந்து—மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், சீர் மரபினரும் சேர்ந்து—122 லட்சத்து 19 ஆயிரம் பேர், அவர்களுக்கு நாம் ஒதுக்கியுள்ள சதவிகிதம் 20, அதாவது வேலை வாய்ப்பிலும், கல்வியிலும். மேலே குறிப்பிட்ட வகுப்பினரைத் தவிர்த்து மீதமுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 217 லட்சத்து 49 ஆயிரம் பேர். ஆக 122 லட்சத்திற்கு 20 சதவிகிதம், 217 லட்சத்திற்கு 30 சதவிகிதம், இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1 கோடியே 22 லட்சம் பேருக்கு 20 சதவிகிதம்; 2 கோடியே 17 லட்சம் பேருக்கு 30 சதவிகிதம். இதிலே என்ன அநியாயம் நடந்துவிட்டது என்பதை நடுநிலையோடு எண்ணிப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. இதிலே வன்னியர்களுக்கு என்ற....

(முற்பகல் 11-00)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இந்த ஒரு கோடியே 22 லட்சம் சொச்சம் பேருக்கு 20 சதவிகிதம் என்றும், 2 கோடியே 17 லட்சம் சொச்சம் பேருக்கு 30 சதவீதம் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். நான் அவரைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம்—இந்த அடிப்படையில் இப்போது மோஸ்ட்-பேக்வேர்டு என்று பிரித்திருக்கிறீர்கள், இவ்வாறு மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் இப்போதுள்ள அரசு அதிகாரிகளின் பட்டியலில் எத்தனை சதவீதம் பேர் வருகிறார்கள், அதே அடிப்படையில் 2 கோடியே 17 லட்சம் சொச்சம் பேரில் எவ்வளவு சதவீதம் வருகிறார்கள் என்கிற ஒட்டுமொத்தமான கணக்கை இந்த மாமன்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கணக்கை எல்லாம் பார்த்துத்தான் 1 கோடியே 22 லட்சம் பேருக்கு 20 சதவிகிதம் என்று இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் அதிகம் பேர் மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும் வர முடியவில்லை, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் வரவில்லை என்ற காரணத்திற்காகத்தான் அவர்களையெல்லாம் பிற்படுத்தப்பட்டவர்களின் பட்டியலிலிருந்து பிரித்து 'மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்று ஒரு பிரிவை உருவாக்கி அந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அதாவது 1 கோடியே 22 லட்சம் பேருக்கு—50 சதவீதம் ஒதுக்கீடு என்று பிரித்திருக்கிறோம். அதிலும்கூட, இந்த 122 லட்சத்தின் மிகப் பெரும் பான்மையாக இருக்கிற மக்கள் வன்னிய வகுப்பினர் தான் —அதாவது 65 லட்சம்பேர் அவர்கள் இருக்கிறார்கள். 20,000-க்கும் குறைவான மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட சமூகத்தினர் 11 சாதியினர். 1000 முதல் 10,000 வரை மக்கள் தொகையைக் கொண்ட சமூகத்தினர் 21 பிரிவினர், 15-லிருந்து 500 பேர் வரை மக்கள் தொகையைக் கொண்ட சமூகத்தினர் 14 பிரிவினர். இவைகளை எல்லாம்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இந்த 20 சதவீதத்தால் யாருக்கு அதிகமான பயன் கிடைக்கும் என்றால்—20,000-க்கும் குறைவான எண்ணிக்கையில் மக்கள் தொகையைக்கொண்ட சமூகத்தினருக்கு அதிகமான பயன் நிச்சயமாகக் கிடைக்காது. எனவே அவர்கள் இன்னும் பல ஆண்டுக் காலத்திற்கு வன்னியர்களோடு இப்படிப்பட்ட தேர்வுகளில் போட்டிபோடுவது என்பது இயலாத காரியமாக இருக்கும்.

அதைப் போலவே 1,000 முதல் 10,000 வரை மக்கள் தொகையைக் கொண்ட பிரிவினருக்கும்கூட இன்னும் பல ஆண்டுக் காலம் ஆகும் வன்னியர்களோடு போட்டி போட. 15 முதல் 500 பேர்களை மட்டுமே, கொண்ட 14 ஜாதிக்காரர்களில் எத்தனை பேர் படித்திருக்கிறார்கள்—பள்ளிக்கூடம் இருக்கிற இடம் தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்பதையெல்லாம் நாம் புரிந்து கொள்ள முடியும். எனவே 122 லட்சம் என்றாலும்கூட அதிலும் மிகப்பெரும்பான்மையாக இருப்பவர்கள்—65 லட்சம் பேர்களாக இருப்பவர்கள் வன்னியர்கள். அந்தச் சமூகத்தினருக்குக் கிடைக்க வேண்டியது இதுவரை கிடைக்கவில்லை என்ற அந்த ஆதங்கம் அகற்றப்பட்டு கிடைக்க வேண்டிய பயன் நிச்சயமாக அவர்களுக்குக் கிடைக்கும் என்பதைதான் நான் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல—நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு தனித் துறையே உருவாக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு சே. ரமணி அவர்கள் இங்கே எடுத்துக்

காட்டியதைப் போல் சமுதாயத்துறையில் மட்டுமல்லாமல் பொருளாதாரத் துறையிலும் அவர்கள் ஏற்றம் பெற்றிடவும் அதன் காரணமாக, கல்வி வேலைவாய்ப்பு வசதிகளையெல்லாம் அவர்கள் பெறுவதற்கு ஒரு உரிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு தனித் துறையே அமைக்கப்பட்டு, அதிலேகூட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருவர்தான் அதனுடைய இயக்குநராக நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. அதற்கு என்று ஒரு தனி மானியம் ஒதுக்கப்பட்டு துணை மானியக் கோரிக்கையிலே அதற்கான அனுமதியும் இந்த அவையிலே பெறப்படும் என்றும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

கடந்த வாரத்தில் இது குறித்து எடுத்த முடிவைக்கூட இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். நுழைவுத் தேர்வுக்கும் போடுவதற்கான தகுதிகளில் சில விதிகள் இருக்கின்றன. இவ்வளவு மார்க்குகள்—மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும் என்று இருக்கிறது.

பிளஸ் 2–ல் ஓப்பன் காம்படீஷன் என்று சொல்லப்படுகிற வகையில் ஒரு மாணவர் எடுக்க வேண்டிய மார்க்குகள்—மதிப்பெண்கள் ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவீதம் இருக்க வேண்டும். இது ஒவ்வொரு பாடத்திலும்—மொத்தத்தில் 200–ல் 140 பெற்றிருக்க வேண்டும். இது ஓப்பன் காம்படிஷன்க்கு செல்லுகிற மாணவர்களுக்கு, இதில் எந்த மாற்றமும் நாம் செய்யவில்லை.

ஆனால், பின்தங்கியவர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவீதம் இருக்க வேண்டும். மொத்தத்தில் 200-க்கு 140 இருக்க வேண்டும் என்று இருந்தது. இந்த அரசு அதை மாற்றி, இனிமேல் 200-க்கு 130 மார்க் இருந்தாலே போதும் பின் தங்கியவர்களுக்கு என்று முடிவு செய்துள்ளது.

மிகவும் பின்தங்கியவர்களுக்கு இந்த விண்ணப்பத் தகுதி ஒவ்வொரு பாடத்திலும் 60 சதவிகிதம் இருக்க வேண்டுமென்பதை மாற்றி 55 சதவிகிதம் இருந்தாலே போதும் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 200-க்கு 140 மதிப்பெண்கள் இருக்க வேண்டும் என்பதை மாற்றி, 200-க்கு 120 இருந்தாலே போதும் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதைவிட இன்னும் ஏதாவது அந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செய்ய வேண்டும் என்று இந்த அரசு கருதினால், கோரிக்கைகள் வந்தால் அவைகளை நாங்கள் புறக்கணிப்போம் என்று என்றைக்கும் ஆணவமாக அரசின் சார்பிலே விடை அளித்தது கிடையாது; பதில் வழங்கியதும்

கிடையாது. பலமுறை இந்த மாமன்றத்திலே நான் சொல்லி இருக்கின்றேன். இப்போது அளிக்கப்பட்டுள்ள இந்த விகிதாச் சார முறையில் இந்த ஆண்டு ஏற்படுகின்ற அனுபவங்களைக் கொண்டு மீண்டும் பரிசீலனை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுமேயானால் அதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்று நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டார்கள் என்றெல்லாம் அர்ச்சுனன் அவர்கள் சொன்னார்கள். கடந்த கால ஆட்சிகளில் எல்லாம் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறாமல் இருந்தது கிடையாது, தி.மு.க. ஆட்சி வந்த பிறகு தான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற தாகச் சொல்ல முடியாது. கடந்த கால ஆட்சியில் ஒரு தண்ணீர் பிரச்சினைக்காக வாகைகுளத்தில் இரண்டு பெண்களே சுடப்பட்டார்கள்—பாக்கியத்தம்மாள், முத்துவேலம்பாள் என்ற இரண்டு பெண்களே கூட சுடப்பட்டு இருக்கின்றார்கள். ஆனால் வன்முறைகள் நடைபெறுகிற நேரத்தில் ஆட்சியாளர்கள் கை கட்டிக்கொண்டு வாளா இருக்க முடியாது. வேண்டுமென்றே இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும், இந்த ஆட்சிக்கு சிக்கலை ஏற்படுத்த வேண்டும். எத்தனை நல்ல திட்டங்கள் இந்த நாட்டு மக்களுக்காக மாநில மக்களுக்காக இந்த ஆட்சியின் வாயிலாகச் செய்யப்பட்டாலும் கூட அவைகளுக்கு எல்லாம் மாறாக ஒரு தவறான பிரச்சாரத்தைச் செய்து, வன்முறை களில் ஈடுபட்டு ஒவ்வொரு நாளும் ஒரு பஸ்ஸாவது கொளுத் தப்பட வேண்டும் என்கின்ற முறையிலே சிலர் ஈடுபடுவார்களே யானால் அதையெல்லாம் ஒரு அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்பதை நான் மீண்டும் மீண்டும் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டு இருக்கின்றேன்.

இங்கே வைக்கப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தைக் குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவித்தபோது 9 ஆண்டுகள் தாமதத் திற்கு எவையெவை காரணம் என்பதை எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். இபபோது நாம் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருப்பதே கூட அந்தக் காரணங்கள் சரியல்ல என்று கூறுவதற்காகவோ அல்லது மத்திய அரசை இதை வைத்துக்கொண்டு கண்டிப்பதற்காகவோ அல்ல. இனிமேலா வது சிக்கல்களை எல்லாம் போக்கி இந்தத் தீர்மானத்தை ஏற்று அகில இந்திய அளவிலே பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று மண்டல் குழு பரிந்துரைத்து இருக்கிறதோ அதனை ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்து காட்டியதைப் போல மொரார்ஜி தேசாய் அவர்கள் இந்தியப் பிரதமராக ஜனதா ஆட்சிக் காலத்திலே பொறுப்பு

ஏற்று இருந்த நேரத்தில் இந்தக் குழு அமைக்கப்பட்டு சற்றொப்ப ஓராண்டுக் காலப் பணிக்குப் பிறகு 31—12—80 அன்று அந்த அறிக்கை பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்ற இரண்டு அவைகளிலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தான் அந்த அறிக்கை வைக்கப்பட்டது. 30—4—82-லே தான் அந்த அறிக்கை வைக்கப்பட்டது. 1980-ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப் பட்ட அறிக்கை இரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் இரண்டு அவைகளிலும் வைக்கப்பட்டது. அப்படிக் காலம் கடத்தியதற்கு என்ன காரணம் என்பதை எல்லாம் ஆராயத் தேவை இல்லை. கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்திலாவது இந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று அழுத்தமாக நாம் இந்த அவையின் மூலமாக விடுகின்ற வேண்டுகோளின் மாற்று வடிவம்தான் இந்தத் தீர்மானம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதல் அரசியல் சட்டம் திருத்தப்பட்டதேகூட தமிழ் நாட்டு மக்களுடைய ஆர்த்தெழுந்த அந்நாள் கிளர்ச்சியின் காரணமாகத்தான் என்பதை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மிக நன்றாக அறிவார்கள். அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் அன்றைக்குத் தேவைப் பட்டது. ஏனென்றால் தமிழ்நாட்டிலே காலங்காலமாக இருந்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், இட ஒதுக்கீட்டு முறை இவைகளுக்கெல்லாம் வேட்டு வைக்கின்ற முறையில் சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று, நீதிமன்றத் தீர்ப்புக்களை இட ஒதுக்கீட்டிற்கு மாறாகப் பெற்று, அதன் காரணமாக தமிழகத்திலே தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் பெரும் கிளர்ச்சியிலே ஈடுபட்டு—கட்சி சார்பற்ற முறையிலே சில காங்கிரஸ் நண்பர்களே கூட—அன்றைக்கு அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தருகின்ற நிலை எல்லாம் ஏற்பட்டு தமிழகமே கொந்தளித்த அந்தச் சூழ்நிலையிலே தான் அரசியல் சட்டத்திற்கே முதல் திருத்தம் வந்தது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

அப்பொழுது நாடாளுமன்றத்திலே பிரதமர் நேரு அவர்கள் கூறிப்பிட்டார்கள்.

You know what was the immediate cause for bringing the First Amendment to the Constitution. You all know that there are certain happenings in Madras State which has led us to back this

amendment. என்று நேரு அவர்கள் குறிப்பிட்டு அந்தத் திருத்தத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அதைக்கூட மண்டல் கமிஷன் தன்னுடைய அறிக்கையிலே சுட்டிக்காட்டும் பொழுது, Madras is the pioneer State in communal representation. It has given representation for backward classes. என்று மண்டல் குழுவினுடைய அறிக்கை—இந்த நிலையைத் தமிழகம்தான் அதற்கு முன்னோடியாக இருந்தது என்பதை—சுட்டிக் காட்டத் தவறவில்லை. இந்தக் குழுவிலே உள்ளவர்களுடைய பெயர்கள், அவர்கள் இந்தியா முழுவதும் பயணம் நடத்தி அறிந்து கொண்ட பல்வேறு உண்மைகள், அந்த உண்மைகளெல்லாம் அடங்கிய ஒரு கருவூலமாக இந்தக் குழுவினுடைய அறிக்கை பாரத பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்களுடைய முன்னுரையோடு தொடங்கி, பாரதப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்களுடைய முடிவுரையோடு, டிசம்பர் திங்கள் 12 ஆம் நாள் தன்னுடைய பணியை முடித்து அவர்களிடத்திலே அதனை வழங்கியது.

அதிலே முக்கியமான பரிந்துரைகள் என்று எடுத்துக் கொண்டால், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்புடைய அரசு நிறுவனங்களிலுள்ள அனைத்துப் பணிகளிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் 27 சதவிகித இடஒதுக்கீடு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்தப் பரிந்துரை பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதத்திற்கு அதிகமாக இடஒதுக்கீடு செய்திருக்கும் மாநிலங்களைப் பாதிக்காது என்று மிக எச்சரிக்கையாக அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர்கள் பழங்குடி மக்களுக்கு உள்ளதுபோல் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நிரப்பப்படாமல் உள்ள இட ஒதுக்கீட்டு அளவு மூன்று ஆண்டுகளுக்குக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்குக் கொடுப்பது போலவே, அதே அளவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் மைய அரசு நிதி உதவி அளிக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசுகளும் பிற்படுத்தப்பட்டோர் நல முன்னேற்ற வாரியம் அமைக்க வேண்டும். அதை இந்த மாநிலத்திலே நாம் ஏற்கனவே 1971 ஆம் ஆண்டிலேயே அமைத்து விட்டோம்.

மேலும், மைய மற்றும் மாநில அரசுகளின்கீழ் பிற்படுத்தப்பட்டோருக்காகத் தனி அமைச்சகம், துறை அமைக்க வேண்டும். தனி அமைச்சர், அதற்கான துறை அமைக்க வேண்டுமென்று மண்டல் குழு சிபாரிசு செய்திருக்கிறது. மாநில அளவிலே நாம் 1971 ஆம் ஆண்டிலேயே இதற்கு என்று தனி இலாகா தனி அமைச்சர் என்கின்ற அளவிற்கு நாம் உருவாக்கி விட்டோம்.

மண்டல் குழுவினுடைய பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்ட பிறகு, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள் மேலும் ஆய்வு செய்யப்படவேண்டுமென்றும் இந்தக் கருத்துக்கள் அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளாகத் தரப்பட்டன.

நம்முடைய இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்கள் இங்கே சொன்னார்கள். என்ன முயற்சி எடுக்கப்பட்டது? எப்பொழுது தட்டிக் கழிக்கப்பட்டது என்றெல்லாம் கேட்டார்கள். கடந்த காலத்திலே கவர்னர் ஆட்சியிலேகூட, மண்டல் கமிஷன் சிபாரிசுகளைப்பற்றி, அப்பொழுது இங்கேயிருந்த சில சூழ்நிலைகளையொட்டி மத்திய அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு

மத்திய அரசின் Ministry of Welfare துறையின் சார்பாக 3—10—1988 அன்று தமிழக அரசுக்கு ஒரு பதில் கடிதம் வந்திருக்கிறது.

Government of India, Ministry of Welfare.

To

The Secretary to the Government of Tamil Nadu,
Social Welfare Department,
Madras என்று முகவரியிட்டு ஒரு பதில் வந்தது. அந்தப் பதிலில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்;

"On the question of reservation to other Backward classes in services and educational institutions as contained in the Mandal Commission Report, the Central Government is of the opinion that status quo should be maintained till a national consensus is evolved.

Yours faithfully,

.

Joint Director."

என்று கையெழுத்திட்டு பதில் வந்திருக்கின்றது.

தேசிய அளவிலே ஒரு கருத்து உருவாகிற வரையில் இப்பொழுதுள்ள நிலையே நீடிக்கட்டும் என்று கவர்னர் ஆட்சியிலே இங்குள்ள சூழ்நிலையினுடைய அடிப்படையிலே எழுதப்பட்ட கடிதத்திற்குக்கூட மத்தியிலேயிருந்து வந்த பதில் இப்படித்தான் அமைந்திருக்கின்றது. முயற்சிகள் மாநில அரசின் சார்பாக பல முறை எடுக்கப்பட்டன. கழக ஆட்சியிலே பலமுறை மத்தியிலும் இப்படிப்பட்ட இட ஒதுக்கீடுகள் தேவை என்பது வலியுறுத்தப்பட்டது.

பிறகு கழக ஆட்சிக்குப் பிறகு, கழகம் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக்கால கட்டத்திலேகூட தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழக மற்றுமுள்ள சமுதாய நல அமைப்புக்கள் டெல்லி வரையிலே சென்று, டெல்லியிலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகள், தலைவர்கள் இவர்களோடு சேர்ந்து டெல்லிப் பட்டணத்திலேயே ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள்.

அங்கே உண்ணா நோன்புகளை எல்லாம் நடத்தி இருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பிறகு கூட இந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உள்ள நிலைமையை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டின் மக்கள் தொகையிலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 52 சதவீதம், தாழ்த்தப்பட்ட மலை ஜாதி மக்கள் 22.5 சதவீதம். இந்த 52 சதவீத பின்தங்கிய மக்களுக்கு மத்திய அரசினுடைய வேலை வாய்ப்புகளில் எத்தனை சதவீதம் கிடைத்திருக்கிறது என்றால், பொதுவாக மொத்தத்தில் கிடைத்திருக்கிற சதவீதம் 12.55 தான். அதிலும் குறிப்பாக, மத்திய அரசு நிறுவனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும், மத்திய அரசு வங்கி போன்றவைகளிலும் 'கிளாஸ்-1' என்ற அந்தப் பணிக்கு, மேல் நிலை உத்தியோகங்கள் என்ற நிலையிலே எடுத்துக்கொண்டால் 4·69 சதவீதம் தான் பின்தங்கிய மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதையெல்லாம் சுட்டிக்காட்டித்தான் நாம் இந்த 27 சதவீதம் பின்தங்கிய மக்களுக்கு மத்தியிலே, பொதுத் துறைகளிலும், வங்கிகளிலும், மத்திய அரசு சார்புடைய இலாக்காக்களிலும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு நாம் இந்தத் தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்றுவதற்கு, உங்கள் முன்னால் இந்தத் தீர்மானம் வைக்கப்பட்டிருக்கிறது. இதை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தருவதன் மூலம், தமிழகத்தில் உள்ள நாம் அனைவரும் இந்தப் பிரச்சினையிலே ஒரே கருத்துடையவர்களாக இருக்கிறோம்.

எனவே, மத்திய அரசு உடனடியாக இதுபற்றிக் கவனம் செலுத்தி, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகளை நிறைவேற்ற முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிற வகையில், இதனை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து அமைகிறேன், வணக்கம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லிய நேரத்தில் நுழைவுத் தேர்வு காலத்தில் 'அப்ளிகேஷன்' போடுவதற்கு மார்க்கினுடைய விகிதாச்சாரத்தைக் குறைத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்படி விகிதாசாரத்தை குறைப்பதால் மட்டும் அந்தப் பையன்களுக்கு படிப்பதற்கு நிச்சயமாக இடம் கிடைக்கப் போவதில்லை. சாரணம் என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி, மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் சரி இன்றைக்கு டிமாண்ட் அதிகமாக இருக்கிற காரணத்தால் இப்போதிருக்கிற 'ரேஷியோ' படி போட்டால் கூட நிறைய பையன்கள் அங்கே படிக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே. அந்தக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனிப்பட்ட முறையில் பிற்படுத்தப்பட்ட பையன்களுக்கு என்று அதிகப்படியான சீட்டுகளைக் கொடுத்தால் தான் சரியாக இருக்குமே தவிர, 'அப்ளிகேஷன்' போடுவதில் மார்க்கைக் குறைப்பதால் எந்த விதமான பிரயோஜனமும் இருக்காது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான இடங்களை ஒதுக்குவது என்பது, உடனடியாகச் செய்யக்கூடிய வகையில் மாநில அரசின் கையில் இருக்கிற காரியமல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று கருதுகிறேன். இருப்பினும், இதுபோன்ற பல சலுகைகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அளிக்க என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமோ அந்த முயற்சிகளையெல்லாம் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மண்டல் குழுவினுடைய சிபாரிசை ஏற்று மத்திய அரசு அமலாக்க வேண்டுமென்ற தீர்மானத்தைத் முன்மொழிந்து, அதன்மீது இறுதியாக அவர்கள் உரையாற்றும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழ் நாட்டின் நிலையை அவர்கள் சொன்னார்கள். கடந்த இரண்டு மாத காலமாக

தொடர்ச்சியாக இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை சம்பந்தமாக, குறிப்பாகப் பிற்படுத்தப்பட்டோர் அதிலும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரச்சினை என்பது திரும்பத் திரும்ப இந்த அரசாங்கத்தாலும், முதலமைச்சர் அவர்களாலும் வலியுறுத்திச் சொல்லப்பட்டதற்குப் பிறகும், அவர்களுக்கு 20 சதவீதம் இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியாக துறை அமைக்கப்பட்டிருக்கிறது, தனியாக இயக்குநர் நியமிக்கப்பட்டிருக்கிறார், அதற்காக தனி நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும் என்று திரும்பத் திரும்பச் சொன்னதற்குப் பிறகும் கூட இன்றைக்குக் கிடைக்கக்கூடிய தகவல்கள், வருகிற ஜூலை மாதத்தில் இந்த ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை வைத்துத் தமிழகத்திலே மிகப்பெரிய ரணகளத்தில் அல்லது வன்முறையில் ஈடுபடக்கூடிய முறையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா? அப்படியானால் அவைகளை நிர்வாக ரீதியாக, சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மட்டும் பார்க்காமல், அங்கே பின்தங்கியிருக்கக்கூடிய, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான மக்களைத் திரட்டி அவர்களுடைய ஒன்றுபட்ட சக்தியின் மூலமாக அந்த வன்முறையைத் தடுக்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வன்முறைகளை என்றைக்கும் அனுமதிக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 ஆம் விதியில் கூறப்பட்டுள்ளவாறு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 15 (4), 16 (4) பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டுள்ள இடஒதுக்கீட்டினையும், சிறப்பு விதிகளையும் சமூக நிலையிலும் கல்வியிலும் பின்தங்கியுள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பெரும் பங்கு வகிக்க வேண்டுமெனவும், காலஞ்சென்ற திரு. B. P. மண்டல் அவர்களைத் தலைவராகக் கொண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டு பிற்படுத்தப் ட்டோர் நலக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து சமூக நீதியை ஏற்படுத்த மத்திய அரசு ஆக்கப்பூர்வமாக விரைந்து செயல்பட வேண்டுமெனவும் இந்தச் சட்டப் பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, அவையின் முழு ஒப்புதலோடு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

1989 மே 12]

(முற்பகல் 11-20)

(ஆ) தீப்பெட்டித் தொழில்களுக்கு ஏற்கெனவே இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப்படுத்த வேண்டுமென மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மைய அரசு அண்மையில் 1989–90ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் தீப்பெட்டித் தொழில்களுக்கான கலால் வரி விதிப்பில் செய்த மாற்றங்கள் இயந்திர முறையில் தீப்பெட்டித் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை சாதகமானதாகவும், குடிசைத் தொழில் மூலம் தீப்பெட்டித் தயாரிக்கும் அமைப்புகளுக்குப் பாதகமானதாகவும் அமைந்து விட்டன. 11 கோடி ரூபாய் மத்திய அரசு கலால் வரிச் சலுகை அளித்தும், வரிச் சலுகையால் இயந்திர முறையில் தீப்பெட்டி தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டுமே பயன்பெற்றன. 10 ஆயிரம் குடிசைத் தொழில் அமைப்புகள் பாதிப்புக்கு ஆளாகியும் மூடப்பட்டும் விட்டன. இதன் காரணமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பத்து இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலைக்கு ஆளாகி உள்ளனர் என்பதை இந்த மன்றம் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

மூலப் பொருள் விலை உயர்வையும் கலால் வரிச் சலுகையையும், ஒப்பீடு செய்கையில் குடிசைச தொழில் மூலம் உற்பத்தி செய்யும் அலகுகள் மீண்டும் உற்பத்தியைத் தொடர இயலவே முடியாத சூழ்நிலையை கலால் வரிச் சலுகை உருவாக்கி விட்டது என்பதை இம்மாமன்றம் கவலையுடன் மத்திய அரசின் கவனததிற்குக் கொண்டு வருகிறது.

ஏழைத் தொழிலாளர் குடும்பங்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றித் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குடிசைத் தொழில் அலகுகளைப் பாதுகாக்கவும், குடிசைத் தொழில் அலகுகளில் தேங்கிக் கிடக்கும் உற்பத்தியான தீப்பெட்டிகளை விற்பனை செய்ய ஏதுவாகவும் மத்திய அரசு கலால் வரி விதிப்பில் செய்துள்ள மாற்றங்களைத் திருத்தி அமைப்பது அவசியம் என்று இம்மாமன்றம் வலியுறுத்துகிறது,

எனவே, மத்திய அரசின் 1989-90ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் செய்த மாற்றங்களைத் திருத்தியமைத்து, 1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதிக்கு முன் இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப் படுத்தி, பிரச்சினைக்கு உடனடி தீர்வுகாண இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.''

இதிலே மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர்கள் சிலர் இதில் உரையாற்ற இருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த அவையில் இது தொடர்பாக உறுப்பினர்கள் நிறைய புள்ளி விவரங்களோடு செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுத்தான் இந்த அரசினர் தனித் தீர்மானம் வந்திருக்கிறது என்பதையும், இன்னும் இங்கே நிறைவேற்றவேண்டிய சட்டங்கள் நிலுவையில் இருக்கின்றன என்பதையும் மனதிலே கொண்டு, பேசுகின்ற உறுப்பினர்கள் புதிய செய்திகள் ஏதேனும் இருந்தால், தெரிவித்து, இந்தத் தீர்மானத்தின் மீது தங்களுடைய கருத்துக்களைச் சுருக்கமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை நாங்கள் முழு மனதாக ஆதரிக்கிறோம். குறிப்பாக இந்த மத்திய அரசினுடைய கலால் வரி மாற்றத்தினாலே தமிழகத்திலே இருக்கிற பல்லாயிரக்கணக்கான சிறு தொழில் உற்பத்தியாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், அந்தத் தொழிலையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்கள், குறிப்பாக பெண்கள், தாய்மார்கள் வட ஆர்க்காடு மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் போன்ற பல்வேறு பகுதிகளிலே மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

முதல்வர் அவர்களுடைய தீர்மானத்திலே குறிப்பிட்டுள்ளதைப்போல வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டு இருக்கிற இந்த நேரத்தில் இத்தகைய கலால் வரி விதிப்பின் மாறுதல் காரணமாக—மேலும் தமிழகத்திலே லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு இந்தச் சிறு உற்பத்தியாளர்கள் இந்தத் தொழிலை துவங்குவதற்கு தங்கள் கையிலே உள்ள சிறு மூலதனத்திலும்

1989 மே 12]

[திரு. கே. ஆர். சுந்தரம்]

வங்கிகள் மூலம் கடன்களைப்பெற்றும், இந்தத் தொழிலை ஆரம்பித்த அவர்கள், மீண்டும் இந்தத் தொழிலை நடத்த முடியாத அளவிற்கு மிகவும் பாதிக்கப்பட்டு, தொழிலைக் கைவிட்டுவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த வரி விதிப்பின் தன்மையை மாற்றியமைத்து, இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே உள்ள பல்வேறு இடங்களிலே குறிப்பாக குடியாத்தம் நகரத்திலேதான், தமிழகத்திலே சிவகாசிக்கு அடுத்தபடியாக குடியாத்தம் நகரத்திலேதான், இந்தத் தீப்பெட்டித் தொழில் இருப்பது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அங்குள்ள சிறு உற்பத்தியாளர்கள் தங்களுடைய அதிருப்தியை மத்திய அரசுக்கு தெரிவிக்கின்ற முறையிலே ஓரிரு நாள் தொழிற்சாலையை மூடினார்கள். தொடர்ந்து உண்ணாவிரதம் நடத்தினார்கள். பிரச்சினை தீரவில்லை. ஆகவே மத்திய அரசு இன்றைக்கு 11 கோடி ரூபாய்க்கு மேலே வரிச் சலுகை அளித்திருப்பது மிகப் பெரிய முதலாளிகள், ஏகபோக முதலாளிகள் என்று சொல்கிறோமே அவர்களுக்கும்; மிகப் பெரிய இயந்திரங்களை வைத்து உற்பத்தி செய்கிறவர்களுக்கும்தான் லாபமாக அமைந்திருக்குமே, ஒழிய சிறு தொழில் செய்பவர்களுக்கு அது லாபமாக அமையவில்லை. ஆகவே இன்றைக்கு மாநில அரசு கேட்டுக் கொண்டிருப்பதைப்போல 1989ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 28ஆம் தேதிக்கு முன்னாலே இருந்த அடிப்படையில் இந்தக் கலால் வரியை திருத்தி அமைப்பதன் மூலமாகத்தான் இந்த தொழிலைப் பாதுகாக்க முடியும். ஆகவே இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற நேரத்திலே இன்னொரு கருத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சிறிய உற்பத்தியாளர்களுக்குத் தேவையான மூலப் பொருள் கிடைப்பதிலே சிரமம் இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான மூலப் பொருள் கிடைப்பதற்கு கூட்டுறவுத் துறையிலே அங்காடிகள் ஏற்படுத்தி அவர்களுக்கு வேண்டிய குச்சி போன்ற பல பொருள்கள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால் சிறிய உற்பத்தியாளர்களுக்கு உதவிகரமாக இருக்கும். அது மட்டும் அல்ல சிறிய உற்பத்தியாளர்கள் செய்கிற இந்த உற்பத்தியான பொருட்களை விற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இல்லை. பல்வேறு மாநிலத்திலே யிருந்து வருகின்றவர்கள் அல்லது இந்த மாநிலத்திலேயே இருக்கிற இடைத்தரகர்கள்தான் அதை வாங்கி விற்பனை செய்வதன் மூலமாக லாபம் அடைகிறார்கள். ஆகவே சிறிய உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களுக்கு லாபம் அடைகிற வகையில் ஒரு விற்பனை

TRUTH ALONE TRIUMPHS

இணையம் கூட ஏற்படுத்தி சிறிய உற்பத்தியாளர்கள் செய்த பொருள்களுக்கு மார்க்கெட் கிடைக்கச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலமாகத்தான் அத்தகைய சிறிய தொழிலைச் செய்கின்ற வர்களை இன்றைக்குப் பாதுகாக்க முடியும்.

ஆகவே அரசு குறிப்பிட்டதைப்போல தமிழகத்திலே இருக்கிற லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள் இன்றைக்கு எப்படி வாழ்க்கையை நடத்துவது என்று தெரியாமல் பரிதாபமான சூழ்நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையைச் செம்மையுறச் செய்ய வேண்டுமென்றால் மத்திய அரசு நம்முடைய தீர்மானத்தை ஏற்று 1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு முன்னால் இருந்த நிலையைக் கொண்டு வர வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தத் தொழிலிலே இருக்கிற லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலியும் பஞ்சப்படியும் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது. அது தமிழகத்தில் இன்றைக்கு பல இடங்களில் முறையாக அமல்படுத்தப் படுவதில்லை. அதுகூட நிச்சயித்து பல ஆண்டுகள் ஆகி விட்டன. ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தையும் பஞ்சப் படியையும் மாற்றி அமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல இந்தத் தொழிலிலே சிறிய குழந்தைகள் ஈடுபட்டிருக்கிறார்கள். குழந்தைகளை தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்று ஏற்கெனவே பல சட்டங்கள் இருந்தாலுங்கூட அவைகளைக்கூட இன்றைக்கு முறையாக அமல்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அவை களை முறையாக அமல்படுத்தக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த தீப்பெட்டித் தொழிலைக் கிராமப்புறங் களில் ஏழை எளிய மக்கள் குடிசைத் தொழிலாக நடத்திக் கொண்டிருப்பவர்கள், 2,3 மாதங்களாக மூடப்பட்டிருப்பதால் நலிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தச் சிறிய உற்பத்தியாளர்கள் தங்களுடைய தொழிற்சாலையை மீண்டும் துவக்க வேண்டுமென்றால் கூட அவர்களுக்கு மூலதனப் பொருள் கிடைக்காத அளவிலே இருக்கிறது. அவர்கள் உற்பத்தி செய்த பொருளை விற்க முடியாதபடி தேக்கம் இருக்கிறது. ஆகவே அந்த உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த பொருளை நியாயமான முறையில் விற்பதற்கு ஒரு விற்பனை இணையத்தை அமைப்பதன் மூலமாக விற்பனைக்கு

உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். அந்தத் தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசாங்கம் உடனடியாக 1989ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கு முன்னால் இருந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குழந்தைகள் பெரும் அளவில் அந்தத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். நானும் கூட 1982-83 ஆம் ஆண்டில் சாத்தூர் சிவகாசி போன்ற பகுதிகளுக்கு அன்றைக்கு இருந்த அரசு அமைத்த கமிட்டி மூலமாகச் சென்ற நேரத்திலே பார்த்திருக்கிறேன். 8 வயது 9 வயது 10 வயது உள்ள குழந்தைகள் எல்லாம் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அதை மாற்ற வேண்டும். இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற அதே நேரத்தில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஊழியர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியும் பஞ்சப்படியும் இதர வசதிகளையும் பாதுகாக்கிற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

(முற்பகல் 11-30)

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 10 இலட்சம் மக்கள் இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்போகின்ற இந்தத் தீர்மானத்தின் பின் விளைவுகளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பகுதியிலேயிருந்து நான் சட்டமன்ற உறுப்பினராக இங்கே வந்து பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இந்தத் தீர்மானத்தை உருவாக்கிக்கொண்டு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கிராமத்தொழில் அமைச்சர் சகோதரி சுப்புலட்சுமி அவர்களுக்கும், நான் அந்த வட்டாரத்து மக்கள் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு காமராஜர் மாவட்டமாக இருக்கின்ற பழைய இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் ஐவகை நிலங்களில் பாலை நிலம் என்று வர்ணிக்கப்படுகின்ற அந்த நிலத்திற்கு உரிய இயல்புகளோடு எங்கே பார்த்தாலும் கள்ளியும் முள்ளும் நிறைந்து இருக்கின்ற காடுகளைக் கொண்டிருக்கின்ற அந்த கானல் பூமியில் 1923 ஆம் ஆண்டு சிவகாசியிலிருந்து இரண்டு இளைஞர்கள் கல்கத்தா சென்று—திரு. ஐய நாடார், திரு. ஷண்முக நாடார் என்ற இரண்டு இளைஞர்கள்—அங்கே புதியதாக ஜப்பான் நாட்டிலிருந்து வந்து ஆரம்பிக்கப்பட்ட தீப்பெட்டித் தொழிலை அவர்களே கற்று சிவகாசிப் பகுதியிலே வந்து தீப்பெட்டித் தொழிலை குடிசைத் தொழிலாக அவர்கள் அன்றைக்கு ஆரம்பித்தார்கள். அன்றைக்கு ஆரம்பித்து அந்தத் தொழில் பள்ளத்தாக்காக இருக்கின்ற அந்தப் பகுதியை வறண்ட பாலையாக இருக்கின்ற சிவகாசிப் பகுதியை இன்றைக்கு சுவர்க்க பூமியா

மாற்றியிருக்கிறார்கள். அந்தத் தொழில் இன்றைக்கு மிக விமரிசையாக அற்புதமாக நடந்து கொண்டிருக்கிறது. சாதாரணமாக ஒரு தொழிலாளி நாள் ஒன்றுக்கு 25 ரூபாய் சம்பாதிக்கக்கூடிய அளவுக்குக் கூட இந்தத்தொழில் அங்கே சிறப்பான குடிசைத் தொழிலாக ஹேண்ட்மேட் செக்டாரிலே நடந்து கொண்டிருக்கிறது அப்படிப்பட்ட தொழில். சிவகாசியிலே வேலைக்கு ஆட்கள் தேவை என்று தீப்பெட்டித் தொழிலை நடத்துகின்ற அதிபர்கள் ஊர் ஊராக அற்புதமான பஸ்களை, டி. வி. செட் பொருத்திய பஸ்களை வீடியோ செட் பொருத்திய பஸ்களை வைத்துக்கொண்டு கூலிக்கு ஆட்களை அழைக்கக்கூடிய அளவுக்கு அங்கே வேலைவாய்ப்பு அற்புதமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் திடீரென்று டெல்லியிலிருந்து பிப்ரவரி மாதம் 28-ந் தேதி ஒரு இடி விழுந்தது. புதிய வரி மாற்றம் என்ற பெயரில் ஒரே ஒரு கம்பெனிக்கு விம்கோ என்ற அயல் நாட்டு கம்பெனிக்கு வீ இண்டியன், பை இண்டியன் என்று தேசீயம் பேசுகின்ற பாரத சர்க்கார் ஒரு வெளிநாட்டுக் கம்பெனிக்குச் சலுகையைத் தந்து அந்தச் சலுகையின் மூலம் சர்க்காருக்கு 11 கோடி ரூபாய் நஷ்டத்தையும் ஏற்றுக் கொண்டு, இந்தச் சிறு தொழிலை—தீப்பெட்டித் தொழிலைச் அடியோடு இன்றைக்கு நசுக்கி இருக்கிறது. பருந்து பசிக்கின்றது என்று சொன்னவுடன் சின்னச் சின்ன கோழி குஞ்சினுடைய கழுத்தைத் திருகி அதற்கு இரை போடுவதைப் போல இந்த மாபெரும் பாதகத்தை மத்திய சர்க்கார் செய்திருக்கிறது என்பதை எண்ணும்போது இந்த நாட்டிலே ஒரு குடிமகனாக இருப்பதற்கே நான் உள்ளபடியே வெட்கப் படுகிறேன், வேதனைப்படுகிறேன். ஏறத்தாழ 10 இலட்சம் தொழிலாளர்கள் அன்றாடம் உழைத்து அவர்களுடைய குடும்பத் தேவைக்கு ஏற்ற அளவுக்கு வளமாக வாழ்கின்ற.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ மத்திய சர்க்காரை பருந்துக்கு ஒப்பிட்டு, சிறு குஞ்சுகளுடைய கழுத்தைத் திருகிச் சாப்பிடுகின்ற ஒரு ரத்த வெறிபிடித்த அரசாக படம்பிடித்துக் காட்டுகின்ற குறிப்புகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சிச் சார்பிலே சிறப்புக்குரிய குமரி அனந்தன் பேசுவார். அவர் வந்து வேறு ஒரு உவமையைச் சொல்லி அதற்கு ஒரு முடிவு கட்டட்டும். திரு. சீனிவாசன் தொடர்ந்து பேசலாம்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, அது என்ன அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது? 1923-ல் இங்கே டெல்லியிலிருந்து வந்த கம்பெனிதான் விம்கோ கம்பெனி. இன்றைக்கு அந்தக் கம்பெனியில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 600 பேர்கள் மாத்திரமே வேலை செய்கிறார்கள். ஆனால் ஏறத்தாழ 10 இலட்சம் பேர்கள் வேலை செய்கின்ற அந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு, குடிசைத் தொழிலுக்கு—மெக்கனைஸ்ட் செக்டார்—இயந்திரத் தொழில் மூலம் உற்பத்தி செய்கின்ற விம்கோவிற்குச் சாதகமாகத்தான் மத்திய சர்க்கார் இந்த வரியை விதித்திருக்கிறது. விம்கோ கம்பெனி சார்பில் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே கூட மாண்புமிகு ஸ்ரீமதி சுப்புலட்சுமி என்று போடத் தெரியாமல் வெறும் ஸ்ரீமதி சுப்புலட்சுமிக்கு என்று போட்டிருக்கிறார்கள். காரணம் அவன் பெரிய கம்பெனிக்காரன். வெளிநாட்டுக்காரன். நம்முடைய அமைச்சரை மாண்புமிகு அமைச்சர் என்று கூடச் சொல்வதற்கு அவனுக்கு மனம் வரவில்லை. அவர்கள் கொடுத்திருக்கின்ற காரணம் விம்கோவினால்—நாங்கள் 15% 20% தீப்பெட்டிதான் உற்பத்தி செய்கிறோம் அதனால் பாதிக்காது என்பதுதான். நான் கடந்த கால ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். 1927-28-ல் ஏறத்தாழ 21 இடங்களில் பம்பாய், வங்காளம், பர்மா, பஞ்சாப், சென்னை, உத்திரப் பிரதேசம், சென்ட்ரல் ப்ராவின்ஸ் என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்ட பகுதிகளில் இந்தியா முழுவதும் ஏறத்தாழ 21 இடங்களில் செமி-மெக்கனைஸ்ட் செக்டார் என்ற தீப்பெட்டி உற்பத்தித் தொழில் ஆரம்பிக்கப்பட்டது.

இது இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட தீப்பெட்டி, இந்த விம்கோ கம்பெனி தொடங்கி நடந்து முடிந்ததற்குப் பின்னாலே அந்த இருபத்தொன்று கம்பெனிகளும் இழுத்து மூடப்பட்டன. மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது அவர் தன்னுடைய சொந்த மாநிலத்திலேயும், வடநாட்டிலேயும்—சிவகாசி, சாத்தூர், கோயில்பட்டி வட்டாரங்களில், தமிழ்நாட்டில் ஒரு மாவட்டத்திலே, ஒரு பகுதியிலே இந்தத் தொழில் இவ்வளவு தூரம் டாமினேட்டிங்காக இருக்கிறது, அதை நம்முடைய ஏரியாவிக்குக் கொண்டு போகவேண்டும் என்று,—பழைய இழந்து போன தொழில்களைப் புதுப்பிக்கவேண்டும் என்று அவர் தன்னுடைய செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி, அதிகாரத்தை முழுவதும் பயன்படுத்தி சலுகைகளை அள்ளி வீசி அங்கே வடக்கே ஆரம்பித்தார். வடக்கே அந்தத் தொழிலை திரும்ப ஆரம்பித்தார்கள். ஆனால் அந்தத் தொழிலைத் திரும்ப ஆரம்பித்து நடத்த முடியவில்லை. மத்திய சர்க்கார்

முழுச் சலுகை கொடுத்தும், முழுப் பாதுகாப்பு கொடுத்தும், முழு முயற்சி எடுத்தும் அந்தத் தொழிலை, ஒரு தடவை செத்துப் போன தொழிலைத் திரும்ப அங்கே ஆரம்பிக்க முடியவில்லை. அந்த அபாயம் நம்முடைய மாவட்டத்திற்கு, காமராஜர் மாவட்டத்திற்கு, தமிழ்நாட்டிற்கு, குடியாத்தத் திற்கு, ஹோசூருக்கு, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற இந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு இன்றைக்கு வரப் போகிறது.

விம்கோகாரர்கள் சொல்கிறார்கள் நாங்கள் சப்ளை செய்வது மிகக் குறைந்த பகுதிதான் என்று. ஆனால் இன்றைக்கு அந்த விம்கோவுக்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன. முழுக்க, முழுக்க இயந்திரத்திலே செய்கிறார்கள். இலட்சக்கணக்கான, பத்து இலட்சப் பேர் உற்பத்தி செய்கிற தீப்பெட்டியை விம்கோகாரர்கள் 1,000 பேரை வைத்துச் செய்ய முடியும். அந்த அளவிற்கு இயந்திர வசதி வாய்ப்பு அவர்களுக்கு இருக்கிறது. அதை வைத்துத்தான் இன்றைக்கு அவர்கள் இந்த ஒரு ஒப்பாரி வைத்து ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். விம்கோ தமிழ்நாட்டிலே இருக்கிற வரை, விம்கோ இந்தியாவில் இருக்கிறவரை, இந்த மெக் கனைஸடு செக்டார் இருக்கிறவரை, இந்தத் தீப்பெட்டித் தொழில் நிச்சயம் தலையெடுக்க முடியாது. கதர்த் துணிக்கு, கைத்தறிக்கு, மாநில சர்க்கார், மத்திய சர்க்கார் ஆகியவை ஏராளமான சப்சிடி கொடுத்து, ரிபேட் கொடுத்து அந்தத் தொழிலை நாம் பாதுகாக்கிறோம். காரணம், காந்தியார் சொன்ன யோசனையை ஏற்று நாம் அதைச் செய்கிறோம். நீங்கள் தீப்பெட்டித் தொழிலுக்கு இங்கே சப்சிடி கொடுக்க வேண்டாம். அந்தத் தீப்பெட்டித் தொழில் மூலம் ஏறத் தாழ 10 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக் கிறது. சர்க்கார் செய்யவேண்டிய இந்தக் கடமையை, தனிப்பட்ட முதலாளிகள் சின்ன, சின்ன முதலாளிகள் செய்கிறார்கள். அது மாத்திரமல்ல.

மத்தாப்புத் தொழிற்சாலையில் 10,000 பேர் வேலை பார்க்கிறார்கள். தீப்பெட்டி தொழில் மூலம் சுங்க வரியாக நம்முடைய தமிழ்நாட்டிலிருந்து 16 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்கு, டெல்லிக்கு அழுது தொலைக்கிறோம். அந்த அளவுக்கு வரி கட்டுகிற தொழில், வேலை கொடுக்கிற தொழில். இந்தத் தொழிலை அழிப்பதற்கு, இதை நசுக்குவதற்கு இன்றைக்கு விம்கோவுக்கு மிக உயர்ந்த வரிச் சலுகையைக் கொடுத்து, நாங்கள் வரியை மற்றவர்களுக்கும் குறைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மற்றவர்களுக்கு வரியைக் குறைத்து இருப்ப தாக அவர்கள் சொல்வது புள்ளிவிவரப்படி சரியல்ல. இங்கே ஒரு உறுப்பினர் கூடச் சொன்னார். பர்செண்டேஜ் பார்த்தால்

1989 மே 12] [திரு. பெ. சீனிவாசன்]

உங்களுக்குத்தான் அதிகம் வருகிறது என்று சொன்னார். விம்கோ தீப்பெட்டித் தொழிலில் மாத்திரம் அல்ல; தீப்பெட்டியின் மூலப் பொருள்களுக்கு இன்றைக்கு மத்திய சர்க்கார் வரியைக் கூட்டி அந்த வரியின் மூலம் விம்கோவுக்குச் சாதகம் செய்து இருக்கிறது. காரணம், விம்கோ மூலப்பொருள்களை உற்பத்தி செய்கிறது. சல்பர், குளோரேட் போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறது. தீக்குச்சி வெட்டுகின்ற தொழிலைச் செய்கிறது. ஆகவே எல்லா வகையிலேயும் விம்கோ என்ற அயல்நாட்டுக் கம்பெனிக்கு, ஒரு வெளிநாட்டுக்காரன் பங்குதாரர்களாக இருக்கிற அந்தக் கம்பெனிக்கு, வடநாட்டில் சில பண முதலைகள் ஆதிக்கம் செலுத்துகிற அந்தக் கம்பெனிக்கு—டெல்லியிலே அவர்கள் யாரை எப்படி விலைக்கு வாங்கினார்களோ தெரியாது. அதை இங்கே இருக்கிற நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள்தான் தயவுசெய்து புரிந்துகொள்ளவேண்டும். இன்றைக்கு மிகப் பெரிய ஒரு பாதகம், ஒரு பாவம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் மூலம் மத்திய சர்க்கார், மீண்டும் பிப்ரவரி 28—ஆம் தேதிக்கு முன்னாலே இருந்த அந்த வரி முறைகளை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும். இதைத் தான் இந்தத் தீர்மானம் வற்புறுத்துகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை மாத்திரம் நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு இருக்கிற அந்த டைனி செக்டர், ஏறத்தாழ 10,800 தொழிற்சாலைகள், சின்னச் சின்ன தொழிற்சாலைகள், அதோடு ஏறத்தாழ 900 ஹேண்ட்—மேட் செக்டார்—கொஞ்சம் பெரிய தொழிற்சாலைகள், இந்த இரண்டு பிரிவினருக்கும் மாநில சர்க்கார் இரண்டு சதவிகிதம் வரி விதித்து இருக்கிறது. இந்த வரி காங்கிரஸ் ஆட்சி இருந்த வரையில் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி, பொற்கால ஆட்சி, கலைஞர் தலைமையில் இருந்த வரை இல்லை. எம்.ஜி.ஆர். என்ன நினைத்தாரோ, அவர்களுக்கு மூன்று சதவிகிதம் வரி போட்டார். அந்த வரியை கவர்னருடைய ஆட்சிக் காலத்திலே ஒரு சதவிகிதம் குறைத்து இரண்டு சதவிகிதமாகப் போட்டிருக்கிறார்கள். அந்த வரியின் மூலமாக வரக்கூடிய தொகை $1\frac{1}{2}$ கோடி அல்லது இரண்டு கோடி இருக்கும். அந்த இரண்டு கோடியை, இந்தச் சிறுதொழில் நடத்துபவர்கள், படிக்காதவர்கள், தொழிலாளிகள், ஆகிய அவர்களிடம் வசூலிக்கிற முறையிலே மிகப்பெரிய சித்திரவதையே அதிகார வர்க்கத்தால் நடைபெறுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாமல் முழுவதும் அந்த இரண்டு பர்சென்ட்

வரியை ரத்துச் செய்து விட்டு,—குளோரேட்டிலே மத்திய சர்க்கார் ஏற்கெனவே வரி போட்டு விட்டது.—மீதி காகித அட்டை, நீல வண்ணக் காகிதம், மற்ற மூலப் பொருட்கள் மேல் கொஞ்சம் வரியைப் போட்டு, மாநில சர்க்கார் 4 கோடி ரூபாய் கூட வசூலித்துக் கொள்ளலாம். அதற்கு அவர்கள் ஆட்சேபம் செய்யவில்லை.

(முற்பகல் 11-40)

ஆனால் அந்த 2 சதவீத வரி என்பது அதிகாரிகள் சிறு தொழிலை வேட்டை ஆடுவதற்கு பயன்படுத்துகிற ஒரு சாதனமாக இருக்கிற காரணத்தால்—அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தேர்தல் நேரத்தில் கூட நான் கேட்டேன், நான் என்ன முதலமைச்சரா? நீ என்ன சட்டமன்ற உறுப்பினரா? இப்படித் தேர்தல் கூட்டத்திலே கேட்கிறாயே என்று சொன்னார்கள். அவர்கள் முதலமைச்சராக வந்து விட்டார்கள், நான் சட்டமன்ற உறுப்பினராக வந்து இருக்கிறேன். எனவே—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அருள்கூர்ந்து யார் யாருக்கோ எந்த எந்த துறையில் இருக்கிற நலிந்தவர்களுக்கு எல்லாமோ உதவி செய்கிற கருணை கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீப்பெட்டித் தொழிலை இன்றைக்கு ஓரளவுக்கு மத்திய அரசு கழுத்தை நெறித்துக் கொண்டு இருக்கிற இந்த நேரத்தில் அவர்களுக்கு ஆறுதல் தருகின்ற வகையில் அந்த தொழிலுக்கு புத்துயிர் தருகின்ற வகையில் 2 சதவீத மாநில அரசினுடைய வரியை அடியோடு ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு இனங்களில் அந்த வரியைப் போட்டு வசூலித்துக் கொள்வதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை என்பதைத் தெரிவித்து இந்தத் தீர்மானத்தை—சமய சஞ்சீவியாக, இன்றைக்கு நலிந்துபோய்க்கொண்டிருக்கிற சிறு தொழில்கள் செய்கின்ற தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு மா—மருந்தாக வந்து இருக்கிற இந்தத் தீர்மானத்தை—நான்—ஆதரித்து, மத்திய அரசு இதையாவது கொஞ்சம் கருணை கூர்ந்து ஒரே ஒரு அன்னிய சம்பெனிக்சாக, வெளிநாட்டு கம்பெனிக்காக ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து இருக்கிற மத்திய அரசு அதை வாபஸ் வாங்க வேண்டும், பழைய வரிமுறை இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தத் தீப்பெட்டி தொழில் என்பது நம்முடைய நாட்டில் கொஞ்ச நாட்களுக்கு முன்பு கிடையாது. இந்த மத்தாப்புப் பெட்டி வாங்க வேண்டும் என்றால் கூட வெஸ்ட் ஜெர்மனியிலிருந்து தான் அந்தக் காலத்தில் வரும். நெருப்புக் குச்சி கூட சிவப்பாகத்தான் இருக்கும். நம்முடைய பையன்கள் எல்லாம் சொல்லுவார்கள். அந்தக் காலத்திலே வெள்ளைக்காரன்

காலத்திலே அவனுடைய தொப்பி எல்லாம் சிவப்பாக வைத்து இருப்பான். ஆகவே பையன்கள் எல்லாம் நெருப்புக் குச்சி என்று கூப்பிடுவான் அந்த காலத்தில். நெருப்புக் குச்சி சிவப்பாகத தான் இருக்கும் அந்தக் காலத்தில். இப்போதுதான் அது கருப்பாக இருக்கிறது. அந்தக் காலத்தில் பையன்கள் என்ன சொல்வார்கள் என்றால் போலீஸ் 4 பேர் வந்தால் அதோ பார் நெருப்புக் குச்சி வருகிறது — சுதந்திரப் போராட்டக் காலத்தில் அப்போது ரொம்ப வேகம். நெருப்புக் குச்சி வருகிறது, நெருப்புக் குச்சி வருகிறது என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி இது எல்லாம் வெளிநாட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது. இப்போது நம்முடைய நாட்டில் அவர்கள் சொன்னது போல், திரு. பெ. சீனிவாசன் அந்தத் தொகுதியிலிருந்து ஜெயித்து வந்தவர் அவர்கள் ரொம்ப நன்றாகச் சொன்னார்கள். இடபோது அங்கே இது குடிசைத் தொழிலாக இருக்கிறது அங்கே போய்ப் பார்த்தால்தான் தெரியும். சகலமும் அங்கே இருக்கிற சோத்தைத் தின்று விட்டு—10, 11 மணிக்கு அங்கே இருக்கிற பெண்களிடம் கொண்டு வந்து கொடுத்து விட்டு போவார்கள். பெட்டி சுற்றுவது, டேப் சுற்றுவது, குச்சியை அள்ளிப் போடுவது, அதற்கு மேல் செய்வது எல்லாம் வெகு சல்லிசாக நடந்து கொண்டு இருக்கிறது. இது லாபமாக இருந்தால் தான் தொழில் செய்ய முடியும். இல்லை என்றால் தொழில் செய்ய முடியாது. இப்போது போட்ட அந்தக் கலால் வரியை வித்ட்ரா வாங்கியிருக்கிறார்கள். இது யாருக்கு உபயோகம் என்றால் இந்த கம்பெனி இருக்கிறதே வெட்டும்புலி என்று சொல்லுவது, யாரை வெட்டுகிறார், எதை வெட்டுகிறார், புலியை வெட்டுகிறார்களா— அப்படிப்பட்ட ஒரு பெரிய கம்பெனிக்கு சாதகமாக இந்த மத்திய அரசு கலால் என்று சொல்லுவதற்குப் பதிலாக அப்படி சொன்னால் கூட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் ஏதாவது சொல்லுவார்கள், வரி போடுவது மத்திய அரசு. அந்த பட்ஜெட்டிலே பழைய வரி இருந்தால் இந்த குடிசைத் தொழில் ஒரு தொழில் இரண்டு தொழில் இல்லை, 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழில். அங்கே போனால் தான் தெரியும். சாத்தூர், சிவகாசி, விருதுநகர் எல்லாம் ராஜபாளையத்தில் 4 பக்கத்திலும் இருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் இதில் ஜாதி வித்தியாசம் இல்லை. எலலோரும் ஐய்யன் கூட அந்த இடத்திலே அந்த டேப் ஒட்டுவான், அதற்கு வரி போடுகிறார்கள் பாருங்கள். அந்த டேப்பை நிறைய கொண்டு போய்ப் போட்டால் கட், கட் என்று வெட்டுவான். ஆகவே, முதலமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை ஒரு குடிசை, 2 குடிசை அல்ல ஆயிரக்கணக்கான குடிசைத் தொழில்கள் நல்லபடியாக இருக்கும்படியான இந்தத் தீர்மானத்தை நான் ஆதரித்து மறுபடியும் அந்தக் கலால் வரியை வித்ட்ரா வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

[1989 மே 12

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரித்து ஒரு சில கருத்தைச் சொல்ல முன்வருகிறேன். மாண்புமிகு சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களும் இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை நம்பி இருக்கின்ற 10 லட்சக் கணக்கான தொழிலாளர்களின் துயர் நிலையைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்னால் இந்த நிலைமைகளை நாங்கள் இந்த சட்டமன்றத்தில் கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக அப்போதே பதில் அளித்து இருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கு மத்திய அரசினுடைய இந்தக் கலால் வரியினுடைய ஒரு மாற்றத்தின் காரணமாக ஏற்கனவே பன்னாட்டு மூலதன கம்பெனி, பல கோடி ரூபாய்களை சம்பாதிக்கக்கூடிய அந்தக் கம்பெனிக்கு விசேசமான சலுகையை 11 கோடி ரூபாயை மத்திய அரசு அளித்து இருக்கிறார்கள். அந்தச் சலுகை அவர்களுக்கு ஒரு பண்டலுக்கு 6 3/4 ரூபாய் இப்போது கொடுக்கிறார்கள். 6 ரூபாய் 75 பைசா ஒவ்வொரு பண்டலுக்கும் அவர்களுக்கு இப்போது மானியமாகக் கொடுக்கிற முறையில் அந்த வரியில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே மாதிரியாக சி. கிளாஸ் பேக்டரிக்கு, 'டீ' கிளாஸ் பேக்டரிக்கு — 'டீ' கிளாஸ் பேக்டரி என்று சொன்னால் கையால் செய்யக்கூடிய சிறு சிறு தொழிற்சாலைகள் பற்றி ஏற்கனவே சொன்னார்கள்.— அதற்கு 2 ரூபாய் 50 பைசா தான் அவர்களுக்கு சலுகை. ஆகவே அதில் 4 ரூபாய் 25 பைசா வித்தியாசமாகக் கொடுத்து மார்க்கெட்டில் இந்த தொழிலை முழுக்க முழுக்க இந்த சிறு தொழிலை கையால் செய்யக்கூடிய இந்த 10 ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் மூடிவிட்டு 10 லட்சக்கணக்கான அந்த தொழிலாளர்கள் வேலையில்லாமல் செய்யக் கூடிய ஒரு காரியம் இந்தக் கலால் வரியினுடைய மாற்றத்தினால் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் மிக வருத்தத்தோடு சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கு கடுமையான வறட்சி நிலவுகிறது. சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி ஆகிய மூன்று பகுதிகளிலும் இருக்கிற பெரும்பாலான மக்கள் 4, 5 ஆண்டுகளாக விவசாயம் ஒன்றுமே பிரயோசனமில்லாததால் நிலம் வைத்திருக்கிற தொழிலாளர்கள் கூட தங்கள் குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு வேலைக்கு அனுப்பி அதை வைத்துத்தான் வாழ்க்கை நடத்த வேண்டிய பரிதாபகரமான நிலைமையிலே இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

அந்தத் தொழிலுக்கும் இன்றைக்கு மிகப்பெரிய இடைஞ்சலை ஏற்படுத்தி அந்தத் தொழிற்சாலை நடக்க முடியாமல் செய்து அந்த தொழிற்சாலையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது. ஆகவே தான் இந்தத் தீர்மானம் இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்திலே சொல்லப்பட்டிருக்கிற ஒரு வாசகம் 28-2-1989க்கு முன்னால் இருந்த அதே வரிகளை, அதே மாதிரி நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்று, நாம் கேட்கிறோம். அதற்கு மத்திய அரசாங்கம் உடனடியாகச் சம்மதிக்கும், அதை உடனடியாகச் செய்யும் என்று நான் நினைக்கவில்லை. காரணம் என்னவென்றால், நான் அவைக்கு ஒரு நாள் பேசுகிற போதே சொல்லியிருக்கிறேன். மத்திய அரசாங்கத்தின் கொள்கை சிறு சிறு தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அல்ல. மிகப் பெரிய பன்னாட்டு மூலதன நிறுவனங்கள், ஏக போகமான பெருமுதலாளிகள், மிகப் பெரிய கம்பெனிகள் ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது. அதனால்தான் நாம் எல்லாம் சேர்ந்து அதை எதிர்த்து, அந்தக் கொள்கை மாற வேண்டுமென்று மிகப் பெரிய போராட்டங்களை நடத்திக் கொண்டு வருகிறோம். சிறு சிறு தொழிற்சாலைகள், சிறு சிறு தொழிற்சாலை முதலாளிகள் எல்லாம் ஏகபோக முதலாளிகளின் ஆதிக்கத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்டு அத்தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை பிரச்சினை, டாட்டா பிர்லா போன்றவர்களால்தான் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்பதோடு, மத்திய சர்க்காரின் இந்தக் கொள்கையினால் சிறு சிறு தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதினின்றும் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அதற்காக மத்திய அரசாங்கத்தை நாம் வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கலால் வரி விதிப்பின் மூலமாக ரூ. 6.75 சலுகையாக பெரிய முதலாளிகளுக்கு அளிக்கப்படுகிறது அந்த ரூ. 6.75-ஐ எல்லோருக்கும் கொடுக்கட்டும். யாரும் வேண்டாம் என்று சொல்லப் போவதில்லை. 'சி' கிளாஸ் பேக்டரிகளுக்கும், 'டி' கிளாஸ் பேக்டரிகளுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்பட வேண்டும். ரூ. 11 கோடியோடு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இன்னொரு ரூ. 5 கோடியை அளிக்கட்டும். மிகப்பெரிய கம்பெனியாகிய 'விம்கோ கம்பெனிக்கு சலுகையாக ஒரு பண்டலுக்கு ரூ. 6.75 வீதம் தானமாக வழங்குகிறது மத்திய அரசு. ஆனால், சிறு தொழிற்சாலைகள், கையால் செய்யும் தொழிசாலைகளுக்கு ரூ. 2.50 தான் என்று சொல்லி பர்சன்டேஜ் போட்டுக் காட்டுகிறார்கள். இந்த வகையிலே இது மோசடி என்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள்.

சிறு சிறு தொழிற்சாலைகளைப் பாதுகாப்பது நம்முடைய பிரதானக் கடமை. மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து பெரிய முதலாளிகளைப் பாதுகாக்கிற கொள்கையை சிறு சிறு தொழில்களை நசுக்குகிற கொள்கையை எதிர்த்து நாடு பூராவும் மிகப்பெரிய போராட்டம் நடந்துகொண்டு வருகிறது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் பிப்ரவரி 28, 1989க்கு முன்னாலே இருந்த வரியை விதிக்க வேண்டுமென்று நாம் சொல்கிற யோசனையை மத்திய அரசு கேட்குமா என்று எனக்குத் தெரியவில்லை. கேளாது என்றுதான் நான் நினைக்கிறேன். அதற்காக நாம் போராட வேண்டும். அதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. நம்முடைய உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னதைப்போல முன்னாலே இதற்கு சேல்ஸ் டாக்ஸ் இல்லை. கடந்த ஆட்சியிலே இதற்கு 3 சதவீதம் விற்பனை வரி போட்டு 2 சதவீதமாக ஆளுநர் ஆட்சியிலே குறைக்கப் பட்டிருக்கிறது. இதைக்கூட சில பெரிய கம்பெனிகள் கட்ட வேண்டியது இல்லை. கன்சைன்மெண்ட் சேல்ஸ் என்று சொல்லி வெளி மாநிலங்களில் டெப்போ வைத்திருப்பவர்கள் இங்கு விற்பனை வரி கட்டாமலே சரக்குகளை டெப்போக்களுக்குக் கொண்டுபோய் விடலாம். இங்கே விற்பனை செய்தால்தான் வரியே தவிர இந்த மாநிலத்திலிருந்து கன்சைன்மெண்ட் சேல்ஸ என்று சொல்லக்கூடிய முறையிலே கொண்டு செல்லக்கூடிய சரக்குகளுக்கு விற்பனை வரி இல்லை. இங்கே சிறு சிறு தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படுகிற தீப்பெட்டிகளுக்கு விற்பனை வரி 2 சதவீதம் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. விற்பனை பண்ணக்கூடிய தீப்பெட்டிகளுக்கு பண்டலுக்கு ரூ. 2 வீதம் வரி சேர்த்துக் கொடுக்கிறார்கள்.

(முற்பகல் 11·50)

அந்தச் சலுகையையாவது இந்த அரசாங்கம செய்ய வேண்டும். மத்திய அரசாங்கம் விட்கோவிற்குக் கொடுக்கிற அதே சலுகையை, 6 3/4 ரூபாய் என்ற சலுகையை 'சிகளாஃபேக்டரிக்கும் அளிக்கவேண்டும். அல்லது அத்தனை பேருக்கும் 5 ரூபாய் என்ற வகையிலே அறிவிக்க வேண்டும். எனவே குறைப்பதாக இருந்தால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகக் குறைக்க வேண்டும். இல்லை என்றால் ஒரே மாதிரியாக பழைய வரியே இருக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய முறையில் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தி நாம் அனுப்ப வேண்டும்.

நமது அரசைப் பொறுத்தவரையில் விற்காத சரக்கை எல்லாம் நாம் வாங்கி விற்க முடியாது. அந்த அளவுக்கு முழுமையாக நாம் செய்ய முடியாது. ஆனால் அதற்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய முறையில் விற்பனை வரியை நீக்குவதற்குரிய முறையில் நமது முதலமைச்சர் அவர்களும் குடிசைத் தொழில் துறை அமைச்சர் அவர்களும் ஏற்பாடு செய்ய வேண்டும். அது ஒன்றும் அதிகமாகப் போகாது. ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்குக்கூட வராது. இந்தச் சலுகையை அளித்தால் இலட்சக் கணக்கான தொழிலாளர்களுக்குப் பிழைப்பு நடக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். ஏதோ இந்த அரசு உதவி செய்கிறது, மத்திய அரசுதான் நமக்கு உதவி செய்யவில்லை. பாதகமாகச் செயல்படுகிறது என்று கருதுவார்கள். எனவே அந்த முறையில் விற்பனை வரியை நீக்கி இந்தத் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்ற என்னுடைய கருத்தைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்தத் தீர்மானம் இங்கே முன்மொழியப்பட்டுள்ளது. இங்கே பேசிய அத்தனை பேரும் பொதுவாக எங்களுடைய பகுதிகளைச் சேர்ந்தவர்கள், இங்கே குறிப்பிட்டுக் காட்டப்பட்டதைப்போல வறட்சியான மாவட்டமாக இருக்கின்ற காமராஜர் மாவட்டம், பக்கத்தில் இருக்கிற வ. உ.சி. மாவட்டம் மற்றும் நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் போன்ற மாவட்டங்கள்தான் இதிலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் தீப்பெட்டித் தொழிலை கிராமங்களில் குடிசைத் தொழிலாக நாங்கள் நடத்தி வருகிறோம். கிராமங்களிலே மழை இல்லாத காரணத்தால் விவசாயம் செய்ய முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகள்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1989 மே 12

[திரு. கே. ரே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

தங்களுடைய மாட்டுத் தொழுவங்களிலே சிறிய, சிறிய குடிசைத் தொழில்களை உண்டாக்கி அத்தனை பேரும் இந்தத் தொழிலிலே பணியாற்றி அதன் மூலம் வருகிற வருமானத்தை வைத்துக் காலத்தை நடத்திக் கொண்டிருக் கிறோம்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசின் இந்தத் தவறான வரிவிதிப்பின் காரணமாக நலிந்துபோய் இருக்கிற அந்தத் தொழிலை முன்னேற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அனைத்துக் கட்சிகளின் சார்பாக மத்திய அரசுக்கு இந்தத் தீர்மானத்தை நாம் முன்மொழிந்து அனுப்புகிறோம், இங்கே பேசுகிறபோது அருமை அண்ணன் திரு. சீனிவாசன் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 3 சதவீத வரியை 2 சதவீத வரியாக ஆக்கியது போல இன்றைக்கு இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2 சதவீத வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள், நாம் மத்திய அரசுக்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவதற்கு முன் பாக நம்முடைய அரசின் சார்பாக விதிக்கப்படுகிற 2 சதவீத வரியைத் தள்ளுபடி செய்து இங்கே இருக்கிற தீப்பெட்டித் தொழிலைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு நாம் இருக்கிறோம் என்பதை மத்திய அரசுக்கு உணர்த்த வேண்டும். அந்த வகையிலே அந்த 2 சதவீத வரியைத் தள்ளு படி செய்ய வேண்டும். அவ்வாறு தள்ளுபடி செய்ததைக் கோடிட்டுக் காட்டி நலிந்திருக்கிற அந்தத் தீப்பெட்டித் தொழிலைச் சீர் செய்வதற்குரிய வகையில் நீங்களும் புதிய வரிவிதிப்பை மாற்றி பழைய வரிவிதிப்பைத் திரும்பக் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசை நாம் வற்புறுத்துவதுதான் சரியாக இருக்கும் என்பதைப் பணிவன் போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் இதை நம்பி இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். இந்தத் தொழில் கடந்த ஓராண்டு ஈராண்டுக் காலமாக நலியத் தொடங்கி இருக்கிறது. இது மேலும் நலியாமல் காப்பற்றுகிற முயற்சியை இந்த அரசும், மத்திய அரசும் எடுத்து ஆக வேண்டும். பொதுவாக வறண்ட மாவட்டங்களுக்கு மாநில அரசும். மத்திய அரசும் பல கோடிக் கணக்கான ரூபாயைச் செலவிடுகிறது. தீப்பெட்டித் தொழில் கட்டுப்படியாகக்கூடிய அளவுக்கு வேண்டிய வசதிகளை இந்த அரசு செய்து கொடுக்கும் என்று சொன்னால் பல வகைகளில் வறட்சியான மாவட்டங்களுக்குச் செலவழிக்கிற பணம் மிச்சம் ஆகும். அணைக்கட்டு போன்றவற்றைக் கட்டி பல காரியங்களைச் செய்கிற சூழ்நிலையில் இதையும் உறுப்படியாக நாம்

1989 மே 12]

[திரு. சே. சே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

செய்வோம் என்று சொன்னால் வறண்ட மாவட்டங்களுக்கு நிச்சயமாக பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசுக்கு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புகிற அதே நேரத்தில் இந்த அரசின் சார்பாக விதிக்கப்படுகிற அந்த 2 சதவீத வரியை நீக்கி விட்டு மத்திய அரசையும் பழைய முறையினைக் கொண்டு வாருங்கள் என்று வற்புறுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசினுடைய சார்பில் வைக்கப்பட்டு இருக்கிற இந்த தீர்மானத்தில் குடிசைத் தொழில்கள் என்று சொல்கின்ற தங்களுடைய உடல் உழைப்பால் செய்கின்ற அந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு நிவாரணம் வேண்டும் என்று சொல்கின்ற நோக்கம் தான் இங்கே இருக்கிறது. இந்தத் தொழில் இன்று பல்வேறு கிளைகளோடும், விழுதுகளோடும் பெருகி நிற்கிறது என்று சொன்னால், அதற்கு விதையாக நின்ற இரண்டு பேர்களை நான் இந்த நேரத்திலே நினைக்க வேண்டும் என்பதற்காக இந்த அவையிலே சொல்கிறேன். அய்ய நாடார் என்று சொல்கின்ற பெருமகனாரும், சண்முக நாடார் என்று சொல்கின்ற ஒரு பெருமகனாரும், இரண்டு பேர்களும் கல்கத்தாவிலே வேலைக்குச் சேர்ந்து, வேலையாட்களாகச் சென்று அந்த வேலையினைப் படித்து வந்து, முதலானவர் 'அணில்' பெயரிலே தீப்பெட்டிக் கம்பெனியும், அடுத்தவர் 'காக்கா' பெயரிலே அந்த படத்தோடு தீப்பெட்டித் தொழில் ஆரம்பித் ததுதான், இங்கே சிவகாசி பக்கத்திலே போடப்பட்ட விதையாகும். இந்த அளவிற்கு சிறு தொடக்கமாக கங்கோத்ரி யிலிருந்து வந்து இன்று கங்கையாகப் பெருக்கெடுத்து ஓடுகின்ற அளவுக்கு வேலை வாய்ப்பை கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஒரு பெரிய தொழிலாக அது வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த தொழிலிலே இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற சிக்கல் எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுபோல, விம்கோ என்று சொல்கின்ற மல்ட்டி நேஷனல், பன்னாட்டுத் தொழில் அதிபர்களுக்கு வரி விதிக்கப்பட்டதிலே, இங்கே சாதாரணமாக தீப்பெட்டித் தொழிலை செய்கின்றவர்களுக்கு கொடுக்கின்ற வரி விதிப்பிலே இந்த இரண்டுக்கும் இருக்கிற வேறுபாடு காரணத்தினாலே தொல்லை வந்திருக்கின்றது என்று சுட்டிக்காட்டினார்கள். மத்திய அரசாங்கம் ஒரு வரியை விதிக்கின்றபோது சில நேரங் களில் பாதிக்கப்படுவது உண்டு. பஸ்ஸிலே போய்க்கொண்டிருக் கின்ற நேரத்தில் யாராவது ஒருவர் காலை மிதித்துவிடுவது வேண்டுமென்ற நோக்கத்தோடு மிதிப்பதில்லை. ஆனால்

மிதித்தது தெரிந்து அவர்கள் வருந்துகிறார் என்பது தெரிந்த உடனே சாலை எடுத்து மன்னிப்பு கேட்பது சாதாரணமாக பழக்கத்திலே இருக்கின்றது. வேண்டுமென்றே மிதித்து விடுவது இல்லை.

அதேபோல, வரி விதிப்பதும் அப்படித்தான். இங்கு எடபடி சைத்தறித் துணி ஒரு பகுதியில், பவர் லூம் துணி ஒரு பக்கத்தில், ஆலைகளிலே இருந்து வருகின்ற துணி ஒரு பக்கத்தில் என்று சொன்னால், வரி விதிக்கும் நேரத்தில் சில நேரங்களிலே ஒரு பகுதி பாதிக்கப்பட்டு விடும். எத்தனை பாதிக்கப்பப்பட்டிருக்கிறது என்பதனைச் சுட்டிக்காட்டி அவைகளைத் தீர்வு செய்கின்ற ஒரு வேண்டுகோளாக நாம் இந்த காரியத்தைச் செய்ய வேண்டுமே தவிர அதற்கு உள்நோக்கம் கற்பிப்பது பொருத்தமானது அல்ல என்று நான் கருதுகிறேன். காரணம் பசித்த பருந்து குஞ்சைத் தூக்குவதுபோல தூக்கி விட்டது என்று நாம் சொல்வோமானால், நான் அதற்கு மாற்றாக சொல்ல வேண்டும் என்று சொன்னால் சில நேரங்களிலே தாய்ப் பூனை குட்டியைத் தூக்குகின்ற நேரத்திலே அந்த குட்டிக்கு, கடித்த இடத்திலே, அந்த பல் பட்டு விட்டது என்றாலும்கூட அது சிறு நெளிப்பு நெளித்தாலும்கூட, அந்த நெளிப்பையும் சுளிப்பையும் மனதிலே வைத்துக்கொண்டு உடனே மாற்றிப் பிடித்து, அந்த குழந்தையினுடைய உள்ளத்தை உணர்வைப் புரிந்து கொள்கின்ற தாய்ப் பூனைபோல நமது மத்திய அரசாங்கம் நடந்து கொள்ளும் என்பதிலே எனக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. குழந்தைகளை எல்லாம் சமமாகப் பாவிக்க வேண்டுமென்பதைப்போல, ஒரு குழந்தைக்கு போட்ட சோறு அதிகமாகிப்போய் அதற்கு அஜீர்ணம் வருகிறது. இன்னொரு குழந்தைக்குக் குறைவாகப் போய் அது பசிக்கிறது என்று சொன்னால் அடுத்த கட்டத்திலே அதனைச் சீர்திருத்திக் கொள்கின்ற அளவுக்கு இருக்கும் தாயாக இருக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேதான் நாம் இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வருகிறோம் என்று கருதுகிறேன். விம்கோ என்று சொல்கின்ற இந்தப் பெரிய தொழில் நிறுவனம் இன்று பல்வேறு கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வைத்தது. அது வைத்தது என்பது மட்டுமல்ல. இன்றைக்கு மேற்கு வங்காளத்திலே இருக்கின்ற அரசு ஒரு சோசலிச சித்தாந்தத்தை உடைய ஒரு அரசாங்கமாகத்தான் இருக்கிறது என்பதை நானும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நாம் எல்லாம் சமதர்ம சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற நெஞ்சத்தை யுடையவர்கள்தான். அங்கே விம்கோ தொழிற்சாலையிலே இருக்கின்ற நிர்வாகிகள் ஒரு கால கட்டத்திலே அதனை மூடுவோம் என்று சொல்கின்ற சூழ்நிலையில்கூட சில செய்திகள் தந்தார்கள். 3 ஆயிரம் தொழிலாளர்கள் அங்கே பாதிக்கப் படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாயிற்று. அப்போது ஜோதிபாசு

1989 மே 12] [திரு. குமரி அனந்தன் :]

போன்றவர்கள்கூட; அந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை எடுத்துச் சொல்கின்ற முகத்தான் மத்திய அரசாங்கத்திற்குப் பல தகவல்களைக் கொடுத்தது உண்டு. எனவே தொழிலாளர்கள் நலனைக் காக்க வேண்டும் என்று கூட மத்திய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுக்கிறது. அது ஒரு பக்கத்திலே தொழிலாளர்களுக்கு பாதகமாக ஏற் பட்டு விடுவதை நாம் சுட்டிக் காட்டுகிற கடமை நமக்கு இருக்கின்றது என்பதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்பு கிறேன். அருமைக்குரிய பெருமக்களும், இங்கே உள்ள மாண்பு மிகு உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் சுட்டிக் காட்டியது போல, மழை இல்லாத நேரத்தில் விவசாய தொழிலும் இல்லாதபோது சிவகாசி, விருதுநகர், கோவில்பட்டி, இராமநாதபுரம் இன்னும் பல பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு, கழுகுமலை போன்ற பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வாழ்வு கொடுப்பதே உயிர் கொடுப்பதே இந்தத் தொழில்தான், லட்சக்கணக்கான மக்கள் இதனை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்து கொண்டிருக் கின்ற மக்கள் இன்று இந்தியாவினுடைய தேவையிலே 48 சத விகிதத்தைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் விம்கோ என்று சொல்கின்ற தொழிற்சாலை இன்று எத்தனை சதவிகிதம் என்று சொல்கின்ற கணக்கு என்னிடம் சரியாக இல்லை என்று சொன்னாலும் ஒரு காலத்திலே 7 லட்சம் கேஸ்களுக்கு மேலே உற்பத்தி செய்யக்கூடாது, அதாவது இந்தியாவினுடைய தேவையிலே 15 சதவிகிதத்திற்கு மேலே நீங்கள் செய்யக்கூடாது என்று ஒரு எல்லையையும், உச்ச வரம்பை போட்டதும் காங்கிரஸ் அரசாங்கம் தான் என்பதை யும் நான் இங்கே நினைவு படுத்திக்கொள்ள விரும்புகிறேன், எனவே கட்டுப்பாடற்ற முறையிலே நீங்கள் எந்தக் காரியத்தை யும் செய்யலாம் என்றக் அளவில் அவர்களுக்கு அனுமதி கொடுத்ததில்லை,

(நண்பகல் 12-00)

இந்தத் தடவை போட்ட அந்த எக்சைஸ் டியூட்டியில் இருக் கின்ற வேறுபாட்டை இதற்கு முன்னால் இருந்த அளவுக்கு நீங்கள் கொண்டு வர வேண்டுமென்று நாம் வேண்டுகோள் வைக்கலாம். அதை அவர்கள் பரிசீலிக்கலாம். அதற்கு முன்னாலே இன்று இந்தச் சிறு தொழில் செய்து கொண்டிருக்கும் அந்த மக்கள், கைவினைப் பொருளாக இதைச் செய்து கொண்டிருக்கும் அந்த மக்கள் எந்தெந்த வகையிலே துன்பப் படுகிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குத் தேவைப் படும் பொட்டாசியம் க்ளோரைட் விலை அதிகப் பட்டிருக்கிறது. அதனைப் பயன்படுத்துகின்ற நிலையில் இருக்கிற ஒரு கம்பெனிக்கு எவ்வளவு எளிதாக அதனுடைய விலையைக் குறைத்துக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு

பொட்டாசியம் க்ளோரைட்டை வேறு இடத்திலே வாங்கி, தமது தொழிலுக்குப் பயன்படுத்துகிறவர்களுக்கு அந்த அளவுக்கு அதனுடைய விலையைக் குறைத்துவிட முடியாது. அதைப்போல அட்டைப் பெட்டிகள் என்று சொல்கிற மேலே போடுகின்ற அட்டைப்பெட்டிகளுக்கு 15 சதவிகிதமாக இருந்த எக்ஸைஸ் டியூட்டி 35 சதவிகிதமாக ஆகியிருக்கிறதென்று சொன்னால் அதன் மூலம் விலை ஏறும் வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது இந்தச் சிறு தொழிலில் டைனி செக்டாரில் ஈடுபடுத்தக் கூடியவர்கள் மிகவும் துன்பப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்து இருக்கிற நடுத்தர வர்க்கத்தினரும் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆதலால்தான் நாம் மத்திய அரசுக்குஇதைஒரு வேண்டுகோளாக வைக்கிறோம். இப்படி இதை வேண்டுகோளாக வைக்கும் போது தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோளை இங்கே வைக்க விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களும் இதிலே உடன்படு கிறார்கள். அது என்னவென்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத் திலே அந்தத் தீப்பெட்டித் தொழிலுக்கு அந்தச் சிறு தொழி லுக்கு, அந்த டைசி செக்டாருக்கு விற்பனை வரி கிடையாது. அதற்குப் பிறகுதான் விற்பனை வரி 3 சதவிகிதம் போட்டார் கள். (குறுக்கீடு) அதன் பிறகு வந்த ஆட்சி என்று சொன்னால் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையிலோ அல்லது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலோ அமைந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்ததோ, அதையே பின்பற்றி வந்தது. முதன்முறையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, அதற்கு 3சதவிகிதம் வரி போட்டார்கள், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆட்சியிலே ஒரு சதவிகிதத்தை அதில் குறைத்தார்கள். நான் இங்கே கேட்பதெல்லாம், 1967-க்கு முன்பு காங்கிரஸ் எந்த ஒரு தடத்தைக் காட்டியதோ, எந்த வழியைக் காட்டியதோ, எந்த வழியை நீங்கள் பின்பற்றி அப்போது நடந்தீர்களோ அதைப்போல இந்தத் துறையிலே உள்ள 2 சதவிகித விற்பனை வரியை ரத்து செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். அது அந்தத் தொழிலுக்குப் புத்துயிர் கொடுப்பதாக இருக்கும். இதையும் செய்து விட்டு, மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் வகையிலே இந்த வேண்டுகோளை நாம் சமர்ப்பிப் போம் என்று சொல்லி, இந்த அளவுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் அந்தச் சிறு தொழில் செய்து கொண்டிருக்கிற மக்களுக்கு அதனுடைய உதவிக்கரம் நீட்டுவதற்கு உங்களோடு சேர்ந்து தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி, அமைகிறேன்.

*** மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தைப் பற்றி. ஏற்கனவே இந்த அவையில் கவன

ஈர்ப்புத் தீர்மானம் என்ற வகையில் இந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிகளைப் பற்றி இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கிற எல்லா உறுப்பினர்களும் தங்களது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருக்கிறார்கள். அன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோள்களையும், இந்தத் துறையிலே ஈடுபட்டு, இன்றைக்குப் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிற தீப்பெட்டி உற்பத்தி செய்கின்ற அந்தச் சிறு தொழில் உற்பத்தியாளர்களுடைய கோரிக்கைகளையும் ஏற்றுத்தான் மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அன்றைக்கே சட்டப் பேரவையிலே அறிவித்தார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசினுடைய பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்படுமென்று அன்றைக்கு அவர்கள் கொடுத்த அந்த உறுதிமொழியின் பேரில்தான் இந்தத் தீர்மானம் இங்கே இன்றைக்கு முன்மொழியப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின்மீது உரையாற்றிய இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் இந்தத் தீர்மானத்தை வரவேற்று, அதன்மீது தங்களது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளிக்கிற நேரத்தில், மத்திய அரசு சமீபத்தில் அறிவித்த கலால் வரி விலக்கு சம்பந்தமாக இந்தத் துறை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள், புள்ளி விவரங்கள் அத்தனையும் தொடர்ந்து இந்த மாமன்றத்தில் அன்றைக்கு வழங்கப்பட்டன. கலால் வரிக்கு விலக்கு அளித்திருந்தாலும்கூட, மூலப் பொருள்களுக்கு இன்றைக்கு வரி உயர்வு அதிகரித்ததன் காரணமாக, மத்திய அரசு அறிவித்திருக்கிற இந்த வரிச் சலுகை, குடிசைத் தொழிலை மேற்கொண்டிருக்கிற அந்த தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு எந்த வகையிலும் பலன் அளிக்காததோடு, மட்டுமல்லாமல், தொடர்ந்து அந்தத் தொழில் நசிந்து போகக்கூடிய அளவுக்கு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அன்றைக்கு நான் சுட்டிக் காட்டினேன்.

முழுவதும் இயந்திர முறையில் இயங்கும் பிரிவுகளுக்கு கலால் வரி ஒரு பண்டிலுக்கு முன்பு இருந்தது ரூ 29.25. இப்போது அவர்களுக்கு விலக்களிக்கப்பட்டதற்குப் பிறகு இன்றைக்கு அவர்கள் செலுத்த வேண்டிய வரி ஒரு பண்டிலுக்கு ரூ. 22.50. ஆக, ரூ. 6.75 அவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் குடிசைத் தொழில் மூலமாக உற்பத்தி செய்யப்படுகிற அந்த தீப் பெட்டிகளுக்கு—பண்டில் ஒன்றிற்கு ரூ. 2.50 மட்டும்தான்

வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வேறுபாடுதான் இன்றைக்கு சிறுதொழில் அதிபர்களை—குடிசைத் தொழில் மூலம் தீப்பெட்டித் தயாரிக்கும் தயாரிப்பாளர்களை மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாக்கியிருக்கிறது.

இன்றைக்கு அந்த நிறுவனங்களுக்குப் புதிதாக வழங்கப் பட்டிருக்கிற சலுகை அல்ல இது. ஏற்கெனவே ''விம்கோ'' என்கிற அந்த நிறுவனத்திற்கு 1980 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்ந்து மத்திய அரசு இதுபோன்ற—பெரிய நிறுவனங் களுக்கு—வரிச்சலுகை அறிவித்துக் கொண்டே இருக்கிறது. 1980 ஆம் ஆண்டு தொடங்கி 1988—சமீபத்தில் அறிவித்த வரிச் சலுகையான ரூ. 6.25—வுடன் அந்த நிறுவனத்திற்கு இதுவரை ஒட்டுமொத்தமாக ரூ. 13.50. வரிச் சலுகை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 1980—முதல் 1988 முடிய குடிசைத் தொழிலாக தீப்பெட்டி உற்பத்தி செய்பவர்களுக்கு ஒட்டுமொத்தமாக—8 ஆண்டுக் காலத்தில்—ரூ. 2.50 மட்டும்தான் வரிச் சலுகை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிற வேறுபாடு—இத்தனை ஆண்டுக்காலம் அறிவிக்கப்பட்டிருக்கிற வரிச் சலுகையைத் தொடர்ந்து இந்த ஆண்டு அறிவிக்கப்பட் வேறுபாடு எந்த அளவுக்கு இருக்கிறது என்றால்—இந்த 8 ஆண்டுக் காலத்தில் பெரிய நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது ரூ. 13.50, ஆனால் அதே நேரத்தில் சிறுதொழிலுக்குக் கிடைத்த வரிச்சலுகை ரூ. 2.50 மட்டும் தான். இந்த வரிச்சலுகையில் உள்ள வேறுபாடுதான் குடிசைத் தொழில் மூலம் தீப்பெட்டித் தயாரிக்கும் தொழி லாளர்களையும் தயாரிப்பாளர்களையும் பாதிக்கிற காரணத் தால்தான் மத்திய அரசை இந்த மாமன்றம்—இந்த வரிச் சலுகையை பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி அன்றைக்கு எந்த அளவுக்கு வசூலித்துக் கொண்டிருந்தார்களோ அதே அளவுக்கு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக் கிறோம்.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர் இராமச்சந்திரன் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களும், தமிழ்நாடு அரசு 2 சதவீத வரியைத் தள்ளுபடி செய்ததற்குப் பிறகு மத்திய அரசுக்கு இந்தக் கோரிக்கையை அனுப்ப முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். இன்றைக்கு இந்த மாமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிற இந்தத் தீர்மானம் மத்திய அரசாங் கத்திற்கு அனுப்பப்பட்டு, இந்த மாமன்றத்தினுடைய கோரிக்கையை மத்திய அரசு எந்த வகையில் பரிசீலிக்கிறது—

பாதிக்கப்பட்டிருக்கிற 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்குகிறார்களா அல்லது தொடர்ந்து இதைப் போன்ற பெரிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசு சலுகைகளை அறிவிக்கப்போகிறதா என்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம். மத்திய அரசு இந்த தீர்மானத்திற்கு என்ன முடிவெடுக்கிறது—என்ன மதிப்பு கொடுக்கிறது—என்று பார்த்து அறிந்து கொண்ட பிறகு நிச்சயமாக தமிழக அரசு தன்னுடைய பங்காக இந்த வரிச் சலுகையை அறிவிப்பதில் என்றைக்கும் தயக்கம் கொள்ளாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் மத்திய அரசுக்கு ஒரு பரிகாரம் கேட்டு ஒரு தீர்மான வடிவில் இங்கே நிறைவேற்றி அனுப்பிக் கொண்டிருக்கிறோம். பரிகாரம் கிடைக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டதற்குப் பிறகுதான் தமிழக அரசு பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்குத் தன் பங்காக எதைச் செய்ய முடியும் என்பதை நாம் ஆலோசிக்க வேண்டுமே அல்லாமல் இன்றைக்கு திடீரென்று 2 சதவீத வரிவிதிப்பை நான் அறிவித்து விட்டு, நீங்கள் பரிகாரம் காணுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டால்—அதுதான் ஏற்கெனவே தமிழக அரசு 2 சதவீத வரி விலக்கு அளித்து சிறு தீப்பெட்டித் தொழிற்சாலைகளைக் காப்பாற்றிவிட்டதே—இனி மத்திய அரசு இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பது போன்ற ஒரு நிலையை மத்திய அரசு எடுக்குமானால் அது சிறு தீப்பெட்டித் தொழிலதிபர்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதையும் அருள்கூர்ந்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

இது, அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடியாது என்று எந்தக் கால கட்டத்திலும் மறுக்கவில்லை. ஏற்கெனவே இதைப்பற்றி மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் திரு சீனிவாசன் அவர்கள் பலமுறை முதலமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்து, உடனடியாக இந்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். நானும் இது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் பல முறை விவாதித்து இருக்கிறேன். அப்படி விவாதித்த நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசாங்கத்தினுடைய பதில் என்ன என்பதைப் பார்த்ததற்குப் பிறகு மாநில அரசு நிச்சயமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிற தொழிலாளர்களைக் காப்பாற்றுவதற்கு முன்வரும் என்ற அந்த உத்திரவாதத்தையும்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து இருக்கிறார்கள். எனவே மாநில அரசு உடனடியாக வரி விலக்கை அறிவிக்க வேண்டும் என்பதை நீங்கள் வலியுறுத்தாமல் இந்தத் தீர்மானத்தை நாம் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக ஏகமனதாக நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி மத்திய அரசு இந்தத் தீர்மானத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது, 10 லட்சம் குடும்பங்களைக் காப்பாற்றப் போகிறதா அல்லது ஒரு பெரிய பன்னாட்டு தொழில் நிறுவனத்திற்குத் தொடர்ந்து தன்னுடைய சலுகையை அளித்துக் கொண்டு இருக்கப் போகிறதா என்பதை அறிந்ததற்குப் பிறகு இந்த அரசு நிச்சயமாக ஏற்செனவே வறட்சியால் பாதிக்கப்பட்டு மிகக் கடுமையான துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிற அந்த மாவட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு முன் வரும் என்பதை இந்த நேரத்திலே எடுத்துக்காட்டி இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. பெ. சினிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் அடிக்கடி இந்த 2 சதவீத வரியை நீக்க வேண்டுமென்று வற்புறுத்துவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் அடிக்கடி வற்புறுத்துவேன் என்பதைவிட அடிக்கடி புலம்ப ஆரம்பித்து விட்டேன்; திரும்பத் திரும்ப. காரணம் என்னுடைய தொகுதியில் தான் முழுக்க முழுக்க தீப்பெட்டி உற்பத்தியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் எல்லாம் ஒரு ஓரமாகத் தீப்பெட்டித் தொழில் இருக்கும். என்னுடைய தொகுதியில் நூற்றுக்கு 90 பேர் அல்லது 99 பேர் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகவே என்னுடைய புலம் பலைக் கருத்தில் கொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்னார்கள்—நான் என்ன முதலமைச்சராக ஆகிவிட்டேனா? இங்கு உடனடியாக வாக் குறுதி கொடுக்கச் சொல்கிறாயே என்றார்கள். அது என்னவோ அந்த நேரத்திலே, நள்ளிரவு நேரத்திலே அவர்கள் சொன்னார்கள்; சொன்ன வாக்கு பலித்து முதலமைச்சராக ஆகிவிட்டார்கள். எவ்வளவோ பேருக்கு சலுகை கொடுக் கிறார்கள். இது ஒரு குறிப்பிட்ட மாவட்டம் முழுவதும், குடியாத்தம் வரைகூட, மாநிலம் முழுவதும் பயன்பெறக் கூடிய ஒரு கோரிக்கை. எனவே அன்புகூர்ந்து அருள்கூர்ந்து இந்த 2 சதவீத வரியை நீக்குவதற்கு உத்திரவிட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் சகோதரி சுப்புலட்சுமி அவர்கள் சொன்ன வார்த்தைகள் ஆறுதலாக இருந்தாலும் கூட இன்னும் கொஞ்சம் அந்தத் தொழிலிலே அவர்கள் எழுந்து

நிற்பதற்கு, விம்கோ நிறுவனத்தோடு போராடுவதற்குக் கொஞ்சம் வலுக் கொடுக்கும் வகையில் அந்த 2 சதவீத வரியை நீக்க வேண்டும்; அது காலில் இருக்கிற ஒரு சங்கிலி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே.......

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் தான் கேட்டுவிட்டேனே. உங்கள் பெயரையும் சொல்கிறேன். (குறுக்கீடு) நேரத்திற்காகச் சொல்கிறேன். நான் இங்கு இல்லாவிட்டாலும் அறையிலிருந்து எல்லோருடைய பேச்சையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். எனவே மறுபடியும் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரிக்கார்ட் பண்ண வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படையை அனைவரும் ஏற்றுக் கொண்டு, மத்திய அரசு இயந்திரத் தொழிலுக்குத் தருகின்ற சலுகைகளையும் சுட்டிக்காட்டி அதேநேரத்தில் சிறு மற்றும் குடிசைத் தொழில் என்ற முறையில் நடைபெறுகின்ற இந்த தீப்பெட்டித் தொழிலுக்கு நாம் பாதுகாப்பு அரணாக விளங்க வேண்டும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். குறிப்பாக இந்த 2 சதவீத வரியையும் நீக்கிவிட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் பெ. சீனிவாசன் அவர்களும், அழகர்சாமி அவர்களும், நம்முடைய இலக்கியச் செல்வர் அவர்களும், கே.ஆர். சுந்தரம் அவர்களும், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். அவர்களும், இங்கே வலியுறுத்தி இருக்கின்றார்கள். நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள் இங்கே பேசிய பொழுது சொன்னார்கள், நாம் ஒன்றைச் செய்துவிட்டு மத்திய அரசை ஏன் செய்யவில்லை என்று கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்குக் காலையிலே நிறைவேற்றப்பட்ட மண்டல் குழு பரிந்துரைகளுடைய தீர்மானம் கூட அப்படிப் பட்டதுதான். நம் மாநிலத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, இன்றைக்கு நேற்றல்ல, 1927—ஆம் ஆண்டு முதல் செய்ய வேண்டியவைகளை எல்லாம் தொடர்ந்து செய்துவிட்டு இப்போது இன்றைக்கு மத்திய அரசைப் பார்த்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டு இருக்கிறோம். அதைப்போல, இதைச் செய்யக் கூடாதா என்று மனதிலே வைத்துக்கொண்டு, அவர் அதைச் சொல்ல விரும்பவில்லை; அதனால் அதைச் சொல்லாமல்—இதை அவர்கள் இங்கே சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய நண்பர் பெ. சீனிவாசன் அவர்கள் தேர்தல் நேரத்திலே தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திலே இதை ஒரு கோரிக்கையாக அங்கு வைத்தார்

அவர் குறிப்பிட்டதைப்போல நான் சொன்னேன், நீங்கள் இப்பொழுது எம்.எல்.ஏ.வும் அல்ல; நான் முதலமைச்சரும் அல்ல என்று குறிப்பிட்டேன். ஆனால் போதாத காலம், நானும் முதலமைச்சராகி விட்டேன், அவரும் எம்.எல்.ஏ. வாகிவிட்டார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதி போதாத காலம். (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நேரம் போதாத காலம் (சிரிப்பு) அவர் இங்கே அதை வலியுறுத்தி இரண்டு சதவிகித வரியை நீக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய நண்பர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். இங்கே பேசும் பொழுது எங்கள் ஆட்சியிலே மூன்று சதவிகிதம் நாங்கள் போட்டோம், இருந்தாலும் உங்கள் ஆட்சியிலே அதை நீக்குவீர்களா என்ற ஒரு அறைகூவலை இங்கே விடுத் தார்கள்.

நம்முடைய அழகர்சாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சி யைச் சேர்ந்த கே.ஆர். சுந்தரம் அவர்களும் இதே கோரிக் கையை வலியுறுத்தி இருக்கிறார்கள்.

இப்பொழுது விற்பனை அளவு இரண்டரை இலட்சத் திற்கும் மேல் இருந்தால் விற்பனை வரி இரண்டு சத விகிதம் என்று இருக்கிறது. அதைத்தான் நம்முடைய சமூக நல அமைச்சரவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப் பிட்டார்கள். நாம் இப்பொழுது வரியை நீக்கி விட்டால், நீங்கள்தான் அந்தத் தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு, தொழிற்சாலைகளுக்கு, சிறிய தொழிற்சாலைகளுக்கு இந்தச் சலுகையை வழங்கி விட்டீர்கள், இந்தத் தீர்மானம் எதற்காக என்று கேட்கக் கூடும் என்று அவர்கள் குறிப் பிட்டார்கள். அது ஓரளவு உண்மையென்றாலும்கூட, எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் இங்கே எடுத்துக் காட்டியதற்கு ஏற்ப இந்த வரியை நீக்குவதால் மூன்று கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் வரும் என்றாலும் கூட, பேரவைத் தலைவரவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டியதைப்போல, நிதி போதாத இந்தக் காலத்தில், இழந்துவிட்ட நிதிகளையெல்லாம் சேர்க்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்ற கார ணத்தால், அந்த நம்பிக்கையோடு, இந்த மூன்று கோடி ரூபாயையும் எப்படியும் ஈடுகட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு, இரண்டு சதவிகித வரி நீக்கப்படுகிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1989 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மைய அரசு அண்மையில் 1989–90 வரவு செலவுத் திட்டத்தில் தீப்பெட்டித் தொழில்களுக்கான கலால் வரி விதிப்பில் செய்த மாற்றங்கள் இயந்திர முறையில் தீப் பெட்டி தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை சாதக மானதாகவும், குடிசைத் தொழில் மூலம் தீப்பெட்டி தயாரிக்கும் அமைப்புகளுக்குப் பாதகமானதாகவும் அமைந்து விட்டன. 11 கோடி ரூபாய் மத்திய அரசு கலால் வரிச் சலுகை அளித்தும், வரிச் சலுகையால் இயந்திர முறையில் தீப்பெட்டி தயாரிக்கும் நிறுவனங்கள் மட்டுமே பயன்பெற்றன. 10,000 குடிசைத் தொழில் அமைப்புகள் பாதிப்புக்கு ஆளாகியும் மூடப்பட்டும் விட்டன. இதன் காரணமாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பத்து இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலைக்கு ஆளாகி உள்ளனர் என்பதை இந்த மன்றம் மத்திய அரசின் கவனத் திற்குக் கொண்டு வருகிறது.

மூலப் பொருள் விலை உயர்வையும் கலால் வரிச் சலுகையையும் ஒப்பீடு செய்கையில் குடிசைத் தொழில் மூலம் உற்பத்தி செய்யும் அலகுகள் மீண்டும் உற்பத்தியைத் தொடர இயலவே முடியாத சூழ்நிலையை கலால் வரிச் சலுகை உருவாக்கி விட்டது என்பதை இம்மன்றம் கவலை யுடன் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

ஏழைத் தொழிலாளர் குடும்பங்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றித் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், 10,000–க்கும் மேற்பட்ட சிறு மற்றும் குடிசைத் தொழில் அலகுகளைப் பாதுகாக்கவும், குடிசைத் தொழில் அலகுகளில் தேங்கிக் கிடக்கும் உற்பத்தியான தீப்பெட்டிகளை விற்பனை செய்ய ஏதுவாகவும் மத்திய அரசு கலால் வரி விதிப்பில் செய்துள்ள மாற்றங்களைத் திருத்தியமைப்பது அவசியம் என்று இம்மாமன்றம் வலியுறுத்துகிறது.

எனவே, மத்திய அரசின் 1989–90 வரவு செலவுத் திட்டத்தில் செய்த மாற்றங்களைத் திருத்தியமைத்து 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ஆம் தேதிக்கு முன் இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப் படுத்தி பிரச்சனைக்கு உடனடித் தீர்வுகான இப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

8. சட்ட முன்வடிவுகள்

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989—தொடர்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு. (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1989) நேற்று மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களால் முன் மொழியப் பட்ட தீர்மானத்தின்மீது இப்பொழுது விவாதம் தொடங்குகிறது. இவ்விவாதத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள் சட்ட முன்வடிவுகள் 24/1989 முதல் 29/1989 முடியவுள்ள அனைத்துச் சட்ட முன்வடிவுகள் மீதும் பேசலாம். பிறகு சட்ட முன்வடிவுகள் தனித்தனியாக நிறைவேற்றப்படும். உறுப்பினர்கள் மிகவும் கவனிக்க வேண்டும். பேசுகின்றவர்கள் நிறையப் பேச வேண்டுமென்று ஆசைப்பட்டாலும், உறுப்பினர் களெல்லாம் இன்றைக்குச் சட்டமன்றக்கூட்டம் முடிய வேண்டு மென்று ஆசைப்படுகிறார்கள். எனவே, அவற்றை ஒசைப்படாமல் கவனத்தில் வைத்துக்கொண்டு அவரவர்களும் உரிய நேரத்தில் பேசி ஒதுதுழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: பேரவைத் தலைவரவர்களே இன்றைக்கு நம் முன் இருக்கக்கூடிய பொது விற்பனை வரி திருத்தச் சட்டத்தின் மீது—ஆறு சட்டத் திருத்தங்கள் வந்திருப் பதால் அதன்மீது சில கருத்துக்களை நான் இந்த மன்றத்திலே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் 24-வது சட்டத் திருத்தத்தில்-அதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஒரு சில கருத்துக்கள்-சோப்புகள் மீதான வரிகள் சம்பந்தப்பட்டவரைக்கும் கையினாலே செய்யக் கூடிய சோப்புகளுக்கு ஏற்கெனவே வரியில்லாத அதே நிலை தொடர்ந்து நீடிக்கும் என்றும், அதே நேரத்தில் இயந்திரத்தில் உற்பத்தி செய்யக்கூடிய சோப்புகளுக்கு ஐந்து விழுக்காடு வரி விதிக்கக்கூடிய நிலையிலே இன்றைக்கு நம் முன்னாலே அந்தப் பிரச்சினை வந்திருக்கிறது.

நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இயந்திரத்திலே செய்யக்கூடிய சோப்புகள் அல்லது சீவல்கள் அல்லது பொடி செய்யக்கூடிய எதுவாக இருந்தாலும் அதை ஒரே மாதிரியாகப் பார்க்கக்கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், சோப்பு தயாரிக்கக்கூடிய தொழில் என்பது சிறு தொழில். அதை சிறு கிராமங்களிலே அல்லது சின்ன நபரால்

சின்ன முதலாளியால் செய்யக்கூடிய அந்தத் தொழிலையும், டாட்டா போன்றிருக்கக்கூடிய மிகப் பெரிய முதலாளிகள், மிகப்பெரிய அளவிலே உற்பத்தி செய்யக் கூடிய சோப்புகளுக்கும் ஒரே மாதிரி வரி என்பது சரியாக இருக்குமா என்பதை நான் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைத் தரம் பிரித்துப் பார்க்க வேண்டும். சோப்பு என்றால் எல்லாம் ஒன்று தான். அதை உற்பத்தி செய்யக்கூடியவர்கள் இரண்டு வகையாக இருக்கிறார்கள். ஒரு பக்கம் எக்கச்சக்கமான இலாபத்தை சம்பாதிக்கக் கூடியவர்கள், மறுபக்கம் சாதாரணமான நிலையில் உற்பத்தி செய்யக்கூடிய சிறு முதலாளிகள். இந்த நிலையில் இந்த சாதாரண சிறு முதலாளிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதைப்போல இயந்திரங்கள் இறக்குமதி சம்பந்தமாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இன்றைக்கு தொழில் துறை பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகம் தொழிற் துறையில் மூன்றாவது இடத்திலிருந்து பதிமூன்றாவது இடத்திற்குத்தள்ளப் பட்டிருக்கிறது என்று பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையில் இந்தத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் இயந்திரங்கள் இறக்குமதி என்பது சரளமாக, தாராளமாக இருக்கிற வகையில் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு பெட்ரோலுக்கு வரி விதித்து இருக்கிறார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம் ஏற்கனவே மத்திய அரசிலே பெட்ரோல் ஆனாலும், டீசல் ஆனாலும் எந்த விதமான தயக்கமும் காட்டாமல் எக்கச்சக்கமான அளவிற்கு ஒவ்வொரு வருடமும் வரியைப் போட்டுக் கொண்டே வருகிறார்கள். இன்றையதினம் ஒரு லிட்டர் பெட்ரோல் 10 ரூபாயை தாண்டி விட்டது. நாம் போடக்கூடியது 14 விழுக்காட்டிலிருந்து 18 விழுக்காடு என்ற வகையில் திருத்தம் இங்கே வந்திருக்கிறது. நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, இரண்டு சக்கர வாகனங்கள் வைத்திருப்பவர்கள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுவார்கள். மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர்கள், அதைப்போல சாதாரண டி. வி. எஸ்.-50 போன்ற வாகனங்களை வைத்திருக்கக் கூடியவர்கள் சாதாரண தொழிலாளர்கள் சிறு விவசாயிகள் வர்த்தகத்தில் ஈடுபடக்கூடியவர்கள் ஆகும். அவர்கள் எல்லா

இன்றைக்கு பல்லாயிரக்கணக்கானவர்கள் வாகனங்களை வைத்துக்கொண்டு தங்கள் பணிகளை ஆற்ற வேண்டியிருக்கிறது எனவே அவர்களுக்கும் கார்களை வைத்திருப்பவர்களுக்கும் ஒரே மாதிரியாக வரி விதிப்பு என்பது சரியாக இருக்குமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். எனவே 14 விழுக்காட்டி லிருந்து 18 விழுக்காடு என்பதற்கு பதிலாக 16 விழுக்காடு என்றுவைத்து, இரண்டு விழுக்காட்டை குறைக்க முடியுமா என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். அப்படி கொண்டு வருவார்களானால் நான் சொல்லி யிருக்கிற அந்த சாதாரண சிறு விவசாயிகள், தொழிலாளர் கள் எல்லாம் அரசாங்கத்தைப் போற்றுவார்கள் என்பதை இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து 25-வது வரி திருத்தச் சட்டத்தில் சொல்லியிருக் கூடிய சில விவரங்கள், அதிலே நலிந்த தொழில்களுக்கு உதவுகிற வகையில், நெசவாளர்களைப் பாதுகாக்கிற முறை யில் அவர்களுக்கு எல்லாம் 15 தினங்களுக்குள்ளாக கட்ட வேண்டியதை 30 தினங்களுக்கு என்று மாற்றக்கூடிய தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நான் அரசுக்குச் சொல்வது எல்லாம் நெசவுத் தொழிலாளர்கள் சம்பந்தப் பட்ட வரையில் 'பவர் லூமில்' வேலை செய்கிற நூலுக்கும் விற்பனை வரி இருக்கிறது. ஆனால் கை நெசவுத் தொழில் இன்றைக்கு தமிழகத்தில் மிகவும் நலிந்திருக்ற ஒரு தொழி லாகும். எனவே, இந்த வரி விதிப்பு அந்தத் தொழிலுக்கு தேவை தானா என்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். ஏற்கனவே இருக்கிற அதே நடைமுறையில் அவர்களைக் கொண்டு சென்றால் நிச்சயமாக அந்தத் தொழிலைப் பாதுகாக்க முடியும். அவர்களுக்கு வரி விதிப்பு என்பது சரியாக இருக்காது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அதிலே தெளிவாகச் சொல்கிறார்கள். சிறு தொழில்கள், நலிந்த தொழில் அமைப்புகள், மற்றும் நலிந்த நெசவாளர்களைப் பொறுத்த வரையில் விற்பனை வரியை காலம் தள்ளி செலுத்தும் திட்டத்திற்கு செயல் வடிவம் ஏற்படுத்த என்று சொல்லப் பட்டிருக்கிறது. உண்மையில் அந்த நெசவாளர்களுக்கு நாம் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு காலம் தள்ளுவது என்று மட்டுமல்லாமல், அந்த வரியே இல்லாத அளவிற்கு நாம் அறிவிப்பு கொடுக்க வேண்டும். இன்றைக்கு மாநிலம் முழுவதும் அப்படிப்பட்ட நிலைமை. பல்லாயிரக்கணக்கான வீடுகளில் நான்கு பேர் மூன்று பேர் என்று இருக்கும் குடும்பங்களில் இந்த கை நெசவுத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை

யிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுவதற்கும் அந்தத் தொழிலை நீண்டகாலமாக நம்பியிருக்கிற அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும் ஏற்ற வகையில் இந்த வரியை முழுவது மாக விலக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று பலமுனை வரிகளிலிருந்து ஒரு முனை வரிக்குக் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன். ஆனால் சில குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும்தான் என்று அதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. சிறு தொழில்கள் இன்னும் பல ஏராளமான தொழில்கள் இருக்கின்றன. அதிலே எல்லாம் நாம் ஒருமுனை வரியை கொண்டு வருவதுதான் இன்றைக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை அரசினுடைய கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து சீக்கிரம் முடித்து விடுங்கள். ஒவ்வொரு உறுப்பினருக்கும் 7 நிமிடங்கள் அளிக்கப்பட்டு இருக்கின்றன.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : அதேபோல்தான் பீடி சம்பந்தப்பட்டவரைக்கும் இதிலே சொல்லப்பட்டு இருக்கக் கூடியவைகளைப் பற்றி நாங்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறோம். பீடித் தொழிலைச் செய்பவர்களுக்கு இலைகள் கிடைக்காத காரணத்தால் மத்தியப் பிரதேசத்திலேயிருந்து வரக்கூடிய அந்த இலைகள் போதுமான அளவிற்கு கிடைக்காத காரணத்தால் இன்றைக்கு மாநிலம் முழுவதும் இந்த பீடி சுற்றக் கூடிய அந்தத் தொழிலாளர்கள், அந்தக் குடும்பங்கள் மிகவும் பாதித்துக் கொண்டு இருக்கின்றன.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் பீடி சுற்றுகின்ற இலை மத்தியப் பிரதேசத் திலிருந்து வரவில்லை, கிடைக்கவில்லை என்று சொன்னார் கள். அது முந்திய நிலை. இப்போது அது சரி செய்யப்பட்டு சீராக மத்தியப்பிரதேசத்திலிருந்து பீடி சுற்றுகின்ற இலை வந்து கொண்டு இருக்கின்றது. அது இன்றைய நிலை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இது தொடரவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். இது தற் காலிக ஏற்பாடாக இருந்திடாமல், இந்தத் தொழிலை நம்பி பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வட ஆர்க்காடு மாவட் டத்தில் இருக்கிற காரணத்தால், இதைத் தொடர்ந்து வர

வழைத்து ஒரு முறைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கெல்லாம் நிச்சயமாக வரி விலக்குக் கொடுக்கலாம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் விரைவில் முடித்தால் நன்றாக இருக்கும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: ஹோட்டல்களிலே இருக்கக்கூடிய குளிர் பானங்களுக்கும் அங்கே சிற்றுண்டி அருந்துபவர்களுக்கு எல்லாம் 5 சதவீத வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. நான் சுருக்கமாகச் சொல்கிறேன். தயவுசெய்து இரண்டு நிமிடம் கொடுத்தால் முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு ஹோட்டல்களுக்கு வரி விதிக்கிறோம். நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு ஹோட்டல்கள் முழுவதையும் நீங்கள் சென்று பார்க்க வேண்டும் என்று நான் உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். வரி வாங்கக்கூடிய அளவிற்கு ஹோட்டல்களிலே சுகாதாரம் கிடையாது. ஈக்கள் மொய்க்கின்றன, போதுமான வசதி கிடையாது, போதுமான கட்டிட அமைப்புக்கள் கிடையாது. அங்கே உற்பத்தி செய்கின்ற பொருட்கள் தரமானதாக இருப்பது கிடையாது. நான் ஏற்கனவே இதுபற்றிச் சொன்னபோது, நம்முடைய உணவு அமைச்சர் திரு. வீராசாமி அவர்கள் விலைகளைக் குறைப்பதாகச் சொன்னார்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன், விலைகள் குறைந்து இருக்கின்றன. ஆனால் அந்தப் பண்டங்களினுடைய தரம் குறைந்து இருக்கிறது. எடை குறைந்திருக்கிறது. இட்டிலி எல்லாம் இன்றைக்கு இளைத்து இருக்கின்றது, என்பதை எல்லோரும் நிச்சயமாக உணர்வார்கள். (மணி அடிக்கப்பட்டது).

TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கொண்டுவரப்பட்டு இருக்கிற கேளிக்கை வரிகளினுடைய சட்ட முன்வடிவின் மீது, சட்டத் திருத்தங்களின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், அரசினுடைய வருமானத்தில் மிக முக்கியமான பங்கை வகிப்பது இந்த விற்பனை வரி என்பதில் சந்தேகம் இல்லை. அப்படிப்பட்ட இந்தத் துறையில், இன்றைக்கு பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வருகிற இந்த நிலைமையில், ஒருசில கருத்துக்களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

1989 மே 12] [திரு எஸ். டி. உகம்சந்த்]

இன்றைக்கு கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்தமாற்றங்களில் சோப்புக்கு நாம் வரி விதிப்பை மாற்றியிருக்கிறோம். அதே நேரத்தில் ஏழைத் தொழிலாளர்கள் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கிற அந்த சோப்புக்கு வரிகளிலே மாற்றம் இல்லை என்று சொன்னாலும் அவர்களுக்கு உதவிகளைச் செய்கின்ற அளவிற்கு, போடப்பட்டு இருக்கிற வரிகளை ரத்து செய்கின்ற அளவிற்கு அரசு முன்வர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு 10 லட்சத்திற்கு மேற்பட்ட அளவிலே விற்பனை செய்கின்ற ஹோட்டல்களுக்கு விற்பனை வரி அதிகப்படுத்தப்பட்டு, போடப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், சென்னை போன்ற நகரங்களில் ஒரு சாதாரண ஹோட்டலில் கூட ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு விற்பனை நடைபெறுவதை நாம் இன்றைக்குக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

(பிற்பகல் 12-30)

அப்படிப்பட்ட சூழ்நிலையில் போடப்படுகிற அந்த விற்பனை வரி எந்த ஓட்டல்களின் மீது நாம் போட்டாலும் அவைகளை வழங்குபவர்கள் ஏழை மக்கள்தான். 5 ஸ்டார் போன்ற பெரிய ஓட்டல்களுக்கு நீங்கள் விற்பனை வரி போடுவதை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்திலே சிறிய அளவிலே இருக்கிற நடுத்தர மக்களும் ஏழை, எளிய மக்களும் உணவு அருந்துகிற அந்த ஓட்டல்களுக்கு இந்த விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கின்ற அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் போடப்பட்டிருக்கிற அந்த விற்பனை வரியிலிருந்து அந்தப் போட்டியை தவிர்க்க வேண்டுமென்ற முறையிலே ஒரு சிலவற்றிற்கு விற்பனை வரியைக் குறைக்க வேண்டுமென்ற முறையிலே இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே அயல்நாட்டு மதுவகைகளில் எக்ஸைஸ் வரிகளை நாம் உயர்த்தி இருக்கிறோம். அந்த எக்ஸைஸ் வரிகளை உயர்த்தியதின் காரணமாக அரசினுடைய வருமானம் உயர்ந்திருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு உண்மையை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த விற்பனை வரியை பொறுத்தவரையில், அந்த அயல் நாட்டு மது விற்பனையைப் பொறுத்த

வரையில் மாதாமாதம் வருமானம் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. பிப்ரவரி மாதம் செய்கிற அயல் நாட்டு மது விற்பனையின் மூலமாக 3 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. அதே விற்பனை வரியானது எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தசவலின்படி மார்ச் மாதத்திலே $2\frac{1}{2}$ கோடியும், ஏப்ரல் மாதத்திலே $2\frac{1}{4}$ கோடியும் என்று குறைந்திருக்கிறது என்று சொன்னால் இந்த எக்ஸைஸ் வரியை உயர்த்தியதன் காரணமாக விற்பனை குறைந்ததால் தான் விற்பனை வரி குறைந்துக் கொண்டிருக்கிறது. இந்த அளவிலே வரிகள் இருப்பதால் வேறு மாநிலத்திலேயிருந்து இங்கே அந்த மது வகைகள் வருவதற்கு வழி வகை செய்யப்பட்டு அதன் மூலமாக அரசுக்கு வரவேண்டிய வருமானம் தவிர்க்கப்படுகிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அளவிலே ஒரு பக்கத்திலே நமக்கு எக்ஸைஸ் மூலமாக வருமானம் அதிகமானாலும் இந்த நாட்டிலே உற்பத்தி ஆகிற அந்தப் பொருள்களுக்கு விற்பனை செய்வதற்கு வழி இல்லாத காரணத்தால் தொழிலும் பாதிக்கப்படுகிறது, விற்பனை வரியும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் இன்றைக்கு பல பொருள்களுக்கு எல்லாம் பலமுனை விற்பனை வரிகள் இருந்து கொண்டு வருகின்றன. அவைகளையெல்லாம் தவிர்க்கின்ற அளவுக்கு எல்லாப் பொருள்களுக்கும் ஒரு முனை விற்பனை வரியை அமைத்துக் கொடுத்து தமிழகத்தினுடைய பொருள்களுக்கு நல்ல மார்க்கெட் கிடைக்கின்ற அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவிலே என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவையினுடைய உதவித் தலைவர் அவர்களே, இன்றைக்கு முன்னால் வைத்திருக்கும்படியான விற்பனை வரி திருத்த மசோதாவின் பேரில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்றைக்கு பொது விற்பனை வரியில் 10 லட்சத்திலிருந்து 40 லட்சம் வரை 1.25ம், 40 லட்சத்திலிருந்து 1 கோடி ரூபாய் வரை 1.5ம் அதற்கு மேல் இருக்கும்படியானவற்றிற்கு 2 சதவீதம் என்றும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு மட்டங்களில் விற்பனையையும் வாங்குபவர்களையும் பொறுத்து இந்த வரி என்பது பல மட்டங்களில் நகரங்களில் பிரிக்கப் பட்டிருக்கிறது. சென்னை, மதுரை, கோவை போன்ற பகுதிகளில் வேறு மாதிரியும், சேலம் போன்ற சில நகரங்களுக்கு வேறு மாதிரியும், மேட்டூர் போன்ற நகரியக் குழுவெல்லாம்

1989 மே 12] [திரு. எம். சீரங்கன்]

இணைக்கப்பட்ட பல்வேறு மட்டங்களில் வேறு மாதிரியும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே வசூலிக்கும்படியான நிலையில், வரியை எந்த வகையிலே நாம் விதித்தாலும் வசூல் என்பதில் பல்வேறு கணக்குகளை தவறான முறையில் வைத்து பல தவறுகள் நடக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். அவைகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சில விவரங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவைகளை விற்பனை செய்யும்போது சரியான பில்களைப் போடுவது கிடையாது என்பது ஒன்று. மற்றொன்று வாங்கும்படியான பொருள்களுக்கு சரியான கணக்கு வைப்பது கிடையாது. இப்படி அரசினுடைய வருமானத்தை, வரிகளை ஏமாற்ற வேண்டுமென்றோ அல்லது அது குறைக்க வேண்டும், தன் வருமானத்திலிருந்து தன் கையிலிருந்து போகக் கூடாது என்ற நோக்கத்தோடும் அப்படிப்பட்ட நடைமுறைகள் தொடர்ந்து தமிழகத்தில் நடைபெறுவது என்பது மாற்றப்படுவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஒரு காரணம் அத்தகைய நிலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னால் ஒரு முனை வரியாகப் போட்டு மொத்தப் பொருள் விற்பனையும் வாங்குவதும் அந்தப் பொருளினுடைய மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு கணக்கிட்டு அதற்குத் தக்கவாறு வரிகளை விதித்து கரார் செய்தால் அத்தகைய நடைமுறைகளை, தவறான நடைமுறைகளை தடுத்து நிறுத்த முடியும் என்று கருதுகின்றேன். இப்படி பல்வேறு மட்டங்களில் எல்லா வியாபாரங்களிலும், எல்லா பொருள்களிலும் இத்தகைய நிலைமை இருக்கிறது. அந்த நிலையை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு சினிமாத் தியேட்டர்களிலே கலால் வரி என்று வசூலிக்கின்றோம். சினிமாத் தியேட்டர்களில் மொத்தமாக வரியைக் கொடுத்தாலும் டிக்கெட்டுகள் என்பது பல இடங்களில் அவர்கள் இஷ்டம் போல் இன்றைக்கு அது ஒரு பெரிய பிஸினஸாக மாறிவிட்டது. எந்த தியேட்டரை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் நிர்ணயிக்கின்ற டிக்கெட்டுகளைக் கொடுப்பது இல்லை. ஏற்கனவே சட்டமன்றத்திலே பல உறுப்பினர்களால் இங்கு இது குறிப்பிடப்பட்டதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்படி என்னிடத்தில் பல்வேறு இடங்களில்—மேட்டூரில் பல தியேட்டர்களில் அத்தகைய நிலையை பலரும் புகாராகச் சொல்லும்படியான நிலைமை இருக்கிறது. டிக்கெட்டுகள் ஒன்றுக்கு இரண்டு மடங்காக வாங்கப்பட்டும், அந்த குறிப்பிட்ட இடங்களில் அவர்களை அமர்த்துவதும் கிடையாது. அப்படிப்பட்ட நடவடிக்கை தொடர்வதை விரைவில் தடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சுகாதாரம் இல்லை. பல்வேறு இடங்களில் இருப்பிடங்கள் மற்றும் குடிதண்ணீர் போன்றவை சுகாதாரமான முறையில் இல்லாத பல தியேட்டர்கள் இருக்கின்றன. பல்வேறு இடங்களில் வருமானம் குறைவு என்ற ஒரே காரணத்திற்காக, முன்பிருந்த வருமானம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காக இவற்றை எல்லாம் முடக்கி அதிகமான வருமானம் சம்பாதிப்பது என்ற நிலையில் இப்படிப்பட்ட நடவடிக்கைகள், ஜனங்களை துன்புறுத்தும்படியான, மக்களை ஏமாற்றும்படியான நடவடிக்கைகள் மேலும் வளராமல் 10 ஆண்டுகளாக நீடித்தது போதும், இனி அத்தகைய நிலை நீடிக்காமல் இந்த அரசாங்கம் செய்யும் என்று நம்புகின்றேன். அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஓட்டல்களைப் பற்றிச் சொன்னார்கள். ஓட்டல்களிலே பொருள்கள் சுகாதாரமாக இல்லை. மிக மிக மோசமான நிலைமை இருக்கிறது. சுகாதாரத்தை ஏற்படுத்த சுகாதார அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்களே ஒழிய அவர்கள் அதை நடைமுறைப்படுத்துவதில்லை. அது எப்படி இருந்தாலும் சரி, யாரும் கவனிப்பது கிடையாது. உணவு தரமாக இல்லாவிட்டாலும் கூட அவற்றை சுகாதாரமான முறையில்கூட அளிப்பது கிடையாது. காய் கறிகளைக் கூட எங்கெல்லாம் தகாதது இருக்கின்றதோ அவைகளை எல்லாம் சமைக்கும்படியான நிலைமை இருக்கிறது. நாம் எங்கேயும் செல்ல வேண்டியதில்லை. சட்டமன்ற உறுப்பினர் ஹாஸ்டல்களில் மிக மோசமான நிலைமைகள் இருக்கின்றன. அங்கு தயாரிக்கின்ற உணவுப் பண்டங்கள் பலரை நோயாளியாக மாற்றக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் மாற்ற வேண்டும். அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் நாம் செய்வதின் மூலமாகத்தான் செய்ய முடியும். அத்தகைய உணர்வோடு செய்யப்பட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) மேலும் இன்றைக்கு ஒருமுனை வரி என்பது மாநிலம் பூராவும் பொருள்களுக்கு நிர்ணயம் செய்வது இந்தத் தவறு செய்யும்படியானவர்களை, அரசை ஏமாற்றுகின்றவர்களை கட்டுப்படுத்தும்படியான நிலையை உருவாக்கும் என்று என்னுடைய கட்சியினுடைய கருத்தாகக் கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசாங்கம் நடப்பதற்கு அச்சாணியாகவே இன்றைக்கு நிதி கொடுத்துக்கொண்டு இருக்கின்ற துறை விற்பனை வரித் துறை. அந்தத் துறையிலே இன்றைக்கு பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு முதலிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால் கையினால் செய்த சோப்புக்கு வரியில்லை என்று சொல்லி மெஷினினால் செய்த சோப்புக்கு வரி என்று சொல்லி அதிலே ஒரு மாறுபட்ட கருத்தை சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாததல்ல. கையினால் செய்த சோப்பு என்று சொல்லுகின்ற நேரத்தில் பொதுவாக துணி துவைக்கின்ற சோப்பு தான். இது மிகக் குறைந்த அளவிற்குத்தான் தமிழ் நாட்டிலே இருக்க முடியும். சோப்பு என்று சொல்லக்கூடிய பொருள் சாதாரண கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களிலிருந்து அத்தனை பேரும் உபயோகிக்கக்கூடிய பொருளாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அதன் மீது வரியை 8% அளவிற்கு உயர்த்தியது சரியா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளியவர்களுக்கு நாம் உதவி செய்வது உண்மையிலேயே சரி என்று நாம் நினைப்போம் என்று சொன்னால் இந்த சோப்பிலே போய் வரி போட வேண்டியதில்லை. பல்வேறு வகையிலே இன்றைக்கு வருமானம் வந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே இந்த சோப்பிலே வரியைக் குறைப்பதுதான் சரியாக இருக்கும். என்ற என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதேபோல் இங்கே ஒரு முனை வரியிலே பல பொருட்களை, ஒரு முனை வரிக்குட்பட்டதாக ஆக்கி இருக்கிறோம் என்று சொல்லி இருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், நாங்களும் எங்கள் ஆட்சிக் காலத்திலே ஒரு முனை வரி கொண்டு வர வேண்டும் என்று சொல்லி பல பொருட்கள் மீது கொண்டு வர முயற்சி செய்த நேரத்தில் அதிகாரிகள் அரசாங்கத்தை எப்போதுமே பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள், ஒரு முனை வரியைக் கொண்டு வருவோம் என்று சொன்னால், இப்போது வருகிற வரி குறைந்து போகும். வியாபாரிகள் இன்றைக்கு நம்மை ஏமாற்றி விடுவார்கள். ஒரு முனை வரி என்று சொல்கிற நேரத்தில் வரி குறையும் என்ற அச்சத்தை நம்மிடம், அரசாங்கத்தை நடத்துகின்றவர்கள் மத்தியிலே சொல்கிற காரணத்தால் நாமும் பயந்து போய் பல பொருட்களை ஒரு முனை வரிக்குக் கொண்டு வராமல் தவிர்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்த முயற்சியை முறியடித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வியாபாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களையும், அதிகாரிகளையும் அழைத்து வைத்துப் பேசி, எந்த, ந்தப் பொருட்களுக்கு ஒரு முனை வரி கொண்டு வரவேண்டும்

என்று வியாபார சங்கங்களை அழைத்து வைத்துப் பேசுகிற நேரத்தில் ஒரு முனை வரி போடுவதன் மூலமாக வரி குறையாது என்ற புள்ளி விவரங்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள், அதையும் வாங்கி வைத்து, பேசி, ஒருமுனை வரியை தமிழகத்திலே கொண்டு வருவதன் மூலமாக இன்றைக்கு விற்பனை வரித் துறையில் நடந்து கொண்டிருக்கிற தவறுகளை நாம் களைய முடியும் என்பதை மட்டும் இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த ஒருமுனை வரியாக எல்லாப் பொருட்களுக்கும் கொண்டு வருவதன் மூலமாக சேல்ஸ்டாக்ஸ் அதிகாரிகள் தொந்தரவுகள், வியாபாரிகளுக்கு இல்லாமல் இருக்கும்.

இன்றைக்கு வியாபாரிகளை, சேல்ஸ்டாக்ஸ் துறை அதிகாரிகள் ஏதோ திருடர்களை விரட்டிப் பிடிப்பதைப் போல விரட்டிப் பிடித்துக் கொண்டிருப்பதும், சேல்ஸ்டாக்ஸ் அதிகாரிகள் ஜீப்புகள் வருகிற நேரத்தில் இது எதற்கு வம்பு என்று சொல்லக்கூடிய அளவிற்கு வியாபாரிகள் ஓடக்கூடிய அளவிற்குத்தான் தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதை மாற்றி எல்லாப் பொருட்களையும் ஒரு முனை வரியின் மூலமாகக் கொண்டு வந்து, ஒரு புதிய சீர்திருத்தத்தைச் கொண்டு வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, இன்றைக்கு ஓட்டல்களுக்கு வரியை உயர்த்தி இருக்கிறீர்கள். இங்கே விலைவாசியைக் குறைப்போம் என்று சொல்லி, இட்லி விலையையும், வடை விலையையும் தோசை விலையையும் குறைப்போம் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு அந்த ஹோட்டலுக்கு எல்லாம் வரி போடுவதன் மூலமாக அந்த வரியை ஓட்டல் அதிபர்கள் கையிலிருந்து கட்டப் போவதில்லை. இட்லி மீது, வடை மீது, தோசை மீது தான் அந்த வரியைக் கூட்டி வைத்து விற்கப் போகிறார்கள். உள்ளபடியே இந்த அரசாங்கம் நிச்சயமாக விலைவாசியைக் குறைக்கவேண்டும் என்ற எண்ணம் உண்மையிலேயே இருக்கும் என்று சொன்னால், ஓட்டல் மீது இருக்கிற வரியை நீங்கள் எடுத்து விடவேண்டும்.

நீங்கள் எடுக்காத நேரத்தில் வரி கூடுவதோடு மட்டும் அல்லாமல், நிச்சயமாக விற்பனை வரித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தொந்தரவு, சிறிய ஓட்டல்களில் எல்லாம் இருக்கும் என்பதை மட்டும் நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் 'அடிஷனல் டாக்ஸ்'-ஐ ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக விற்பனை ஆகி நேரத்தில், இரண்டு சதவிகிதம் என்று

உயர்த்தி இருக்கிறார்கள். பொதுவாக இந்த அடிஷனல் டாக்ஸ் என்று சொல்கிற நேரத்தில் அதை வியாபாரிகள் தங்கள் கையிலேயிருந்துதான் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் இந்த அடிஷனல் டாக்ஸ் பூராவும் அவர்களுடைய சொந்த வருமானத்திலிருந்து, அல்லது இலாபத்திலிருந்துதான் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள்.

அதை இப்போது ஒரு கோடிக்கு மேலாக இருப்பதற்கு எல்லாம் இரண்டு சதவிகிதம் என்று கூட்டியிருப்பது வியாபாரிகள் ஒழுங்காகக் கணக்கு வைத்து இருப்பதற்குத் தடையாக இருக்கும். வியாபாரம் நிறைய நடக்கிற நேரத்தில் தொழிலை விருத்தி செய்து ஆர்வத்தோடு செய்கிற நேரத்தில், 'நீ ஏன் செய்கிறாய்' என்று சொல்லி அதற்கு அபராதமாக, தண்டமாக, இன்றைக்குத் தண்டத் தீர்வை போல இரண்டு சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் உயர்த்தக்கூடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, அடிஷனல் டாக்ஸ் தமிழ்நாடு அரசு மறைமுகமாக வியாபாரிகள் மீது, இன்கம் டாக்ஸ் போடுவதைப் போல செய்கிறது என்பதை நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய நேரத்தில் சினிமா கொட்டகைகளைப் பற்றிச் சொன்னார்கள். சினிமாக் கொட்டகையிலே வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டும் என்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியவுடன் இன்றைக்கு தமிழ்நாட்டிலே அந்த சினிமா தியேட்டர் முதலாளிகள் சரியாக தியேட்டர் நடத்த முடியவில்லை. காரணம், தியேட்டரில் ஷோ ஆரம்பிக்கிற நேரத்தில் செல்ஸ் டாக்ஸ்காரர்களும், தாசில்தாரும் ஜீப்போடுதான் உள்ளே உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியும் சரியாகக் கிடைக்காத ஒரு நிலையும், அரசாங்கத்திற்கு மிகப் பெரும்பான்மை அளவிற்கு வரி கட்டக்கூடிய அந்தத் தொழில்........

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் சொல்வதுபோல, அப்படி தவறு செய்கிற சினிமா நடத்தக்கூடிய அந்த சினிமா சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கையே எடுக்க வேண்டாம் என்று நீங்கள் கூறுகிறீர்களா? அதிகாரிகள் போனால்தான் கண்டுபிடிக்க முடியும். அவர்கள் போகாமல் இருக்க வேண்டும் என்று தான் தாங்கள் சொல்கிறீர்கள். ஆகவே போகாமலே இருந்து விடலாமா? அப்படித்தான் உங்கள் கருத்தா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[1989 மே 12

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, போகாமல் இருப்பது அரசாங்கத்திற்கு அழகல்ல. போக வேண்டும், ஆனால் எல்லா ஷோக்களிலும் போய் நம்முடைய ஜீப்தான் நின்று கொண்டிருக்கின்றது. வேறு யாரும் இல்லை. தாசில்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் மத்தியில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று சொல்லி இன்றைக்கு விற்பனை வரித் துறையைச் சார்ந்த அதிகாரிகள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதனால் ஏற்பட்டிருக்கின்ற விளைவை நான் சொல்ல விரும்புகின்றேன். கோடிக்கணக்கான ரூபாய், கடந்த காலத்தில் அந்த சினிமா தியேட்டர்களில் கள்ள டிக்கெட்டுகள் விற்றதன் மூலமாகவும், இரண்டு ரூபாய் டிக்கெட்டை இருபது ரூபாய் என்று யாருக்கும் தெரியாமல் கள்ள மார்க்கெட்டில் தியேட்டர்காரர்களே விற்பனை செய்ததன் காரணமாகவும், 500 பேர் உட்காரக்கூடிய இடத்தில் 1000 பேரை அடைத்து, நாற்காலியோ, பெஞ்சோ 500 பேருக்குத்தான் இருக்கும், ஆனால் ஆயிரம் பேரை அடைத்து 500 பேருக்குரிய அந்த டிக்கெட்டிற்கான வரியை மாத்திரம் அரசிற்குச் செலுத்தியும், பல கோடி ரூபாய் ஏமாற்றப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் தடுத்து நிறுத்தத்தான் இந்த முயற்சி. இதை இந்தத் துறையிலுள்ள தியேட்டர் சங்கங்களுடைய பிரதிநிதிகள் கூட வரவேற்று அறிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். தயாரிப்பாளர்கள் வரவேற்று அறிக்கைகள் விடுத்து இருக்கிறார்கள். இன்னும் ஒரு நல்ல செய்தியைச் சொல்ல வேண்டுமானால், தியேட்டர்காரர்கள் இப்போது எந்த அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால் நாங்கள் ஏற்கெனவே 500, 700 சீட்டுகள் போட்டு ஆயிரம், இரண்டாயிரம் பேரிடம் டிக்கெட் வசூலித்தது உண்மை. இனிமேல் எங்கள் தியேட்டர்களில் ஆயிரம் சீட்டுகள் போட்டு விடுகிறோம், அதற்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசுக்கு எதிர்காலத்திலே நல்ல வருமானம் வரும்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்து தியேட்டர் அதிபர்களும், இங்கே படத் தயாரிப்பாளர்களும் ஒத்துக் கொண்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதே ஆட்கள் தான் எங்கள் மத்தியில் வந்து தொழில் நடத்த முடியவில்லை, இந்த அரசு வந்த பிறகு நாங்கள் ஏகப்பட்ட பிரச்சினையில் இருக்கிறோம் என்று புலம்பிக்கொண்டு இருக்கிறார்கள். எப்படியாவது முதலமைச்சர் மத்தியில் சொல்லி இந்தப்

1989 மே 12]

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

பிரச்சினையில் தீர்வு காண வேண்டும், அவர்கள் இதை தீர்த்து வைப்பதில் அக்கறையோடு இருக்கிறார்கள். அதற்காக நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். எப்படியாவது இந்தத் தொழில் நசிந்து போகக் கூடாது. நாங்கள் சொல்லுவது எல்லாம் தியேட்டர்காரர்கள் வாழ வேண்டும் அல்லது சினிமா அதிபர்கள் வாழ வேண்டும், அரசு கெட்டுப் போக வேண்டும் என்ற நினைப்போடு சொல்லவில்லை. எதுவாக இருந்தாலும் நல்ல முறையில் நல்ல ஒரு இணக்கமான சூழ் நிலையில் இந்த அரசு நடக்க வேண்டும். அதற்கு அந்த சினிமா கொட்டகைகளின் மேல் இருக்கின்ற கெடுபிடி களைக் குறைத்து தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள் என்று மட்டும்தான் இந்த நேரத்தில் பணிவன்போடு சொல்லி நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. குமரி ஆனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. நீங்கள் போதாத காலம் என்று சொன்னதைப் போல நான் நேற்றே சொன்னேன். பல பில்கள் இருக்கின்ற காரணத்தால் அத்தனையும் படிப்பதற்கு போதாத காலம் இருந்து கொண்டிருக்கிறது என்று நான் நேற்றே சொன்னேன், எனவே பலரிடம் கலந்து கருத்து அறிவதற்கு நமக்கு கொஞ்சம் கால அவகாசம் வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். முதலிலே ஒரு சின்ன செய்தியை முதலமைச்சருடைய பார்வைக்கு உங்கள் மூலம் வைக்க வேண்டும் என்பதற்காக சொல்லிவிடுகிறேன்.

இதேபோல்தான் 1986ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி பில் ஒன்றை மிக வேகமாக இங்கே அறிமுகப்படுத்திய உடனே அதனை நிறைவேற்றினார்கள். நானும் இங்கே சட்டமன்றத்திலே இருந்தேன். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இந்து பேப்பரில் 7 ஆம் தேதி 1986 ஆம் ஆண்டு இன்கம் டாக்ஸ் அப்பலேட் டிரிபூனல் ரிட்டையர்டு மெம்பர் திரு. ராஜரத்தினம் ஒரு சடிதத்தை எழுதியிருக்கிறார். அதை நான் சமீபத்திலே படித்தேன். அது எப்படி என்று சொன்னால் வரி போட்ட தற்குப் பிறகு — ஒரு அதிகாரி வரி போடுகிறார், அதற்கு மேல் மேல்முறையீடு மன்றம் ஒன்று இருக்கிறது. டிரிபூனல் ஒன்று இருக்கிறது. அந்த தீர்ப்பும் சரியாக அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால் நீதிமன்றத் திற்கு போவதற்கு வழி இருக்கிறது. ஆனால் 1986ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் தேதி கொண்டு வந்த மசோதாவில் என்ன இருக்கிறது என்று சொன்னால் 3-வது கட்டமான அந்த நீதிமன்றத்திற்குப் போவதற்கு வழியில்லாமல் அதற்கு மேல் ஒரு அப்பலேட் டிரிபூனல் ஒன்றைப் போட்டு அதிலே

[திரு. குமரி அனந்தன்] [1989 மே 12

யார் யார் இருக்கலாம் என்றால் நீதிபதி இருக்கலாம், இல்லை என்றால் அரசுத் துறையைச் சார்ந்த ஒரு செயலாளர் இருக்கலாம் என்று இருக்கிறது. 'அல்லது அரசுத் துறையைச் சேர்ந்த செயலாளர் இருக்கலாம்' என்று எப்போது இருக்கிறதோ அப்போதே ஒரு செயலாளரே வந்து விடக் கூடும். அப்படிப்பட்ட ஒரு செயலாளரே நீதிபதியாக அங்கே இருப்பாரானால் கீழே ஒரு அதிகாரியைப் போட்டு அந்த வரி விதிப்புக்கு நீதிபதியிடம் கிடைக்கின்ற அளவுக்கு நியாயமான தீர்ப்பு கிடைக்குமா என்று இந்த மனிதர்கள் அச்சப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் ஸ்பெஷல் டிரிபூனல் ஃபார் சேல்ஸ் டாக்ஸ் என்று போட்டு இருக்கின்ற அந்த மசோதாவிலே நோட்டிபை பண்ணினால் எந்த நேரமும் அமுலுக்கு வந்து விடும். அமலுக்கு வராதது மட்டும் தான் இருக்கிறது. அது அமலுக்கு வருகிற அளவுக்கு யாராவது ஒரு அதிகாரியே நோட்டிபை பண்ணிவிட்டால் கூட நாம் இங்கே பேசுவது எல்லாம் எப்படி ஆகும் என்பதை சிந்திக்க வேண்டும் என்று பெருமக்கள் சொன்னார்கள். அதனால் தான் நான் சொல்கிறேன் இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் மிக அதிகமாக கலந்து பேசுவதற்கு போதாத காலமாக இருக்கிறது என்று சொன்னார்கள். வரி பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். உண்பதிலே போடுகின்ற வரி, கையால் செய்கின்ற தொழிலுக்கு போடுகின்ற வரி என்று சொன்னால் பலவற்றிற்கு இங்கே விலக்கு கொடுத்து இருக்கிறீர்கள். அப்பளம் போன்றவற்றிற்கு எல்லாம் விலக்கு கொடுத்து இருக்கிறீர்கள். இப்படி உணவு சம்பந்தப்பட்டவைகளுக்கு எல்லாம் ஒட்டு மொத்தமாக ஒரு விலக்கு கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் கூறுவது போலவே நானும் வேண்டி கேட்டுக் கொள்கிறேன். சோப்பு போன்றவைகளும் அப்படித்தான். முக்கியமானவற்றை இங்கே சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிற காரணத்தால் சொல்ல விரும்புகிறேன். இது ஒரு காமதேனு. ஆனாலும் அந்த காமதேனு எப்படி நமக்கு பாலைக் கொடுக்கிறது அல்லது பலனைக் கொடுக்கிறது என்பதைப்பார்க்கிறபோதுஅதிகாரிகள்அதிகமாகப் போய் தொல்லை கொடுப்பதாக அந்த வியாபாரிகள் கருது கிறார்கள். விளை நிலத்திலே புகுந்த யானை உண்பது கொஞ்சமாக இருந்தாலும் வீணாக்கப்படுவது அதிகமாக இருப்பது போல் இந்த அதிகாரிகளுக்கு சொந்தமாகப் போவது அதிகமாகவும் அரசினுடைய கஜானாவுக்கு வருவது கொஞ்சமாகவும் இருப்பது சாதாரண நடைமுறையில் இருப்ப தாகச் சொல்கிறோம். அதனால் அரசுக்கு வரி கட்டுவதை விட அதிகாரிகளுக்குக் கட்டுவது எளிது என்ற நிலை வரவே கூடாது. ஆகவே, அரசாங்கத்திற்கு வரி கட்டுவது எளிது

1989 மே 12] [திரு. குமரி அனந்தன்]

என்று இருக்க வேண்டுமே தவிர இவ்வளவு வரி கட்டுவதா, எனவே அதிகாரிகளை சரி கட்டி விடுவோம் என்று சொல்லு கின்ற சூழ்நிலை வராமல் இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள்.

(பிற்பகல் 12-50)

பல இடங்களிலே இப்போது சேல்ஸ் டாக்ஸ் போடப் பட்டிருப்பதைவிட நமக்கு வரும் என்று கணித்திருப்பதைவிட அதிகமாக வரும். உதாரணமாக, எக்சைஸ் வரி அதிகமாகப் போடப்படுகிறது என்று சொன்னால், பொருளினுடைய உற்பத்தி விலை அதிகமாகிறது. அதை விற்கின்ற நேரத்தில் எக்சைஸ் டியூட்டிக்கும் சேர்ந்தேதான் அவர்களுக்கு வருமானம் வரப் போகிறது அல்லது வருமான வரி வரப் போகிறது. அதைப் போலத்தான் ''கன்சைன்மெண்ட் டாக்ஸ்'' ஒரு பகுதி யிலே போட்டு, அதற்குப் பிறகு இதனை நாங்கள் பிராஞ்சுக்கு கொண்டு போகிறோம். டெப்போவுக்குக் கொண்டு போகிறோம் என்று ஏமாற்றி விடுகிற காரணத்தினாலே இந்த கன்சைன் மெண்ட் டாக்சைப் பற்றி நமது முதலமைச்சர்கள் சந்தித்த நேரத்தில் டெல்லியிலே மிகுந்த ஆர்வம் காட்டி, மாநிலத் திற்கு அதிகம் வருமானம் வரக்கூடிய வழிவகைகளைத் தந்தார்கள். அதிலும் அதிகமான வருவாய் வரும் என்று நான் கருதுகிறேன். எனவே, இப்போது இருப்பதைவிட அதிகமான வருவாய் வருகிறது. எனவே தொல்லைகளைக் குறைக்கலாமா என்று பார்க்கிறேன்.

'செக்-போஸ்ட்' என்று போடுகிறோமே, தணிக்கைச் சாவடிகள், இந்தத் தணிக்கைச் சாவடிகளைப் பொறுத்த வரையிலே பல இடங்களிலே பக்கத்திலே பக்கத்திலே தணிக்கைச் சாவடிகள் இருக்கின்றன. ஒரு இடத்திலே தொல்லைப்பட்டு அதிலிருந்து விடுபட்டு வெளியே வருகிறபோது இன்னொரு விடத்திலே மாட்டிக்கொண்டு விழிக்கின்ற நிலை இருக்கிறது. இப்பொழுது மகாராஷ்டிரத்தை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், இன்டர் ஸ்டேட் பார்டர் என்று சொல்கிற இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் இந்த மாதிரி தணிக்கைச் சாவடிகள் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், சாவடிகள் ஒரு இடத்திலே நிரந்தரமாக வைக்கின்ற போது ஒன்றிலே மாற்று வழி கண்டுபிடித்து விடுகிறார்கள். இல்லையென்றால், ''ஏமாற்று'' வழி கண்டுபிடித்து விடுகிறார்கள். எனவே, முதல் செக்-போஸ்ட் என்று சொல்கின்ற வகையில் நடமாடும் தணிக்கைச் சாவடிகள் வைப்பது என்பதனைச் சிந்தித்துச் செயல்படுத்த முடிந்தால்- எங்காவது ஓரிடத்தில் திடீரென்று-சர்பிரைசாக-பார்ப்பது

என்று வைத்துக் கொண்டால் சில இனங்களிலே ஏமாற்றுக் காரர்களைப் பிடிப்பதற்கு வழியாக இருக்கும். ஏனென்றால் நல்லவர்கள்கூட தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நான் இதனைச் சொல்கிறேன்.

இன்னொன்று, திரைப்படக் கொட்டகைகளிலே வரியைப் பொறுத்த வரையில் சொன்னார்கள். திரைப்படக் கொட்ட கைகளிலே அதிகமான ஆட்களை உள்ளே அனுப்பி-ஃப்ளாட் ரேட்-என்று சொல்லி, பத்து ரூபாய்தான் டிக்கெட், அதற்குக் குறைந்து கிடையாது. நீங்கள் வந்தால் வாருங்கள், வரா விட்டால் போங்கள் என்றெல்லாம் சொல்கிற நிலை இப்போது விடுபட்டிருப்பதாக பல இடங்களிலேயிருந்து தகவல்கள் வந்திருக்கின்றன. அந்த வகையிலே அது மகிழ்ச்சியான செய்திதான். ஆனாலும் இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். இப்போது இரண்டு கிலோ மீட்டருக்கு இடையிலே இருக்கின்ற இரண்டு தியேட்டர்களுக்குள்ளே வேறு பாடு இருக்கலாமா, ஒரு இடத்திலே கம்பவுண்டிங் டாக்ஸ் என்றும், இன்னொரு இடத்திலே ரெகுலர் டாக்ஸ் என்றும் இருக்கிறதா, அப்படி இருக்கிறது என்று சொன்னால், அது சிரமம். ஒன்று, எல்லாவிடங்களிலும் கம்பவுண்டிங் டாக்ஸ் என்று போட்டுவிடுங்கள், இல்லையென்றால் ரெகுலரையே போட்டு விடுங்கள். இப்போது ரெகுலர் டாக்ஸ் என்று சொல்கிற அந்தக் கேளிக்கை வரி, இந்தியாவிலேயே நமது மாநிலத்தில் தான் சற்று அதிகமாக இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே நம்முடைய மாநிலத்தைவிட கூடுதலாக இருக்கிறதா என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. நமக்கு ஏறத்தாழ 50-லிருந்து 52 சதவீதம் வரை இருக்கிறதென்று நான் கருதுகிறேன். அவ்வளவு தூரத்திற்கு நாம் வரி போடுகிறோம். இவ்வளவு வரி போடுகிற நேரத்தில் எல்லா இனங்களிலும் நீங்கள் ரெகுலர் டாக்ஸ் என்று போடுவதாக இருந்தால் ஒரு நாற்பது சதவீதத்திற்குப் போட்டு விடலாம். 52 சதவீதம் வேண்டியதில்லை. எந்த தியேட்டர் என்று வேறுபாடு பார்க்க வேண்டியதில்லை. நாற்பது சதவீதத்திற்கு நீங்கள் குறைத்து விட்டால் எல்லோரும் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சிலர் சொல்கிறார்கள். ஏனென்று சொன்னால், பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே கம்பவுண்டிங் மட்டும் தான் இருக்கிறது. ஐதராபாத்தில் ஒரு தியேட்டர் இருக்கு மானால், அதற்கு 22 சதவீதம் வரி, ஒரு பஞ்சாயத்திலே இருக்குமானால் அதற்கு 11 சதவீதம் வரி. இப்படிப்பட்ட நிலை பக்கத்து மாநிலத்திலே இருக்கிறது. ஆந்திர மாநில முதல்வரும் திரைப்படத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்தான். நமது மாண்புமிகு முதல்வர் அவர்களும் திரைப்படத்தைப் பற்றி நன்றாகத் தெரிந்தவர்தான்.

1989 மே 12] *[திரு. குமரி அனந்தன்]*

இன்னும் ஒன்றைச் சொல்வதற்கு நீங்கள் என்னை அனுமதிக்க வேண்டும். இப்போது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் போன்றவைகளிலே தம்முடைய கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பித்தவர் நமது கலைஞர் பெருமகனார் அவர்கள். திரைப்படத் துறையிலே இன்று உற்பத்தி செய்வதிலே அவருடைய குடும்பத்தைப் பார்த்தால்-ஜெமினி போன்றவர்கள் இப்போது அந்தத் துறையிலே இல்லாதபோது—ஏ.வி.எம். அவர்களுக்கு அடுத்தாற்போல் நீங்களும் ஒரு பழமையான— உற்பத்தி செய்கின்ற குடும்பம் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் நிச்சயமாக உங்களுக்குத் தெரியும். இவைகளையெல்லாம் கருத்தில் எடுத்துக்கொண்டு, ஒன்றிலே ரெகுலர் டாக்ஸ் என்று போட்டு 4 சதவீதமாக்குங்கள். இல்லையென்று சொன்னால், கம்பவுண்டிங் எல்லோருக்கும் கொண்டு வந்து விடுங்கள். வேறுபாடு வேண்டாம். ஆந்திராவிலே இருக்கின்ற கம்பவுண்டிங் பஞ்சாயத்துக்கு 11, பெரிய நகரங்களுக்கு 22 என்றுதான் இருக்கிறது என்பதை மீண்டும் சொல்லி, அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளாமல், சாதாரண மக்களுக்கு வரி விலக்கு கொடுப்பதன் மூலம், உணவுப் பொருள்கள் போன்றவைகளுக்கு வரி விலக்கு கொடுப்பதன் மூலம் அதிகாரிகளுடைய தொல்லையைக் குறைப்பதன் மூலம் வணிகர்கள் உங்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்து வந்திருக்கிறார்கள். 'காமதேனு' அதிகமான பாலைக் கறந்து தருகிறது என்று சொல்லி, என் உரையை முடித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையைத் துவங்குவதற்கு முன்னாலே, வரி விதிப்புக் கொள்கையைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்தை இந்த மன்றத்தின் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வரி விதிப்புக் கொள்கையைப் பற்றிச் சொல்லும்போது, 'Tap the rich and pat the poor' என்று சொன்னார்கள். தாங்கக்கூடியவர்களுக்கு வரி விதிப்போம்; வரியைத் தாங்குவதற்கு சக்தியில்லாதவர்களுக்கு வரி விதிக்காமல், வரி விதிப்புகள் அமைய வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த அரசும் செயல்படும் என்பதைத்தான் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இன்றைக்கு சிவகாசி வட்டாரத்தில் நடைபெற்று வருகின்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு விதிக்கப்படுகின்ற வரி கிட்டதட்ட ரூ. 3 கோடி என்று சொன்னாலும் அந்த வரி விதிப்பிலிருந்து விலக்களித்திருக்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் எங்கே எல்லாம் வரி விதித்து வசூலிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதோ, சக்தி இருக்கிறதோ அங்கேயெல்லாம் வசூலிப்பு நடவடிக்கையைத்

தான் இன்று நம்முடைய அரசாங்கம் எடுத்து வருகிறது. இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தெரிவித்த உறுப்பினர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1959 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் பிரிவு 59(1)-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளுக்குச் சட்ட வடிவு கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திருத்தம் தான் இந்த முதல் திருத்தம் ஆகும். 1989-90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சமூக நல திட்டங்களுக்காகக் கூடுதல் வரி விதிக்கும் நோக்குடன் விற்பனை வரி விகிதங்களில் சில மாற்றங்களை அறிவித்தார். இயந்திரங்களினால் செய்யப்படும் சோப்புகளின் மீதான வரி விகிதம் 8 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. கையினால் செய்யப்படும் சோப்புகளின் மீது 6 சதவிகித வரி நீடிக்கும். தொழில் இயந்திரங்களின் மீதான வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டது. வானூர்தி எரிபொருள் மீதான வரி விகிதம் 14 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. பெட்ரோல் மீதான வரி 14 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது.

வணிக சமூகத்தினரிடமிருந்து வந்த கோரிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட பொருள்களை, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில் சேர்ப்பதன் மூலம், பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் 25-3-1989-லிருந்து அறிவிக்கை மூலம் கொண்டுவரப்பட்டது.

இந்தப் பலமுனை வரி பற்றி நான் சொல்லும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் எல்லாப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிச் சொல்லும்போது கூட, அவர்கள் ஆட்சியிலிருக்கும் போது, ஒருமுனை விற்பனை வரி விதிக்கலாம் என்று அரசாங்கம் கருதினாலும் அதிகாரிகளுடைய அறிவிப்புகளின் மேல்-மிரட்டல் என்று கூடச் சொல்ல வேண்டாம்—அதிகாரிகளுடைய அறிவிப்புகளின் அடிப்படையில் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இது போன்ற கோரிக்கை வந்தபொழுது நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி பரிசீலிக்க ஒரு நபர் குழு நியமித்தார்கள். திரு. சீனிவாசன், ஐ.ஏ.எஸ். என்று கருதுகிறேன், அதற்குப் பிறகு திரு. நரசிம்மன், ஐ.ஏ.எஸ.

ஆகியோர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அறிக்கை பெற்று, அந்தக் குழு 59 பொருள்களின் மீது ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படும் என்றது. எனவே அரசாங்கம் விரும்பினால் ஒருமுனை விற்பனை வரி விதிப்பதன் மூலமாக அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படாது என்று கருதினால் அரசாங்கம் இதைச் செய்ய தடை ஏதும் கிடையாது. நான் கூட கேள்விப்பட்டேன், சில வணிகர்கள் சென்று அன்றைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே 59 பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரி விதித்திருக்கிறார்களே, எங்களுடைய கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று எல்லா பொருட்களுக்கும் ஒருமுனை வரி விதிக்க வேண்டுமென்று கேட்டார்களாம். அப்பொழுது அமைச்சர் சொன்னாராம், அப்போதிருந்த விற்பனை வரி அமைச்சருக்கு ஒன்றும் தெரியாது என்று கேலியாகப் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அதில் உள்ளபடியே நான் வருத்தத்துடன் சொல்ல விருப்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய......

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் சில மணித்துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக பலமுனை வரி விதிப்பில் இருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் 25-3-1989-லிருந்து கீழ்க்கண்ட பொருள்கள் கொண்டு வரப்படுகின்றன.

1. ஆயத்த ஆடைகள்
2. விலங்குகளால் இழுக்கப்படும் வண்டிகளின் சக்கர டியூப்கள்.
3. ஸ்கால்ப் நரம்புக் கருவிகள்
4. இரத்தம் செலுத்தும் கருவிகள்
5. இரத்த தானம் செய்யப் பயன்படும் கருவிகள்
6. திரவம் செலுத்தும் கருவிகள்

7. கன அளவுக் கருவிகள்

8. பற்ற வைக்கும் கோல்கள்

9. பீடி இலைகள்

10. ரப்பர் கயிறுப் பொருள்கள்

11. தலைக்கவசங்கள்

12. இலகுவான கூரைத் தகடுகள்

13. கடப்பைக்கல் பலகைகள்

14. சாகாபார் கற்பலகைகள்

15. கிரானைட் கற்பலகைகள்

தொழில் மற்றும் வணிக வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் 7–10–1988, ஆளுநர் ஆட்சிக் காலத்தில் சில பொருள்களை

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பட்டியலைப் பூராவும் பார்த்தோமானால் அந்தப் பொருள்களுக்கு இதற்கு முன் பலமுனை வரி அநேகமாக இருந்திருக்க முடியாது. தகடுகள், கால்நடைகளால் இழுக்கப்படும் வண்டிகளின் சக்கர டியூப்கள், குழாய்கள் போன்றவை எல்லாம் ரீசேல் வேல்யூ இல்லாதவை, நான் சொல்வது, நிறைய நடமாட்டத்தில் இருக்கிற அன்றாடம் மக்கள் உபயோகிக்கிற பொருள்களுக்குத்தான் நிறைய இடங்களில் பலமுனை வரி இருக்கிறது. அந்த இனங்களை இன்றைக்கும் அதிகாரிகள் ஒளித்து வைத்துத்தான் சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் சொன்ன கருத்துக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், எந்தக் காரியத்தை அவர்களால் செய்ய முடியவில்லையோ, அந்தக் காரியத்தை இந்த அரசு செய்யும் என்ற நம்பிக்கையோடு சொல்லியிருப்பதாகத்தான் அதை நான் கருதுகிறேன். ஏனென்று சொன்னால் இன்றைக்கு முதல்வர் அவர்கள் கேட்ட கோரிக்கைகளை எல்லாம் உடனே செய்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் கேட்ட கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு அறிவிப்புத் தருகிறார்கள். அந்த நம்பிக்கையோடுதான் மாண்புமிகு உறுப்பினர் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் சொல்லியிருப்பாரென்று நினைக்கிறேன். காலம் வரும்போது பலமுனை விற்பனை

வரியிலிருந்து ஒருமுனை விற்பனை வரிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும், பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் மற்றும் வணிக வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் 7-10-1988 முதல் சில பொருட்களை பல முனை வரி விதிப்பிலிருந்து ஒரு முனை வரி விதிப்பின் கீழ் மாற்றி விற்பனை வரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலைத் திருத்தி சட்டப் பிரிவு 59 (1)-ன் கீழ் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டன.

1-1-1988 முதல் முதலாம் இணைப்புப் பட்டியலில் இனம் 3-ல் பிளாப்புகளை (flaps) சேர்த்தும் இனம் 16-ல் தேயிலை குறித்த பல்வேறு நிலைகளை வகைப்படுத்தியும்;

30-12-1987 முதல் கையினால் செய்யப்பட்ட சோப்புகளை இனம் 37-ல் சேர்த்தும்;

1-4-1988 முதல் இனம் 178-ல் சலவை நீலம் அல்லது அல்ட்ரா மெரைன் நீலத்தை தனியாக வகைப்படுத்தியும்;

முதலாம் இணைப்புப் பட்டியலுக்குத் திருத்த அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

இந்த அறிவிப்புகள் சட்ட சம்மதம் பெறுவதற்காக இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சட்டத் திருத்த சட்ட முன்வடிவை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள், 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 24/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*6-5-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 24/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 25/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*6-5-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1989 மே 12]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1989-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*6-5-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 மே 12]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1989-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் (திருத்த) சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

*6-5-1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(ஈ) பொது விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்டமுன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

* 6—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(ஈ) பொது விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்டமுன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மேல் வரி) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

* 6—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1989 மே 12] [திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 28/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1–10)

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

* 6—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 மே 12] [திரு. எஸ். ஜே சாதிக்பாட்சா]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 28/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1–10)

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

*6—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டமுன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பயிரிடும் குத்தகை விவசாயி களுக்குப் பாதுகாப்பு சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தினை நான் சொல்லவிழைகிறேன். 1986 ஆம் ஆண்டு வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த குத்தகை விவசாயிகளுக்கு 5 தவணையாக கட்ட வேண்டும் என்று சொல்லி அரசால் அன்றைய தினம் சட்டம் இயற்றப்பட்டது. அதன் பிறகு 1987, 1988 ஆகிய இந்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெள்ளம், வறட்சி ஏற்பட்டு, அந்த விவசாயிகளுடைய அந்த குத்தகை பாக்கி என்பது தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டு வந்திருக்கக்கூடிய நிலைகள் இருக்கின்றன. இன்று இருக்கின்ற அரசு, 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை அது ஒத்திவைக்கப்பட்டு நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற சட்ட முன்வடிவை இங்கே கொண்டுவந்து செய்திருக்கின்றார்கள். அது மிகவும் வர வேற்கக்கூடியது. இந்த சந்தர்ப்பத்தில் அதே போன்று அந்த விவசாயிகளுடைய பாக்கிகளை தொடர்ச்சியாக அரசு சொல் கின்ற கணக்குப்படி பார்த்தால் விவசாயிகளுக்கு வறட்சி, வெள் ளம் போன்ற தொடர்ச்சியான பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அந்த விவ சாயிகளுடைய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

*10—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேவிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்டமுன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 8/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பயிரிடும் குத்தகை விவசாயி களுக்குப் பாதுகாப்பு சட்டமுன்வடிவில் என்னுடைய கருத்தினை நான் சொல்லவிழைகிறேன். 1986 ஆம் ஆண்டு வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட அந்த குத்தகை விவசாயிகளுக்கு 5 தவணையாக கட்ட வேண்டும் என்று சொல்லி அரசால் அன்றைய தினம் சட்டம் இயற்றப்பட்டது. அதன் பிறகு 1987, 1988 ஆகிய இந்த ஆண்டுகளில் தொடர்ச்சியாக வெள்ளம், வறட்சி ஏற்பட்டு, அந்த விவசாயிகளுடைய அந்த குத்தகை பாக்கி என்பது தொடர்ச்சியாக வளர்ந்துகொண்டு வந்திருக்கக்கூடிய நிலைகள் இருக்கின்றன. இன்று இருக்கின்ற அரசு, 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை அது ஒத்திவைக்கப்பட்டு நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற சட்ட முன்வடிவை இங்கே கொண்டுவந்து செய்திருக்கின்றார்கள். அது மிகவும் வர வேற்கக்கூடியது. இந்த சந்தர்ப்பத்தில் அதே போன்று அந்த விவசாயிகளுடைய பாக்கிகளை தொடர்ச்சியாக அரசு சொல் கின்ற கணக்குப்படி பார்த்தால் விவசாயிகளுக்கு வறட்சி, வெள் ளம் போன்ற தொடர்ச்சியான பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் கட்ட முடியாமல் இருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. அந்த விவ சாயிகளுடைய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

*10—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

அதேபோன்று தமிழகத்தில் 20 லட்சம் விவசாயிகள், இன்றையதினம் குத்தகை விவசாயிகளாக இருக்கின்றார்கள். 5 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகள்தா பதிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். பாக்கி குத்தகை விவசாயிகள் பதிவு செய்யப்படவில்லை. விவசாயிகள் பதிவு செய்வதற்காக மனுப் போட்டார்கள் என்று சொன்னால், பதிவு செய்ய முடியாத சூழ்நிலையிலே, இன்று தமிழகத்திலே, தஞ்சை மாவட்டத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் பதிவு செய்வதற்கு நேரடியாக ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மூலமாக பதிவு செய்வதற்கு, பக்கத்திலே இருக்கின்ற விவசாயிகளைக் கண்டு, அவர்களைப்பற்றி அறிந்து, பதிவு செய்வதற்கு ஒரு உத்திரவை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்றுதான், அந்த விவசாயிகள் பதிவு செய்தால் தான் அவர்களுக்கு உத்திரவாதம் கிடைக்கும். அவர்கள் எந்தவித தஸ்தாவேஜும் இல்லாமல், ஆண்டாண்டுக் காலமாக சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். அதைப்போல அவர்கள் மனு போட்டு, பதிவு செய்ய வேண்டுமென்றால், அவர்களுக்குக் கூட சிறைத் தண்டனை விதிக்கும் நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. அதை எல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1970 ஆம் ஆண்டு திரு. அச்சுதமேனன் அவர்கள் ஆட்சியில், கேரளாவில் குத்தகை விவசாயிகளுக்கெல்லாம் நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வந்து, அங்கே இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் செய்து, அவர்கள் இன்றைக்கு நிம்மதியாக வாழும் நிலைமை இருக்கிறது. அதைப்போல நமது தமிழக முதலமைச்சரவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள், பல்வேறு நன்மைகளை அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல தமிழகத்தில் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு விடிவுக்காலம் ஏற்படும் வகையில், புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கும், நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமல், அரசே அந்த நிலங்களை பேங்குகள் மூலமாக விவசாயிகளுக்குச் சொந்தமாக்கி, அவர்கள் தவணை முறையில் அதைக்கட்டி, நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சோவில் நிலங்களை எடுத்துக் கொண்டால், தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் சோவில் நிலங்கள் இருக்கின்றன. தனிப்பட்ட நபர்கள் அந்த நிலங்களை பினாமிகள் பெயர்களில் எழுதிவைத்துக் கொண்டு, அவர்கள் குத்தகை சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு பல்வேறு பாதுகாப்புச் சட்டங்களைக் கொண்டு வந்தாலும்கூட, தனி

நபர்கள் சாகுபடி செய்து கொண்டிருக்கும் அந்த நிலங்களை எடுத்து, மற்றவர்களுக்கும் கொடுத்து, அவற்றைப் பகிர்ந்தளிக்கும் வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும். தனி நபர்களே பல்வேறு பினாமிகளின் பெயர்களில் அந்த நிலங்களைச் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை கையகப்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) இன்றைக்கு விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்து, அவர்களுக்கு நிலங்களைச் சொந்தமாக்கக் கூடிய வகையிலே ஒரு புரட்சிகரமான சட்டத்தை இந்த அரசு கொண்டு வரவேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

திரு. வி. தம்புசாமி: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இன்று சட்டமன்றத்திலே கொண்டு வந்திருக்கக் கூடிய நில வெளியேற்றுத் தடைத் திருத்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். பொதுவாக இன்றைக்கு குத்தகைதாரர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக் கூடாது. நிலத்திலிருந்து வெளியேற்றம் செய்யக் கூடாதென்று தமிழக முதலவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் இன்றைய தினம் ரெவின்யூ கோர்ட்டுகள் நடைபெற்று, அந்தக் குத்தகை பாக்கிக்காக சில இடங்களில் நில வெளியேற்றம் செய்யப்படுகிறது. அப்படி செய்யப்பட்ட இடங்களிலேகூட மீண்டும் நிலம் திருப்பி வழங்கப்படுமென்று தமிழக முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 30-9-86 – லிருந்து இன்றைய வரையிலும் யாராவது அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டிருப்பார்களானால், அவர்களுக்கு நிலத்தைத் திருப்பி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற ரெவின்யூ கோர்ட்டுகளைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சி, வெள்ளம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு மட்டும்தான் சலுகை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது சரியானதல்ல. அனைத்துப்பகுதிகளுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்படவேண்டும். தொடர்ச்சியாக குத்தகை பாக்கி ஏற்பட்டு, அதைக் கட்ட முடியாத நிலையில் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து, அதை தள்ளுபடி செய்வதற்கான ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பினாமி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து துரிதமாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கோவில் நிலத்தை குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அந்த நிலங்களைச் சொந்தமாக்கும் வகையிலே சட்டம் கொண்டு வந்து, அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குத்தகை விவசாயிகளைப் பொறுத்த

வரையில் இன்றைய தினம் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் இது போன்ற சட்டங்களைக் கொண்டு வந்து பாதுகாப்பது என்ற நிலையில் தமிழக அரசு கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தை வரவேற்று, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 1.20]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல் 1989 ஆம் ஆண்டு தமிழ் நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து) பாதுகாப்புச் சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டதையொட்டி, ஏற்கனவே இந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயம் சட்டமன்றத்தின் தீர்மானம் மூலமாக கொண்டு வரப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டதற்கு பிறகு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிற ஒரு வாய்ப்பு இன்றைக்குக் கிடைத்து, அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

1989 ஆம் ஆண்டு சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுகிற இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புவது 20-2-1989 வரையில் நிலுவையில் உள்ள குத்தகை பாக்கிகளைச் செலுத்த இயலாத பயிரிடு குத்தகைதாரர்கள், தனிப்பட்ட நிலவுடமையாளர்களுக்கோ அல்லது பொது பொறுப்புக் கழகங்களுக்கோ குத்தகைத் தொகை நிலுவைகளைச் செலுத்தாத காரணத்திற்காக — நிலத்திலிருந்து 30-9-1986 அன்றும் அதற்குப் பிறகும் வெளியேற்றப்பட்டவர்கள் மீண்டும் தொடர்ந்து பயிரிடு குத்தகைதாரர்களாக இருக்க அனுமதிக்கவும் குத்தகை நிலுவைகளைச் செலுத்தாத காரணத்தால், வெளியேற்றப்பட நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவும், மேற்கொண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் 31-3-1990க்குள் தவணை பாக்கிகளைச் செலுத்த அவகாசம் அளிக்கவும் இங்கே சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறேன்.

ஏற்கனவே இந்த அவை, கொள்கை பூர்வமாக இதை ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நினைவூட்டி, அருள்கூர்ந்து பேரவை இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி அமைகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் பிரிவு 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 15/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தங்களைப் பொறுத்தவரையிலும் ஒரு முற்போக்குத் திட்டங்களை உருவாக்கிய வகையில் இந்தத் திருத்தங்கள் நீண்ட நாளாகப் பரிசீலனையில் இருந்து விரைவுபடுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இன்றைக்கு பரிசீலனைக்கு வந்து இருக்கிறது என்று சொன்னாலும், பொதுவாக இந்தத் திருத்தத்தில் நான்கு சட்டத் திருத்தங்கள் இருக்கிறது என்று சொன்னாலும் அத்தனையும், நிலத்திற்கும், நிலச் சொந்

*29—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவுகள் 2 முதல் பிரிவு 8 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகைதாரர்கள் (வெளியேற்றுகையிலிருந்து பாதுகாப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஏ) நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப் புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 15/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சட்டத் திருத்தங்களைப் பொறுத்தவரையிலும் ஒரு முற்போக்குத் திட்டங்களை உருவாக்கிய வகையில் இந்தத் திருத்தங்கள் நீண்ட நாளாகப் பரிசீலனையில் இருந்து விரைவு படுத்தப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இன்றைக்கு பரிசீலனைக்கு வந்து இருக்கிறது என்று சொன்னாலும், பொதுவாக இந்தத் திருத்தத்தில் நான்கு சட்டத் திருத்தங்கள் இருக்கிறது என்று சொன்னாலும் அத்தனையும், நிலத்திற்கும், நிலச் சொந்

*29—4—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1989 மே 12] [திரு. எஸ். ஆர். இராதா]

தக்காரர்களுக்கும், அதுபோல அதை வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழைகளுக்கும் சம்பந்தப்பட்டது என்ற முறையில் ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் பேசிவிட்டு கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டிய வகையில், நானும் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்ற அடிப்படையிலும் ஒரு குறிப்பிட்ட சட்டத் திருத்தத்திற்கு மட்டும் பேசவேண்டிய நிலை இல்லை என்ற காரணத்தினாலே என்னுடைய கருத்தை முழுவதுமாக இந்த நேரத்திலே நான் தெரிவிக்க வழிவகை இல்லை என்றாலும் நான் எனக்குத் தரப்பட்டு இருக்கிற நேரத்தில் ஒருசிலவற்றை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற ஏழை விவசாயிகளைப் பொறுத்தவரையிலும் நிலச் சுவான்தாரர்களுடைய கொடுமைகள் இன்றைக்கு அடங்கிவிட்டதா, அடக்கப்பட்டு விட்டதா என்றால், நிச்சயமாக இல்லை. எத்தனையோ முற்போக்குச் சட்டங்களைக் கொண்டு வந்து அந்த நிலச் சுவாந்தாரர்களை அடக்க வேண்டுமென்று ஆசைப்பட்டாலும் கூடஅந்த ஏழை விவசாயத் தொழிலாளர்கள் எந்த அளவுக்கு கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் (குறுக்கீடு), எனவே அந்த வகையிலே அந்த விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியது ஒரு பெரிய கடமை. நான் இங்கே விவசாயத் தொழிலாளர்கள் என்று சொல்கின்ற நேரத்திலே, தொழிலாளர்கள் பற்றியும் நான் குறிப்பிட்டாகவேண்டும். ஏனென்றால் தொழிலாளர்கள் என்ற நிலையை நம்முடைய ஆட்சிக் காலத்திலேதான் தொழிலாளர்களுக்காக தனியாக ஒரு மந்திரி போட்டு இருந்தோம். ஆனால் இன்றைக்கு அந்த தொழிலாளர் அமைச்சர் போய், செய்தி அமைச்சராகமாறி, தொழிலாளர் அமைச்சரே இன்றைக்கு இல்லாத காரணத்தினாலே இன்றைக்கு தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமா என்ற நிலைமை, ஒரு பயங்கரமான நிலைமை உருவாகிக் கொண்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து ஆகவேண்டும். எனவே விவசாய தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலும் அவர்களைப் பாதுகாப்பதற்கான வழி வகை இன்றைக்கு எடுக்கப்பட வேண்டுமென்று நான் கோருகிற நேரத்தில் பொதுவாக கோவில் நிலங்கள்—இன்றைக்கு அதிகமாக இருக்கிற இடங்கள் என்று சொன்னால் தஞ்சை மாவட்டம் கோவில் நிலங்கள் அதிகமாக இருக்கும் இடம்—அந்த நிலத்தை வைத்து இருக்கிறவர்கள் இன்றைக்கும் பார்த்தால், கை மாறி மாறி வருகிற நிலையில் பெரிய நிலச் சுவான்தாரர்கள் கையில் தான் இருக்கிறதே தவிர அது ஏழை விவசாயிகள் கைக்குப் போய் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஆனால் எப்படியோ அவர்கள் கைக்குத் திரும்பத் திரும்ப போய்க் கொண்டு இருக்கிறது. அவர்களாவது ஆண்டவனுக்கு வழிவகை செய்கிறார்களா என்றால், அதுவும் கிடையாது. எனவே ஆண்டவனுக்கு சோறு போட வேண்டும் என்பதற்காக நான் வாதாடுவேனா என்றால் நான் நிச்சயமாக மாட்டேன். ஆண்டவன், அவருக்கே சோறு தேடிக்கொள்ள

வேண்டுமே தவிர அவருக்கு நாம் தரவேண்டிய அவசியம் கிடையாது. எனவே விவசாயிகள் ஏமாற்றுகிறார்களா என்றால், நிச்சயமாக ஏமாற்றவில்லை. அவர்களை வைத்துக்கொண்டு இடையிலே சில நிலச் சுவான்தாரர்கள் இன்னும் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைத் தடுப்பதற்கான வழி வகைகளை நாம் அறிய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல ஒரு காலத்தில் ராஜாஜி அவர்கள் 40:60 கொண்டு வந்த நேரத்தில் அது ஒரு புரட்சிகரமான திட்டம் என்று அறிவிக்கப்பட்டு அன்றைக்கு விவசாயிகள் மத்தியிலே கூட ஒரு பெரிய வரவேற்பு இருந்ததை நாம் மறந்துவிட முடியாது. அன்று நிறைய இயக்கங்கள் நடத்திக்கொண்டு இருந்தவர்கள் மத்தியில் கூட, ராஜாஜி அவர்கள் அறிவித்த அந்த 40:60 எந்த அளவுக்கு வரவேற்பு பெற்று இருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்கிறேன். அதற்குப் பின்னாலே அது 60:40 ஆக மாற்றப்பட்டது என்பதும், இன்றைக்கு உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு எல்லாம் அவரவர்களுக்குச் சொந்தம் என்ற அளவுக்கு ஒரு நிலை வந்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே அந்த வகையிலே இன்றைக்கு நிலத்தைப் பொறுத்த வரையிலே ஒரு காலத்திலே அதைக் குறிப்பிட்ட அளவுக்குத் தான் வைத்து இருக்க வேண்டுமென்று ஒரு சட்டம் வந்து, அதை ஏமாற்றுகிற ஒரு நிலை வந்து, இன்றைக்குப் பார்த்தால் தஞ்சை மாவட்டத்தில் யாருடைய கையிலே நிலம் இருக்கிறது என்று தெரியாத அளவுக்கு, இன்றைக்கு பினாமிகள் வளர்ந்து விட்டார்கள். எனவே இந்த பினாமிகளை ஒழிக்க வேண்டுமென் பதில் நாம் எந்த அளவுக்கு ஆர்வம் காட்டுகிறோம் என்பது தான் இன்றைக்கு நம் முன்னாலே இருக்கிற பிரச்சனை. எல்லா வற்றிலும் பினாமிகள் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த விவசாய நிலத்திலே இருக்கிற பினாமிகளைப் பார்த்தால் அவர்களை இன்றைக்கு ஒழிக்க முடியுமா என்று சொன்னால் ஒழிக்க முடியாது. ஆனால் சட்டத்திலே என்னமோ 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆரப்பித்து, அது பின்னாலே கொஞ்சம் கொஞ்சம் மாறி ஸ்டாண்டர்டு இல்லாமல் போய், யாருக்கு எவ்வளவு நிலம் என்று தெரியாத அளவுக்கு இருக்கிறது. ஆனால் இன்றைக்கும் நான் சொல்கிறேன். இன்றைக்கும் 100 வேலி வைத்து இருக்கிறவர், 50 வேலி வைத்து இருக்கிறவர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

அவர்களுடைய பண்ணை இன்றைக்கும் நடந்து கொண்டிருக் கிறது. அவர்கள் எங்கே, யார் இருந்தாலும் அவர்களுடைய வீட்டுக்கு அறுவடை ஆகிற நெல் வருகிறது. இன்னும் ஆதிக்கம் செலுத்துகிறவர்கள் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

அவர்களைத் தடுக்க வேண்டும். அவர்களுடைய நிலைகளை மாற்ற வேண்டுமென்ற அளவிற்கு உழுபவனுக்கு நிலம் கிடைக்க வேண்டுமென்ற அளவில் நாம் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்ற முறையில் ஒரு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இது பல்வேறு இடையூறின் காரணமாக இன்றைக்கு மீண்டும் இங்கே ஒருசில திருத்தங்கள் வருகின்றன என்றாலும் அந்தத் திருத்தங்களிலே நான் ஒன்றை இங்கே குறிப்பிட வேண்டும். இந்தப் பினாமி நிலத்திலே இருந்து ஏதாவது முறையீடு செய்கிற நோக்கில் அந்தப் பழைய சட்டத்திலே உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற நீதிபதியே ஒரு குழு அமைக்க வேண்டுமென்று இருந்தது. இன்றைக்கு அதை மாற்றி, கவர்னர் போய் தலைமை நீதிமன்றத்திற்குக் கேட்டு அவர் அறிவிக்கின்றவர்களை அந்தக் குழுவிலே போட வேண்டுமென்று வருகிறது. எதற்காக, இந்த அளவிற்கு நீங்கள் கவர்னரிடத்திலே போய், அதற்குப் பின்னால் டெல்லிக்குப் போகிறீர்கள் என்பதை என்னாலே புரிந்து சொல்ல முடியவில்லை. டெல்லிக்கு எவ்வளவு போகாமல் இருக்க வேண்டுமோ அது தான் அரசியலுக்கு நல்லதே தவிர, அடிக்கடி டெல்லிக்குப் போய்க்கொண்டிருந்தாலே அதுவேகூட ஆபத்தாக முடியும். எனவே, எந்த வகையிலே நாம் டெல்லியைத் தவிர்க்க வேண்டுமென்று பார்க்க வேண்டுமே தவிர, டெல்லிக்குப் போவது என்ற அளவிற்கு நாம் நிலைமையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதை நான் வற்புறுத்திக் கூறுவேன். இன்றைக்கு உச்ச நீதிமன்றம்—கவர்னர்போய் உச்ச நீதிமன்றத்திற்குச் சொல்லி, உச்ச நீதிமன்றத்திலேயிருந்து ஒரு குழு போட வேண்டும்; அந்தக் குழு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இருந்தால் நிச்சயமாக சரியாக வராது. எனவே, அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திலே கொண்டு வந்து, பினாமிகளை ஒழிப்பதிலே ஏதிலே மட்டுமல்ல; இந்த நிலத்திலே மட்டும் பினாமிகள் இல்லை; எல்லாவற்றிலேயும் பினாமிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு எதிலே பினாமிகளை உருவாக்க முடியாது என்று தெரியவில்லை. எல்லாவற்றிலும் பினாமிகள் இருக்கிறார்கள். எனவே இந்த நிலத்திலேயிருக்கின்ற பினாமிகளையாவது ஒழித்து, நிலத்தை யார் உழுகிறானோ, யார் பயிர் செய்கிறானோ, யார் அதில் உழைக்கிறானோ அவனுக்கு நிலம் கிடைக்கின்ற அளவிற்கு நீங்கள் விரைவாக ஒரு முற்போக்கான சட்டத்தை அமல் படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன் மொழிந்த அந்தத் தீர்மானத்தை ஒட்டி மாண்புமிகு திரு இராதா அவர்கள் பேசினார்கள். அவர் எனது தம்பி; நீண்டகாலம் பழக்கமானவர். எந்த விஷயத்தை ஆய்வுக்கு எடுக்க வேண்டுமோ அந்த விஷயத்தை ஆய்வுக்கு எடுக்காமல் (குறுக்கீடு) லேன்ட் ரிஃபார்ம்ஸ் அல்ல (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கெல்லாம் பின்னாலே நீங்கள் பதில் சொல்லலாம் என்று சொல்கிறார்கள். வேறொன்றுமில்லை. அதாவது இது ஒரு மிச்ச வரம்பு.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : 1989 ஆம் ஆண்டு அதிலே திரு. இராதா அவர்கள் கூறிய கருத்தில் நான் ஒன்றில் மட்டும் ஒன்றுபடுகிறேன். ஏனென்றால் மற்றையது விஷயத்தை ஒட்டியதுஅல்ல என்ற காரணத்திற்சாக. அடிக்கடி டெல்லி சென்று வாதாடக் கூடாது என்றும், கேட்கக் கூடாது என்றும் போகக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார். அப்படி அடிக்கடி டெல்லி செல்வதன் மூலம் பல ஆபத்துக்கள் கூட நம்மைச் சூழக்கூடும் என்ற கருத்தை அவர் தெரிவித்தார்.

நாம் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சியில் இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தின் மாநிலங்களில் மிக முக்கிமான மாநிலமாகத் தமிழ் மாநிலம் இருக்கிறது. இந்தத் தமிழ் மாநிலத்தில், பொறுப்பான ஒரு அரசு, தேர்ந் தெடுக்கப்பட்ட பொறுப்பான ஜனநாயக அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது. மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் இடையே எந்தக் காரணத்தைக் கொண்டும் தேவையற்ற மோதல்கள் இருக்கக்கூடாது என்ற கருத்து படைத்த ஆட்சி இந்த ஆட்சி என்பதை முதற்கண் தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அண்மையிலேகூட முதலமைச்சரின் சார்பாகப் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த முதலமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டில் நான் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். அதன் மூலம் அங்குள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பினையும் பெற் றேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்வதோடு தேவைப்பட்டால் போக வேண்டிய சந்தர்ப்பம் வருமானால், போவது ஒன்றும் பாவ காரியம் ஆகாது என்பதையும் அங்கு சென்று தவம் கிடக்கின்ற அளவிற்குக் கீழ் நிலையில் இந்த அரசு இல்லை என்பதையும் நான் திரு. இராதா அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே கொண்டுவரப் பட்டது முறைப்படுத்துதல் பற்றியது. வருவாய் வாரிய மானது, 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வாரிய கலைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1980) மூலமாக கலைக்கப்பட்டது. அதன் விளைவாக மேற்சொன்ன சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (11) ஆம் கூறின்படி யான அறிவிக்கையொன்றின் மூலமாக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 1 ஆம் நாள் முதற்கொண்டு 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) வகை முறைகளின்படி வருவாய் வாரிய உறுப்பினரொருவரிடம் மேவியுள்ள அதிகார வரம்பு, அதிகாரங்கள் ஆகியவற்றையும்

அவரால் புரிந்து வரப்பட்ட கடமைகளையும் நிலச் சீர்திருத்த ஆணையர் செலுத்தி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்டார். எனினும், மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 24/1978 இன் 13ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவை, குறிப்பாக வருவாய் வாரிய உறுப்பினரின் படிநிலையிலுள்ள அலுவலரொருவர் என்னும் சுட்டுகைக்குப் பதிலாக, 'நிலச் சீர்திருத்த ஆணையர்' என்னும் சுட்டுகையை அமைப்பதன் மூலமாக திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை பேரவை ஏற்கவேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி. ''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1989) ஆய்வுக்கு எடுத்துக்சொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் சொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

அவரால் புரிந்து வரப்பட்ட கடமைகளையும் நிலச் சீர்திருத்த ஆணையர் செலுத்தி வருவதற்கு அதிகாரமளிக்கப்பட்டார். எனினும், மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 24/1978 இன் 13ஆம் பிரிவின் (2) ஆம் உட் பிரிவை, குறிப்பாக வருவாய் வாரிய உறுப்பினரின் படிநிலையிலுள்ள அலுவலரொருவர் என்னும் சுட்டுகைக்குப் பதிலாக, 'நிலச் சீர்திருத்த ஆணையர்' என்னும் சுட்டுகையை அமைப்பதன் மூலமாக திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது. எனவே, இந்தச் சட்ட முன்வடிவை பேரவை ஏற்கவேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி. ''1989ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1989) நிறை வேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. நாஞ்சில் கி. மனோகரன்] [1989 மே 12

"1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ் நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் என்ற இந்த சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். நிலம் கையகப்படுத்துதல் என்பதில் மக்களுடைய நலனுக்காகவும், தொழிற்சாலை, தனியார்களுக்காகவும் நாம் அந்த நிலங்களை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படி எடுக்கக்கூடிய நேரத்தில் நிலத்தின் மதிப்பீடு ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அமைவதில்லை. அதனால் தான் பல நிலச் சொந்தக்காரர்கள் அவர்களுடைய தேவைக்காக கோர்ட்டிற்குச் செல்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அதிகாரிகள் அது விஷயமாக துரிதமாக செயல்படுவதில்லை. ஃபைல் ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்குச் செல்வதில் கால தாமதம் ஆகிறது. ஒரு அலுவலகத்திலிருந்து மற்றொரு அலுவலகத்திற்குச் செல்லக்கூடிய நேரத்தில் பல கேள்விகளை கேட்டு திருப்பியனுப்பி விடுகிறார்கள்.

(பிற்பகல் 1-40)

ஆரம்பத்திலே முழுமையான சோப்புகளை தயார் செய்வதில் தவறு ஏற்படுகிற காரணத்தால், பல ஆண்டுகள் நீடித்து நிற்கிறது. நிலச்சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதில், விலைநிர்ணயிக்கும்போது ஒரு உரிய காலத்திற்கு ஏற்ற நிலைமையில் நிர்ணயிக்காததால், அவர்கள் நீதிமன்றம் செல்கிறார்கள். மேலும் இப்போது அரசு பல்வேறு நல்ல காரியங்களைச் செய்வதற்காக நிலத்தை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே எதிர்காலத்தில் இந்த நிலைகளை எல்லாம் போக்கி, இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, எதிர்காலத்தில் மக்களுடையநலன் கருதி, நிலங்களைக் கையகப் படுத்தவேண்டும் என்று கேட்டு நான், அமர்கிறேன், வணக்கம்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கடைசி நாளாக, சட்டமன்றத்தினுடைய தொடர்க் கூட்டம் முடிகின்ற இந்த நன்னாளில் என்னைக் கடைசியாகப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றியைக் கூறி என்னுடைய தானைத் தலைவி அரசியல் வானிலே ஒரு விடி வெள்ளியாகவும், சமுதாயப் பாலைவனத்திலே ஓர் நீர் ஊற்றாகவும், பழம் புரட்டுகளால் புழுங்கிப் பாழடைந்த தாயகம் கண்ட மணிமண்டபமாகவும்,

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பத்தரை மாற்றுத் தங்கமாகவும், விளங்குகின்ற புரட்சித் தலைவிக்கு மீண்டும் நன்றியைக் கூறி என்னுடைய அருமை அண்ணன் மாண்புமிகு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நிலம் கையகப் படுத்துவதிலே சேருகிறதா ? (சிரிப்பு)

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு திரு திருநாவுக்கரசு அவர்களுக்கும் அண்ணன் கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களுக்கும் நன்றி கூறி, கடைசிப் பேச்சாக இருக்கிற காரணத்தால், நன்றி மறப்பது நன்றன்று...............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பின்னாலே இன்னும் ரொம்ப பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. வே. பெரியசாமி: இந்த அவையிலே பேசுகிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு நிலத்தைக் கையகப்படுத்தும் விதத்திலே கொண்டு வந்திருக்கிற சட்டத்தை வரவேற்கும் முகத்தான் நம்முடைய அரசு ஆதி திராவிட நலத்துறையின் மூலமாகவும் பிற்படுத்தப் பட்ட நலத்துறையின் மூலமாகவும், இன்னும் பலவேறு வகையான காரியங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்து கிறார்கள். அப்படி கையகப்படுத்துகிற நேரத்தில், அரசுக்குச் சொந்தம் இல்லாத தனியார்களுடைய நிலங்களைக் கையகப் படுத்துகின்ற காலகட்டங்களில் நிலச் சொந்தக்காரர்கள் அந்த நிலங்களைக் கொடுப்பதற்கு தடை விதித்து, கோர்டுக்குச் செல்லுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது. நான் கூட ஆதி திராவிட நலத்துறையிலே பேசுகின்றபோது நிலங் களைக் கையகப்படுத்துகின்ற நேரத்தில் நிலச் சொந்தக் காரர்கள் கோர்டுக்குச் சென்று தடையை வாங்கி நீண்ட நாட்களாக அந்தத் தடைக் கற்கள் நீங்கப்படாமல் எந்த நல்ல காரியத்திற்காக இந்த அரசு நல்ல திட்டங்களைப் போடுகிறதோ, அவைகள் அந்த மக்களுக்குப் போய்ச் சேர முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே விரைந்து செயல் படுவதற்கு சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியாளர்களுக்கும், கோட்ட ஆட்சியாளர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கும் நல்லமுறையில் உத்தரவுகளை வழங்கவேண்டும் என்று நான் கேட்டு இருந்தேன்.

அதேபோன்று ஒரு ஊரிலே பள்ளிக்கூடம் தேவை என்று சொன்னால், அந்த ஊரிலே இடங்கள் போதிய அளவிற்கு புறம்போக்கு நிலங்கள் இல்லாத காரணத்தால், தனியார் இடங்களை வாங்க வேண்டியதாக இருக்கிறது. ஆனால் தனியார்கள் அதிகமான விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று

எண்ணுகிறார்கள். ஆனால் அரசு அங்கே எந்தப் பூமி எவ்வளவு குறைவாக போய் இருக்கிறது என்று அங்கேயுள்ள அலுவலகத்திலே சென்று விசாரித்து, அந்தக் கணக்குகளைப் பார்த்து, எவ்வளவு குறைவாகக் கொடுக்க முடியுமோ, அவ்வளவு குறைவாகக் கொடுப்பதற்கு கணக்கு போடுகிறார்கள். அப்படிச் செல்லுகின்றபோது அந்த நிலச் சொந்தக்காரர்கள் நிலங்களைக் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே அதற்கு ஒரு நல்ல திட்டத்தை வகுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து அந்த நிலங்களைக் கையகப்படுத்தவும், நிலத்தை எடுத்துக் கொள்வதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் பகுதியிலே வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிற இடங்கள் எல்லாம் நன்றாகத் தெரியும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்திலே பெங்களூர் சென்று அங்கே மாண்புமிகு ஆளுநர் அவர்களைச் சந்தித்ததாகச் சொன்னார்கள். காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி பேசியதாகக் கேள்விப்பட்டேன். அது என்ன ஆனது என்று கூட, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தெளிவாகச் சொல்லவில்லை. ஆகவே அந்தப் பகுதிகள் எல்லாம் வறட்சியாக இருக்கிற காரணத்தால், காவிரி ஆற்றில் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நல்ல திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களை சொல்ல நான் விழைகின்றேன். இந்த நிலம் எடுப்பதிலே பல கஷ்டங்கள் சங்கடங்கள் இருக்கின்றன. நாம் ஏதாவது ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்றால் அந்த நிலத்தை பார்க்கும்போது எப்படியோ அந்த ரெவின்யூ அலுவலர்கள் அல்லது அங்கே இருக்கக்கூடியவர்கள் அந்த நிலச் சொந்தக்காரர்களிடம் தகவல் கொடுத்து அதை உடனடியாக தடுப்பதற்கான நடவடிக்கையை எடுக்கிறார்கள். அதையெல்லாம் மாற்றி வெகுவிரைவில்—நாம் அரசாங்கத்திற்கு எப்பொழுது எடுப்பதாக இருந்தாலும், ரோடு போடுவதற்காக இருந்தாலும் சரி, கட்டிடம் கட்டுவதற்காக இருந்தாலும் சரி அல்லது தொழிற்சாலைகள் அமைப்பதாக இருந்தாலும் சரி, பள்ளிக் கட்டிடம் கட்டுவதாக இருந்தாலும் சரி, அரிசனங்களுக்கு நிலம் எடுத்து வீடு கட்டிக் கொடுப்பதாக இருந்தாலும் சரி,

எல்லாத் துறைகளுக்கும்—(குறுக்கீடு)—பட்டாக்களில் கூட அப்படித்தான் இருக்கிறது—அரசுக்கு நிலம் எப்போது தேவைப்படுகிறதோ அப்போது அதிலே கால தாமதம் இல்லாமல் விரைவிலே எடுத்து அந்தக் காரியத்தை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பிறகு இன்னொன்றை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அது அந்தக் காலத்திலேயிருந்து சொன்ன கருத்துத்தான். நம்முடைய அரிசனங்களுக்கு நிலம் பார்க்கிறோம். அப்படி பார்க்கும் போது 16 வருஷம் 20 வருஷம் என்று கூட கோர்ட்டிலே சென்று தடை விதித்து அது கோர்ட்டிலே கேஸிலே இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்ற குறைந்தது 3 ஆண்டுகளுக்குள் திட்டத்தைப் போட்டு, அந்த நிலங்களை எடுத்து அந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு—அரிசனங்களுக்கு மாத்திரம் அல்ல பிற்பட்ட வகுப்பினருக்கும் இப்போது நாம் வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறோம். அவர்களுக்கும் இந்த நிலத்தை எடுக்கும்போது அதிலேயும் சீக்கிரமாக அந்த நிலத்தை எடுத்து கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிறகு இந்த கண்மாய் எல்லாம் பார்த்தால், அந்தக் காலத்தில் சொந்தமாக சிலபேருக்கு கண்மாய் இருந்தது. பிறகு அந்தக் கண்மாய்களை அரசு புறம்போக்காக ஆக்க வேண்டுமென்று சில பேர் விட்டுக் கொடுத்தார்கள். அப்படி நானும் கூட புறம்போக்காக ஆக்க வேண்டுமென்று 10 ஏக்கர் நிலத்தை விட்டுக் கொடுத்திருக்கிறேன். அந்த புறம்போக்கான நிலத்தைக் கூட சில தனிப்பட்ட நபர்களுக்கு பட்டா போட்டுக் கொடுத்து, இன்றைக்கு தண்ணீரை தேக்க முடியாத அளவுக்கு சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. பழைய காலத்தில் 20, 30 வருஷத்திற்கு முன்பு புறம்போக்கு நிலமாக இருந்தாலோ அல்லது தனிப்பட்டவர்களுக்கு அந்த நிலம் இருந்தாலோ அதை எல்லாம் மீண்டும் புறம்போக்காக ஆக்கி பட்டாவை கேன்சல் செய்தால் தான் தண்ணீரை தேக்கி வைக்க முடியும். அதிலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று கவனம் செலுத்துவார்களேயானால் நன்றாக இருக்கும்.

அதோடு இந்த நிலம் கையகப்படுத்தும்போது நாம் கண்மாய்களை கட்டுவதற்கு எடுக்கிறோம். இப்படி பல காரியங்களுக்கு எடுக்கிறோம். அப்படி வரும்போது அந்த நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களுக்கு சரியான முறையிலே காம்பன்சேஷன் கொடுப்பதற்கு

நாம் வழி வகை செய்ய வேண்டும் சரியான வகையிலே காம்பன்சேஷன் கொடுப்பதற்கு நாம் வழி வகை செய்வோமேயானால் அவர்களும் மனம் உவந்து நிலத்தைக் கொடுப்பார்கள். நாமும் காலதாமதம் ஆகாமல் நிலத்தை எடுத்து எந்தக் காரியத்திற்கு எடுக்கிறோமோ அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே கூறி இந்த பில்லை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்தும் தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே இந்த அவையிலே விவாதத்தை துவக்கி வைக்கக் கூடிய வாய்ப்பை பெற்றிருந்த நான் இன்றைக்கு இறுதி நாளான இன்று இந்த விவாதத்திலே கலந்துக் கொண்டு நல்ல கருத்துக்களை சொல்லக்கூடிய வாய்ப்பு கொடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தச் சட்டத்தை உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான சட்டம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிலம் கையகப்படுத்துகிற இந்தச் சட்டம் ஏறத்தாழ 100 ஆண்டுகளாகவே இந்த நாட்டிலே இருக்கிறது—1894 முதல்.

இப்போது இருக்கிற நிலையில் அரசாங்கம் நிலத்தை கையகப்படுத்துவதானால் அதிலே வழங்கப்படுகிற அந்த காம்பன்சேஷன் தொகையை ஈட்டுத் தொகையை சரியாக வழங்க வேண்டுமென்று சரியாக நிர்ணயிக்கப்படுகிறதா சரியாக வழங்கப்படுகிறதா என்று பேசுவதற்கு அரசாங்கத்திற்கு உரிமை உள்ளது. ஆனால் தற்போது பல பொது நிறுவனங்கள் சார்பில் குறிப்பாக வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் போன்ற மத்திய அரசு நிறுவனங்கள், ரயில்வே போன்ற நிறுவனங்கள் நிலத்தை கையகப்படுத்துகிற நேரத்தில் அரசாங்கமாக பார்த்து அந்த ஈட்டுத் தொகையை சரியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று விமர்சிக்கக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறதே ஒழிய அந்த நிறுவனங்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. எனவே பணத்தைக் கொடுக்கிற அந்த நிறுவனங்கள் நீதிமன்றத்தை அணுகி அந்த ஈட்டுத் தொகை சரியாக நிர்ணயிக்கப்படுகிறதா என்பதை பார்த்து அதிலே புரொசீடிங்சிலே கலந்துக் கொண்டு தங்கள் கருத்துக்களைச் சொல்லக்கூடிய ஒரு வாய்ப்பு

கொடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கின்றது. எனவே மத்திய அரசுக்கும் சேர்த்து—சட்டத்தை இயற்றிய மத்திய அரசுக்கும் சேர்த்து—சம நீதி வழங்கியுள்ள இந்தச் சட்ட முன் வடிவை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் சொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1-50)

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிலத்தை கையப்படுத்தும் சட்ட முன்வடிவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இதிலே நிலத்தினுடைய மதிப்பீடு செய்கின்ற போது எந்த காரியத்திற்காக அந்த நிலம் கையகப்படுத்தப்படுகிறது என்று பார்த்து அதற்கு தக்கவாறு அந்த நிலத்தினுடைய தரத்தையும் பார்த்து அதனுடைய விலையை நிர்ணயம் செய்ய வேண்டிய பொறுப்பு அரசங்கத்திடம் இருக்கிறது. இன்றையதினம் நெய்வேலியைச் சார்ந்து இருக்கின்ற பகுதியிலே—நெய்வேலிக்கு அடியிலே நிலக்கரி இருக்கிறது. அதனால் வருங்காலத்திலே ஏராளமான பணத்தை பெறக்கூடிய அளவுக்கு அந்த நெய்வேலி நிலக்கரி சுரங்கத் துறையில் இருக்கின்றவர்கள் இருக்கின்றபோது மற்ற இடங்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்ற கணக்கு இதிலே வரக்கூடாது. பொதுவாக ஹரிஜன மக்களுக்கோ அல்லது பொது நிறுவனத்திற்கோ ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்கின்ற போது அந்த நிலத்தினுடைய மதிப்பை எந்த அளவிற்கு நாம் தரம் போட்டு இவ்வளவு என்று குறிக்கின்றோமோ அதைவிட இந்த நிலக்கரி சுரங்கத்தில் இருக்கின்ற அந்த நிலத்திற்கு பல மடங்கு அதனுடைய தரத்தை போடுவதற்கு விலை நிர்ணயம் செய்வதற்கு முன்னுக்கு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்றுதான் இன்றையதினம் அடியிலே இருக்கின்ற எண்ணெகளை எடுப்பதற்கும், கேஸ் எடுப்பதற்கும் தஞ்சை மாவட்டத்தில், சிதம்பரம் தாலுகாவிலும் பல இடங்களிலே நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த நில ஆர்ஜிதம் செய்கின்றபோது அதன் அடியில் என்ன வளங்கள் இருக்கின்றன என்று பார்த்து அந்த வளங்களுக்கு ஏற்றவாறு பிற்காலத்திலே ஏராளமான பணங்களை பெற இருக்கின்ற அந்த சந்தர்ப்பத்தை எண்ணிப்பார்த்து அந்த நிலங்களுக்குத் தனியாக ஒரு மதிப்பீடு செய்து அந்த மதிப்பீடுக்குத் தக்கவாறு அந்த நிலம் உடைமை உள்ளவர்களுக்கு கிடைக்கும்படியாகச் செய்கின்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இன்றையதினம் நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற போது ஒரு நோட்டீஸ் சர்வ் செய்கின்றார்கள். அது வழக்கு மன்றத்திற்கு போகின்றது. அந்த வழக்கு மன்றத்திற்குப் போய் திரும்பவும் எவ்வளவு என்று தீர்மானம் செய்துவிட்ட பிறகு கூட கடைசியிலே உச்ச நீதிமன்றம் போகின்ற போது இதிலே சம்பந்தப்பட்டவர்கள்

எங்களையும் சேர்க்கவில்லை என்று சொல்லி அது நீதி மன்றத்திற்குச் செல்லக்கூடிய ஒரு நிலை இருப்பதினால் பல நிலங்கள் உடையவர்களுக்கு போதுமான அளவிலே அவர்களுக்கு தக்க சமயத்திலே வர வேண்டிய அந்தப்பணம் கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. இன்றையதினம் கூட நெய்வேலியைச் சார்ந்திருக்கின்ற பகுதிகளுக்கு இங்கே கீழ்க்கோர்ட்டிலே அல்லது நம்முடைய உயர்நீதி மன்றத்திலே வழக்காடி அதற்கு இவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்று உயர் நீதி மன்றத்திலே தீர்ப்பு சொல்லிவிட்ட பிறகு கடைசியிலே நெய்வேலி நிறுவனத்தார் உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து எங்களை நீங்கள் வாதியாகச் சேர்க்கவில்லை எங்களுக்கு நோட்டீஸ் கிடையாது என்று சொல்லி தடை விதித்து ஏராளமான பேர் இதனாலே நெய்வேலியைச் சார்ந்திருக்கின்ற மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பணம் வரவிடாமல் நிலத்தையும் எடுத்துக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகின்ற நிலைமை இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து அதற்கு தக்க நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டு இதுமாதிரி நிலம் ஆர்ஜிதம் செய்கின்ற போது, எந்தக் காரியங்களுக்காக எடுக்கின்றார்களோ அதை உணர்ந்து அதற்குத் தக்கவாறு அந்த நிலத்தினுடைய மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே முன்மொழிந்த ஒன்றை சட்டப் பேரவை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட மிக முக்கியமான மசோதா ஒன்றைப் பற்றி இங்கே 4, 5 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த மசோதாவின் தேவையைப் பற்றி அனைவரும் வரவேற்று அதன் மூலம் ஏற்படுகின்ற நன்மைகளைப் பற்றி சுட்டிக்காட்டி எந்த அளவிற்கு நாம் எடுக்கிற நடவடிக்கைகள், புரட்சிகரமான நடவடிக்கைகள் ஏழை எளிய மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற கருத்தில் நாம் சில திட்டங்களைத் தீட்டும் போது அதற்கு என்று சில நிலங்களை கையகப்படுத்தும் போது எப்படி நீதி மன்றங்களிலே நுழைந்து அவர்கள் அதை தடுத்து நிறுத்துகிறார்கள் என்பதையும் அந்தத் தடைக்கற்கள் நீங்குவதற்கு பல ஆண்டுகள் உருண்டோடிக் கொண்டு இருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

என்னுடைய இந்த மசோதாவில், 'ஸ்டேட்மெண்ட் ஆஃப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்று நான் குறிப்பிடுவதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு, ஏற்கனவே அவர்கள் தெரிந்திருந்தாலும் மீண்டும் கொண்டு வருவது நல்லது என்ற அடிப்படையில் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

1989 மே 12] [திரு. நாஞ்சில் கி. மனோகரன்]

Section 20 of the Land Acquisition Act, 1894 (Central Act I of 1894) does not provide for the service of notice by the court to the person or authority for whom the land is acquired where the acquisition is not made for the Government. As a result, such person or authority could not participate directly in the proceedings of the court and effectively assist the court in fixing the compensation reasonably. Hence, it is proposed to amend the said section 20 so as to provide for the court to cause a notice to be served, on the person or authority also, for whom the land is acquired. It is also proposed to apply the above amendment to the proceedings pending before any court on the date of the commencement of the proposed amendment Act.

The Bill seeks to achive the above objects.

பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு திருத்த மசோதாவை இங்கே நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதை அருள்கூர்ந்து ஆதரித்து நிறைவேற்றித் தருமாறு பணிவன்போடு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஒ) நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பை நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பை நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்ற பேரவை சட்டமுன்வடிவு எண், 31/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்த நில உச்ச வரம்பு நிர்ணயச் சட்டத்தின் கீழ் உபரி நிலங்களைக் கையகப் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது பெருநிலக் கிழார்கள், உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்து தடை ஆணை பெற்று விடுவதால், உபரி நிலங்களைக் கையகப் படுத்தும் நடவடிக்கைகளை அரசு தொடர இயலாமல் போய் விடுகிறது. நீதிமன்றம் மேற்கொண்ட வழக்குகளை முடிவிற்குக் கொண்டு வர குறைந்தது 5 அல்லது 6 ஆண்டுகள் எடுத்துக் கொள்கிறது. தற்போதைய நிலையைச் சொல்கிறேன். உயர் நீதிமன்றத்தில் கீழ்க்கண்டவாறு 878 வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. உரிமையியல் சீராய்வு மனுக்கள் 280. நீதிப் பேராணை மனுக்கள் 550. நீதிப் பேராணை முறையீட்டு மனுக்கள் 45. ஆக மொத்தம் 878. இந்தச் சூழ்நிலையிலே யிருந்து நாம் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இச்சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுகிறது.

இதையொட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு நான் கருத்துக் களைத் தெரிவிக்க விழைகின்றேன்.

(பிற்பகல் 2-00)

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்த சட்ட திருத்தத்திலே என்னுடைய கருத்தினை எடுத் துரைக்க வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாய மாற்றம் ஏற்படவேண்டும் என்ற முறையிலும் சமுதாயத்திலே நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்ற முறையில் இதுபோல் பல முற்போக்கான திட்டங்கள் அரசால் முன்பு கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

இருந்தாலும் அதிலிருந்து தப்புவதற்கு பல்வேறு வழிகளில் அந்த மிராசுதாரர்கள் வழி செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இதே போன்று நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக பல்வேறு நிலங்களை கையகப்படுத்தவேண்டும் என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வந்தாலும் அதிலிருந்து தப்புவதற்கு மிராசுதாரர்கள் பல வழிகளை செய்து இருக்கிறார்கள். அப்படி எடுக்கப்பட்ட ஒருசில நிலங்களை கூட அவர் களுடைய பினாமிகள் பெயரால் அந்த நிலங்களுடைய பட்டாக்களை அவர்கள் மாற்றம் செய்திருக்கிறார்கள். அதற்கு பிறகு நான் அரசினுடைய கவனத்திற்கு 1983 ஆம் ஆண்டு கொண்டு வந்ததன் காரணமாக அதை பரிசீலனை செய்து விசாரணை எல்லாம் செய்து 1986 ஆம் ஆண்டு அப்படிப்பட்ட நிலங்களை எல்லாம் மீண்டும் பட்டா வழங்கப்பட்ட, பினாமியாக பட்டா வழங்கப்பட்ட அந்த நிலங்களை அரசு கையகப்படுத்தியிருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக் கின்ற செய்யூர் வட்டத்தில் விழுதுமங்கலம் என்ற கிராமத்தில் சர்வே நம்பர் 177/2ஏ என்ற பகுதியில் அங்கே நில உச்ச வரம்புச் சட்டத்தின் மூலமாக 45 ஏக்கர் நிலங்கள் ஏற்கனவே அரசு கைப்பற்றி இருந்தது. ஆனால் அந்த மிராசுதாரர் தன்னுடைய பினாமி பெயரால் அதை மாற்றம் செய்து இருக்கிறார். அது இன்றைக்கு நீக்கப்பட்டு இருந்தாலும் அந்த மிராசுதாரர் அந்த நிலத்தை இன்னும் அனுபவித்துக் கொண்டு இருக்கிற ஒரு நிலைமை தான் இன்றைக்கு கிராமங் களிலே இருந்து கொண்டு வருகிறது. அந்த நிலத்தை அவர்கள் இன்றைக்கு ஆதி திராவிடர்கள் பெயரால் ஒரு சில பகுதியில் விற்பனை செய்து அவர்கள் மூலமாக ஜீவன்தாராவிலிருந்து கடன் பெற்று அதை அனுபவிக்கின்ற கொடுமை எல்லாம் இன்றைக்கு அந்தப் பகுதியில் நிலவிக்கொண்டு இருக்கிறது. அந்த சர்வே நம்பர் 177/2ஏ ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். விழுதுமங்கலம் என்ற கிராமத்திலே அந்த நிலத்தை அரசு அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாய தொழிலாளர்களுக்கும், நிலம் இல்லாத விவசாய தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். விற்பனை செய்த அந்த மிராசுதாரர் மீது நடவடிக்கை எடுப்பதோடு மட்டும் அல்லாமல் அந்த நிலத்தைக் காட்டி அரசை ஏமாற்றுகின்ற அளவுக்கு மானியமும், கடனும் பெறுகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்த அவர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டும் அல்லாமல் இந்த உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற முறையில் பலர் இன்றைக்கு அந்த நிலத்தினுடைய சொந்தக் காரர்கள் இருந்தாலும் அவர்கள் தன்னுடைய பட்டாக்களை

அவர்களுடைய வாரிசுகள் பெயரால் மாற்றம் செய்யாமல் இருக்கிறார்கள். அப்படி செய்யப்படாததன் காரணமாக அவர்கள் நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து இதுவரையில் தப்பித்துக்கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே இறந்தவர்களுடைய வாரிசுதாரர் பெயருக்கு கூட உடனடியாக நிலங்களை மாற்றம் செய்து நில உச்ச வரம்பு சட்டத்திற்கு மேல் அதிகமான நிலங்களை யார் வைத்து இருந்தாலும் அவைகளை கைப்பற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டும். இன்றைக்கு ஆத்தரைஸ்டு ஆபிசர் அலுவலகம் என்று சொல்லப் படுகின்ற அந்த அலுவலகங்கள் குறைக்கப்பட்டு இருக்கின்றன. முன்பு காஞ்சிபுரத்தில் இருந்த அந்த அலுவலகம் பின்னர் விழுப்புரத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, பின்னர் இன்றைக்கு திருச்சியிலே அந்த அலுவலகம் இயங்கிக்கொண்டு வருகிறது. இப்படி ஒவ்வொரு ஆண்டும் அலுவலகத்தை மாற்றிக்கொண்டு வருவதன் காரணமாக மக்களுக்கு கிடைக்கவேண்டிய நன்மைகள் கிடைக்காத அளவுக்கு தான் இருந்து கொண்டு வருகிறது அதையெல்லாம் போக்குகின்ற அளவுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயம் செய்து அந்த நில உச்ச வரம்பு சட்டப்படி கையகப்படுத்தப்பட்டு இருக்கின்ற நிலங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரே நேரத்தில் 1960 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அந்த நில உச்ச வரம்புச் சட்டம் அது வருகிறது என்று சொன்னதன் காரணமாக பல்வேறு பினாமிகள் பெயரில் விற்பனை செய்யப் பட்டு இருக்கின்றன. அவைகளை அகற்றுவதற்கு கூட ஏற்கனவே சட்டங்கள் இயற்றப்பட்டு இருந்தாலும் நம்முடைய பாரத ஜனாதிபதி அவர்களுடைய கையொப்பம் கிடைக்காத காரணத்தால் அதை அமல்படுத்தாத நிலை இருந்து கொண்டு வருகிறது. அதையும் போக்குகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

1961 வது ஆண்டு, எங்கள் தலைவர் காமராஜர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பிலே இருந்த போது—எப்படி சுதந்திரம் அடைந்த உடன் ஜமீன்தார்களை எல்லாம் அழைத்து அவர்கள் சாதாரண மனிதர்களாக இருக்க வேண்டும் அவர்களுக்கு ஜமீன் இல்லையென்று சொல்லி, ஒரு கையெழுத்தை அவர்களிடத்திலே வாங்கினார்களோ, அந்த அடிப்படையிலே—1961வது ஆண்டு நில உச்ச வரம்பு

1989 மே 12] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

ஏக்கர் என்று கொண்டு வந்தார்கள். அதை ஒரு ரெவல்யூசன் என்றுதான் சொல்ல வேண்டும். பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்திருப்பவர்களையெல்லாம் அழைத்து 5 பேர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 30 ஏக்கர்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லி ஒரு சட்டத்தை கொண்டுவந்தார்கள். அதைக் கொண்டு வந்தது காங்கிரஸ் கட்சி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிறகு, தி.மு.க. ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று குறைத்தார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். ஆனால், ஏற்கனவே பிரித்துக் கொடுத்த நிலம்—யார் யாருக்கு எல்லாமோ எழுதி வைத்திருக்கிறார்கள், இல்லையென்று சொல்லவில்லை. அந்த நிலங்களை அப்படியே எடுத்து 5, 5 ஏக்கராகப் பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அன்றைக்கு அவர்கள் பினாமியாக எழுதி வைத்தார்கள் என்று பேசப்படுகிறது. விட்டுக் கொடுப்பதற்கு மனம் வந்து அவர்கள் விட்டுக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த விட்டுக் கொடுத்து இருக்கிற நிலத்தை கணக்கு எடுத்து, யார் யார் பேருக்கு இருக்கிறது என்று பார்த்து அந்த நிலங்களை ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏமாற்றி விட்டார்கள், ஏமாற்றிவிட்டார்கள் என்று பேசிக் கொண்டிருக்கிறோம். 15 ஏக்கர் என்று வந்த பிறகு எத்தனை ஏக்கர் நிலம் எடுத்து இருக்கிறோம். எத்தனை ஏக்கர் நிலம் யார் யாருக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம் எத்தனை பட்டா கொடுத்திருக்கிறோம் என்று கணக்குப் பார்த்தால் சரியாக இருக்கும்.

எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் ஒருவர் 'ஜீவன் தாரா, திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் ஒரு கிணற்றுக்கு ரூபாய் 25,000 பணம் கொடுக்கிறார்கள். நில உச்ச வரம்புக் சட்டத்தின் மூலம் எடுத்த நிலங்கள் வெறும் தரிசாகக் கிடக்கிற, விவசாயத்திற்கே லாயக்கில்லாத நிலங்களாக பல ஏக்கர்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் ஏழைகளுக்குக் கொடுத்திருந்தாலும்கூட அவை எல்லாம் விவசாயம் செய்வதற்குத் தகுதியாக இல்லாமல் இருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள், தி. மு. க. ஆட்சியில், 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா கொண்டு வந்ததற்குப் பிறகு

TRUTH ALONE TRIUMPHS

எத்தனை பேருக்கு நிலம் கொடுக்கப்பட்டது என்று கேட்கிறார்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கரா வந்தபோதுதான் யாருக்கும் நிலம் எடுத்துத் தரப்படவில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சியில் கடந்த காலத்தில் 15 ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்ச வரம்பு கொண்டுவரப்பட்ட பிறகு கிட்டதட்ட 38,000 பேருக்கு நிலமற்ற விவசாயிகளுக்கு உபரி நிலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. மற்ற நிலங்கள் எல்லாம் சில பேர் வழக்காடிய காரணத்தால் நீதி மன்றங்களிலே தடைக்கு ஆளாகி இருக்கின்றன. தொடர்ந்து இந்த அரசு மேலும் நிலங்களை எடுத்துக் கொடுப்பதிலே அக்கறை காட்டும்.

பினாமி நிலத்தை இந்த உச்ச வரம்புச் சட்டத்திலே கைப்பற்றி மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. அதற்குப் பினாமி நில ஒழிப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி 38,000 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஏழைகளுக்கு கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன் என்று சொல்லி விட்டேன்.

அதேபோன்று உச்ச வரம்பிலே எடுத்த 500, 1,000, 1,500 ஏக்கர் நிலங்களை எல்லாம் நான் நேரிலே சென்று பார்த்து இருக்கிறேன். அந்த நிலத்தையெல்லாம் ஏழைகளுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பிரித்துக் கொடுத்த நிலத்திலே அவர்கள் விவசாயம் செய்ய முடியவில்லை. அவை விவசாயம் செய்வதற்கு இலாயக்கற்ற நிலமாக இருக்கின்றன. அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் அதற்குத்தான் நான் சொல்கிறேன் கூட்டுத் திட்டமாக 30 ஏக்கர் 50 ஏக்கர் என்ற அளவில் ஒரு இராட்சதக் கிணறாகப் போட்டு அதிலே பம்பு செட் போட்டு ஒரு கூட்டுப் பண்ணை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும்.

இந்த சட்டத்தை வரவேற்று, பினாமி நிலங்களை எடுத்து ஏழைகளுக்குக் கொடுப்பதற்கு வழிவகை செய்வதற்கு ஒரு சட்டம் கொண்டு வாருங்கள் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன் மொழிந்த மசோதாவை ஒட்டி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். குறிப்பாக இந்த அவையிலே

உட்கார்ந்து இருக்கிற ஒரே ஒரு தாய்க்குலத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடு) நான், ஜெண்டர்' ஐத்தான் சொன்னேன்,

(பிற்பகல் 2–10)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது பினாமி நிலங்களைக் கையகப்படுத்தி அந்த நிலங்களை நிலமற்றவர் களுக்கு வழங்குகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக கேட்டுக்கொண்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் பினாமி நிலைகளை எப்படியேனும் கையகப்படுத்துவது என்பதிலேயும் அப்படிக் கையகப்படுத்துகிற நிலங்களை நிலமற்றவர்களுக்குத் தர வேண்டும் என்பதிலும் உறுதியான கொள்கையைக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வளவு அழுத்தமான கொள்கையைக் கொண்டிருக்கிற தி.மு.க. அரசுக்கு இந்த பினாமி நிலங்களைக் கையகப்படுத்து கின்ற துறையில் எந்த அளவுக்கு அம்மையார் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சி உறுதுணையாக இருக்கும் என்பதை நான் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் பேசியதிலிருந்து அவர் சார்ந்திருக்கிற கட்சி பினாமி நிலங் களைக் கையகப்படுத்துவதற்காகத் தயாராக இருக்கிற கட்சி என்று ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேனே தவிர வேறல்ல. ஆனால் அந்த உணர்வு மேலே இருக்கிறவர்களுக்கு இருக்கு மேயானால், இதே மன்றத்தில் இதற்கு முன்னால் நிறை வேற்றப்பட்ட பினாமி நிலங்களைக் கையகப்படுத்துகிற திட்டத்திற்கு குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து இன்னும் அனுமதி கிடைக்கவில்லை என்பதை அம்மையாருக்குத் தெரிவித்து அதற்காக ஆவன செய்யுமாறு அம்மையார் அவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு நான் கேட்டுக்கொள் கிறேன். அதற்குரிய அதிகாரங்கள் அவருக்கு இல்லாவிட்டாலும் தெரிந்தவர்களிடம் சொல்லியாவது அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டம் அங்கே அப்படியே கிடக்கிறது என்று சொன்னார்கள். How to approach the higher authorities என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே அந்த அளவுக்கு முயற்சி செய்தால் நடக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, How to approach me or the Government? To approach me is easy. இந்த விஷயத்தில் கட்சி வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்பது இந்த அரசின் நிலையான கொள்கை யாகும். ஆகவே நிலத்திமிங்கலங்கள் கையடக்கமாக வைத் திருக்கின்ற நிலங்களைக் கையகப்படுத்துவதற்குரிய முயற்சியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கரங்களை வலுப்படுத்தித்தரவேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் இந்த நேரத்தில் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டத்தின் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்-ஐ உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எதற்காக இது இங்கே கொண்டுவரப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக.

The Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Amendment Act, 1983 (Tamil Nadu Act 3/84) was enacted for the purpose of constituting the Tamil Nadu Land Reforms Special Appellate Tribunal. The said enactment was passed in pursuance of Article 323 B of the Constitution which enables the State Legislature to undertake such legislation. The Special Appellate Tribunal will be the forum in the place of High Court for dealing with Land Reforms cases. The said Tamil Nadu Act 3 of 1984 is to come into force on a notified day. After the enactment of the said Tamil Nadu Act 3 of 1984, Parliament passed the Administrative Tribunals Act, 1985 (Central Act 13/85) in pursuance of Article 323 A of the Constitution. The Central Act was amended by the Administrative Tribunals (Amendment) Act, 1986 (Central Act 19/86). In the light of the provisions of the above Central Act, as amended, the said Tamil Nadu Act 3 of 1984 has been modified, to the extent necessary, by Tamil Nadu Act 57/1986. இதன் பின்னாலே இருக்கின்ற உண்மையை சொல்லிவிடுகிறேன். In S.P. Sampath Kumar vs. Union of India (AIR-1987-SC 386), the Supreme Court made certain directions for amending the said Central Act 13 of 1985 and, accordingly, the said Central Act was amended by the Administrative Tribunals Amendment Act, 1987 (Central Act 51/87). In the light of the above Judgment of the Supreme Court and the amendments made to the Central Act 51/87 the said Tamil Nadu Act 3 of 1984 requires further modifications. It is, accordingly, proposed to make, inter alia, the following amendments to the said Tamil Nadu Act 3 of 1984, viz., the provision relating to the appointment of the Chief

Secretary to the Government as Chairman is proposed to be done away with; the appointment of Chairman, Vice-Chairman and Member of the said Appellate Tribunal will be made by the Governor of the State in consultation with the Chief Justice of India; the Chairman, Vice-Chairman and Member are being made eligible for re-appointment for a second term of office.
இதன்மூலம், தடைக்கற்கள் நீங்கும் என்ற நம்பிக்கை நமக்குண்டு. அதற்கு இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று, இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களை, நமது பேரவைத் தலைவர் அவர்களே, உங்களது துணையோடு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அருள் கூர்ந்து இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பை நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பை நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 31/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஒ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன் வடிவு 1989.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

ஆண்டுக்கு ஆண்டு மொபட், ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் சைக்கிள் போன்ற இரண்டு சக்கர வண்டிகளின் பெருக்கம் தொடர்ந்தாற்போல் அதிகரித்துவிட்டன. இந்த பெருக்கத்தின் விளைவாக தற்போது இயக்கூர்திகளின் வரி வசூல் செய்யும் முறை வரி செலுத்துவோர் மற்றும் அரசு ஆகிய இரு தரப்பினருக்கும் இடைஞ்சல் தருவதாக உள்ளது. அரை ஆண்டுக்கான வரி செலுத்துவதில் வரி செலுத்துவோருக்கு ஏற்படும் வசதி குறைவினை அகற்றும் நோக்கத்தோடு இயக்கச் சக்தி பொருத்தப்பட்ட இரண்டு சக்கர ஊர்திகளுக்கான வரி செலுத்துவதை அத்தகைய ஊர்திகளை புதிதாக வாங்கும்போதே ஒட்டு மொத்தமாக செலுத்திவிடலாம் என்ற முடிவெடுக்கப் பட்டுள்ளது. மேலும் அரசின் வருவாயை பெருக்கும் நோக்கத்தோடு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) கார்கள்-சிற்றுந்துகள், ஆமினி பஸ்கள்-ஒப்பந்தப் பேருந்துகள், வேன்ஸ்—இயக்க மூடு வண்டிகள் ஆகியவற்றைப் பொறுத்து செலுத்தத் தக்க வரி விகிதத்தை உயர்த்துவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்க விழைகின்றது. எனவே இந்த மாமன்றம் இந்த சட்ட முன்வடிவை ஆய்வு செய்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

திரு. எஸ் எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இயக்கூர்திகளுடைய வரி விதிப்பு திருத்தச் சட்டத்திலே எனக்குப் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரு சக்கர வண்டிகளுக்கு வரியை ஒட்டு மொத்தமாகக் கூட்ட வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே அது வரவேற்கத்தக்கதுதான். ஏனென்றால் 3 மாதங்களுக்கு, 6 மாதங்களுக்கு, 1 வருடத்திற்கு ஒரு முறை என்று அங்கே வரியை செலுத்தச் செல்லும்போது, அவர்களுக்கு பல இன்னல்கள் விளைகின்றன.

* 11—5—1989 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

அவர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். அவர்கள் பல தடவைகள் வண்டிகளோடு சென்று, வரி செலுத்துவதும், அதிகாரிகளிடம் காட்டுவதுமாக இருப்பதால், இப்போது அந்தத் தொந்தரவு இல்லாமல், இரு சக்கர வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு வசதி செய்து கொடுத்திருப்பது அவர்களுக்கு நன்மை பயப்பதாகும்.

அடுத்து வேன்களுக்கு வரி விதித்திருக்கிறார்கள். குவார்ட்டர்லி டாக்சாக 250 ரூபாய் கட்டியவர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த வரியானது அவர்களுக்கு மிகவும் கஷ்டமானதாகும். ஏனென்றால் 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆயிரம் ரூபாய் கட்டுவது என்றால், அது அவர்கள் வருமானத்திற்கு கட்டுப்படியானதாக இருக்காது. 6 சீட்டிலிருந்து 12 சீட்டுகளாக அது உயர்த்தப்பட்டிருந்தாலும், கிராமங்களிலே அவர்கள் பல இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள். எப்போதுமே அந்த வண்டிகளுக்கு டிமாண்ட் இருப்பதில்லை. ஆதலால் 250 ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருப்பது மிகவும் அதிகப்படியான ஒரு வரி விதிப்பாகும் என்று சொல்லிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இயக்க ஊர்திகள் வரி விதிப்புத் திருத்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போல 2 சக்கர வண்டிகளுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை வரி கட்டுவது என்ற நிலையை மாற்றி, 3 ஸ்லாப்புகளில் வண்டிகளை வாங்குகிறபோதே மொத்தமாக 500 ரூபாய், 750 ரூபாய், 1,000 ரூபாய் என்ற முறையிலே அந்த வரியை ஒரே சமயத்திலே கட்டுவதென்பது பலராலும் வரவேற்கப்படுகிறது. அவர்களோடு நானும் வரவேற்கிறேன். அதைப்போல தனியார் பஸ்களின் வரி விதிப்பு என்பது இன்றைக்கு சீட்டுகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு வசூலிக்கப்படுகிறது. 45, 50 என்று சீட்டுகள் இருக்கிற வண்டிகளுக்கு, அந்த சீட்டுகளின் எண்ணிக்கையில் வரி விதிக்கும் போது, அவர்கள் 80 சீட்டுகள் வரையில் ஓவர்லோட் போட்டு, ஏராளமான வருமானம் தனியார் பஸ் கம்பெனிகளுக்கு வருகிறது. அரசுக்கு உரிய வருவாய் கிடைக்காத நிலை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே அந்த நிலையில் அதை அரசு பரிசீலித்து மொத்தமாக அந்த வரியை வசூலிப்பதற்கு, கூடுதலான வருமானத்தை உருவாக்குவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆம்னி பஸ்கள் நடத்துவதில் பல்வேறு மோசடிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நமது அமைச்சரவர்கள்கூட நேற்றைய முன்தினம் சோதனையில் பல்வேறு தவறுகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. ஆகவே

அப்படிப்பட்ட தவறுகளிலே போக்குவரத்து அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும் கூட உடந்தையாக இருக்கக்கூடிய பல தகவல்கள் வருகின்றன. ஆகவே அதை அரசு உரிய முறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரி கூடுதலாக வாங்குகிற அதே நேரத்தில் அந்த வருவாய் மூலமாக மக்களுக்கு அதிகப்படியான வசதிகளைச் செய்யக்கூடிய வசதிகளைக் கூடுதலாக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஸ்களை தேசிய மயமாக்கும் கொள்கையை ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலேயே அமுலாக்கி இருக்கிறது. இன்றைக்குப் புதிதாக மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள இந்த நேரத்தில் அந்தக் கொள்கையை முதல் அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே உறுதியாக தேசிய மயமாக்கும் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் வலியுறுத்தி, இந்தத் திருத்தத்தை ஆதரித்து, அமைகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, வாகனங்களுக்காக விதிக்கப்படுகிற வரிகளில் இனறைக்கு வாகனங்கள் அடிப்படையில் வரி விதிப்பு என்ற நிலை வந்திருக்கிறது. அதற்கு முன்னால் 'ரோட் டாக்ஸ்' என்று விதிக்கப்பட்டிருந்த அந்த வரி, ரோடுகள் சரியாக பராமரிக்கப்படாத காரணத்தாலே, இனிமேல் ரோட் டாக்ஸ் என்று போட்டால் வரி கட்டியதற்குப் பின்னால் ரோட் சரியாக இல்லை என்று கேட்பார்கள் என்ற பயத்தில், அதை அரசு மாற்றி, வாகனங்களுக்கான வரி என்று போட்டிருக்கிறது. என்றாலும் ரோடுகளைப் பராமரிக்கிற அந்தப் பொறுப்பை— வாகனங்களுக்காக வரி கட்டுகிறவர்களுக்குத் தேவையான வசதிகள் என்ற அளவுக்கு— அரசு ஏற்க வேண்டும். ஆரம்பத்தில் இது ரோடு டாக்ஸ் என்று போட்ட காலத்தில் ரோடு வசதி செய்வதற்காகப் பயன்பட்டது என்பதை மறந்துவிடக் கூடாது, எனவே போக்குவரத்துக்கு வசதி செய்து தருகிற வகையில் எந்த அளவுக்கு ரோடுகளைப் பராமரிக்க வேண்டும் என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு 2 சக்கர வண்டிகளைப் பயன்படுத்துகிறவர்கள் எவ்வளவு பெரிய ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். திடீரென்று இப்போது ஹெல்மெட் அணிவது நீக்கப்பட்டு விட்டதால்— அதிலே பலபேருக்குச் சந்தோஷம் இருக்கலாம்— ஆனால் பத்திரிகையில் பார்த்தால் ''ஹெல்மெட் இல்லாததால் ஒருவர்

சாவு—ஹெல்மெட் இல்லாமல் போனார், அதனால் செத்தார்'' என்று செய்திகள் வருகின்றன. எனவே வாகனங்கள் ஓட்டுகிறவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே நேரத்தில் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற வரியைப் பொறுத்த வரையில் தற்போது 50 சிசியிலிருந்து 300 சிசி வரையான எல்லா வாகனங்களுக்கும் ஒரே வகையான வரிவிதிப்பு இருப்பது சரியில்லை. சைக்கிளுக்கு அடுத்த நிலையில்தான் 50 சிசி வண்டிகள் வந்துவிட்டன. 50 சிசி-யில் பல வண்டிகள் வந்துவிட்டன. புதிதாக இப்போது கூட ஒரு வண்டி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. பெட்ரோலில் ஓடுகிறது—50 சிசி-க்கு கீழே இருக்கிற வண்டி அது. அதற்கு லைசென்ஸ் கூட தேவையில்லை. சைக்கிள் மாதிரி யாரும் ஓட்டலாம் என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் 300 சிசி வரை உள்ள எல்லா வாகனங்களுக்கும் ஒரே மாதிரியான வரி விதிப்பு என்பது சரியில்லை. 150 வரை இருக்கிற வாகனங்களுக்கு ஒரு வகையான வரி விதிப்பும், அதற்கு மேலே இருக்கிற வாகனங்களுக்கு வேறு வகையான வரிவிதிப்பும் இருக்க வேண்டும்.

இரு சக்கர வாகனங்களைப் பொறுத்த வரையில் ஒரு பிரச்சினை கிடையாது. வண்டி எப்படி இருந்தாலும் ஓட்டலாம். ரோடு சரியாக இருந்தால் போதும். ஆனால் மற்ற வண்டிகளைப் பொறுத்த வரையில் அவை எஃப். சிக்குப் போக வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. இங்கே இருந்து செங்கற்பட்டு போவதற்குள் வருகிற மணல் லாரிகளைப் பார்த்தால் இவைகள் எல்லாம் எஃப்.சி-க்குப் போகிறதா அல்லது வேறு எங்காவது போகிறதா என்று நமக்குச் சந்தேகம் வந்து விடும். அந்த அளவுக்கு நாம் பயப்படுகிற வகையில் மணல் லாரிகள் இருக்கின்றன. அந்த வண்டிகளைப் பார்த்து நாமே மரியாதையாக ரோட்டை விட்டு ஓரமாக ஒதுங்கினாலொழிய நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத அளவுக்கு அவைகள் போய்க் கொண்டிருக்கின்றன. இன்றைய தினம் மிகப் பெரும்பான்மையான விபத்துக்கள் யாரால் ஏற்படுகின்றன என்றால் இந்த மணல் லாரிகளாலே தான். அந்த அளவுக்கு எஃப். சி. எடுக்காமலேயே லாரிகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். யாரும் அவர்களைக் கேட்பதில்லை. கேட்க முடியாத அளவுக்கு அவர்கள் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதில் தந்திரமாக ஒன்றைச் செய்கிறார்கள். எந்தக் கட்சி ஆளும் கட்சியாக வருகிறதோ அந்தக் கட்சியின் கொடியை லாரியின் முன்னாலே போட்டுவிட்டு ஓட்டுகிறார்கள். அதைப் பார்க்கிற போக்குவரத்து அதிகாரிக்கு பயம் உண்டாகிறது. ஓகோ இது ஆளும் கட்சி நபரின் லாரி போல் இருக்

கிறது என்று ஒதுங்கி விடுகிறார்கள். ஆனால் அந்த லாரி அடித்து பலர் சாகிறபோது பொதுமக்கள் அந்த வாகனத்தில் இருக்கிற சின்னத்தைத்தான் பார்க்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் யோசித்துப் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்கு முன்தினம் நம் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சாதனை புரிந்திருக்கிறார். சென்னையிலிருந்து கிளம்பிய சுற்றுலா ஊர்திகளையெல்லாம் வழியிலே நிறுத்தி 2 மணிநேரம் சோதனை செய்து ஏறத்தாழ $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் வருமானம் வருகிற வகையில் பிடித்திருக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி பார்த்தேன். ஆனால் அவரேகூட ஒன்றைச் சொல்லியிருக்கிறார், அதாவது ''என்னை மீறி 40 வண்டிகள் போய்விட்டன என்று—வேறு வழியில் போய்விட்டன என்று'' நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்—நீங்கள் உட்கார்ந்த இடத்திலே இருந்தே இவற்றை ஒழிக்க வேண்டுமென்று நினைத்தால் ஒரே நிமிஷத்தில் ஒழித்து விடலாம். அந்த அதிகாரம் உங்கள் கையிலே இருக்கிறது. அதற்கான அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளின் துணை இல்லாமல் இவைகள் ஓடுகின்றனவா என்றால் இல்லை.

சிலர் வசதியாகப் போக வேண்டும் என்று நினைக்கிறார்கள், அப்படி அவர்களின் வசதியைத் தடுக்கிற நேரத்தில் அவர்களுக்கு அரசாங்கத்தின்மீது கோபம் வருகிறதே தவிர நிச்சயமாக மக்களுக்கு அரசாங்கத்தின் மீது அனுதாபம் வருவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ரெயிலில் போகிறவர்களில்கூட கூப்பே கிடைக்கவில்லையே என்பதற்காகச் சண்டை போட்டவர்கள் உண்டு. முதல் வகுப்பில் 4 பெர்த் இருக்கிறது என்றாலும் நான் கூப்பேவில்தான் போவேன் என்று சொல்லுகிற அளவுக்கு வசதி வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். அன்றைய தினம் என்னுடைய சொந்தக்காரர் ஒருவர்கூட தன்னுடைய மகளைப் பிரசவத்திற்காக அந்தச் சுற்றுலா வாகனத்தில்தான் அழைத்துக் கொண்டு போனார். சென்னையிலிருந்து போவதற்கு ரெயிலில் முதல் வகுப்பில் இடம் கிடைக்கவில்லை என்று அவர் அந்த வண்டியில் மதுரைக்குப் புறப்பட்டார். ஆனால் வழியில் செங்கற்பட்டில் வண்டியை நிறுத்தி அவர்களையெல்லாம் இறக்கி பிறகு பல்லவன் பஸ்சில் அவர்களை ஏற்றி அனுப்பியதால் என்ன விளைவு ஏற்பட்டது என்றால் டாக்டர் 15 நாளில் பிரசவம் ஆகும் என்று சொன்ன அந்தப் பெண்ணுக்கு அடுத்த நாளே பிரசவம் ஆகிவிட்டது. ஒரு வகையில் அவர்களுக்கு என்ன சந்தோஷம் என்றால் டாக்டர் வேலையை பல்லவன் இவ்வளவு வேகமாகச் செய்துவிட்டதே என்றுதான். ஆனால் அதில் அவர்களுக்கு ஒரு கவலை அது பெண் குழந்தையாகப் போய்விட்டது.

மாண்புமிகு பேரவை தலைவர் : இனிமேல் மருத்துவ மனைக்கு அனுப்பாமல் பேருந்துகளிலேயே ஏற்றி அனுப்பி விடலாம் என்ற உத்தேசம் உங்களுக்கு ஏதேனும் உண்டா?

(பிற்பகல் 2-30)

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்கள் சிபாரிசு செய்வார்களானால் நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் அது ஒரு சிறந்த வழியாக இன்றைக்குத் தென்படுகிறது. எனவே இறக்கிவர்களை நீங்கள் அடுத்து அனுப்புகிற வண்டி, அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கிற வண்டிகளாக ஏற்பாடு செய்து விட்டு, நீங்கள் நடவடிக்கை எடுத்து இருப்பீர்களேயானால் நிச்சயமாக அது ஒரு சரியான நடவடிக்கையாக இருக்கும். அதுபோல் கொள்கையிலே நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதுதான் இன்றைக்கு நான் உங்களைக் கேட்க விரும்புகிற ஒன்று. அதிலே பல்வேறு நிலைகள்....

திரு . பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வருஷ காலம் ரொம்ப சுகமாக இந்த வண்டிகள் எல்லாம் பெர்மிட் இல்லாமல், ஒன்றும் இல்லாமல் ஓடிக்கொண்டு இருந்த வண்டிகள். (மேஜையைத் தட்டும் ஒலி) நம்முடைய புனித ராஜ்யத்தில ஓடிய வண்டிகள். அவைகளை ஒரு அமைச்சர் போய் விடிய விடிய இருந்து, பிடித்து அந்தப் பயணிகளை இறக்கிவிட்டு அவர்களுக்குக் கொஞ்சம்கூடப் பாதகம் வராமல், பல்லவன் பஸ், திருவள்ளுவர் பஸ் ஆகியவைகளை வரவழைத்து, அவர் உண்ணாமல், உறங்காமல் இருந்து இந்தக் காரியத்தை சாதித்து இருக்கிறார். 10 ஆண்டுக் காலம் ஊறிப்போன ஒரு திருட்டு, 10 ஆண்டுக் காலம் சர்க்காருடைய அனுமதியோடு நடந்த ஒரு திருட்டைப் பிடிக்கிறார்; அதைப் பாராட்டாமல், ஏதோ ஒரு பல்லவன் பஸ்ஸிலே ஏற்றிவிட்டார்; அது வசதி இல்லை என்று சொல்கிறார். அவசரத்திலே திருடனைப் பிடிக்கப் போகிற போலீஸ்காரன் அந்தத் திருடனைப் பிடிக்கும்போது பறி கொடுத்தவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்போது ஏர்-கண்டிஷனோடு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்பது போல் இருக்கிறது.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆம்னி பஸ்களை அமைச்சர் போய் நடு ரோட்டிலே இருந்து பிடிக்க வேண்டியதில்லை. அவைகளைச் சென்னையிலேயே பிடித்து இருக்கலாம். இதை ஒரு

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்]

விளம்பரத்திற்காகச் செய்து இருக்கிறாரே தவிர, வேறல்ல. அதிகாரி, ஆட்சி எல்லாம் கையில் இருக்கிறது. இருக்கிற இடத்தில் இருந்தே பிடிக்க முடியும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இருக்கிற இடத்திலே இருந்து பிடிக்க முடியும் என்று சொல்கிறார்கள். அது இயலாத காரியம். ஏனென்றால் இரயிலடியில் அந்த பஸ்கள் நிறுத்தப்படுகின்றன. அதிலே ஏராளமானவர்கள் சென்று ஏறிக்கொள்கிறார்கள். அப்படி ஏறிக்கொள்ளும்போது மண விழாவிற்கு என்கின்ற நிலையிலே ஏறிக்கொள்கிறார்கள். அந்த இடத்திற்குச் சென்றால் அவர்கள் தப்பித்துவிடுவார்கள். அதனால்தான் ஒரு ரூட்டிலே போய் நின்று, திருச்சி மார்க்கத்திலே, எல்லா பஸ்களும் அந்த மார்க்கத்திலே தான் செல்ல வேண்டும் என்ற அந்தக் காரணத்திற்காக அங்கே நின்று நம்முடைய அமைச்சர் அவர்கள் அவர்களைக் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். 40 பஸ்கள் வேறு பக்கமாகப் போய் விட்டதாகச் சொல் கிறார்கள். இன்றைக்கு அவர்கள் தப்பித்து இருக்கலாம். ஆனால் எதிர்காலத்தில் அந்த ஆம்னி பஸ்களும் தப்பித்துக் கொள்ள இயலாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம், ஆம்னி பஸ்கள் ஓடினால் எல்லா இடங்களிலும் பிடித்து லைசென்ஸை அப்போதே கேன்சல் பண்ணச் சொல்லுங்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள் கிறோம். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. அதற்கு இப்போதே உத்திரவிடுங்கள். எல்லா இடங்களிலும் பிடித்து நடவடிக்கை எடுங்கள். எப்படி தியேட்டரில் தவறு நடந்தால் லைசென்ஸை கேன்சல் செய்யவேண்டுமென்று சொல்கிறார்களோ அதுபோல தவறு நடக்கின்ற இடத்திலே அதைச் செய்யுங்கள், அதை வேண்டாம் என்று சொல்ல வில்லை. மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் எங்களுடைய ஆட்சியைப் பற்றி சொன்ன காரணத்தாலே அந்தப் பிரச்சினை வந்தது. எந்த ஆட்சியும், தவறு நடக்கின்ற நேரத்திலே அதைக் கண்டுபிடிப்பது அரசாங்கத் தினுடைய கடமை. அதிலே நாங்கள் மாறுபட்ட கருத்தில் இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, நான் இந்தச் சட்ட சபையினுடைய நேரத்தைக் கருதி இந்த நேரத்திலே என்ன பேச வேண்டுமென்ற அடிப்படையிலே நான் பேசிக்கொண்டு இருந்தேன். ஆனால் என்னுடைய உணர்வை நண்பர் சீனிவாசன் இங்கே மாற்றி விட்டார்கள். 1 ஆண்டுக் காலம் என்று சொல்வது தவறு. கலைஞர்

ஆட்சிக் காலத்திலே ஓடிற்று. அன்றைக்கே நான் எதிர்த்து இருக்கிறேன். ஓடியதை என்னால் நிரூபிக்க முடியும். அன்றைக்கு இந்தப் பேருந்துகள், சுற்றுலாப் பேருந்துகள் அனுமதி வாங்காமல், ஆல் இந்தியா பெர்மிட் என்ற பெயரிலே வாங்கி வைத்துக்கொண்டு பல தவறுகள் செய்தார்கள். யார் யார் தவறுகள் செய்தார்கள் என்பது எல்லாம் இன்றைக்கு எனக்குத் தெரியும். தயவு செய்து நான் சொல்வது ஆட்சியைக் காரணம் காட்டி, எம். ஜி. ஆர். ஆட்சியிலே இந்த தவறு நடந்தது என்று சொன்னால் எம். ஜி. ஆருக்கு அதிலே சம்பந்தம் இருக்கிறது. எம் ஜி. ஆர். தப்புச் செய்து இருந்தால், தைரியம் இருந்தால் சொல்லுங்கள். நான் அதை கேட்டுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நண்பர் இராதா அவர்களுக்கு எம். ஜி. ஆர். மீது என்ன கோபமோ தெரியவில்லை. சொல்லாத விஷயங்களைத் தேவையில்லாமல் சொல்லி எம். ஜி. ஆர். தப்புப் பண்ணினார், எம். ஜி ஆர். தவறு பண்ணினார் என்று ஏன் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. சொல்லப்பட்டது, கடந்த காலத்தில் ஓடி, 10 ஆண்டுக் காலமாக ஓடிக்கொண்டு இருக்கிறது. அதைப் பிடித்தார் ஒரு அமைச்சர்; கண்டு பிடித்தார் குற்றத்தை; அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஏகடியம் செய்து கொண்டு இருப்பது நியாயமா என்று சீனிவாசன் கேட்கிறார். அப்படிக் கேட்கும்போது வேண்டுமென்றே இதை இங்கே சொல்லிவிட்டு நாளை பத்திரிக்கையில் எழுதி, பொதுக் கூட்டங்களில், சட்டசபையிலே எம். ஜி. ஆரைத் தாக்கினார்கள் என்று பேச வேண்டும் என்பதற்காகப் பேசக் கூடாது. எம். ஜி. ஆர். என்கின்ற பெயரையே சீனிவாசன் உச்சரிக்கவில்லை. பல ஆண்டுக் காலமாக ஓடிக் கொண்டிருந்தது; 10 ஆண்டுக் காலமாக ஓடிக் கொண்டிருக்கிறது; அதைக் கண்டுபிடித்தது குற்றமா என்று கேட்கிறார். அது என்ன தவறு?

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு விளக்கம் அளித்ததற்கு நான் இந்த நேரத்திலே ஏற்றுக்கொள்கிறேன். இன்னும் இந்த நேரத்திலே என்னாலே இதை எப்படிப் பேச வேண்டும் என்று எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம், ''வரி விதிப்பு'' பற்றி.

திரு. எஸ். ஆர். இராதா : நான் ஒரே ஒரு காரணத்தை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எம். ஜி. ஆர். மீது எனக்கு ஏன் கோபம் என்று கலைஞர் அவர்கள் கேட்டு இருக்கக் கூடாது. எனக்குத் தெரியும். எனக்கு அவர் மீது இருக்கிற கோபம், அவருக்கு, அவர் மீது இருக்கிற கோபம் இரண்டும் எனக்குத் தெரியும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் எந்த அளவுக்கு எம். ஜி. ஆர். மீது பற்று வைத்திருக்கிறேன் என்பதும், புனிதர் ஆட்சி என்று அவர் கேலி செய்வது எதற்காக என்பதும் அவருடைய நிலை வேறு, என்னுடைய நிலை வேறு. நான் எங்கே இருந்தாலும் ஒரே நிலையில் இருப்பேன், கொள்கையிலிருந்து தவறக் கூடாது என்பதிலே இன்னும் இருக்கிறேன், அந்த நிலையிலிருந்து நான் என்னை மாற்றிக் கொள்ள மாட்டேன். தயவு செய்து யார் சிரித்தாலும் அதற்காக நான் மாறுகிற நிலை கிடையாது, நான் கலைஞரை எதிர்க்கின்றபொழுதுகூட துணிந்து நேரடியாகத்தான் எதிர்ப்பேன். யாருக்காகவும் பக்க பலமாக யாரையும் வைத்துக் கொண்டு, நேரம் வரும்பொழுது நான் மாறிக் கொள்கிறவன் அல்ல. எனவே புனிதர் ஆட்சி என்று கேலி செய்வதாலே நீங்கள் திருப்தி அடைவீர்கள் என்று சொன்னால் நான் நிச்சயமாகச் சொல்வேன், அது அல்ல. இது எந்தக் காலத்தில் நடந்தது என்று எனக்குத் தெரியும். நான் இன்றைக்கு அதைத்தான் சொல்கிறேன். நீங்கள் அதை விரும்பவில்லை என்று சொன்னால் எடுத்து விடுங்கள். அதில் ஒன்றும் தவறு கிடையாது. ஆனால் மக்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதைத் தான் நான் வற்புறுத்திக் கூறுகிறேன். இந்த நிலையிலே நீங்கள் அணுக வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே திடீரென இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு என்ற அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இது அம்பாசங்கருடைய ரிப்போர்ட்டாக இருக்கிறது. இந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்கிறதா என்பது இதில் சொல்லப் படவில்லை. அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவரவர்களே, விடிய விடிய இராமாயணம் கேட்டுவிட்டு, பொழுது விடிந்த வுடனே இராமனுக்கும் சீதைக்கும் என்ன உறவு என்ற ஒரு கேள்வி கேட்டதாக ஒரு செய்தி உண்டு. அதைப்போல, இந்தப் பிரச்சினையைப்பற்றி இந்த அவையில் விவாதமும் முடிந்து விட்டது. அந்த அறிக்கையும் மாண்புமிகு உறுப்பினர் கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

1989 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவுமில்லை, என்றாலும் நேரம் அப்படி.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் புதிய மசோதாவைப் பொறுத்தவரையில் எந்த நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டுள்ளது என்பதைப்பற்றி இங்கே கருத்து தெரிவித்த உறுப்பினர்களே அதனுடைய நோக்கத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டிலே 1—4—89வது ஆண்டு வரை டூ வீலர் அதாவது ஸ்கூட்டர்கள், மோட்டார் சைக்கிள்கள் அல்லது மொபெட் போன்ற வாகனங்கள் 6,25,000 வாகனங்கள் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரை இருந்து கொண்டிருக்கின்றன. 1—4—89 மார்ச் கடைசி வரை 4 சக்கர வாகனங்கள், கார், ஜீப், வேன்கள் போன்றவைகள் 1,97,000 வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

இவைகளிலே வரி கட்டுவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்கே நேரடியாக அனுபவம் இருக்கின்ற காரணத்தினால் இந்த இரண்டு சக்கர வாகனங்களைப் பொறுத்தவரையில், லைப் டைம் டாக்ஸ் என்ற ஒரு திட்டத்தை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இதைக்கூட மற்ற மாநிலங்களில் லைப் டைம் அதனுடைய ஆயுட் காலம் என்பது 15 ஆண்டுகள் என்றுதான் வைத்து இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்கனவே வரவு-செலவு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, அந்த வாகனம் எவ்வளவு நாட்கள் நாம் வைத்திருந்தாலும், அந்த வாகனம் வாங்குகின்ற காலத்திலே எவ்வளவு வரி கட்டுகிறோமோ அது போதும் என்பதுதான் இந்தத் திருத்தத்தினுடைய நோக்கமாகும். 15 ஆண்டுகள் என்றுதான் மற்ற மாநிலங்களிலே வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்த வாகனங்கள் நல்லமுறையிலே பராமரிக்கப்பட்டு 25 ஆண்டோ, 50 ஆண்டுகள் வைத்து இருந்தாலுங்கூட மீண்டும் நாம் வரி கட்ட வேண்டியதில்லை என்கின்ற சலுகையை வைத்துத்தான் இரண்டு சக்கர வாகனங்களுக்கு நாம் அத்தகைய ஒரு புதிய திருத்தத்தை, வரி கட்டுகின்ற முறையிலே கொண்டு வந்திருக்கின்றோம்.

அதேபோல வேன்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ராமசுப்பு அவர்கள் பேசும்பொழுது 250 ரூபாயாக இருந்தது திடீரென்று 1,000 ஆக மாற்றி விட்டார்கள் என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது ஏற்கெனவே அந்த வேன்களில் செல்லக்கூடிய

[திரு. மு. கண்ணப்பன்] [1989 மே 12

பயணிகளுடைய எண்ணிக்கை ஆறு பேர் மட்டும்தான் செல்ல முடியும். ஆனால் இப்பொழுது அந்தப் பயணிகளுடைய எண்ணிக்கை 12 ஆக உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல 1,800 ரூபாய் வரி விதிக்க வேண்டுமென்று முதலிலே நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே ஆரம்பத்திலே சொன்னார்கள். இரண்டாவது அந்த வேன் உரிமையாளர்கள் ஓட்டுநர்களெல்லாம் அதிகப்படியாக வரி இருக்கிறது என்று இங்கே அவர்கள் வந்து தெரிவித்ததற்குப் பிறகு 800 ரூபாயைக் குறைத்து 1,000 ரூபாய் போதுமானது என்று சொல்லி அந்தத் திருத்தத்தைக்கூட நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த மாதிரி வரி விதிப்பும் உயர்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 2-40)

நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் பஸ்ஸிலே ஓவர் லோடு போடுவதைப் பற்றியும் ஆம்னி பஸ்களிலே நடைபெறுகின்ற மோசடிகளைப் பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அரசினுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பின்னால்தான் தீவிரமான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று முடிவெடுத்து இன்றைக்கு அமைச்சர் நேரில் சென்று சோதனை போட்டது மட்டுமல்ல, தொடர்ந்து இந்தத் துறையின் அதிகாரிகளும் முடுக்கி விடப்பட்டு ஓவர்-லோடு போடுகிற பஸ்களாக இருந்தாலும் தவறான முறையில் ஓடிக்கொண்டிருக்கிற கான்ட்ராக்ட் கேரேஜ் ஆக இருந்தாலும் அவைகள் எல்லாம் சட்டப்படி எதிர்காலத்தில் நடவடிக்கைகளுக்குள்ளாகும். அதிலே இந்த அரசு எந்த வகையிலும் தயக்கம் காட்டாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மதிப்பிற்குரிய இராதா அவர்கள் பேசுகிறபோது, ரோடு பராமரிப்பைப் பற்றி சொன்னார்கள். ரோடு பராமரிப்பு வரி என்பது கடந்த காலத்தில் அந்தப் பெயரில் இருந்திருக்கலாம். ஆனால் மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸ் ஆக்ட் என்று மாற்றப்பட்டு நீண்டகாலமாகிறது. அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு மோட்டார் வெகிகிள்ஸ் டாக்ஸ் ஆக்ட்-ல் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அடுத்து ஹெல்மெட் போட வேண்டாம் என்று இந்தஅரசு சொல்லவில்லை. போலீஸ் மானியக் கோரிக்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சொன்னார்கள். ஏற்கெனவே இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் இந்தப் பேரவையில் 'ஹெல்மெட்' பற்றிய ஒரு கேள்வி வரும்போது, கேள்வி கேட்ட உறுப்பினர்கள், எல்லா தரப்பு உறுப்பினர்களுமே 'ஹெல்மெட்' கூடாது என்றும், அதனால் பாதகங்கள் சில விளைகின்றன என்றும் கருத்துக்களை இங்கே மையமாக வைத்துப் பேசினார்கள். பொதுமக்களில் பெரும்பாலானவர்கள் கருத்து அப்படித்தான் இருக்கிறது. ஆனால் மருத்துவ வல்லுநர்கள் ஹெல்மெட் போட்டுக் கொண்டு போனால்தான் உயிருக்குப் பாதுகாப்பு என்று தெரிவித்த கருத்தையும் இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட ஒட்டு மொத்தமான உறுப்பினர்களுடைய கருத்தை, மக்களுடைய கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் 'ஹெல்மெட் போட வேண்டாம் என்று சொல்லவில்லை, உயிருக்கு பாதுகாப்பு வேண்டுமென்று நினைக்கக்கூடியவர்கள் ஹெல்மெட் போட்டுக்கொண்டுதான் வாகனங்களை ஓட்ட வேண்டும். அதே நேரத்தில் போடாதவர்கள் மீது காவல் துறை நடவடிக்கை எடுக்காது என்றுதான் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ஆகவே யாரையும் ஹெல்மெட் போடாமல் சென்று நீங்கள் உங்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்ள வேண்டாம் என்று இந்த அரசைப் பொறுத்த வரையில் சொல்லவில்லை. எதிர்காலத்திலும் சொல்லாது. ஹெல்மெட் போட்டுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத்தான் இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆனால் கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் இரு சக்கர வாகனங்களில் செல்லக்கூடிய அந்த ஓட்டுநர்கள் ஹெல்மெட் அணிய வேண்டும் என்பதை நினைவுபடுத்துவதற்கு ஆங்காங்கு ஹெல்மெட் அணிவதால் என்னென்ன நன்மை ஏற்படுகிறது என்பதை நினைவுறுத்துகிற வகையில் ரோடுகளில் திசை காட்டிகள் இருக்கிற இடங்களில் அல்லது ரோட்டினுடைய சாலைப் போக்குவரத்திற்கான குறியீடுகள் செய்யப்பட்டிருக்கக் கூடிய இடங்களில் எல்லாம் அத்தகைய விளம்பரத்தைக்கூட சாதாரணமாக எல்லோரும் புரிந்துகொள்கிற வகையில் வைக்கலாம் என்ற யோசனைகூட அரசாங்கத்திற்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 'ஆம்னி பஸ்கள்' இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் சோதனை போடப்பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். யார் மீதும் கோபமோ அல்லது தனிப்பட்ட முறையில் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணமோ கிடையாது.

கொஞ்ச நாட்களாகவே நடந்து கொண்டிருக்கக் கூடிய இந்த முறைகேடுகள் எந்தவகையிலாவது தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த முயற்சியில் அரசாங்கமே, அமைச்சரே முதலில் நேரிடையாக ஈடுபட்டால், எதிர்காலத்தில் அதிகாரிகள் நிச்சயமாக இதிலே தீவிரமாகச் கவனம் செலுத்துவார்கள் என்ற நோக்கத்தோடு தான் இதில் நான் ஈடுபட்டேனே தவிர, இதிலே 'சீப்பாக' விளம்பரம் தேடிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் நிச்சய மாக எனக்குக் கிடையாது. அப்படி விளம்பரம் தேடிக் கொள்ள வேண்டிய அவசியமும் கிடையாது. ஏற்கனவே நான் பத்திரிகைகளில்கூட தெரிவித்தேன். ஒவ்வொரு வண்டியும் அந்த அளவிற்கு அவர்கள் லைசென்ஸ் இல்லாமல், பெர்மிட் இல்லாமல் அல்லது உரிய வரி கட்டாமல், பெர் மிட்டை மிஸ்-யூஸ் செய்தவர்கள், ஆர். சி. புக் இல்லாமல் வந்தவர்கள், இன்ஷூரன்ஸ் சர்டிபிகேட் இல்லாமல் வந்தவர் கள், டிரைவிங் லைசென்ஸ் இல்லாமல் வந்தவர்கள் என்று ஒவ்வொன்றுமாக 32 வண்டிகளில் அந்தக் குறைகள் இருந்தன. இரவு எட்டு மணிக்கு சோதனை ஆரம்பிக்கப் பட்டது. நான் கூட நினைத்தது 10, 15 வண்டிகள் வரக் கூடும். 4, 5 வண்டிகளில் இப்படிப்பட்ட முறைகேடுகள் இருக்குமானால் உடனடியாக மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று சென்னையிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்தும், தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகத்திலிருந்தும் சில பேருந்துகளை அங்கே செங்கல்பட்டிற்கு வரச் சொல்லிவிட்டு தான் இங்கேயிருந்து சென்றோம். அந்தப் பேருந்துகள் எட்டு மணிக்கே ஆறு பேருந்துகள் வந்து விட்டன. ஆனால் வரிசையாக பேருந்துகள் எட்டுமணியிலிருந்து 11மணி வரையில் அங்கே சோதனை செய்யப் பட்டன. வந்த 33 பேருந்துகளில் 32 பேருந்துகள் முறைகேடான முறையில் ஓடிக்கொண்டிருக்கக் கூடியவை. ஒரே ஒரு பேருந்தில் தான் முறையான பெர்மிட்டுகளும் அதற்குத் தேவையான சான்றுகளும் வைத்திருந்தார்கள் ஆகவே 32 பேருந்துகளிலே வந்த பயணிகளுக்கும் நிச்சயமாக நாம் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அந்தப் பயணி கள் எல்லாம் புறப்படுகின்றவரை இரவு விடியற்காலை 2.45 மணி வரையில் என்னோடு சென்ற அதிகாரிகளும் நானும் அங்கேயே இருந்து உடனடியாக சென்னைக்கும் பக்கத்திலே இருக்கக்கூடிய, செங்கற்பட்டிலிருக்கின்ற டெப்போ விலிருந்தும் காஞ்சிபுரத்திலிருந்து, கல்பாக்கத்திலிருந்து எல்லாப் பேருந்துகளையும் வரவழைத்து எல்லாப் பயணி களையும் உட்கார வைத்து நானே சமாதானம் சொன் னேன். அவர்களேகூட கேட்டார்கள், ஏன் சென்னையிலே பிடிக்கக் கூடாது என்று, இங்கே உறுப்பினர்கள் கேட்டதைப் போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தைத்தான் நானும் சொன்னேன். அங்கே

1989 மே 12] [திரு. மு. கண்ணப்பன்]

பிடிக்க முடியாது ஏன் என்றால், ஏறுகின்றபோதே, அவர்கள் பயணிகளிடத்திலே சொல்லிக் கொடுக்கிறார்கள், கல்யாணத்திற்காகப் போகிறோம் அல்லது வேறு ஏதாவது டூரிஸ்டாக கோயிலுக்குப் போகிறோம், சுற்றுலாவாகப் போகிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே தான் நடுவழியிலே வழிமறித்து பிடிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அதற்காக உங்களுடைய சிரமத்திற்கு எங்களை மன்னிக்க வேண்டும் என்றுதான் அவர்களிடத்திலே நான் கூட கேட்டுக் கொண்டேன். இதெல்லாம் சொல்லியதற்குப் பிறகு, அவர்களே, சமாதானம் அடைந்து, அடைந்தது மட்டுமல்ல, அரசாங்கப் பேருந்திலே ஏறி உட்கார்ந்தவுடன், நீங்கள் எந்த கட்டணமும் செலுத்த வேண்டாம், ஏன் என்றால் ஏற்கனவே நீங்கள் தனியார் பேருந்துகளுக்குச் செலுத்தி விட்டீர்கள், ஆகவே தனியாக எங்களுக்குச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை, உங்களை ஒனாமாக நீங்கள் சேரவேண்டிய இடத்திலே கொண்டு போய் சேர்த்து விடுகிறோம், நீங்கள் செல்லுங்கள் என்று ஒவ்வொருவரையும் பஸ்ஸிலே ஏற்றி உட்கார வைத்து, டிரைவரிடத்திலே அவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளைச் சொல்லி, எல்லோரையும் அனுப்பி வைத்ததில் யாருக்கும் எந்தவிதமான சங்கடமும் கிடையாது. அத்தனை பிரயாணிகளும், கிட்டத்தட்ட 1,200 பேர்கள் மகிழ்ச்சியுடன் அரசாங்கத்தினுடைய நடவடிக்கையை முழுமனதோடு பாராட்டி, அத்தனை பேர்களும் பேருந்திலே ஏறிச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் சங்கடப்படவில்லை.

இரண்டே இரண்டு பேருந்துகள். ஒன்று, திருமணம் காலையிலே 6 மணிக்கு. மணமகன் அந்தப் பேருந்திலே இருக்கிறார். அந்தப் பேருந்தினுடைய பெயரும் மெரினா கேப் என்ற கம்பெனிக்குச் சொந்தமான பேருந்து. அதிலே வந்த அத்தனை ஆண்களும் பெண்களும் இறங்கி வந்து — நம்முடைய பேருந்து வருவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆனது. சென்னையிலேயிருந்து அங்கே வரவேண்டும் — ஆகவே 6 மணிக்கு முகூர்த்தம் இருக்கிற காரணத்தாலே நாங்கள் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையை தெரிவித்தார்கள். நியாயமான கோரிக்கையாக இருந்த காரணத்தால், அந்த பஸ்ஸை ஓட்டி வந்த டிரைவர், கண்டக்டர் இடத்திலே எழுதி வாங்கிக் கொண்டு, மீண்டும் பஸ்ஸைக் கொண்டு வந்து அதிகாரிகளிடத்திலே நாங்கள் ஒப்படைக்கிறோம் என்று எழுதி வாங்கிக் கொண்டு, அந்தப் பேருந்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

அதேபோல் இன்னொரு பேருந்து. மதுரையோ அல்லது காரைக்குடியோ செல்லுகின்ற பேருந்து. அதிலே வந்த பயணிகள் அத்தனை பேர்களும் ஒரு உறவினர் அன்று காலையிலே இறந்து அடுத்த நாள் காலை 7 மணிக்கு அவர்கள் அந்த இறுதிச்

சடங்குகளுக்குப் போய்ச் சேர வேண்டும். ஆகவே இந்த நிலைமையில் இருக்கிறோம். நாங்கள் தெரியாமல் இந்த பஸ்ஸில் ஏறிவிட்டோம் என்று அந்த நிலைமையைச் சொன்னார்கள். அந்த உண்மையான நிலைமையைப் பார்த்து, அவர்களிடத்திலேயும், அந்த பஸ் கண்டக்டர், டிரைவர் இடத்திலேயும் எழுதி வாங்கிக் கொண்டு, அந்த இரண்டு பேருந்துகளை மட்டும் தான் செல்வதற்கு அனுமதித்து இருக்கிறோம். அந்தப் பேருந்துகளின் மேலே முறையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்து இருக்கிறதே தவிர, எந்தப் பொதுமக்களுக்கும் அரசின் மீது கோபமோ, சங்கடமோ ஏற்படவில்லை என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தகைய நடவடிக்கைகளினாலே அந்த ஆம்னி பேருந்துகள் சட்ட விரோதமாக ஓட்டுவது நின்று போய்விடுமா என்ற சந்தேகம் எல்லா உறுப்பினர்களுக்கும் வரலாம். நிச்சயமாக நிற்காது. இந்த நடவடிக்கைகள் எல்லாம் 28 பேருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டு, காவல் துறையினுடைய பொறுப்பிலே வைக்கப்பட்டு உள்ளது. அது நீதிமன்றத்திற்குச் சென்றோ அல்லது முறையாக அதிகாரிகள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்குப் பின்னாலோ அவர்கள் அந்தப் பேருந்துகளை எடுத்துச் செல்வார்கள். மீண்டும் ஓட்டுவார்கள். அவர்கள் ஓட்டக்கூடாது என்பது நம்முடைய நோக்கமல்ல. அவர்கள் பெர்மிட் காலம் முடியும் வரை ஓட்டலாம். ஆனால் முறையாக வரி செலுத்த வேண்டும். முறையாக அவர்கள் சுற்றுலாப் பேருந்தாக பயன்படுத்த வேண்டுமே தவிர, ஸ்டேஜ் கேரேஜாக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. முறையாக எல்லாவிதமான வரிகளையும் கட்ட வேண்டும். இதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கம். இதையும் மீறி இதைச் செய்து கொண்டு இருப்பார்களானால், அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம், இதைப்பற்றி தீவிரமாகச் சிந்தித்து அதிலே இருக்கிற ஊழல் அடியோடு அகற்றப்படும் என்பதை நான் உறுதியாக உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே நடவடிக்கை எடுப்பதற்கு எந்த வகையிலேயும் இந்த அரசு தயங்காது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொண்டு, இந்த வரி விதிப்பை ஏற்றுக் கொண்டு, உறுப்பினர்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 32/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

1989 மே 12] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 2-50)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண்.32/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

2. உரிமை மீறல் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) ''மக்கள் குரல்,, நாளிதழ் மீது—பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் கொடுத்த ஓர் உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக என்னுடைய தீர்ப்பு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகை மீது ஓர் உரிமைப் பிரச்சினையை அவையில் 4—5—1989 ஆம் தேதியன்று எழுப்பினார்கள். 29—4—1989 ஆம் தேதியிட்ட மக்கள் குரல் பத்திரிகையில் ''மார்க்சிஸ்ட் கட்சி தமிழகத்தில் சந்தர்ப்பவாத போக்கில் செயல்படுகிறது என்றும் மேல்சபையைத் திரும்ப ஏற்படுத்துவது பற்றித் தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டார்கள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியிருக்கிறது'' என்று வந்துள்ள வாசகம் குறித்து அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அவர் பேசும்போது ''அன்றையதினம் நாங்கள் பேரவையில் கலந்து கொண்டு எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும் எங்களுடைய கொள்கைத் திட்டத்திலே மேல்சபை தேவையில்லை என்று அறிவித்து இருப்பதையும் எங்கள் அணியின் தலைவர் இங்கே எடுத்துக் கூறி அதற்குப்

1989 மே 12] [பேரவைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

(பிற்பகல் 2-50)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண்.32/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

2. உரிமை மீறல் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

(இ) ''மக்கள் குரல்,, நாளிதழ் மீது—பேரவைத் தலைவர் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் கொடுத்த ஓர் உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக என்னுடைய தீர்ப்பு.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள் மக்கள் குரல் பத்திரிகை மீது ஓர் உரிமைப் பிரச்சினையை அவையில் 4—5—1989 ஆம் தேதியன்று எழுப்பினார்கள். 29—4—1989 ஆம் தேதியிட்ட மக்கள் குரல் பத்திரிகையில் ''மார்க்சிஸ்ட் கட்சி தமிழகத்தில் சந்தர்ப்பவாத போக்கில் செயல்படுகிறது என்றும் மேல்சபையைத் திரும்ப ஏற்படுத்துவது பற்றித் தீர்மானம் சட்டசபையில் வந்தபோது மார்க்சிஸ்ட் உறுப்பினர்கள் சபைக்கு வராமலேயே இருந்து விட்டார்கள் என்றும் கம்யூனிஸ்ட் கட்சி குறை கூறியிருக்கிறது'' என்று வந்துள்ள வாசகம் குறித்து அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பினார். அவர் பேசும்போது ''அன்றையதினம் நாங்கள் பேரவையில் கலந்து கொண்டு எங்களுடைய கட்சியினுடைய கருத்தையும் எங்களுடைய கொள்கைத் திட்டத்திலே மேல்சபை தேவையில்லை என்று அறிவித்து இருப்பதையும் எங்கள் அணியின் தலைவர் இங்கே எடுத்துக் கூறி அதற்குப்

பிறகு விவாதம் நடந்து முடிந்த பிறகு இதற்கான ஓட்டெடுப்பு வந்த காலத்தில்தான் நாங்கள் மீண்டும் எங்களுடைய நிலையை எங்களுடைய அணித் தலைவர் எடுத்துக்கூறிய பிறகு வெளிநடப்புச் செய்தோமே தவிர சபைக்கு வராமலே இருந்தது என்பது இல்லை'' என்று விளக்கினார். இது குறித்து மக்கள் குரல் பத்திரிகை ஆசிரியரிடமிருந்து கீழ்க்கண்ட விளக்கம் கிடைக்கப் பெற்றுள்ளது:

''திரு. கோவிந்தராஜன் எழுப்பிய பிரச்சினை மக்கள் குரலில் வந்த அதனுடைய விமர்சனக் கருத்து அல்லவே அல்ல. புது டில்லியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. ராஜேஸ்வரராவ் அவர்கள் அளித்த பேட்டியைப் பற்றிய செய்தி அது. அதை எல்லா நாளேடுகளுக்கும் தந்தவை இந்தியாவின் இரண்டு செய்தி நிறுவனங்கள் ஆகும். மார்க்சிஸ்ட் கட்சி எப்படி மற்ற கட்சிகளை விமர்சனம் செய்கிறதோ அதே மாதிரியாக மார்க்சிஸ்ட் கட்சியைப் பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் செய்த விமர்சனத்தை ஒட்டிய செய்தியாகும் அது. இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பல ஏடுகளில் வெளியான செய்தியைத் தான் மக்கள் குரலும் வெளியிட்டது. இது முற்றிலுமாக பத்திரிகை சுதந்திரத்தை ஒட்டிய பிரச்சினையே தவிர சட்டசபை உரிமை பற்றியதல்ல.

மார்க்சிஸ்ட் கட்சி மேலவை மீண்டும் வருவதை கொள்கைப் பிடிப்போடு எதிர்த்ததாக திரு. கோவிந்தராஜன் கூறுவது மிக அதிகப்பட்சமான அவரது கருத்தே தவிர, அதை ஏற்றுப் பாராட்ட வேண்டும் என்ற கட்டாயம், மக்கள் குரலுக்கோ அல்லது வேறு எந்த ஏட்டுக்கோ கிடையாது. மேலவை தீர்மானம் ஓட்டு எடுப்புக்கு விடப்பட்டபோது அதை எதிர்க்கவோ அல்லது ஆதரிக்கவோ அல்லது நடுநிலை வகிக்கவோ மார்க்சிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் சட்டசபை யில் இல்லை என்பதுதான் மக்கள் குரலும் இதர ஏடுகளும் அறிந்து வெளியிட்ட உண்மைத் தகவல்.

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் சி. ராஜேஸ்வர ராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல.

ஒரு அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அவர் சொல்வது உண்மையா என்பதை ஆராய்ந்து, பிறகு வெளியிடுவது என்பது உலகிலேயே எந்த ஏட்டிற்கும் சாத்திய மல்ல, எங்களுக்கும் சாத்தியமல்ல என்று மக்கள் குரல் குறிப்பிட்டிருக்கிறது.

[பேரவைத் தலைவர்]

ஒரு பத்திரிகை ஆசிரியர் ஓர் அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அதை ஆராய்ந்து பிறகு வெளியிடுவது எங்களுக்கு சாத்தியமில்லை என்று கூறுவது ஏற்கத் தக்கதாக இல்லை.

ஒரு அரசியல் தலைவர் சட்டமன்றப் பேரவை நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையை வெளியிடுகின்றபோது அது உண்மைதானா என்று ஆராய்ந்து பின் பத்திரிகையில் வெளியிட வேண்டும். இல்லையென்றால் அது பேரவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறுவதற்கு ஒப்பாகும்.

''To print and publish any libel reflecting on the proceedings of the House has been held to be a high violation of the rights and privileges of the House''.
(May's Parliamentary Practice.)

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் திரு. சி. ராஜேஸ்வரராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல என்று ஆசிரியர் எழுதி இருப்பது ஒரு தரமான பத்திரிகையின் பொறுப்புள்ள வாதமாக இல்லை. இது கண்டனத்திற்கு உரியது.

அவை நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடும் போது பத்திரிகைகளுக்கும் மிகுந்த பொறுப்புள்ளது. உண்மையான நடவடிக்கைகளைத் தான் அவைகள் வெளியிட வேண்டும். உண்மைக்கு மாறான செய்திகளை, நடவடிக்கைகளை வெளியிட்டு விட்டு, 'அது பிறர் ஒருவர் கூற்று' என்று பிறரைப் பொறுப்பாக்குவது உகந்தது அல்ல. இந்தக் கடமை உணர்ச்சியைப் பத்திரிக்கைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

9. அறிவிப்பு.

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 6—2—1989ஆம் நாளன்று தொடங்கி 21—2—1989 வரையிலும், மீண்டும் 25—3—1989 அன்று தொடங்கி இன்று (12—5—1989) வரையிலும் நடைபெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்]

ஒரு பத்திரிகை ஆசிரியர் ஓர் அரசியல் தலைவர் ஏதோ ஒன்றைச் சொல்லும்போது அதை ஆராய்ந்து பிறகு வெளியிடுவது எங்களுக்கு சாத்தியமில்லை என்று கூறுவது ஏற்கத் தக்கதாக இல்லை.

ஒரு அரசியல் தலைவர் சட்டமன்றப் பேரவை நடவடிக்கை குறித்து ஓர் அறிக்கையை வெளியிடுகின்றபோது அது உண்மைதானா என்று ஆராய்ந்து பின் பத்திரிகையில் வெளியிட வேண்டும். இல்லையென்றால் அது பேரவையின் நடவடிக்கைகளை திரித்துக் கூறுவதற்கு ஒப்பாகும்.

''To print and publish any libel reflecting on the proceedings of the House has been held to be a high violation of the rights and privileges of the House''.
(May's Parliamentary Practice.)

கண்டன வெளிநடப்புக் காரணமாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்று திரு. கோவிந்தராஜன் கூறும் காரணத்தைக் கவனிக்க வேண்டியது தோழர் திரு. சி. ராஜேஸ்வரராவ் அவர்களே தவிர மக்கள் குரல் அல்ல என்று ஆசிரியர் எழுதி இருப்பது ஒரு தரமான பத்திரிகையின் பொறுப்புள்ள வாதமாக இல்லை. இது கண்டனத்திற்கு உரியது.

அவை நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடும் போது பத்திரிகைகளுக்கும் மிகுந்த பொறுப்புள்ளது. உண்மையான நடவடிக்கைகளைத் தான் அவைகள் வெளியிட வேண்டும். உண்மைக்கு மாறான செய்திகளை, நடவடிக்கைகளை வெளியிட்டு விட்டு, 'அது பிறர் ஒருவர் கூற்று' என்று பிறரைப் பொறுப்பாக்குவது உகந்தது அல்ல. இந்தக் கடமை உணர்ச்சியைப் பத்திரிக்கைகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இத்துடன் இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

9. அறிவிப்பு.

பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இவ்வாண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 6—2—1989ஆம் நாளன்று தொடங்கி 21—2—1989 வரையிலும், மீண்டும் 25—3—1989 அன்று தொடங்கி இன்று (12—5—1989) வரையிலும் நடைபெற்றுள்ளது.

பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் 6—2—1989ஆம் நாளன்று, தற்காலிகத் தலைவராக இருந்த மதிப்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

8—2—1989ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் பேரவையால் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவர்களுக்குப் பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கப்பெற்றன.

மேதகு ஆளுநர் அவர்கள் 11—2—1989ஆம் நாளன்று பேரவை உறுப்பினர்களிடையே உரையாற்றினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 25—3—1989 ஆம் நாளன்று பேரவையில் 1989—90ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் படைத்தார்கள்.

5—5—1989 ஆம் நாள் அன்று சட்டமன்றப் பொன் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழா ஏற்பாட்டில் அனைவரும் ஆர்வத்துடன் ஒத்துழைத்தனர். ஆனாலும் விழா நடைபெற்ற அன்று ஏற்போர் பலராயினர், மறுப்போரும் உளராயினர் என்பதுதான் வருந்தத்தக்கது.

பேரவை கூடிய மொத்த நாட்கள்	..	44
மாலையிலும் பேரவை கூடியுள்ள நாட்கள்	..	5
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்.	..	213 மணி 36 மணித்துளிகள்
ஆளுநர் உரை மீது விவாதம் நடைபெற்ற நாட்கள்.	..	5
பங்கு கொண்ட உறுப்பினர்கள்	..	45

நிதி அலுவல்கள் :

வரவு—செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்.	..	7
பங்கு கொண்ட உறுப்பினர்கள்	..	60
மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்.	..	21
உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள்	..	293
கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்.	..	1,708

அவைமுன் வைக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள். ..	1,571
விவாதித்து நிறைவேற்றப் பெற்ற மானியக் கோரிக்கைகள். ..	59
வினாக்கள்—விடைகள் :	
குறுகிய கால வினாக்கள் ..	2
உடுக்குறியிட்ட வினாக்கள் ..	235
உடுக்குறியிடாத வினாக்கள் ..	75
துணை வினாக்கள் ..	1,255
கவன ஈர்ப்புகள் :	
அனுமதிக்கப் பெற்றவை ..	140 அறிவிப்புகள் (120 பொருள் குறித்து)
அவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை ..	61 (49 பொருள் குறித்து).
ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.:	
அவையில் எடுத்துக்கொண்டு அனுமதி மறுக்கப்பெற்றவை ..	14
உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:	
அறிவிப்பு வரப்பெற்றவை ..	42
இசைவு மறுக்கப்பெற்றவை ..	36
உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற்றவை ..	2
அரசினர் சட்ட முன்வடிவுகள்:	
ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெற்றவை. ..	32
நிறைவேற்றப் பெற்றவை ..	32
அரசினர் தனித் தீர்மானங்கள்:	
வரப் பெற்றவை ..	4
நிறைவேற்றப் பெற்றவை ..	4

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்:

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.	..	173
(ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.	..	81

பார்வையாளர்கள்:

மாடத்தில் அனுமதிக்கப் பெற்ற—		
ஆண்கள்	..	13,124
பெண்கள்	..	1,120
தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்.	..	13,127
பேரவை நிகழ்ச்சிகளைக் காண வருகை தந்தோர் மொத்த எண்ணிக்கை.		27,371

நூலகம்:

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்.	..	891
வழங்கப் பெற்ற நூல்கள்	..	753

நடவடிக்கைக் குறிப்புகள்:

தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள்.	..	9,525

பேரவையின் நிகழ்ச்சிகளைச் சீரிய முறையில் நடத்திச் செல்ல ஒத்துழைப்புத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றைய அமைச்சர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் தொடங்கி அவை முடியும் வரை இருந்து அவையின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழு ஈடுபாடு காட்டிவரும் முதல்வர் அவர்களையும், பிற அமைச்சர்களையும் பாராட்டுகிறேன்.

அதுபோல் நாள்தோறும் தவறாமல் கூட்டத் தொடர் முழுவதும் வருகை தந்து சட்டமன்றக் கடமையாற்றிய பல் வேறு உறுப்பினர்களையும் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அதிலும் பி. எச். பாண்டியன் அவர்களைக் குறிப்பாக பாராட்ட வேண்டும்.

1989 மே 12] [பேரவைத் தலைவர்]

பேரவையைச் சிறப்பாக நடத்திச் செல்வதில் உதவியாக இருந்த பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. பெ. துரைசாமி அவர்களுக்கும், மாற்றுத் தலைவர்களான திருவாளர்கள் மு. இராமநாதன், என். கணபதி, பெ. சீனிவாசன், கே. ஏ. செங்கோட்டையன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோருக்கும் என் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல முறையில் பேரவையின் நிகழ்ச்சிகள் நடைபெற்றிட உதவிய அவையிலுள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களுக்கும், துணைத் தலைவர்களுக்கும், கட்சிகளின் கொறடாக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

காலத்தைக் கண்ணேபோல் போற்றி கருத்துச் செறிவுடைய உரைகளைச் சுருக்கமாகவும், சுவைபடவும் வழங்கிய உறுப்பினர் பெருமக்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுத் துறைகள் மற்றும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்தியாளர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவை அலுவல்கள் நன்முறையில் நடைபெற்றிட எனக்குத் துணை நின்ற சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களுக்கும் பேரவையின் ஏனைய அலுவலர்களுக்கும் பாதுகாப்பு அலுவலர்களுக்கும் நம் பேரவை வாயிலாகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தமிழர் தேர்ந்தெடுத்த ஆட்சி
எதிர்க்கட்சி உறுப்பினரும் சேர்ந்து
தந்து வைத்த மாண்புமிகு பதவி
சரியாகச் செயற்படுத்த உதவி
முந்தி வந்து ஒத்துழைத்தீர் யாண்டும்
முறையாக உரையாற்றி ஆக்கம்
தந்தோர்க்கு நன்றி சொல்ல வேண்டும்
வரும் நாளில் சந்திப்போம் மீண்டும்.

(பிற்பகல் 3-00)

இந்த அவையினுடைய எல்லா அலுவல்களையும் முன்னின்று சிறப்பாக நடத்திய அவை முன்னவர் அவர்களுக்கு தனியாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர், பிற்பகல் 3.01 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

168. சென்னை. கில்ட் ஆப் சர்வீஸ் அமைப்பினால் விற்பனை செய்யப்படும் அச்சிடப்பட்ட பொருட்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 22-3-1988 ஆம் நாளிட்ட 457ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

169. எரிசக்தி சேமிப்பு கருவிகளின் விற்பனைக்காக விதிக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1987 ஆம் நாளிட்ட 1013ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

170. சூரிய சக்தி எரிசாண வாயு மற்றும் காற்று சக்தி ஆகியவற்றில் பயன்முறைக்காக வடிவமைக்கப்பட்ட புதுப்பிக்கக் கூடியவையான எரிசக்திச் சாதனங்களின் விற்பனைக்காக

பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர், பிற்பகல் 3.01 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும். ஆணைகளும்

168. சென்னை. கில்ட் ஆப் சர்வீஸ் அமைப்பினால் விற்பனை செய்யப்படும் அச்சிடப்பட்ட பொருட்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 22-3-1988 ஆம் நாளிட்ட 457ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

169. எரிசக்தி சேமிப்பு கருவிகளின் விற்பனைக்காக விதிக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1987 ஆம் நாளிட்ட 1013ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

170. சூரிய சக்தி எரிசாண வாயு மற்றும் காற்று சக்தி ஆகியவற்றில் பயன்முறைக்காக வடிவமைக்கப்பட்ட புதுப்பிக்கக் கூடியவையான எரிசக்திச் சாதனங்களின் விற்பனைக்காக

விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1987 ஆம் நாளிட்ட 1014ஆம் எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

171. வருவாய்த் துறையின் 22—5—1962ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. 237/1962ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 28—10—1987ஆம் நாளிட்ட 1160ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

172. 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—12—1987ஆம் நாளிட்ட 1362 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

173. தமிழ்நாடு சைத்திறத் தொழில் வளர்ச்சிக் சழகத் தின் 1984-85ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை. (1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத் தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள் :

168. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் 1987-88ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை,

169. பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை' 1989–90.

170. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை. 1989–90.

171, பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1989–90.

172. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை, 989–90,

173. பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1989–90.

174. பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை, 1989–90.

175. பொது நிறுவனங்கள் குழுவின் பதிமூன்றாவது அறிக்கை, 1989–90.

176. பொது நிறுவனங்கள் குழுவின் பதினான்காவது அறிக்கை 1989–90.

177. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 25 வரை).

178. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை 1985. (தொகுதிகள் I, II, III (தமிழ் ஆங்கிலம்).

179. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை 1985–இணைப்பு–தொகுதி I, II (தமிழ் ஆங்கிலம்)

180. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை 1985–தலைவரின் பரிந்துரைகள். (தமிழ் ஆங்கிலம்)

181. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை 1985 குழு உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட பரிந்துரைகள். (தமிழ் ஆங்கிலம்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர்

1989 மே 11 மற்றும் 12.

(தொகுதி 16 எண்கள் 1—2)

பெயர் அட்டவணை.

பக்கங்கள்

அ

அண்ணாநம்பி, திரு. ஆர்—

அன்னூர் ஒன்றியம், காட்டம்பட்டி, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக்கல் (வி) 192

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989 91—96,99, 100—101

அப்துல் லத்தீப், திரு. எம்—

சென்னை அரசினர் தோட்டம், உறுப்பினர்கள் வாடகை பாக்கி (வி) 25

தீவன இயந்திரங்கள் இறக்குமதி, மாநில அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு (த.கோ.) 34, 36—38

பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு, 1989 159—161

பொதுக் கணக்குக் குழு, 1989—90 ஆண்டின் அறிக்கை 57,58

மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்ற மத்திய அரசைக் கோருதல் (த.தீ.) 235—240

மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு, 1989 97—99,100,101

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், மத்திய அரசு ஊராட்சி ஆட்சித் தலைவர்களுக்கு நேரடி நிதி ஒதுக்கீடு (த.கோ.) 274—206

டி. 2 ஏ 53-289—2